# தமிழ்மொழி பயிற்றும் முறைகள்.

458/1-49

(T. S. L. C. செக்கண்டேரி, எலிமெண்டேரி கிரேடுகளுக்கு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 FEB 1949
MADRAS

—*—

வித்துவான்,

**பேதுரு செல்வநாயகம் சாமுவேல்.**

தமிழ்ப் பண்டிதர்,

பிஷப் சார்ஜெண்டு செக்கண்டேரிப் போதனுமுறைப் பயிற்சிசாலை,

பாளையங்கோட்டை.

1949

SCANNED

[ரூ. 1—8—0

T: 3(P31)
N49.
56672

# தமிழ்மொழி பயிற்றும் முறைகள்.

(T. S. L. C. செக்கண்டேரி, எலிமெண்டேரி கிரேடுகளுக்கு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
—*—
MADRAS.

வித்துவான்,

பேதறு செல்வநாயகம் சாமுவேல்.

தமிழ்ப் பண்டிதர்,

பிஷப் சார்ஜெண்டு செக்கண்டேரிப் போதனுமுறைப் பயிற்சிசாலை,

பாளையங்கோட்டை.

1949

பதிப்புரிமை]

[ரூ. 1—8—0

# Foreword

By

Rev. Sathia Samuel, B. A., L. T., Principal,

Bishop Sargent Secondary Training School, Palamcottah.

There is an abundant output of books in the market dealing with the method of teaching English, but the literature on the teaching of an Indian Language is very scanty in amount. Under the new dispensation, the mother tongue has come into its own. In our Presidency a higher minimum is prescribed for a pass in Tamil than in any other subject for the T. S. L. C. Examination. Remarks of successive Chief Examiners in Tamil, reveal the fact that failure in this subject is mainly due to lack of knowledge of principles governing the study and teaching of the language. This Manual prepared by Vidvan, P. S Samuel meets the need in a thorough-going manner. Besides fully covering the requirements of the departmental syllabus prescribed for the T. S. L. C. Examination both for the Elementary and Secondary grades, the book contains much that is helpful to teachers in service too. It is presented in a neat, clear and dignified form. Being, as it is, the product of more than twenty-five years of experience, in actual teaching and in the training of teachers, it may claim to represent much practice and thought.

Vidvan, Samuel is not among the number of those who write scrappy ond sketchy notes, which easily lend themselves to unintelligent memorisation. While he has written primarily to meet a particular need, the notes have been enriched by apt quotations from ancient literature and grammar, and it is hoped that all teachers, of whatever kind, will find some help and inspiration in the pages of this book.

As one whose special interest for some years has been the improvement of teaching, it gives me great pleasure to commend this book specially to teachers and students of Training Schools in Tamil Nad.

Palamcottah.
7—1—1949

Sathia Samuel.

56672

# முன்னுரை

'தோன்று தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே'

கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் பெரியோர்கள் இதனைக் கற்றுத் தகுதியை அறிவார்களாக.

இந் நூல் T. S. L. C. பரீட்சைக்குரிய பாடத் திட்டத்தையொட்டி, போதனா முறைபயிலும் உயர்தர, ஆரம்ப, மாணவாசிரியர்க்கும், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் பயன்படுமாறு விரிவாக எழுதப்பட்டுள்ளது. சென்ற ஒன்பது ஆண்டுகளாக எம்மிடம் தமிழ் முறை பயின்று, பரீட்சையில் வெற்றிபெற்றுச் சென்ற மாணவாசிரியர் பற்பல நூற்றுவர்க்குப் பயன்பட்டது இந்நூல். எம் மாணவரேயன்றி ஏம் மாணவரும் பயனடையுமாறு இதனை அச்சேற்றித் தருகின்றோம்.

போதனாமுறை பயிலும் மாணவாசிரியரும், முறை பயிற்றும் தமிழாசிரியரும், இதனை விருப்புடன் ஏற்றுப் பயன்படுத்தி எமக்கு ஊக்கமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

இந் நூற்குச் சிறப்புப்பாயிரமளித்து இதனைச் சிறப்பித்த, எம் கலாசாலைத் தலைவர், திருமறையாளர், சத்திய சாமுவேல் ஐயரவர்களது பெருந்தகைமையை என்றும் மறவேன். எம்மைப் பல்வேறு நன்முயற்சிகளில் ஈடுபடுத்தி ஊக்கமளித்து வரும், இப்பெரியார்க்கு யாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இந் நூல் வெளிவருதற்குத் தூண்டுகோலாயிருந்து பல்லாற்றானும் உதவிய எமது நண்பர், B. S. P. அச்சக மானேஜர், உயர்திரு. J. S. சுவாமிநாத பிள்ளையவர்களது கைமாறு கருதாக் கடப்பாடு எம்மால் மறக்கற்பாலதன்று.

'குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்'

பாளையங்கோட்டை
1—1—1949

பெ. செ. ஏ.
நூலாசிரியன்

# பொருளடக்கம்

## I. மொழியும் பயனும். (பக்கம். 1)

[கல்வித் துறையில் தாய்மொழிக்குரிய இடம். மொழியின் இருவகைப் பயன்கள்:- ஈதல், கோடல்,]

## II. கல்வி புகட்டும் முறைகள் (பக்கம். 20)

விளையாட்டு முறை, தான்கருதிச் செய்யுமுறை, நாடகம் நடித்தல் தனி முறை முதலியன.

## III. வாய்மொழிப் பயிற்சி (பக்கம். 62)

(1) முதலாம் இரண்டாம் வகுப்புகளில், மாணவர் விரும்பும் பொருள்பற்றிய எளிய சம்பாஷணை, உதா. வீடு, இனத்தவர், நண்பர், திருவிழா முதலியன. (2) மேல்வகுப்புகளில், அவ்வப்போது, மனதைக் கவரும் விஷயங்களைப்பற்றித் திருத்தமாகப் பேசுதல் — கதைகள்; பிள்ளைகளின் பருவத்திற்கும், அறிவு நிலைக்கும் பொருத்தமான கதையைத் தெரிந்து கொள்ளுதல்; எப்படிக் கதை சொல்வது? குழந்தைகள் கதை சொல்வதும், அதனை நடிப்பதும். சம்வாதம் — வாய்மொழித் திறமையை விருத்தி செய்வதற்கு, படங்கள், கதைகள், நவிற்சிச் செய்யுட்கள், இசைப் பாடல்கள் இவற்றின் உபயோகம்;— நீக்கவேண்டிய பேச்சுப் பிழைகள் — சொல் தெளிவின்மை, பிழையான உச்சரிப்பு, சொற்களின் இறுதியை வெட்டிவிடுதல், படபடப்பாகப் பேசுதல் முதலியன.

## IV. வாசிப்புப் பயிற்சி (பக்கம். 83)

வாசிப்புப் பழக்கத்தை யுண்டாக்குதல் — பல்வேறு முறைகள். எழுத்து முறை, பார்த்துச் சொல்லுமுறை, சொல்முறை, வாக்கியமுறை அவற்றின் குறை குணங்கள். உபகரணங்கள் தயாரித்தல். (1) வாசிப்புச் சட்டம். (2) தனிப் பயிற்சி உபகரணங்கள். (3) சாதாரணப்பேச்சு வழக்கில் அதிகமாக உபயோகிக்கப்படும், சொற்களின் பட்டியல்

வாசிப்புத் திறமை.— உரக்கப் படித்தல்; பொருளை உணர்ந்து வாசித்தல், தெளிவு, விரைவு.

மௌன வாசிப்பு.— அதன் முக்கியத்துவம், பொருளுணர்வும் விரைவும் அதிகரித்தல்.

[அரும்பதங்கள், சிந்தனையின் முழு வடிவம், காலவரையறை இவற்றிற்குக் கவனத்தைச் செலுத்துதல்; காட்சியின் நீட்சியை அதிகரிக்கவும் படிக்கவேண்டியதைப்பற்றிய அறிவை விருத்திசெய்யவும் தலை அடக்கவும், குறிப்பிட்ட நோக்கத்துடன் வாசிக்கவும், பழக்குவதற்குக் கையாளவேண்டிய யுக்திகள். மௌன வாசிப்பில் திறமையைக் கண்டுகொள்வதற்குரிய பரிசோதனைகள்.]

*மௌன வாசிப்புப் பயிற்சிக்குரிய உபகரணங்கள் தயாரித்தல் — தனிப் பயிற்சி அட்டைகள், சிறிய கதைப் புத்தகங்கள், விளம்பரங்கள், செய்தித் தாள்கள்; பத்திரிகைகளிருந்து சிறுவர்கேற்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தல் முதலியன.*

வாசிப்பின் நோக்கங்கள்.—*விஷய அறிவு பெறுதல்,* இன்பமனுபவித்தல், *உள்ளக் கிளர்ச்சியடைதல், மொழியறிவில் விருத்தி பெறுதல்.*

## V. செய்யுட் பயிற்சி (பக்கம் 114)

*செய்யுள்.*—(1) *பாப்பாப் பாட்டுகள், தாலாட்டுப்பாட்டுகள், அபிநயப் பாட்டுகள், எளிய தெம்மாங்குப் பாட்டுகளும், விடுகதைகளும்.* (2) *எளிய செய்யுட்கள், நவிற்சி, வருணனைப் பாக்கள்.* (3) *செய்யுளை வாசித்தல்— செய்யுளை இராகத்துடன் பாடுதல்.* (4) *செய்யுளைக் கற்பிக்கும் முறை; செய்யுளை நேர்முகமாக உணர்த்துதல். அளவுக்கு மிஞ்சிச் சொற்பொருள் விளக்கமும், இலக்கணமும் கற்பித்துச் செய்யுளைத் துண்டு படுத்திச் சிதையாதிருத்தல்; சந்த இன்பத்தில் ஈடுபட்டுப் பாராட்டப் பயிற்றுதல்; மனப் பாடப் பகுதிகளைத் தெரிந்தெடுத்தல்.* (5) *உரைநடை— ஏற்ற விஷயத்தைத் தேர்ந்தெடுத்தல்; நகைச் சுவைப் பகுதிகளின் அவசியம். உளங்கவரும் மொழிநடை — பொருத்தமான விளக்கப் படங்கள்— புத்தகத் தோற்றமும் அச்சும்.* (6) *வாசிப்புக்குரிய பொருள்.* (i) *எளிய, சாதாரணமான விஷயங்கள்; சம்வாதமும், சிறு நாடகங்களும்.* (ii) *நவிற்சி, கற்பனை, வரலாறு, வருணனை; இலக்கியங்கள்,* (iii) *இன்பப் பொழுது போக்கு வாசிப்பு — பத்திரிகைகளும் செய்தித் தாள்களும்.*

## VI. இலக்கணப் பயிற்சி (பக்கம் 124)

*இலக்கணம் —பிரயோக இலக்கணம், பாடப் புத்தகத்தின் மூலமாக காரிய அனுமான முறைப்படி இலக்கணம் கற்பித்தலும், காரண அனுமான முறைப்படி, பயிற்சியளித்தலும்.* [தாய்மொழி இலக்கணக் குறியீடுகளையும் ஆங்கில இலக்கணக் குறியீடுகளையும் ஒப்பிட்டுக் காட்டுதல்.]

## VII. எழுதுதற் பயிற்சி (பக்கம். 133)

*எழுத்து.—(1) பொதுவாக கவனிக்கற்குரியன.—(i) எழுதுவதற்குத் தகுதியாகவடைதல்; வாசிப்புக்குப்பின் எழுத்து. (ii) எழுத்தின் ஈரமும் அழகும். (iii) விரைவும் தெளிவும். (iv) பார்த்தெழுதல்.*

## VIII. கட்டுரைப் பயிற்சி (பக்கம். 139)

*கட்டுரை.—வாய்மொழிக் கட்டுரையின் பிறகே எழுத்துக் கட்டுரை—கருத்தைச் சுயமாக வெளியிடுவதின் அவசியம் — பெரு மழை பொழியும் ஒரு நாள் — பொருட்காட்சி, சர்க்கஸ் காட்சிகளைக் கண்டு களித்தல், இவை பற்றிய அனுபவங்கள் போன்ற மாணவர் விரும்பும் விஷயங்களைப் பற்றிய சம்பாஷணை, சம்வாதம், சிற்றுரை முதலியன.*

[பல்வேறு வகையான தன்னிஷ்டக் கட்டுரைகள் — படிப்படியாக விருத்தி — நவிற்சிக் கட்டுரை, கற்பனைக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, தர்க்கரீதியான கட்டுரை. விசேஷ கவனிப்புக்குரியவை: வாக்கிய அமைப்பு, பகுதியமைப்பு.] *எழுத்துப் பிழை, நிறுத்தக் குறியீடு, கையெழுத்து; தாய் மொழிக்குரிய தனிமரபுச் சொற்களும், சொற்றொடர்களும், அவற்றின் உபயோகமும்; கடிதம் எழுதுதல். பொருளுக்கும் விலாசதார்களுக்கும் ஏற்ப, நடையும், எழுதும் முறையும் வேறுபடுதல். ஆக்கத் திறமையை வெளியிடுதல் — கதை யெழுதல் கற்பனை அனுபவங்கள் — ஒற்றையங்க [அல்லது இரட்டையங்க] நாடகங்களை எழுதுதல் — கட்டுரைப் பிழைகளைத் திருத்துதல். சாதாரணப் பிழைகளும், அவற்றை நீக்குதலும்.*

அறிக! பொருளடக்கத்திற் கண்ட முழுவதும் செகண்டேரி வகுப்புக்கும், திண்ணமான எழுத்தில் [இவ்] அடையாளத்திற்குட் காட்டப்பட்டவை தவிர, ஏனைப் பாகங்கள் எலிமெண்டேரி வகுப்புக்கும் பாடமாக உரியன.

# மொழி

மக்கட் பகுதியினருள் ஒருவர், தாம் கருதியதைப் பிறர் ஒருவர்க்கு யாதொரு இடர்ப்பாடுமின்றித் தெரிவித்துக் கொள்வதற்குக் கருவியாயிருப்பதே **மொழி**. "எழுதப்படுதலின் எழுத்தே" என்றவாறு எழுத்து காரணத்தாற் பெயர் பெற்றது போல, மொழியப்படுதலின் இது மொழி யெனப் பெயர் பெறுவதாயிற்று.

**மொழியின் பிறப்பையும் அதன் வளர்ச்சியையும்,** நுணுகி யாராயப் புகுந்த மொழி நூற் புலவர், மக்கள் முதன் முதல் சைகைகள் மூலமாகத் தம் கருத்துக்களை வெளியிட்டுப், பின்னர் அச் சைகைகளுடன் சில ஒலிகளையும் ஒலிக் கூட்டங்களையும் தம் கருத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக உபயோகப்படுத்தி வந்தனர் என்றும், இவ்வாறு உபயோகப்படுத்தப்பட்ட ஒலிக் கூட்டங்களே வரவர வளர்ந்து, வன்மையுற்று, மொழியுருவம் பெற்றன வென்றும், கண்டறிந்து கூறியுள்ளார். இதனால் மொழி வளர்ச்சி, மக்கள் நாகரிக வளர்ச்சியை யொட்டியது என்பது வெளிப்படும். அறிவு குறைந்த மாக்களாயுள்ளோர், மாக்களைப் போலவே, சைகைகளாலும், சொல்வடிவடையா ஒலிகளாலும் தம் கருத்தினைத் தெரிவித்துப் பின்னர் மக்கள் நிலையை யடைந்தவிடத்து அந் நிலைக்கேற்ப மொழி பெற்று, அம் மொழியால் தம் கருத்தினைத் தெரிவித்தனர், என்பது எத்துணைப் பொருத்தமானது.

இந் நிலவுலகத்தின் பல்வேறிடங்களில் பல்வேறு மக்கட் குழுவினர் தம்மொடு தொடர்புடையவர்க்குத் தம் கருத்தை வெளிப்படுத்தும் பொருட்டு, வழங்கி வரும் மொழிகள் பலவும் இவ்வாறு தோற்றமுற்றனவேயாம். அவை தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது என்று மொழி நூல் ஆராய்ச்சி வல்லார் கணக்கிட்டுரைத்திருக்கின்றனர். இவற்றுட் பல பேச்சு வழக்கில் மட்டும் நிலவுகின்றனவே யன்றி எழுத்து வழக்குப் பெற்றில. எழுத்துக்கள் அமையப் பெற்றவை மிகச் சிலவே. அவற்றுள்ளும் தொன்மை பெற்றவை ஒரு சிலவே. இத்தகைய நலன்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற மொழிகள் சிலவற்றுள் '**தமிழ்**' என்னும் **நற்றாய் மொழி** ஒன்றே அன்றி

ஏனைய மொழிகள் இறந்துபட்டன. இற்றை ஞான்று தொன்மைமிக்க உயர் தனிச் செம்மொழி யொன்றை, எம் தாய்மொழியா யுடையோம் என்று கூறுதற்குரிய தனிச் சிறப்பு வாய்ந்தோர் தமிழ் மக்களே யாவர்.

நாம் இவ்வாறு கூறி இன்பம் எய்தற்கு உரிமை பூண்ட நம் தாய்மொழி, பழமையும் கொழுமையுமுடைய நம் தமிழ் மொழி, கலைவளம் நிறைந்து, மிக நுண்ணிய இலக்கண வரம்பு பெற்ற நம் உயர்மொழி, **இனிமை** என்று பொருள்படும் **தமிழ்** என்ற பெயரைப் பெற்ற இன்மொழி, இக் காலத்து எந்நிலையில் உளது ?

தான் முன்பு வழங்கப்பட்டுவந்த எல்லையினும் பன்மடங்கு குறைந்த தோர் நிலப்பரப்பிலேயே இன்று வழங்கப்பட்டு வருகின்றது. தொல்காப்பியனார் காலத்தில் (கி. மு. 5540) "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" வழங்கி வந்த தமிழ் மொழி, நன்னூலார் காலத்து, (கி. பி. 10ம் நூற்றாண்டில்) "குண கடல், குமரி, குடகம், வேங்கடம், எனும் நான் கெல்லையின்" இடைப்பட்ட பகுதியிலேயே வழங்கப் பெறுவதாயிற்று. தற்காலத்திலோ தமிழன்னை உதரத்துதித்த "கன்னடமும், தெலுங்கும், மலையாளமும், துளுவும், பெருக்க முற்று தென்னாட்டின் பெரும் பகுதியில் வழக்குப் பெறவே, தமிழ் வழங்கும் நாடு மிகக் குறுகிய நிலப்பரப்புடையதே யாயிற்று. ஆதலினாலன்றோ,

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே
என்றார்,

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள். மொழி வழங்கும் நிலப்பரப்புக் குறைந்ததே யன்றி மொழியின் வளனும், இளமையும், இனிமையும் குன்றினவல்ல. இக் குன்றாமைக்குக் காரணம், பண்டைப் புலவர்கள் செய்து வைத்துப் போந்த அளவிறந்த இலக்கண இலக்கிய நூல்களே யாகும்.

நூல் வழக்கு இங்ஙனமிருக்க, இனி உலகவழக்கின் நிலையினை ஆராய்வோம். இது போழ்து தமிழ் மொழியினைத் தாய்

மொழியாகக் கொண்டோர் 2கோடி மக்களே. இரண்டு கோடி தமிழ் மக்களில், எழுத வாசிக்க அறிந்தோர் 8 சதவிகிதத்திலும் குறைந்தோரே. தமிழ் வழங்கும் நிலப்பகுதியைப்பற்றி, தமிழ்ப் புலவர் திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள், தாம் எழுதிய 'சங்க நூல' என்னும் மொழியாராய்ச்சி நூலில் எழுதியுள்ளதை அடியிற் காண்க.

"இங்கு கூறியவற்றால் தொல்காப்பியம் செய்யப்பட்ட காலத்தில், நெல்லூர் ஜில்லாவின் தென்கோடியும், சித்தூர், வட ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மலையாளம், நீலகிரி என்னும் ஜில்லாக்களும்; தென் கன்னடம் ஜில்லாவின் முக்காற் பங்கும்; மைசூர் ராஜ்யத்தின் தென்பாதியும் திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை என்னும் ராஜ்யங்களும், கடலின் வாய்ப்பட்ட குமரியாற்றோடு கூடிய பனை நாடுகளும், தமிழ் வழங்கு நிலங்களாகவே இருந்தன என்பதும், அக்காலத்து இந் நிலங்களில் வேறு மொழிகள் வழங்கியதில்லை என்பதும் நன்கு விளங்குகின்றன.

மலையாள ஜில்லா முதலியவிடங்களில் வழங்கும் மலையாள மொழி, மிகவும் சமீப காலத்தில் உண்டானது என்பது, யாவரும் ஒப்புக்கொண்டதொரு செய்தியே. இப்பொழுது தமிழ் வழங்கும் ஜில்லாக்களிலுள்ள தமிழ் மக்களின் தொகை இரண்டு கோடியாகும்.

முற்கூறிய விடங்களில் எல்லாம் தமிழ் மக்களே இருந்தார்கள். பிறகு அவர்களிற் சிலர் மலையாளம், முதலிய மொழிகளுக்குரியவர்களாய் மாறினார்கள் என்பதும், குமரி யாற்றோடு பனை நாடுகள் கடலின் வாய்ப்பட்டன என்பதும் நன்கு விளங்குதலின், அக்காலத்துத் தமிழரின் தொகை நான்கு கோடிக்குக் குறையாமல் இருந்திருக்கும் என்று கொடலாம்"

எழுத்துவாசிப்பு அறியாப் பெரும்பான்மையோரும், அறிந்த சிறுபான்மையோரும், வீட்டிலும் வெளியிலும், பேசிப்பழகுவதற்குக் கருவியாகக் கொண்டிருப்பது, செந்தமிழுக்கு ஒரு புடை யொக்கும் கொச்சைமொழியே. இதனைச் சீர்திருத்தி, இருவழக்கிலும், நந்தமிழ், செந்தமிழாமாறு செய்வது, தமிழ் நாட்டு ஆசிரியர்தம் கடமையே யாம்.

உலக வழக்கின் நிலை இவ்வாறிருக்க, தமிழ் நாட்டுக் கல்விச் சாலையினுள் நம் தாய் மொழியின் நிலை எவ்வாறிருக்கின்றதென உற்று நோக்குவோம். நெடுங்காலமாகப் பள்ளியிற் கற்பிக்கப் படும் பாடங்களுள், தாய் மொழிக்கு முதன்மை கொடுக்கப் படவில்லை. ஆங்கிலமே முதன்மை நிலை வகித்து வந்தது. பள்ளியிறுதித் தேர்வுக்கும், கல்லூரிப் பட்டப் பரீட்சைகளுக்கும் பயில்வோர் ஆங்கிலத்தையே கல்விப் பொருளுணர்த்தும் கருவியாகக் (Medium of Instruction) கொண்டு, கற்க வேண்டியதிருந்ததால், அநேக பள்ளிக்கூடங்களில் இடைத்தரப்பகுதி மேல் வகுப்புகளிலும், அதாவது முதல் மூன்று பாரங்களிலும், ஆங்கிலமே கல்வியுணர்த்தும் கருவியாகக் கையாளப் பட்டு வந்தது. ஆங்கிலத்தின் மூலமாகவே ஆறுவது வகுப்பிலிருந்தே பாடம் கேட்க வேண்டுமாயின், மாணவர் அதற்கு முன்னரே ஆங்கிலம் எழுதவும், வாசிக்கவும், சிறிது பேசவும், பேசியதனை அறியவும், தகுதியுடையராதல் வேண்டுமாதலின் தமிழ் எழுத்துக் கற்கும் காலத்தே அதாவது முதல் வகுப்பு முதலே, ஆங்கிலமும் கற்க வேண்டியவர்களானார்கள். ஆங்கிலம் பிற மொழியாதலின், இளஞ்சிறுர் கல்வித் தொடக்க முதற் கொண்டே அதனை மிகச் சிரமப்பட்டுக் கற்க வேண்டியது ஏற்பட்டது. அவர்களது பெரு முயற்சியை ஆங்கில மொழி கவர்ந்து கொள்ளவே, தமிழ் மொழிக்கண் முயற்சி குன்றியது. பள்ளிக்கூட அதிகாரிகளும், நாட்டுத் தலைவர்களும், ஆட்சிப் பொறுப்புடையோரும் பராமுகமாயிருந்ததினால், தாய் மொழி, தான் வகிக்க வேண்டிய இடத்தைச் சேய் மொழி கொண்டது. சேய்மை + மொழி = சேய் மொழி; சேய்மை = தூரம்; சேய் மொழி, என்பது நெடுந்தூரத்தில் உள்ள நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து வழங்கும் மொழியாகிய ஆங்கில மொழியைக் குறிக்க யாம் படைத்துக் கொண்ட குறியீடு. இதனை சாதாரணமாக அந்நிய பாஷை என்பர். கல்விச் சாலையில், தாய் மொழி தன் இடத்தைப் பிற மொழிக்குக் கொடுக்கவே, தாய் மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியனும் தன்னிடத்தைப் பிறர்க்குத் தத்தம் செய்ய வேண்டியதாயிற்று. இத்தானத்தைத் தமிழாசிரியரே மீண்டும் வகிக்கச் செய்வது, தமிழ் மக்களது கடனேயாகும்.

கல்விப் பயிற்சிக்குத் தாய் மொழியே தகுந்த கருவி மொழியாகும் என்பது தெளியப்பட்ட உண்மையாயிருப்பினும் அரசியலார் அசிரத்தையாக இருந்ததின் பயனாக நம் இளஞ்சிறார் அடைந்த இன்னலும், தாய் மொழியடைந்த தாழ்வும் அளவிடற்பாலதன்று. முன்னொருகால் அரசியற் பதவி பெற்று, சிறிது காலம் அரசியல் நடாத்திச் சென்ற காங்கிரஸ் கட்சியினர் முனைந்து நின்று முடுகிச் செய்த சீர்திருத்தங்கள் சிலவற்றுள், தாய் மொழியையே கற்பிக்குங் கருவி மொழியாக்கினதும் ஒன்று; இவர் தம் செய்கை போற்றற்குரித்தே.

இதனைப் பாராட்டி, 1941ம் ஆண்டு ஜனுவரித் திங்கள் 18ம் நாளில், சென்னை மாகாண முதல் தமிழிலக்கிய மகா நாட்டில், தலைமை நடாத்திய தமிழ்ப் பெரும் புலவர் திரு. S. வையாபுரிப் பிள்ளையவர்கள், தம் தலைமைப் பேருரையில், நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கத்தை, இந்துப் பத்திரிகையிற் கண்டவாறே, ஈண்டெடுத்துரைப்போம்.

"The Government had neglected the development of Tamil by giving undue prominence to English and only a few years ago it was realised that because Tamil was divorced from general education, education has not yielded the good, expected of it. All credit was due to Mr. C Rajagopalachari for working out a scheme for imparting education, in the High School Course, through the medium of Tamil and to him, the Tamil world would have to be eternally grateful. But the reform inaugurated by him, could not be said to have made sufficient headway"

கல்விபுகட்டுதற்குத் தாய் மொழியே தகுந்த கருவி மொழி என்பது, எந்நாட்டவரும் அறிந்து கடைப்பிடித்து வருங் கொள்கையே எனினும், ஆங்கில வாட்சிக்குட்பட்டிருந்த காலத்தில், நம் நாட்டில் தாய்மொழி கருவி மொழி யாக்கப் படாமலே இருந்து வந்தது. இற்றை விடுதலை பெற்ற நம் தாய் நாட்டில், விடுதலையின் முதற்பலனாக நாம் காண்பது, தாய் மொழி, கருவி மொழி யாக்கப்பட்டிருத்தலே. தற்கால சுதந்திர இந்திய அரசிலார், கருவி மொழி சம்பந்தமாகத் தம் கொள்கையைத்

தெளிவுபடுத்தி ஓர் தீர்மானமும் நிறைவேற்றி அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். தீர்மானத்தின் கருத்தாவது :- "குழந்தைகள் கல்விப் பயிற்சி பெறும் ஆரம்ப காலத்தில், தாய் மொழியின் மூலமாகவே கல்வி புகட்டப்படல் வேண்டும் என்னும் கொள்கை அரசியலாரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லாக் கல்வித்துறை வல்லாரும், இக் கொள்கையினின்று இழுக்குதல், குழந்தைக்குக் கேடு பயக்கும் என்றும், அதனால் சமூக முன்னேற்றம், தடைப்படும். என்றும், உறுதியாகக் கருதுகின்றனர்" என்பது.

எனினும் தாய் மொழியைக் கட்டாயப் பாடமாக்காது இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்க அன்னார் செய்த முயற்சி தமிழ்ப் பெருமக்கள் மனதைப் புண்படுத்துவதாயிற்று. அவர்கள் தாய் மொழியைக் கட்டாயப் பாடமாக்கியும் கட்டாயக்கல்வித் திட்டத்தை சட்டபூர்வமாக நிலை நிறுத்தியும் சென்றிருந்தால், நம் தாய்மொழிக்கும், தாய்நாட்டிற்கும் ஒரு பெருஞ்சிறப்புச் செய்தவரேயாவர். இனி அன்னார் செய்திலர் எனக் குறைகூறி வாளாவிருத்தல் சிறப்பாகாது. அரசியல் நடாத்துநர் எக் கட்சியைச் சேர்ந்தவரே யாயினும் பொது மக்களை, இலங்கு நூற் கல்வியுடையராக்குதற்குக் கட்டாயக் கல்வியை ஏற்படுத்தியும் தாய் மொழியை வளர்த்தற்குத் தமிழைக் கட்டாயப் பாடமாக்கியும் வைக்க வேண்டியது, அவர் தம் கடமையென்றும் தனிப் பெருந் தொண்டு என்றும் உணர்வார்களாக.

விடுதலை பெற்ற நம் தாய் நாட்டில் நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு முதன் மொழி எனப் பட்டஞ் சூட்டி, அதை மேன்மேலும் சிறப்படையப் பல்லாற்றானும் முயன்று வரும் நம் கல்வி மந்திரியவர்களது, பேராற்றலையும் பெருமுயற்சியையும் பெரிதும் பாராட்டுகின்றோம். அவர்களது தமிழ்த் தொண்டு சிறப்படைக! தமிழ்ப் பெரும் புலவர்களது துணை கொண்டு தாய் மொழிக்கு மேன்மேலும் ஆக்கம் விளைப்பார்களாக. தமிழ் நாட்டில் தமிழ் எழுத வாசிக்கத் தெரியாத ஒருவர் இருப்பினும், அஃது நாட்டுக்கோர் பெருமிழுக்கு எனக்கருதி, நீண்ட காலத் திட்டத்தை நினைப்பிற் கொள்ளாது, உடனே கட்டாயக் கல்வியை நாடு முழுவதும் நிலை நாட்டி, நம் நாட்டு மக்கள் யாவரையும் மக்களாக்க வேண்டும்.

"விலங்கொடு மக்க ளனையர், இலங்குநூல்
கல்லாரோ டேனை யவர்"

அரசியற்றலைவர்களுக்கும், சிறப்பாகக் கல்வித் துறைத் தலைவர்கட்கும், மக்களை மக்களாக்குவதினும், செய்யத்தக்க சிறந்த பணி வேறொன்றுளதோ? இஃதன்றோ முதற் பணி! இதனை இன்னும் செய்யத் தொடங்காது, பல்வேறு சீர்திருத்தங்களில் ஈடுபடுதல், முதல் இல்லாது வாணிபம் செய்து ஊதியம் பெற விழைவதை யொக்கும்.

## ஆசிரியர் கடன்

தாய் மொழியின் முன்னேற்றத்தின் பொருட்டு ஆசிரியர் செய்ய வேண்டுவதுயாது? இளம் பருவ முதற்கொண்டே நம் சிறுவர் தாய் மொழிக் கல்வியில் ஆர்வமுடையராகச் செய்தல் வேண்டும். அவர்தம் மனதைக் கவரத்தக்க முறையில், தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும். அதன் பொருட்டுப் புதுப் புது முறைகளைக் கையாட வேண்டும். பல்வேறு நாடுகளிலும் மொழி கற்பித்தற்கண் கையாடப்பட்டு வரும் முறைகளைக் கற்று ஆராய்ந்து அவற்றுள் நம் மொழியியற்கைக்குப் பொருந்தியவற்றைக் கையாடி, பொருந்ாதவற்றைத் திருத்தியமைத்து ஏற்குமாறு பயன்படுத்த வேண்டும். நம்மனோர் பண்புக்கேற்குமாறு புது முறைகளை ஆராயும் தொழிலில் ஈடுபடவேண்டும். அந்தோ! பன்னெடு நாளாக யாதொரு முறையுமின்றிக் கற்பிக்கபட்ட பாடமொன்றுண்டாயின் அது தமிழே என்று கூறினும் இழுக்காகாது. ஆசிரியர் தொழிலுக்குப் பயிற்சி பெறும் போதனமுறைப் பாடசாலையிலும் தமிழ் கற்பித்தற்கென்று தனிப்பட்ட, விரிவான முறைகள் கற்பிக்கப்படவில்லை. பயிற்சி பெறும் மாணவர், எழுத்துக் கற்பித்தல், வாசிப்புப் பாடம், செய்யுள், இலக்கணம், கற்பித்தல் முதலியவற்றிற்கு முன் மாதிரியாகக் கற்பித்துக் காட்டப்படும் பாடங்களையும், ஆங்காங்கே ஆசிரியர் தரும் குறிப்புகளையும் ஆதாரமாகவைத்துக் கொண்டே, ஒருவாறு அனுபவ முறை யொன்றுண்டாக்கி, அப்பியாசித்துப் பயிற்சிக் காலத்தைக் கழித்துச் சென்றனர். பரீட்சையில், பாடக் குறிப்பு தயார் செய்க, என ஒன்றிரண்டு கேள்விகள் வருமாதலின், இவ்வனுபவப் பொது முறை, பரீட்சையில் தேர்ச்சி பெறப் போதுமானதாயிருந்ததால் பயிற்சி பெறும் மாணவரும், அவர்தம் ஆசிரியரும், வேண்டுமளவு செய்வதே கடப்பாடெனக்கொண்டு

அதனைத் திருத்தச் செய்தனர். முன்னைத் திட்டப்படி ஹையர் கிரேட் மாணவர் இரு வருடங்களிலும் பரீட்சைக்கென்றமைக் கப்பட்ட பாடப் புத்தகங்களைக் கற்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். போதனு முறைப் பயிற்சி சாலையில் வந்து முறைபயில்வதற்குப் பதிலாக இலக்கண இலக்கியமே பயின்று சென்றனர். செக்கண்டெரி கிரேட் மாணவரோ வென்றால் தமிழ் ஒழிந்த ஏனைய பாடங்கள் ஒவ்வொன்றும் கற்பிக்கு முறை யைத் தனித்தனியாகத் திட்டமாகக் கற்றுச் சென்றனரேனும் தமிழ் கற்பிக்கும் முறையறிவில் முன்னோரையே ஒத்தனர்.

கல்வித்துறையில், தாய் மொழியின் இன்றியமையாமையை யும் அது கற்பிக்கும் முறையின் அவசியத்தையும் நன்குணர்ந்த கல்வித்துறைத் தலைவர், போதனு முறைப் பயிற்சி சாலைப் பாடத் திட்டத்தைத் திருத்தியமைக்குமிடத்து, தாய் மொழிக்கு சர்வத்துவமும், தாய் மொழி முறைக்குத் தனியிடமும் கொடுத் துதவிய அரும் பெருந்தொண்டு ஆசிரியர் யாவராலும் போற்றற் குரியதே. இனி இத்துறையில் முனைந்து நின்று முயல்வது, போதனு முறைப் பயிற்சி சாலை ஆசிரியர், மாணவாசிரியர் இன்னோரது கடனே யாகும். ஆசிரிய மாணவிர்! புது முறை களைக் கசடறக் கற்க; கற்றபின் அதனைத் துணையாகக் கொண்டு கற்பிக்க. தமிழாசிரியர்களே! புதுப் புது முறைகளை ஆராய்ந்து கண்டு தமிழுலகினுக்குத் தருக. அதன் பொருட்டு ஓய்வின்றி உழைக்க.

தமிழ் முறையை அறிவிக்கும் நூல்கள் பல விருந்தாலன் றே, அவற்றைக் கற்றறிந்து கையாடலாம். தமிழ் மொழி மட்டும் வாசித்து அறியும் திறனையுடைய ஆசிரியரும் மாணவ ஆசிரியரும், படித்தறிதற்குரிய "முறை நூல்கள் பல, தமிழ் மொழியில் இல்லையே" என்பது, தமிழ்நாட்டு ஆசிரியர் பலராலும் கூறப்படும் ஒரு பெருங் குறை. இக் குறையை நீக்கும் பொ ருட்டே இந் நூல் எழுதப் புகுந்தனம். இது போதனுமுறைப் பயிற்சி பெறும் எலிமென்டெரி, செக்கண்டெரி கிரேட் மாணவர் களுக்கு நேர் முறையில் பயன்படும் படி அவர்களுக்கென்றமைக் கப்பட்ட பாடத்திட்டத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. புதுத் திட்டத்தின்படி பயிற்சி பெறும்

மாணவர் கற்றற்குரிய தமிழ்ப்பாட அளவு மிகுதி. அதற்கென்று கால அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் கால அளவோ மிகக் குறைவு. செக்கண்டெரி கிரேடுக்கு வாரத்திற்கு 2 காலப் பகுதிகளும் (periods) எலிமென்டெரி கிரேடுக்கு 3 காலப் பகுதிகளும், தமிழ்ப் பாடத்திற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இக் கால வெல்லைக்குள், முன் போலவே பரீட்சைக்குரிய பாடப் புத்தகத்தையும் கற்று முடிக்க வேண்டும். குறிக்கப்பட்ட இலக்கணங்களையும் கற்க வேண்டும். பலவேறு துறைப்பட்ட கட்டுரைகளையும் எழுத வேண்டும். திட்டப்படி திட்டமாக முறையும் கற்க வேண்டும். அதனை நோட்டில் எழுதுவதற்கே கொடுக்கப்பட்ட நேரம் போதாததாகும். இக் குறுகிய காலத்தில் மாணவர் பெரிதும் பயன் பெற வேண்டுமாயின் அச்சேறிய முறை நூல்கள் பேருதவியாகும் எனக் கருதி இதனை வெளியிடத் துணிந்தேன்; மாணவர் கற்றுப் பயன் பெறுவாராக.

இந் நூலுக்கு ஆதாரப் பொருளாயமைவது, மேனாட்டுக் கல்வித் துறை வல்லார் ஆராய்ந்து கண்டு எழுதி வைத்த அரும் நூற் கருத்துக்களும், நம் நாட்டுப் பெரியார் அனுபவத்திலறிந்த குறிப்புகளும், சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பாலர் வகுப்புமுதல் பத்தாம் வகுப்பிறுதியாகவும், உயர்தரக் கலாசாலையிலும் பத்தாண்டுகளாகப் போதனா முறைப் பயிற்சி சாலையிலும் தமிழாசிரியராக உழைத்து அடைந்த அநுபவ அறிவுமாகும்.

## கல்விப் பயிற்சியில் தாய் மொழிக்கு உரிய இடம்.

## The place of the mother tongue in education.

கல்விச்சாலையில் கற்பிக்கப்படும் பாடங்களுள், தாய் மொழியே தனியிடம் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தது. தனி என்ற சொல் ஒப்பற்ற என்றும் தனிப்பட்டவொரு என்றும் இரு பொருட்படும். தாய் மொழியும் பல பாடங்களுள் ஒரு பாடம் என்று கருதலாகாது. தாய்மொழி, ஒரு தனிப் பாடமாகத் தனியிடம் பெறுவதற்குமுரிமையுடையது. ஏனைய பாடங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரக் கருவியாக நின்று தனித்

தனி இடம் பெறுவதற்கு முரிமையுடையது. ஏனெனில் ஒரு மாணவன் கணிதம், சரித்திரம் முதலிய பிற பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்கு, முதற் காரணமாய் நிற்பது அவனுடைய தாய் மொழித் தேர்ச்சியே யாகும்.

எவ்வாறெனில், பல்வேறு பாடங்களில் அறிவு பெறுதற்குக் கருவி மொழியாக நிற்பது **தாய் மொழியே.** தாய் மொழியில் ஆசிரியர் கூறுவதைத் தெளிவாக அறியவும், அவ்வப் பாடப் புத்தகங்களையோ, வகுப்பில் தாம் எழுதிக் கொண்ட குறிப்பேடுகளையோ, வாசித்துப் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளவும், இவ்விரு வகையிலும் தான் அறிந்தவற்றை, விளங்கக் கூறவும், எழுதவும், தகுதியுடையனாதற்கு, மாணவன் முதற்கண் தாய் மொழியில் தக்க தேர்ச்சியுடையனாதல் வேண்டும். பிற பாடங்களிற் றிறன், ஒரு மாணவனின் தாய் மொழித்திறனையே பொருத்தது.

நாம் எத்துறையினும் அறிவு பெறுவது சிந்தனையின் மூலமாகவே. சிந்தனையின்றிக் கல்வி கற்பது இயலாது. சிந்தைக்கும் மொழிக்கும் இணைபிரியாத் தொடர்பு உண்டென்பதை மறுத்துக் கூறுவார் எவருமிலர். மொழியின்றேல் சிந்தையின்று சிந்தையின்றேல் மொழியுமின்று. மொழியெனப்படுவது சிந்தையை வெளிப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் கருவி, என்பது பொதுவாகக் கூறப்படும் இலக்கணமாயினும், மொழியைச் சிந்தையை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக மட்டும் கொள்ளக் கூடாது; **மொழியே சிந்தை** எனல் வேண்டும்.

"சிந்தனை பேச்சோடு மிகச் சம்பந்தம் பூண்டவை என்பது நிச்சயம். நாம் பேச்சிற்கு உறுப்பாகிய சொற்களைத் துணைக் கொள்ளாது யாதையாயினும் சிந்தித்தல் கூடுமா அன்றா எனும் வினா, மனோ தத்துவ சாத்திர விழுப்பன்னர்களால் நெடுங்காலம் ஆராயப்பட்டும், ஏற்ற விடை பெறாததாகக் கிடக்கின்றது. இந்தியரான நம் முன்னோர் இக் கேள்விக்கு எதிர்மறையாக அறுதியிட்டு, "**நம் சிந்தனை யெல்லாம் சப்தத்தோடு கூடியனவே யாம**" என்றனர். அது மட்டோ? சப்தம், அன்றேல் ஸ்போடம், நித்தியமானது எனவும், அதன் வழியே எவ்வெச்சிந்தனையும் பிறக்கும் எனவும் கூறிப் போந்தார். சைவ சித்தாந்தி

கள் வாக்கே, சூக்குமை என, பைசந்தி என, மத்திமை என, வைகரி என நின்று படிமுறையாய்த் தொழிற்பட்டு இந்நால் வகையினும் புத்தியானது சிந்தித்தலைச் செய்ய உதவும்" எனப் போதித்தனர். இவ் விவாதம் எவ்வாருக முடிவு பெறினும், நாம் சிந்திக்கும்போது எல்லாம் சொற்களைத் துணைக் கொண்டே அந்த முயற்சியைச் செய்கின்ருேம் என்பதில் மயக்கமின்று. எவராயினும் சிந்தனைகளைப் புறம்பாம் உருவாக்கி வைத்துக் கொண்டு, பின் அவற்றிற்கு ஏற்ற சொற்களைத் தேடுவார் இலர். யாவரும் சொற்கள் மூலமாகவே சிந்தித்து, சொற்களைக் கொண்டே அச் சிந்தனைகளையும் தெளிவாக்கிக் கொள்வர். சொற்களோடு உடனும் உயிரும் போற் கூடாமல், சிந்தனைகள் தனித்து எழுவதும் இல்லை. சொற்களைக் கொண்டு அல்லாமல் அச் சிந்தனைகள் திட்டமானவைகளாய் நிலை பெறுவதுமில்லை". எனத் தருக்க சாத்திரச் சுருக்கம் என்னும் நூலில், அதன் ஆக்கியோன் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆகவே சிந்தனையின் ஆற்றல், மொழியின் ஆற்றலைப் பொருத்தது. சிந்தனை அருவப் பொருள்; மொழி செவிப் பொறிக்கு விடயமாகிய உருவப்பொருள். இவ்வளவே இவை தம்முள் வேற்றுமையன்றி, இவற்றை வேறுபடுத்திக் காட்டவியலாது. உரு-மனுனார் வாய் நிற்கும்கருத்துப் பொருள்.

மொழியாவது, சிந்தனைக் குறி (Coinage of Thought) எனலாம். ஐம்பொறிக்கு விடயமாகிய பொருள்களையும் அவற்றின் தொழில்களையும் ஒருவாறு சொற்களின் உதவியின்றி சிந்தித்தல் கூடும். சான்ருக, சிறுகுழந்தைகள் பேசுவதற்கு முன்னும் சிந்திக்கின்றனர் என்பதையும், மக்கட் குழுவினர், மொழி பெறும் முன்னரும் சிந்தித்தல் செய்து வந்தனர் என்பதையும் கண்டு உணர்க. அப் பொறியுணர்விற்கு அப்பாற்பட்டு நின்ற நியாயித்தல் (Reasoning) முதலிய சிந்தனு ரூபப் பொருள்களை மொழியின் உதவியின்றி சிந்தித்தல் இயலாது இவ்விதச் சிந்தனைகளை நிகழ்த்துதற்கு "அறிகுறி" இன்றியமையாதது. இவ்வறிகுறியே மொழியாகும். ஆதலின் **மொழி, சிந்தனையை வெளிப்படுத்தும் கருவி மாத்திரமன்று, சிந்தனைக் கருவியுமாம்;** சிந்தனையால் உண்டாவதன்று; சிந்தனையையே உண்டாக்குவது. இவ்வாறு சிந்தனைக்கு மூலமாகிய மொழியை நீக்கிவிட்டு எதைத்தான் கற்க முடியும்? ஆகவே கல்வியில் தாய் மொழிப் பாடம் வகிக்கும் இடம் ஒப்பற்றது.

தாய் மொழிப் பயிற்சி, சிந்தனைக்கு வன்மையளிக்கின்றது. சிந்தனைவன்மை கல்விப் பயிற்சிக்கு உறுதுணையாக நிற்பது. இதனை நன்குணர்ந்து, ஆசிரியர் மாணவரைத் தாய்மொழியில் மிக்கதிறனுடையராகச் செய்வார்களாக. பாடசாலையிற் கற்பிக்கும் பாடங்களுள் தாய் மொழி, ஒருபாடம் அன்று; ஒரே பாடம் என்று கருத வேண்டும்.

## [illegible] வாழ்க்கையிற் தாய் மொழியின் சிறப்புத்தன்மை.

தாய்மொழி சிறப்பிடம் வகிப்பது கல்வி கற்கும் காலத்து மாத்திரமன்று. நம் வாழ்க்கையிற் பிறப்பு முதல் இறப்புவரை அது நம் இன்றியமையா வாழ்க்கைத் துணை என்று கூற வேண்டும். நம் வாழ்நாட்களில் தாய் மொழியைக் கருவியாகக் கொண்டே, நம் எண்ணங்களைப் பேச்சின் மூலமாகவும் எழுத்தின் மூலமாகவும் பிறர்க்கு அறிவிக்க வேண்டியதிருக்கிறது. இதுவே இயற்கை முறையாகும். இந் நாளில் பலர் பல்லாண்டு ஆங்கிலக் கல்விப் பயிற்சியின் பின்னர், ஆங்கில மோக வலைக்குட்பட்டுச் சிக்கி அதிலேயே பன்னெடுநாள் உழன்றதன்பயனாக, ஆங்கிலத்திலே அத்துணை எளிமையாகப் பேசி, எழுதி, வந்தனராயினும், தாய் மொழியைப் போல் உள்ள வுறைப்பின்றி, இயற்கையாக இயம்ப முடியவில்லை என்பதை அன்னார் உணர்வர். தாய் மொழி வழங்குவதை முற்றிலும் கைவிட்டதனால், தாய் மொழி கஷ்டமாகத் தோன்றுகின்றதேயன்றி, இயற்கை யாகவே அஃது அவர்களுக்குக் கஷ்டமானதன்று. ஆங்கிலத்திற்கு அவர்கள் செலவிட்ட நேரத்தில் பத்திலொரு பங்கு, தமிழ் மொழிக்குச் செலவிட்டிருப்பார்களாயின், அவர்கள் ஆங்கிலம் பேசுவதைவிடப் பன்மடங்கு அழகாகவும் தட்டுப்பாடின்றியும் தமிழில் பேசும் திறமையுடையவராயிருப்பார் என்பது திண்ணம்.

ஆனால் உயர்தரக் கல்வி கற்ற பலரும், பட்டதாரிகளும் தாய் மொழியிற் பேசவும் எழுதவும் எவ்வளவு கஷ்டப்படுகின்றனர். நால்வர் பார்க்க நான்கு சொற்கள் கூறுவதென்றாலும் எழுதுவதென்றாலும் மனத் துணிவு ஏற்படுவதில்லை. துணிந்து எழுதினாலும் சொற் பிழைகள் எத்தனை? உண்டாகும் சந்தேகங்கள் எத்தனை? இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது ஒருவாறு எழுதிவிட்டாலும், அவ்வெழுத்து அவர் கருதியதை

வெளிப்படுத்துவதில்லை. உயர்தரக் கல்வி கற்றோர் நிலையிதுவாயின், ஆரம்பக் கல்வியுடன் நின்றவர் நிலையினைக் கூறவும் வேண்டுமோ? அந்தோ! இதற்குக் காரணமென்ன? தாய்மொழியை அசட்டை செய்ததையே யாகும்.

பல்லாண்டு கலைபயின்ற பட்டதாரிகள், பேரறிவாளர், சிந்தனையாற்றல் பெற்றோர், என்ற காரணத்தால், பட்டதாரிகளும் என உயர்வு சிறப்பும்மை கொடுத்து இத்துணை கூறினேனேயன்றி, அன்னாரை இழித்துக் கூறுகின்றேனல்லேன்; அன்பர்கள் அறிக.

இவ்வாறு ஆயுள் முழுவதும் பயன்படக்கூடியது தாய்மொழியாதலின், அதில் நம் சிறுவர் இளமையிலேயே போதிய தேர்ச்சி பெறச் செய்வது நம் கடனாகும்.

## மொழிப் பயிற்சி பொதுக் கடன்

இக் கடன் ஒரு பொதுக் கடனேயன்றி தமிழாசிரியர்க்கு மட்டும் உரியதன்று. நன்கு சிந்திக்கவும், சிந்தித்துக் கண்டறிந்த கருத்துக்களைத் தெளிவாக வெளியிடவும், மாணவரைப் பயிற்றுவிக்கும் முயற்சியில் எல்லா ஆசிரியரும் ஒத்துழைக்க வேண்டும். இதனை ஒரே பாட நேரத்தில் தமிழாசிரியர் மட்டும் கவனிப்பதனால் செய்துவிட முடியாது.

சிந்திப்பதும், சிந்தனைகளை வெளிப்படுத்துவதும், எல்லாப் பாடங்களுக்கும் பொது. இதனைத் தமிழாசிரியர் மட்டும் செய்துவிட முடியாது. மேலும், தமிழ்ப் பாடத்தில் மாத்திரம் ஆசிரியர், நன்கு சிந்திக்கவும், சிந்தித்தவற்றைத் திருத்தமாகத் தெளிவுபட வெளிப்படுத்தவும், எழில் பெற எழுதவும் பயிற்றுவிக்க, ஏனைய பாடங்களில் எல்லா ஆசிரியரும் அவ்விடயங்களிற் சிறிதும் கவனம் செலுத்தாதபடி, மாணவர் இஷ்டம்போல் கவலையீனமாகக் கொச்சையாகப் பேசவும், கவலையீனமாக எழுதவும் விட்டு விடுவார்களென்றால், தமிழாசிரியர் ஒருவருடைய முயற்சியால் யாது பயன் உண்டாகும்? அவரது அரு முயற்சியில் உண்டான நற்பயிற்சி ஏனைய ஆசிரியர்களது முயற்சியின்மையாற் கெட்டுவிடுமன்றோ? ஒவ்வொரு பாடமும், தனித் தனி ஒரு பொருளைப்பற்றித் தெளிந்த அறிவை உண்டாக்கும் பாடமாத்திரமன்று; சிந்தனையிலும், கருதியதைத் தெளிவுபட வெளிப்படுத்துவதிலும், பயிற்றுவிக்கும் பாடமுமாகும். ஆதலின் பள்ளிக்கூடத்தில் எப்பாடமாயினும் சரி;

மாணவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், திருத்தமாயிருத்தல் வேண்டும்; ஒவ்வொரு வாக்கியமும், தெளிவு படப் பொருளை வெளிப்படுத்துவனவாயிருத்தல் வேண்டும். எழுதும் ஒவ்வோ ரெழுத்தும் திருத்த முற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தத்தம் பாட நேரங்களில் இவற்றை கவனித்து வரல் வேண்டும்.'

## மொழிப் பயிற்சியின் இரு திறம்

## The receptive and expressional sides of language teaching

மொழியின் வளர்ச்சியைச் சுருக்கிக் கூறுமிடத்து, மொழி மக்களின் ஆக்கப் பொருளே என்று கூறினேம்.

'மாவும் மாக்களும் ஐயறி வினவே
'மக்கள் தாமே ஆறறி வுயிரே'

என்பது தொல்காப்பியம். பேராசிரியர் இச் சூத்திரங்கட்கு உரை கூறுமிடத்து, "ஐயறிவுடையன விலங்குள், அவை போல்வன ஒருசார் மாவிடங்களுமாம்" மாவென்பன நாற்கால் விலங்கு; மாக்கள் எனப்படுவார், மனவுணர்ச்சியில்லாதார்" என்றும் "மக்கள் எனப்படுவார் ஐம்பொறி யுணர்வேயன்றி, மன மென்பதோர் அறிவும் உடையவர்" என்றும், "முப்பத்திரண்டு அவயவந்தான் அளவிற்பட்டு, ஆறறிவோடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ, மக்களெனப்படும்." எனவுங் கூறியுள்ளார்.

மா—என்னும் சொல் மிருகத்தையும், மாக்கள் என்னும் சொல் மிருகங்களையும், மிருகங்களைப் போலவே ஐம்பொறி யுணர்வு மட்டும் படைத்த மக்களையும் குறிக்கும். ஆறுவது அறிவாகிய பகுத்தறிவும் உடையவர்களே மக்களாவர். இப் பகுத்தறிவே மக்களை மாக்களினின்றும் வேறு பிரித்துக் காட்டுவது. மக்களது பகுத்தறிவுக்கு அறிகுறியாக விளங்குவது மொழியுடைமை. மொழியே மாளிடன் பகுத்தறிவில் மேம்பாடடைந்து பல துறையினும் முன்னேறுவதற்கு ஆதாரமாயுள்ளது. ஆகவே சுருங்கக் கூறின், மாக்களை மக்களாக்குவது மொழியே.

பயனின்றி ஒன்றும் உலகிற் றோன்றுவதில்லை; தோன்றினும் நிலை பெறுவதில்லை. மொழி, உலகிற் றோன்றி இது காறும் நிலை பெறுவது அதன் பயனுடைமையைப் புலப்படுத்தும். பயன் கருதி மக்கள் படைத்துக் கொண்ட, ஆக்கப் பொருளே மொழி.

இம் மொழியாற் பயன் யாதென ஆராய்வோம். கருத்தை வெளிப்படுத்துதற்கு மாவிடன் கையாடும் கருவியே மொழி. பல்வேறு முறையில் கருத்து வெளிப்படுத்தப்படலாம். விலங்குகட்கும் கருத்துண்டு; விருப்பு வெறுப்புக்களுண்டு; அவற்றை அவை வெளிப்படுத்துகின்றன. நாய் நன்றியறிதலைக் காட்ட வால் குழைத்து அணுகி நிற்றலும், கோபத்தைக் காட்ட உறுமுதலும், வெறுப்பைக்காட்டக் குரைத்தலும், கருத்தை வெளிப்படுத்தும் கருவி யென்றே கொள்ள வேண்டும். இக் கருத்து வெளிப்பாட்டுக் குறிகளை மொழி யெனக் கொண்டு, அதனை இயற்கை மொழி என்பர் ஒரு சாரார். அது அறிகுறியளவே யன்றி மொழியப்படாமையின் 'மொழி' எனப்படாது.

மக்கள், தம் மனதிற்றோன்றும் கருத்துக்களை முக விகாரத்தாலும், கைச் சைகையாலும் காட்டக்கூடும். கை யசைப்பினால், வா, போ என்றும், மொழியாமலே சொல்லி விடலாம். விருப்பு வெறுப்புக்களை முகம் காட்டும்,

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்"

என்ற குறள் இதற்குச் சான்றாகும்.

எனினும் உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியக் காட்ட வல்லது மொழியே. சைகைகள் நன்கு கருத்தை வெளிப்படுத்த இயலாமையாலன்றோ, மொழி தோன்றியது. ஆதலின் மொழியினது **முதற் பயன் தன் கருத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தல்.**

கருத்து மொழியினால் வெளிப்படும் போது, அம் மொழியின் துணை கொண்டன்றோ பிறர் அக் கருத்தை யறிவது? ஆதலின் அம் மொழியே பிறர் கருத்தை அறிவதற்குங் கருவியாக, விளங்குகின்றது. ஆதலின் **இரண்டாவது பயன் மனத்திற் கருத்துக்களைக் கொள்ளச் செய்தல்.**

ஆகவே மொழி இருவகையிற் பயன்படுகின்றது அவை யாவன :—

**1.** பிறர் கருத்துக்களை அறிதற்குக் கருவியாகப் பயன்படுகின்றது. இது கோடற் பயன் எனப்படும். (கொள் + தல் = கோடல்—பிறர் கூறுவனவற்றை மனதிற் கொள்ளுதல் என்பது இதன் பொருள்.

2. தன் மனத்திற் றோன்றும் கருத்துக்களைப் பிறர்க்கு அறிவித்தற்குக் கருவியாகவும் பயன்படுகின்றது. இது ஈதற் பயன் எனப்படும். ஈதல்—கொடுத்தல். தன் மனக் கருத்துக்களைப் பிறர்க்குக் கொடுத்தல் என்பது இதன் பொருள்.

மொழி இவ்விரு பயனுடைத்தாகலின், தாய் மொழியைக் கற்பிக்குமிடத்தும், நாம் இவ்விரண்டினையும் விருத்தி செய்யும் நோக்கங்களைக் கருத்திற் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

## மொழிப் பயிற்சியின் இரு நோக்கம்

1. மாணவர் தாய் மொழியிற் பிறர் மொழிவதைக் கேட்டும், தாய் மொழியில் எழுதப்பட்டிருக்கும் நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், கடிதங்கள் முதலியவற்றை வாசித்தும், தெளிவாக அறிந்து, தம் அறிவைப் பெருக்குதற்குத் தகுதியுடையராக்குதல் வேண்டும். இவ்விரு முறையினும் தாங்கள் அறியும் உயர் கருத்துக்களை, உள்ளத்தில் உணர்ந்து இன்புறும் இயல்பினைப் பெறுமாறு செய்தல் வேண்டும். இன்பம் உள்ளக் கிளர்ச்சியை யுண்டாக்கும்.

2. சிறுவர் தம் மனத்திற் கருதியவைகளை, உள்ளவாறே கேட்பவர், ஐயந்திரிபற அறியும் வண்ணம், திட்டமாகவும் தெளிவாகவும் சொல்லும், சொல்வன்மை உடையவர் ஆக்கல் வேண்டும். தாமின்புறுவதைக் கண்டு உலகு இன்புறுமாறு, தம் வாழ்க்கையின் இன்பத்திற்கு அடிப்படையான உயர் கருத்துக்களை, உயர்வுபட உரைத்து, உவப்பூட்டும், இயல்பினை அடையச் செய்தல் வேண்டும்.

இவ்விரு திறனையும் மாணவர் அடையச் செய்வதே தம் நோக்கமாக, தாய் மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர் கொள்ளல் வேண்டும்.

இக் கருத்தை நாம் மனத்திற் கொள்ளுங்கால், மூவகைப் பயிற்சி நாம் மாணவர்க்கு அளித்தல் வேண்டும். அவையாவன:—

(1) வாய் மொழிப் பயிற்சி.
(2) வாசிப்புப் பயிற்சி.
(3) எழுத்துப் பயிற்சி.

இம் மூவகைப் பயிற்சியின் மூலமாகக் கோடல் ஈதல் ஆகிய இருவகைத் திறமைகளையும் மாணவர் பெறுவர்.

மேற்காட்டிய ஈதல், கோடல் ஆகிய இருவகைத் திறமைகளையும் அளிக்கும் பொருட்டு மூவகைப் பயிற்சிகளையும் கொடுக்கும்போது, நாம் திட்டமான நோக்கங்களையுடையவரா யிருத்தல் வேண்டும். "எண்ணித் துணிக கருமம்" என்ற பெரியார் வாக்குப்படி தனிப்பட்ட ஒரு பயிற்சியளிக்குங்கால், அதன் நோக்கம் யாது, எத்தகைய குறிக்கோளைக் கருத்திற் கொண்டு நாம் பயிற்சியளித்தல் வேண்டும், என ஆராய வேண்டும். இவ்வாராய்ச்சியின்றிக் கற்பிக்கப்படும் பாடம் பயனற்றதாகும். ஆதலினாலன்றோ பாடக் குறிப்பின் தலைப்பில் நோக்கம், பொது, சிறப்பு என்பவற்றையெல்லாம் காட்ட வேண்டும். அதனைத் தெளிவாகக் குறிப்பதற்குச் சிந்தனையும், ஆராய்ச்சியும் வேண்டும். இதனை நாம் தெளிவாக மனதிற் கொண்டு விட்டால், பாடம் வெற்றி பெறுவதற்கு ஒரு படியேறி விட்டோம். ஏனெனில் அந் நோக்கத்தை நிறைவேற்றும் ஒரு கருத்துடன் நாம் பாடத்தை நடத்தும்போது சித்தி கிடைப்பது உறுதி; பின்னர், முறையைச் சிந்திக்க வேண்டும்.

முறையை முன்னரே சிந்தித்து, நாம் வகுப்புக்குட் செல்லும் பொழுது, எவ்வித இடர்ப்பாடுமின்றி நினைத்த பொருளை நினைத்தவாறு மாணவர் மனதிற் பதிக்கலாம். ஒரு வினையைத் தொடங்குங்கால் அதனை முடிக்கு முபாயத்தை அறிந்து தொடங்க வேண்டும்; "தொடங்கி வைத்துப் பின் எண்ணுவோம்" என்பது இழுக்கு. ஆசிரியர் பாடங் கற்பிக்கும் பொழுது, கருதியதைச் சொல்ல முடியாமலும், மாணவர் மனதிற் பதிக்க முடியாமலும், திண்டாடுவார்களாயின் அதற்குக் காரணம், முன்னதாகவே புகட்டும் முறையை நன்கு ஆலோசித்து, உளத்திற் கொண்டு செல்லாமையே. மாணவர்க்கு ஏற்படும் ஐயந்திரிபுகளை முன்னரே யோசித்து அவற்றை நீக்குவதற்குக் கையாளும் முறைகளையும், கடா விடைகளையும் உறுதியாக மனதில் வரைந்து செல்லவேண்டும். சென்றால் கற்பித்தல், திறமை வாய்ந்ததாகவே யிருக்கும். ஆசிரியருக்கும் மாணவர்க்கும் ஒருங்கே இன்பத்தை யளிக்கும்.

மூவகைப் பயிற்சிகளைத் கருமிடத்து, ஆசிரியர் மனதிற் கொள்ள வேண்டிய நோக்கங்களாவன :—

## வாய் மொழிப் பயிற்சி

வாய் மொழியாகப் பிறர் சொல்லும் விடயங்களைத் தெளிவாகக் கேட்டு மாணவர் அறிந்து கொள்ள வேண்டும். சொல்பவர் ஒன்று சொல்லக் கேட்பவர் வேறொன்றை நினைத்துக் கொண்டால் அதற்குக் காரணம் கேட்பவருடைய குற்றமாகவுமிருக்கலாம். சொல்பவருடைய குற்றமாகவுமிருக்கலாம். கேட்பவர் ஊன்றிக் கேட்காமல், மனதை வேறு வழியிற் செலுத்தியிருப்பாராகுல், கேட்ட பொருள் மனதிற் பதியாது. அல்லது தான் கருதியிருந்த வேறொன்றை அவர் சொல்லி விட்டதாகவே நினைத்துக்கொள்ளலாம். ஆதலின் வாய் மொழிப் பயிற்சியில் பிறர் சொல்வதை நன்ருகக் கேட்கப் பயிற்சி கிடைக்க வேண்டும்.

இனி, சொல்பவர், தன் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்த இயலாமையால், பிறர்க்குப் பொருள் விளங்காமற்போய் விடும். அத் திறமை பெறுவதற்குப் போதிய பயிற்சி யளித்தல் வேண்டும். சுருங்கக் கூறின், மொழியை மிக உறுதியுடன் கையாடவும், தன் கருத்தைப் பிறர் மனதிற் பதியும்படி தெளிவாக எடுத்தியம்பவும் கற்பிக்க வேண்டும்.

மொழியைக் கருவியாகக்கொண்டு தனக்கு இன்றியமையா விடயங்களை மட்டும் பிறர்க்கு அறிவிக்கும் திறமைமட்டும் பெறுதல் போதாது. தங்களுடைய உள்ள உணர்ச்சிகளையும், ஆழ்ந்த சிந்தனைகளையும் உள்ளத்திலும் உடலிலும் தோன்றும் உணர்ச்சியனுபவங்களையும், உள்ளவாறே எடுத்தியம்பும் ஆற்றலும் பெற வேண்டும். உள்ள உணர்ச்சிகளை வெளியிடுதற்குத் தாய் மொழியே சிறந்த கருவி. இங்ஙனம் வெளியிடுங்கால், உள்ளத்தில் ஓர் புத்துணர்ச்சியும் புதுஇன்பமும் ஏற்படுகின்றது, இவ்வின்பத்தை யடையப் பயிற்சியின் மூலமாக வழிகாட்ட வேண்டும்.

சிறுவர்க்குள் ஆக்கத் திறமை (Creative faculties) அமைந்து கிடக்கிறது. அதனைப் பன்முறையில் அவர்கள் வெளியிடலாம். வாய் மொழியின் மூலமாகவும் பிற வழியிலும் அவர்கள் அதனை வெளியிடலாம். தாய் மொழி, ஆக்கத் துறையில் ஊக்கமளிக்க வேண்டும். இதைப்பற்றி விரிவாகப் பின்னர்க் காண்க. நாம் பேசும்பொழுது பின்வரும் மூன்று நோக்கங்களுள்

ஒன்றை நிறைவேற்றுகிறோம். பிறர் நன்மையின் பொருட்டு அவர்க்கு அறிவுறுத்த வேண்டியவற்றை அறிவுறுத்தும் பொருட்டு பேசுகின்றோம். அல்லது நாம் கருதியதைச் சொல்லியின்புறுதலையே பயனாகக்கொண்டு பேசுகின்றோம். அல்லது நமது உள்ள வுணர்ச்சிகளையும் நினைவுகளையும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் பேசுகிறோம். இத் துறைகளிற் பயிற்சி பெற வாய் மொழிப் பயிற்சியில் வசதியளிக்க வேண்டும். நியாயதோரணை முறையிற் கருத்துக்களைக் கோவைப்படுத்திக் கூறும் ஆற்றலையுண்டாக்க வேண்டும்.

## வாசிப்புப் பயிற்சி

பிறர் கருத்தை வாய் மொழியின் மூலமாகக் கிரகிப்பது போலவே, வாசித்தும் பிறர் கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். இதற்குத் திறமையளிப்பது வாசிப்புப் பயிற்சியின் நோக்கமாயிருத்தல் வேண்டும். முதற்கண் வாசிப்புக்கு இன்றியமையாக் கருவியாகிய எழுத்தறிவையுண்டாக்க வேண்டும். இதற்கு மாணவர் இலகுவில் கற்றுக் கொள்ளக்கூடிய நல்ல முறைகளைக் கையாட வேண்டும்.

பிழையற வாசிக்கும் திறமையடைந்த பின்னர், விடய அறிவின் பொருட்டும், இன்புறுதற்பொருட்டும் வாசிக்கப் பயிற்சியளிக்கவேண்டும். தமிழ் நூல்களை வாசித்து இன்புறும் இயல்பை மாணவர்மாட்டு உண்டாக்க வேண்டும் "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்ற வள்ளுவர் வாக்கு, நூல்களைக் கற்பதினால் ஏற்படும் இன்பத்தைக் காட்டுகின்றது. உரைநடை நூல்களிலும் காவியங்களிலும் அளவில்லா இன்பம் பயக்கும் பொருள்களிருக்கின்றன. சிறப்பாக நம் தாய் மொழியின் இலக்கண இலக்கியங்கள், அளக்கலாகா அளவும் பொருளுமுடையனவா யிருக்கின்றன. "கல்வி கரையில" என்பது தமிழ் மொழிக்கே பொருந்தும். இக் கலைக் களஞ்சியங்களைத் தழுவி, அரும் பொருள்களை அறிந்து நுகர்ந்து இன்புறும் இயல்பை மாணவர் அடையச் செய்ய வேண்டும். வசன பாடம், செய்யுட் பாடம், இலக்கணம் முதலியவற்றைக் கற்பிக்கும் போது இந்நோக்கங்கள் ஆசிரியர் மனதிலிருக்க வேண்டும். வாசிக்கும் திறமையை உண்டாக்குவதோடு நின்று விடாது, எக்காலும் வாசிப்பின்மீது ஆர்வத்தையும் வாசிக்கும் இயல்பையும் உண்டாக்க வேண்டும்.

## எழுத்துப் பயிற்சி

ஆரம்பத்தில் எழுத்தறிவு பெற்ற பிறகு தன் கருத்துக்களை வாய் மொழியாகத் தெளிவுபடுத்தி வெளியிடுவது போலவே அழகாகவும், திருத்தமாகவும், பொருளைத் தெளிவாகப் பிறர் அறிந்து கொள்ளும் வண்ணமும் எழுதி வெளியிடும் ஆற்றலையும் படிப்படியாகவுண்டாக்க வேண்டும். தன் கருத்துக்களை தனக்குப் பயன் படும் பொருட்டும், பிறர்க்குப் பயன்படும் பொருட்டும், தனது சொந்த இன்பத்தின் பொருட்டும், உள்ளவுணர்ச்சிகளை வெளியிடுவதால், மறைந்து கிடக்கும் ஆற்றல்களை அபிவிருத்தி செய்தற் பொருட்டும் எழுதுமாறு திறமை பெறச் செய்யவேண்டும்.

இத்தகைய திறமைகளை யளிக்கும் நோக்கத்துடன் மூவகைப் பயிற்சிகளும் கொடுக்கும் போது, மொழியைக் கோடல், ஈதல் ஆகிய இரு வழிகளிலும் நன்கு கையாடி, தனக்கும் பிறர்க்கும் பயன்படும் மகனாகத் திகழ்வான். கல்வியின் நோக்கங்களுள் தலைமை சிறந்தது பயன்படும் பிரஜையாக்குதல்; இந் நோக்கம் இடையூறின்றி இனிது நிறைவேறும்.

## ஈதலியல்பு—விளையாட்டு முறை

## The employment of the play way

நூல் கற்பித்தலினது வரலாற்றைப் பண்டைத் தமிழ்ப் புலவர் கூறுமாறு காண்க:—

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங் கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப

(நன்னூலாசிரியர், பவணந்தி முனிவர்)

ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையில்

*திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்*
**கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்**
*கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.*

(தொல்காப்பிய உரையாசிரியர்
நச்சினார்க்கினியர்)

ஆசிரியர் கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உளங்கொளக் கொடுத்தலே ஈதலியல்பாகும். அதாவது மாணவனது இயல்பினை அறிந்து, அவன் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் பாடம் கற்பிக்க வேண்டும். ஆதலால்தான், ஆசிரியர் சிறுவர் மனோ நல லக்ஷணங்களையும் அவர் தம் இயல்புகளையும் விருப்பு வெறுப்புக்களையும் நன்கு உணர வேண்டியது இன்றியமையாதது. சிறுவரிடத்துக் காணப்படும் இயல்புகளுள் விளையாட்டில் விருப்பம் முக்கியமானது. இவ்விருப்பை இயல் பூக்கம் என்பர் உளநூற் புலவர். குழந்தையின் தீவிர வளர்ச்சிக்கு உறுதுணையாய் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கும் இயற்கை முயற்சியே, இயல் பூக்கமாகும். இவ்வூக்கம் குறையுமாயின் முயற்சியும் முன்னேற்றமும் குறைவுபடும். பெரும்பான்மை 5 வயது வரைக்கும் அவர்களது காலப் போக்கு, விளையாட்டே. பின்னரும் அவர்களிடம் விளையாட்டில் விருப்பம் இருந்தே வருகிறது.

## விளையாட்டில் விருப்பமேன்?

மக்கள் இளமை முதல் முதுமைவரை விளையாட்டு விருப்புடையவராயிருக்கின்றனர். வயதிற்குத் தக்கவாறு விளையாட்டுகள் வேறுபடுமேயன்றி விளையாட்டு விருப்பம் இருந்தே வருகிறது. இதற்குக் காரணம் யாது?

1. முதலாவது விளையாட்டு இன்பத்தை அளிக்கின்றது. இவ்வின்பம் எத்தகையது என்று கூறவியலாது. ஆயினும் அதிலே ஒரு விசேஷித்த இன்பம் இருப்பதை யாவரும் உணர்கின்றனர். அவ்வுணர்ச்சியே குழந்தைப் பருவமுதலே விளையாட்டில் ஈடுபடுத்துகின்றது. சீட்டு விளையாட்டில் மயக்கங்கொண்டு இரவும் பகலும் விளையாடிக் காலம் போக்குபவர்களை நாம் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? அது இன்பமாயிருக்கின்றது என்பர். அவ்வாட்ட மறியாதார் அவ்வின்பத்தை யறியார். அதில் பழகினவர்களுக்கே விசேஷித்த இன்பம் பயக்கின்றது. அதனால் விளையும் தீமைகளையும், பயனின்றி நாட் கழிதலையும்

ஆய்ந்து நோக்கின், அதனைக்களைவிலக்கருதார் அறிவுடையோர். இத்தகைய ஆழ்ந்த சிந்தனையுள் அவர்களை ஆக்காது விடுவது, அதன்கண் அவர் காணும் இன்பமே.

2. **விளையாட்டில் போட்டி உண்டாகிறது.** போட்டி மனப்பான்மையை யுண்டாக்கும் எதுவும், விளையாட்டே. போட்டியினால் உற்சாகமும் முயற்சியும் உண்டாகிறது; தளர்ச்சி தோன்றுவதில்லை.

3. **விளையாட்டு இன்பமான பொழுது போக்காகின்றது.** களிப்புடன் ஈடுபடும் எந்த முயற்சியும் விளையாட்டே; இதனை ஆங்கிலத்தில் "Hobby" என்பர். அதாவது பொழுது போக்கும் விளையாட்டு. தமிழ் நூல்களில் இதுவே '**விநோதம்**' எனப்படும். பவணந்தி முனிவர், நன்னூற் சிறப்புப்பாயிரத்தில் சீயகங்கன் என்னும் மன்னனை "அருங்கலை **விநோதன்**" எனப் பாராட்டுகிறார். இதற்குக் காண்டிகையுரையியற்றிய நாவலர் அவர்கள், அருமையாகிய நூல்களையாராய்வதே **பொழுதுபோக்கும் விளையாட்டாக உடையவன்** என உரையெழுதியுள்ளார். நூற்பயிற்சி இன்பமளிக்குமாயின், அதுவும் விளையாட்டே. சிறுவர்கள், பம்பரமாடல் முதலிய விளையாட்டுக்களிற் பல நாழிகைகளை எவ்வளவு இன்பமாகக் கழிக்கின்றனர்? தன்னை மறந்து, மெய் வருத்தம் பாராது பசி நோக்காது, வெட்ட வெளியில் நெடுநேரம் கழிக்கின்றனரே; அதற்குக் காரணம், இன்பமாகப் பொழுது கழிகின்றதுதானே?

### விளையாட்டியல்புக்குக் காரணம்

சிறுவர்களிடம் விளையாட்டியல்பு அமைந்து கிடப்பதற்குப் பலரும் பல காரணங்கள் கூறுவர்.

1. குழந்தையின் தேவைக்கு மேற்பட்ட சக்தியைச் செலவிடுவதற்கு விளையாட்டு சந்தர்ப்பம் அளிக்கின்றது என்பர். சக்தி குறைந்த பிள்ளைகளையும் பிணிப்பட்டவர்களையும் விட, ஆற்றல் வாய்ந்த சுகதேகிகளாகிய பிள்ளைகள் அதிக ஊக்கத்துடன் விளையாட்டில் ஈடுபடுகின்றார்களாதலின்.

2. பிள்ளைகள், பெரியோர்களைப்போல் நடிக்கும் விருப்பினால் தூண்டப்பட்டு விளையாடுகின்றனர். இவ்விளையாட்டின் மூலமாகப் பிள்ளைகள் தங்கள் பிற்கால ஜீவியத்திற்குப் பயிற்சிபெறுகின்றனர் என்பர் சிலர்.

3. முன்னோரது பரம்பரை யியல்புகளைப் பிள்ளை தன் விளையாட்டில் காட்டுகிறது. ஆகலின் இது பரம்பரைக் குணத்தின் பிரதிபிம்பம் என்பர் சிலர்.

மேற்கூறியனவெல்லாம் ஓரளவு உண்மையே எனினும், இவ்வியல்பின் உண்மைத் தத்துவம் வேறு; அஃதியாதெனின்,

குழந்தையின் வளர்ச்சியின் பொருட்டு இறைவனால் அமைக்கப்பட்ட இயல் பூக்கமே விளையாட்டு. உலகிற் பிறந்ததிலிருந்து பிள்ளை நாடோறும் வளரவேண்டுமென்பதே இயற்கை நியதி. தீவிர வளர்ச்சியுடைய பருவம் குழந்தைப் பருவமே. இப்பருவத்தில், குழந்தையின் உள்ளமும், உடலும், ஒழுக்கமும் வளர வேண்டும். இவ் வளர்ச்சிக்கு உழைப்பு, வேண்டும். உடல் வளர்ச்சிக்கும், உள்ள வளர்ச்சிக்கும் உதவியாயிருக்கும் உழைப்பு, மிகுதியாக விளையாட்டின்கண் உண்டு. ஆதலின் இயற்கையன்னை மூலமாக இறைவன் இடையறா உழைப்பை உண்டாக்கும் கருவியாக, விளையாட்டு விருப்பைக் குழந்தையின் இயல்பாக அமைத்துள்ளான். இஃது இறைவனாற் படைக்கப்பட்ட இயல்பாதலின் அதனைத் துணையாகக் கொண்டு, கல்வி புகட்டுவது இயற்கை முறையே யாகும்.

இவ் விளையாட்டுத் தன்மையை நாம் கல்வி கற்பிக்கு முறையில் பயன்படுத்திக் கொண்டால், சிறுவர்க்குக் கல்வி இன்பமளிக்கும் விளையாட்டாக மாறி விடும். மாணவர், கல்வியை விளையாட்டாக நோக்க ஆரம்பித்துவிடுவார்களாயின் நாம் படுகின்ற பல கஷ்டங்களும் நீங்கிவிடும். மாணவரும் இன்பமாகவும், விளையாட்டாகவும் அநேக நற்கலைகளைக் கற்று, அறிய வேண்டுவனவற்றை அறிந்து மிக்க பயனடைவர். வெறுப்புடன் செய்யப்படுவதைவிட விருப்புடன் செய்யப்படுவதே மிகத் திருத்தமுற முடிவு பெறும்.

விளையாட்டில் சிறுவர்க்கு எவ்வளவு உற்சாகம்! எத்தகைய முயற்சி! என்ன இன்பம்! ஒரு பாடத்தை விளையாட்டாக எண்ணி அவர்கள் கருத்தைச் செலுத்துமாறு செய்துவிட்டால், அவர்கள் தங்கள் முழு உற்சாகத்தையும் முயற்சியையும் அப்பாடத்திற் பயன்படுத்துவார்களல்லவா? அப்பாடத்தில் மாத்திரமன்று பொதுவாகக் கல்வியிலேயும், தம் வாழ்க்கையிலேயும் அதே உற்சாகமும் முயற்சியும் இன்பமும் உடையவராவர்.

**விளையாட்டு முறை எக் காலத்திற்குமுரியதன்று.** விளையாட்டு முறையென்பது, மாணவர் தாம் கற்கும் ஒரு பாடத்தை விளையாட்டு என்றே எண்ணி மிக விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் அதனைக் கற்குமாறு வழிகாட்டு முறையே.

இது குறிப்பிட்ட ஒரு பாடத்திற்கே உரியது என்று கருதக் கூடாது. எல்லாப் பாடங்களிலும் விளையாட்டு முறையைப் பயன்படுத்த வேண்டும். அதே சமயத்தில் விளையாட்டு முறையானது, ஒரு பாடத்தைக் கற்பித்துவிட்டு ஓய்வின்றி சதாகாலமும் உபயோகித்தற்குரிய ஒரு முறையென்று கருதவுங்கூடாது. உண்மையாகவே விளையாட்டு முறை இன்பத்தை விளைவிக்கும்.

விளையாட்டு முறை இன்பம் பயக்கும் முறையாயிருப்பினும், அதன் தொடர்பு யாதொன்றுமின்றி, பயிற்சி முறையில் (Drill Method) மாணவர் கற்கவேண்டிய பாகங்களும் பலவுள. அவற்றை அன்னார் பயின்றே கற்றல்வேண்டும். அப் பயிற்சி முறையிலும் ஏற்குமிடத்து விளையாட்டு முறையை பயன்படுத்துதல் நலம். விளையாட்டு நோக்கினையுடையதாயிருப்பின், அப் பயிற்சியும் அவர்கட்கு இன்பத்தையும் ஊக்கத்தையும் உடனளிப்பதாகவேயிருக்கும். விளையாட்டு நோக்குடன் செய்ய வேண்டிய பயிற்சிகளை எவ்வளவுதான் செய்தாலும், மாணவர்க்கு அதனால் சலிப்புண்டாவதில்லை. உதாரணமாக 'ப்ராஜெக்ட்' என்பது. இவ்வாறு விளையாட்டுப் போக்கில் செய்யப்படும் வேலையேயாகும்.

ஆறு வயதுச் சிறுவன், பட்டம் ஒன்று செய்வதும் அதனைப் பறக்கவிட்டு இன்பமடைவதும், விளையாட்டேயன்றி வேறு யாது? ஆயினும் அதனைத் துணையாகக் கொண்டு அவன் பெறும் பயிற்சிகளும், அவன் பெறும் பல துறையறிவும் பெரிதும் பயன்படுவன. அதைச் சிறுவர் விளையாட்டாகவே செய்வதனால், வேலைக் கஷ்டத்தை உணருவதில்லை. அந்தப் பிராஜெக்டைத் திருத்த முற முடிப்பதற்குத் தாங்கள் அறிய வேண்டிய விடயங்களையெல்லாம் மனவெறுப்பின்றித் தாங்களே முயன்று கற்கின்றனர். வெறுப்பின்றி ஒன்றைத் தாங்களே முயன்று, செய்து முடிக்கும்போது, அதனை நன்றாகக் கற்பதுமாத்திரமன்றி நன்றாக மனதிற் பதிப்பிக்கவும் செய்கின்றனர்.

ஆயினும் ஆசிரியர் விளையாட்டையே முக்கியப் படுத்திக்காட்டி முக்கியப் பொருளாகிய கல்வியைக் கைவிட்டுவிடக் கூடாது. கல்வியைக் காரியமாகவும், விளையாட்டை அதனைச் செய்தற்குரிய ஒரு துணைக் கருவியாகவுமே கொள்ளல் வேண்டும். கருவி, கர்த்தாவை மீறித் தொழிலியற்றாதபடி அதனை அடக்கியாளும் சக்தியை ஆசிரியர் உடையராயிருத்தல் வேண்டும்.

இனி, தாய் மொழி கற்பிக்குமிடத்து நாம் கையாளத் தகுந்த சிற்சில விளையாட்டு முறைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்:—

மொழியின் ஈதற்றிறனை விருத்தி செய்யச் சில விளையாட்டுக்களைக் கருவியாகக் கொள்ளலாம்.

## கதை நடித்தல்.

நடிப்பு சிறுவர்க்குப் பிரியமான ஒரு விளையாட்டு: கதை நடிப்பில் பங்கெடுக்கும் மாணவர் யோசித்து இன்னது சொல்ல வேண்டும் என்று மனதில் திட்டம் பண்ணிப் பின் அதை விளங்க எடுத்துரைப்பதில் நல்ல பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியால் அவர்களது ஈதற்றிறன் விருத்தியடையும்.

ஆனால் இவ்விஷயத்தில் ஆசிரியர் கருதவேண்டியது ஒன்றுண்டு. அது யாதெனில், சிறுவர்கள் விஷயத்தில் இந்த அரங்கேற்ற நடிப்பு, அத்துணை முக்கியமானதன்று. அறைக்குள் நடித்துப் பயில்வதே முக்கியம். கதை தயாரிப்பதில் அவர்கள் செய்யும் முயற்சியும், மீண்டும் மீண்டும் நடிப்பதில் அவர்கள் பெறும் பயிற்சியுமே, மிக்க பயன் தருவதாகக் கருத வேண்டும். ஒரு கதையைத் தெரிந்து கொள்வதிலும், அதனைச் சம்பாஷணை முறையில் அமைப்பதிலும், நடைக்கேற்ற உடையைச் சேகரிப்பதிலும், அரங்கம் அமைப்பதிலும், அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியும், ஒத்துழைப்பும் உண்டாக்கும், விருத்தி கல்வித் துறையில் மிக்கப் பயனுடையது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஆனால் அநுபவத்தில் நாம் காண்கிறதென்ன? சாதாரணமாக ஆசிரியர்கள் செய்வது யாது? அம்பலத்தில் ஆடுவதையே முக்கியமாகக் கருதுகின்றனர். 'அம்பலத்தில் ஆடுவதையே நோக்கமாகக் கொண்டாலும் அதன் பொருட்டுச் சிறுவர் செய்யும் பயிற்சியின் மூலமாயடைய வேண்டிய நன்மைகள் எல்லாவற்றையும்

அடைகின்றனரா? என்பதை ஆசிரியர் நன்கு கவனித்தல் வேண்டும். அம்பலத்தில் நடிப்பதையே அடிக்கடி முக்கியப் படுத்திக் கூறும்போது, மாணவர் பயிற்சியின்போது அடையும் ஆனந்தத்தை இழந்து விடுவர். இறுதி நடிப்பையே சதா கருத்திற் கொள்ளும்போது, பயிற்சிக் காலத்தில் அடிக்கடி மாணவர் மன நிலை புண்படுத்தத்தக்க கடுஞ் சொற்களைக் கூறவும், கோபித்து நோக்கவும், பிழை படுமிடங்களைத் திருத்துமாறு பல கால், அவர் வெறுக்கப் பயிற்சி கொடுக்கவும் வேண்டியது ஏற்படும். இவ்வாறு செய்யும்பொழுது விளையாட்டாகும் கதை நடிப்பு, கொடும் வினையாகவே கருதப்படும்.

தற்காலத்திற் பல பள்ளிக்கூடங்களில் கதை நடிப்பு ஒரு கல்வி முறையாகக் கருதப்படுவதில்லை. விசேஷக் காட்சியளிப்பாகவே கருதப்படுகின்றது. ஆசிரியர்கள் கதை நடிப்பை நினைப்பது பெரும்பாலும் கலாசாலை ஆண்டு விழாச் சமயங்களிலேதான். ஆண்டு விழா நிகழ்ச்சிகளுள், ஓர் நாடகம் நடிக்க வேண்டும். மாணவரின் பெற்றோரும் மற்றோரும் கண்டுகளிக்க வேண்டும். அதற்கு ஓர் கதை ஆயத்தப்படுத்த வேண்டும். இங்ஙனம் கதை நடிப்பின் நோக்கம் காட்சியளிப்பே ஆகிவிடுகின்றது. அளிக்கும் காட்சி முதற்றரமாயிருக்கவேண்டுமல்லவா? ஆசிரியர் தம் முழு கவனத்தையும் அங்ஙனம் செலவிடும்போது உண்மையான நோக்கத்தை மறந்து விடுகின்றனர். அப்போது விளையாட்டே வினையாகிவிடுகின்றது.

சிறு குழந்தைகளைப் பெருஞ் சபையில் நடிக்க வைக்காதிருப்பதே நல்லது. அவர்களுக்கு அம்பலத்தில் ஆடுவது அவ்வளவு இன்பமளிப்பதன்று. பிறர் கண்டாலும், காணாவிட்டாலும், தாங்கள் நடித்து அதனாலடையும் இன்பத்தை அநுபவிப்பதே அவர்களுக்கு முக்கியம்.

சிறுவர்கள் தாங்கள் விளையாடுவதைப் பிறர் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுவதில்லை. பிறர் பார்க்காமல் இருப்பதையே விரும்புவார்கள். சிறு குழந்தைகள் ஒருவரோடொருவர் விளையாட்டாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருக்கும் போது வேறு யாராவது பார்த்து விட்டால், உடனே பேச்சை நிறுத்தி விடுவார்கள். அல்லது ஓடி ஒளிந்து கொள்வார்கள். சில

சமயங்களில் நாம் பிள்ளைகளை, கூச்சப்பட்டு ஒன்றைச் செய்யாமலிருக்கும்போது, “சரி நாங்கள் எல்லோரும் கண்ணை மூடிக் கொள்கிறோம், நீ பாடு அல்லது ஆடு” என்று சொல்லி அதனை மீண்டும் செய்ய வைத்து விடுகிறோம். இது சிறுவர் இயல்பைக் காட்டுகிறது. பெரிய பையன்களுக்கு மற்றவர்கள் தன் நடிப்பைக்கண்டு தன்னைப் புகழ வேண்டும் என்ற பேராவல் உண்டு. ஆண்டு விழாக் கொண்டாட்டக் காட்சி நடிப்புகள், அத்தகையோருக்கே இன்பமளிக்கும்.

ஆதலால் அவர்களையொத்த வயதுடைய சிறுவர்களை, கண்டானந்திக்கும் சபையோர்களாக அமைத்துக் கொள்வதே நல்லது. பெரியோர்கள் முன்னிலையில் தாங்கள் நடித்துக் காட்ட வேண்டும் என்றார், அதற்காகத்தான் தாங்கள் நடித்துப் பயிற்சி செய்கின்றனர் என்றும், எண்ணுமாறு செய்யக் கூடாது.

உடை, நாடக மேடை அமைப்பு முதலியவற்றைப் பிரமாதப்படுத்த வேண்டாம். இவற்றாற்றான் கதையில் தம் நிலையினை உணர்ந்து, இயற்கையாக நடிப்பார்கள் என்று எண்ணக் கூடாது. சிறுவர்க்கு ஆச்சரியமான கற்பனா சக்தி அமைந்திருக்கிறது. ஆகையால் தங்களையோ, தங்களிருக்குமிடத்தையோ, எவ்விதமாக வேண்டுமானாலும் கற்பனைசெய்து கொள்ளக் கூடும். ஒரு குழந்தை தன்னையே பிள்ளையாகவும், தந்தையாகவும், நாயாகவும் நரியாகவும், விலங்காகவும், பறவையாகவும், தான் படுத்து நித்திரை செய்யும் குறுங்கட்டிலை, வீடாகவும், மோட்டாராகவும், குதிரை வண்டியாகவும், அரசுக்கட்டிலாகவும், மண்ணைச் சோறாகவும், இலையை அப்பளமாகவும், கற்களை கறிவகையாகவும், வெறுங்கையை, நீர் நிறைந்த பாத்திரமாகவும், யாதொரு சிரமுமின்றிக் கற்பனை செய்து கொள்ளக்கூடிய திறமையுண்டு. ஆகையால் நடிக்கத்தக்க எந்தச் சிறு கதையையும் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தி விட்டால், அவர்களே நடிக்க ஆரம்பித்து விடுவார்கள். நடிப்பின் ஆரம்பத்தைத் தொடங்கிக் கொடுக்க வேண்டிய அவசியமுமேற்படாது. அவர்களே தொடக்கத்தைக் கண்டுபிடித்துக் கொள்வார்கள்;

## சிறுவர் நடிப்புக்கேற்ற கதைகள்

சிறுவர் நடிக்குமாறு தெரிந்துகொள்ளும் கதை, சிறியதாகவும், திட்டவட்டமான அபிநயங்களையுடையதாகவும், நல்ல நீதி வெளிப்படையாகத் தோன்றப் பெறுவதாகவும், நடிக்கும் சிறுவர்களது வயதிற்குப் பொருந்தியதாகவும், அவர்களது அனுபவத்திற்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும். அசங்கியமான காட்சிகள் கலக்கக் கூடாது. அவர்களுடைய அனுபவத்திற்கும் அறிவுக்கும் எட்டாத விடயங்களை நடிக்கச் சொன்னால், அது இயலாது.

உதாரணமாக, மாணிக்கவாசகர்க்கு இறைவன் திருப்பெருந்துறையில் ஞானோபதேசம் செய்யும் காட்சியையும் அரிச்சந்திர புராணம் மயானகாண்டக் காட்சியையும், சிறுவர் உணர்ந்து அநுபவித்து இயற்கையாக நடிக்க முடியுமா? சிறுவனைக் கள்ளனாக நடிக்கச் செய்வதனால் நற்பயன் கெடுவது மட்டுமன்று தீமையும் உண்டாகும்.

ஆசிரியர் வற்புறுத்தி நடித்துக்காட்டிப் பயிலச் செய்தால் அது அறிவிற்கெட்டாத விடயத்தை வற்புறுத்திப் புகுத்துவதே யாகும். இது கல்வி முறையாகாது. கட்டாயப் பயிற்சியின் மூலமாக மாணவர் நடிக்கும் நடிப்பும், இயற்கையாகத் தோன்றாது. நடிக்கும் பொருளை உள்ளத்தில் உணரவு முடியாது. உள்ள உணர்ச்சியின் பயனாக வெளித் தோன்றும் செயல்களே இயற்கையாகத் தோன்றும். இத் தகைய நடிப்புப் பயிற்சியின் மூலமாக அவர்கள் மன மொழி மெய்களில் எத்துணை விருத்தியையும் பெற முடியாது.

## ஆசிரியர் வழிகாட்டியே

ஆசிரியர் அவ்விடத்தில் ஆண்டு நடத்துபவராக இருக்கக் கூடாது. அவர்களுடைய நடபடிக்கைகளைக் கண்டு களிக்கும் ஓர் நண்பனாகவே அங்கு தோன்ற வேண்டும். மாணவர் தம் மனப் பான்மைக்கு ஏற்றவாறு அக் கதையை உருப்படுத்தி வெளியிட முயலுவார்கள். அவர்கள் மனப் போக்கின்படியே உருப்பெறுமாறு விட்டுவிட வேண்டும். தம் முதிர்ந்த அனுபவத்திற்கு ஏற்றவாறு தாம் கொண்ட உருவத்தையே வற்புறுத்திப் புகுத்தக் கூடாது. அவ் வுருவத்தை மாணவர் உணர்ந்து கொள்ள முடியாது. சிறுவர் வழி தெரியாது விழிக்கும்போதும், வழி விலகிச் செல்லும்போதும்,

ஆசிரியர் சுட்டிக் காட்டி வழி நடத்த வேண்டும். இவ்வளவுதான் அங்கே அவர் செய்யவேண்டியது. மற்று முழுவதும் மாணவரே செய்யும்படி விட்டுவிட வேண்டும். தனது சொல்லும், தனது நினைவும், தனது நடிப்பும், அங்கே முழு இடத்தையும் பெறக் கூடாது. பெரும்பான்மையான இடங்களில், சிறுவர்களே குற்றங்களைக் கண்டு ஒருவரை யொருவர் திருத்திக் கொள்வார்கள்.

## மொழித் திறத்துப் பிழை திருத்தல்

கதையினை உருவப்படுத்தும் உரிமையை மாணவர்க்கே கொடுத்துவிட்டாலும், அவர் நடிக்கும்போது காணப்படும் மொழிப் பிழைகளை ஆசிரியர் கவனித்துத் திருத்த வேண்டும். உச்சரிப்பிலும், சொல்லும் முறையிலும் ஏற்படும் பிழைகளையும், சொற் பிழை, வாக்கியப் பிழைகளையும் அவ்வப்போது திருத்திக் கொடுக்க வேண்டும். ஆனால் முழு நேரமும் திருத்தம் செய்வதாகவே இருந்து விடக்கூடாது. ஆசிரியர் அடிக்கடி குறுக்கிட்டுத் திருத்திக் கொண்டிருந்தால், சிறுவர்க்குக் கதை நடிப்பில் உள்ள ஆநந்தம் குறையும். கதைத்தொடர்ச்சியும் அற்றுப்போகும். மேலும், சிறுவர்கள் ஆசிரியர் அடிக்கடி திருத்தித் தருவாரானால், பிழைபடுகின்றதே என்று வருந்திப் பேச்சையே நிறுத்திவிடுவர். அவர்கள் ஆநந்தத்துடன் நடிக்க முடியாது. சிறுவர் வாயை மூடிக்கொண்டால், பின் அவர்களை மீண்டும் பேசச் செய்வது கஷ்டசாத்தியமாகும்.

ஆதலின் பிழைகள் அதிகப்படின், அவற்றைக் குறித்து வைத்துக்கொண்டு, பின்னர், மாணவர் எல்லாரையும் ஒன்றாகக்கூட்டி வைத்து நடிப்பின் முடிவில் பிழைகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சுட்டிக் காட்டித் திருத்திப் பயிற்சி கொடுக்கலாம். பிழைகள் பல இருக்குமாயின், அவற்றுள் அடிக்கடி முற்பட்டு நிற்கும் சிலவற்றை மாத்திரம் எடுத்துத் திருத்தி, விளக்கி, மனதில் நன்கு பதியுமாறு செய்ய வேண்டும். இவ்வாறு சிறிது சிறிதாகப் பல தடவைகள் செய்ய நாளடைவில் பிழை குறையும். பின்னர் ஆங்காங்கே திருத்திக் கொடுத்து விடலாம். மாணவர்கள் திருத்தக் கூடியவிடத்து மாணவர்களைத் திருத்தச் செய்ய வேண்டும்.

## கதையை நாடக முறையில் அமைத்தல்

எழுதக் கற்றபின் அதாவது நான்காம் ஐந்தாம் வகுப்புக்களில் மாணவர் கேட்ட கதையை நடிக்கப் புகுமுன்னர் அதனை நாடகமுறையில் அவர்களே அமைக்குமாறு அவர்களுக்கு வழிகாட்டி, உற்சாகப்படுத்த வேண்டும். இப் பயிற்சி, கதை ஆக்கும் துறையில் கற்பனைத் திறனையும், அதனைக் கருதியவாறே வெளிப்படுத்தும் சொற்றிறனையும் உண்டாக்கும். கதை முழுவதையும் ஆசிரியரே நாடக முறையில் அமைத்து எழுதிக் கையில் கொடுத்துவிடக்கூடாது. இது, மாணவர் மனோபாவத்தை விருத்திசெய்யாமல், அவர்களைச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவே ஆக்கிவிடும். ஆகவே மாணவர் நடித்துப் பயிலுங் கதைகள் எல்லாவற்றையும் அவர்களே நடிப்பு முறையில் அமைக்க வேண்டும்.

எனினும், ஒன்றிரண்டு கதைகளை, மாணவர்க்கு மாதிரியாக அமைத்துக் காட்டுதல் இழுக்காகாது. மாணவர் வயதிற்கும், அறிவிற்கும், அவசியத்திற்கும் பொருந்தத்தக்க கதைகள் இரண்டொன்றினை இடையிடையே அவர் மனநிலைக்கு ஏற்றவாறு உருப்படுத்தி அமைத்து மாதிரியாகக் கொடுத்தால், அது "தெற்று நூல்" போல் நின்று, மாணவர் அமைப்பினைத் திருத்துதற்குக் கருவியாகும்.

இத்தகைய கதையமைப்பினை தத்தம் மாணவர் மனநிலையினை நன்குணர்ந்த அவ்வவ் வாசிரியரே அமைத்துத் தருதல் நலம். வகுப்பு உயர உயரக் கூடுமானால், புத்தகங்களிருந்து எடுத்துக் கொள்ளலாம். முதல் மூன்று வகுப்புகளில் ஆயத்தமின்றிக் கதை நடித்தலே (improvziation) பொருத்தமானது. அதனை வாய் மொழிப் பயிற்சியுள் விரிவாகக் காண்க.

ஆனல் நடிப்பிற்குரிய இத்தகைய சிறு கதைகளடங்கிய புத்தகங்கள் தமிழில் இல்லை. பாடப் புத்தகங்களில் சில சில காணக்கிடக்கின்றன. இத்தகைய பயன்படும் புத்தகங்கள் வெளி வராதிருப்பதற்குக் காரணம் தக்க ஆதரவின்மையே. பஞ்சதந்திரத்தில் சிறுவர்கள் நடித்து இன்புறத்தக்க பல சிறு சிறு கதைகள் உள்ளன. ஈசாபின் சிறு கதைகளிலும் பல

வுள்ளன. அவற்றை நடிப்பிற்கு ஏற்ற முறையில் அமைத்து எழுதித்தரின், அது சிறுவர்க்கேற்ற ஒரு கதைக் களஞ்சிய மாகும்.

## போலி நடிப்பு

பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்குக் கதை நடிப்புப் போலவே பயன்படும் பிறிதொரு முறையும் உளது. அஃது போலி நடிப்பு அதாவது, உலகியலில் நடைபெறுகின்ற பல தொழில்களைப்போல, நடித்துக் காட்டுவது. இது சிறுவரது இயல்புக்கு மிக்கப் பொருத்தமானது. குழந்தைப் பருவமுதல் யாதொரு ஏவுதலுமின்றி சிறுவர்கள் நடித்து நடித்து இன்ப மடைவது; கதை நடிப்பைவிட மிகுந்த நடிப்பு நிறைந்தது, வீடுகளில் சிறுவர்கள் ஒன்றுகூடி, கடை அமைத்து விற்பனை செய்வதையும், பண்ட பக்ஷணங்கள் வாங்குவதையும், அக்காள் தம்பிமார்களைக் கூட்டிவைத்துப் பள்ளிக்கூடம் நடத்துவதையும் அண்ணன் சகோதர சகோதரிகளைக் கூட்டி ஒழுங்குபடுத்தி ஜெப ஆராதனை நடத்துவதையும், வைத்திய சாலை ஏற்படுத்தி வைத்தியம் செய்வதையும், இன்னவாறு, பல தொழிற் போலி களை நடித்து இன்புறுவதையும் நாம் கண்கூடாகக் கண்டிருக் கிறோம். இப் போலிநடிக்கும் இயல்பினைக் கருவியாகக் கொண்டு சிறுவர் மொழித் திறனை முன்னேற்றுவிக்க முயல்வது இயற்கையான முறையாகும்.

இப் போலி நடிப்பு சிறுவர்தம் அனுபவத்திற்குட்பட்டதா யிருத்தல் வேண்டும். வயது செல்லச் செல்லப் போலி நடிப்பு விடயங்களும் வேறுபடும்.

## சிறுவர்கள் நடித்தற்குரிய போலிகள்

சிறுவர் அறிவிற்கும் அநுபவத்திற்கும், வயதிற்கும் உட் பட்டதாயிருத்தல் வேண்டும். குறைந்த பேச்சும், நிறைந்த நடிப்பும் வாய்ந்ததா யிருக்கவேண்டும். நல்லொழுக்கத்திற்கு வழி நடத்துகிறதாயும், தீப் பழக்க வழக்கங்கள் கலவாததா யும் இருக்க வேண்டும். பீடி விற்பனை, புகை குடித்தல், முதலிய வற்றைப் போலி நடிப்பிற்குள் விட்டு விடக்கூடாது. போலிக் குச் சில உதாரணங்கள் காட்டுதும்.

## வைத்தியசாலைப் போலி

ஒரு மாணவன் ஆங்கில மருத்துவராகவும், இருவர் மூவர் மருந்து கலந்து கொடுப்போராகவும், நாலைந்துபேர் பலப் பல பிணிகளையுடையோராகவும் நின்று, நகர்மன்ற வைத்திய சாலைக்காட்சி யொன்றை நடித்துக் காட்டலாம்.

வியாதிப் படுக்கையில் கிடக்கும் ஒருவனைச் சுற்றி உறவினர் பலர் நிற்க, ஆயுள் வேத வைத்தியனொருவன் வந்து வைத்தியம் செய்யும் காட்சியை நடிக்கலாம். இதைப் போலவே தபாற்சாலை நகர் மன்ற நிகழ்ச்சி, நகர் மன்றத் தேர்தல், நீதி மன்ற வழக்கு விசாரணை, காலிவேலைக்கு விண்ணப்பம் செய்தல், நேரிற் கண்டு பேசுதல், பட்டாளத்திற்கு ஆள் எடுத்தல், இவை போன்ற பல்வேறு போலிகளை, மாணவர்தம் இயல்புக்கு எற்றவாறு நடிக்கச் செய்யலாம்.

ஒரு வகுப்பில் சிலர் நடித்த பிறகு, நடிக்காதவர்களை நடிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு எல்லாருக்கும் முறை கிடைக்குமாறு கவனித்துக் கொள்ளுதல் ஆசிரியர்தம் கடனாகும். நடிப்பினால் உண்டாகும் இன்பத்தையும் நற்பயனையும் ஒரு பகுதியினரே பெறுமாறு செய்தல் கூடாது. முறை கிடையாவிடின், அவர்கள் மனச் சோர்வும் வெறுப்புமுற்று, ஊக்கங் குன்றுவர். எல்லாருக்கும் ஒரே அளவு முறை கிடைக்குமாறு மாற்றி மாற்றிக் கொடுக்க வேண்டும். பல பாத்திரங்களாகவும் ஒருவனே நின்று நடிக்குமாறு மாற்றி மாற்றிப் பயிற்சி முறை தரவேண்டும். பல முறை நடிக்கும் போது, நடிப்புத் திறமையும் திருத்தமுறும். எழுத வேண்டியிடத்து மாணவர்களை எழுதவும் செய்ய வேண்டும். உதாரணமாகக் காலி வேலைக்கு விண்ணப்பப் பத்திரம் எழுதச் செய்யலாம். இவ்வாறு நடிப்பின் மூலமாகப் பேச்சை மாத்திரமல்ல, எழுத்து வன்மையையும் விருத்தி செய்ய இடம் ஏற்படுகின்றது.

## செய்தித்தாள் வெளியிடல்

கதை நடிப்பு, போலி நடிப்புகளைக் கருவியாகக் கொண்டு பேசும் திறனை விருத்தி செய்வது போலவே, பத்திரிகை பிரசுரித்தலை ஒரு விளையாட்டுக் கருவியாகக்கொண்டு, தாய்மொழியில் நன்கு எழுதும் திறனை உண்டாக்கலாம்.

## தனிப் பத்திரிகை

மாணவர், உலகிற் பல்வேறு செய்தித் தாள்கள் வெளிவந்திருப்பதைப் பார்க்கின்றனர். கட்டுரையாளர்களுடைய பெயர்கள் கட்டுரையின் தலைப்பிலோ, இறுதியிலோ தோன்றுவதைப் பார்க்கிறார்கள். தங்களுடைய பெயரும் இங்ஙனமே வெளியீடுகளில் தோன்ற வேண்டும், ஓர் கட்டுரையாளனாக வேண்டும், என்ற ஆசை அவன் மனதில் உதிக்கின்றது. ஆனாலோ மாணவன் சிறுவன்; நன்கு பிழையற எழுத அறியாதவன். இவனுடைய கட்டுரையை யார் தங்கள் பத்திரிகைகளில் வெளியிடத் துணிவர்? ஆனால், இந்த ஆசையை நிறைவேற்ற ஓர் வசதி கிடைக்குமானால், மாணவன் மனமகிழ்ச்சியுடன் அதனைப் பயன்படுத்துவான். இச் சந்தர்ப்பத்தை ஆசிரியர் பயன்படுத்திக் கொண்டால், மாணவர் விளையாட்டாகவும், இன்பமாகவும் எழுதி யின்பமடைவதுடன், எழுதி யீதல் திறமையிலும் முன்னேற்றமடைவர். அதற்குப் பின்வரு முறைகளைக் கையாடலாம்.

ஒவ்வொரு மாணவனும் குறிப்புப் புத்தகம் (note) ஒன்று வைத்துக்கொள்ள வேண்டும். அதைப் பல பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதியையும் தனிப்பட ஒரு விடயத்திற்கென்று தலையங்கமிட்டுப் பிரத்தியேகப்படுத்திவைக்க வேண்டும். உள்நாட்டுச் செய்தி, சிறு கதைகள், விகடத் துணுக்குகள், விளையாட்டுச்செய்திகள், விளம்பரங்கள், கண்காட்சிகள், முதலியவற்றிற்குத் தனித் தனிப் பகுதிகள் கொடுக்கப்படலாம்.

இடையிடையே இப்பத்திரிகைகட்குச் செய்தி எழுதுமாறு ஆசிரியர் மாணவரை ஊக்க வேண்டும். முதலாவது மாணவன் தான் விரும்பும் விஷயத்தை ஒரு தனித் தாளில் எழுதி ஆசிரியரிடம் கொடுத்துத் திருத்தி மீண்டும் பத்திரிகைக் குறிப்புப் புத்தகத்தில், உரியவிடத்தில் பிழையறப் பதிவு செய்தல் வேண்டும். அவசியமான இடங்களில் படம் வரைந்தும் விளக்கலாம். பத்திரிகையை அழகாகவும், சுத்தமாகவும் பத்திரப்படுத்த மாணவரை வழிநடத்த வேண்டும். இம் முயற்சியிற் போட்டி மனப்பான்மையை உண்டாக்க வேண்டும். எழுதுவதை சுத்தமாகவும் திருத்தமாகவும் எழுதச் செய்ய வேண்டும். ஆசிரியர் மாணவரைத் தனித்தனி கவனித்து ஊக்கப்படுத்த வேண்டும். அவரவர் தம் விருப்பத்தையும்

இயல்பினையும் கண்டு அதற்குத்தக்கவாறு, அவ்வவ்வழியில் முன்னேற்றமடைய வழிகாட்டி விடவேண்டும். கதை கட்டும் இயல்பினையுடைய மாணவனை இளமையிலேயே இவ்வாறு விளையாட்டாக வழிகூட்டிவிட்டால், அவன் பிற்காலத்தில் ஒரு தேர்ந்த நவீனக் கதாசிரியனாகவோ, (Novelist) நாடகாசிரியனாகவோ திகழக்கூடும். விளையும் பயிர் முளையிலே இருக்கிறது. அதன் இயல்பு முளையிலேயே தெரியும். அம்முளை கருகிவிடாத படி, அதற்கு வேண்டும் உரனும் ஊக்கமும் அளிப்பதையே ஆசிரியர்தம் கடனாகக் கொள்ளவேண்டும். பத்திரிகை ஒரு விளையாட்டுக் கருவிபோன்று இன்பமளித்து, சிறுவர் தம் தாய் மொழியில் எழுதி சுயமியல்பினை விருத்தி செய்யும் என்பது தெற்றெனப் புலப்படும்.

## வகுப்புப் பத்திரிகை

மாணவர்தம் தனிப் பத்திரிகையினின்று வகுப்புப் பத்திரிகை ஒன்றை உண்டாக்கலாம். இது தனிப்பத்திரிகை போன்ற பாகுபாடுகளைக் கொண்டது. ஒரு வகுப்புக்கு ஒரு குறிப்புப் புத்தகம் இருத்தல் வேண்டும். மாணவர்தம் தனிப் பத்திரிகையிலிருந்து, குறிப்பிட்ட நல்ல கட்டுரைகளையோ, கதைகளையோ, படங்களையோ இதற்கு விடயமாக எடுத்துப் பதிவு செய்யலாம். அல்லது வகுப்பிலுள்ள மாணவர் எல்லாரும் தனித் தனியாக விடயதானம் செய்யச் சொல்லி, அவற்றுட் சிறந்தவற்றை எடுத்துப் பதிப்பிக்கலாம். வகுப்புப் பத்திரிகையில் அவ்வகுப்பு மாணவர் ஒவ்வொருவருடைய கட்டுரைக்கும் இடமளித்தலே சாலச்சிறந்தது: இது மாணவர்க்குத் தாய்மொழியில் எழுதுவதில் மிக உற்சாகமூட்டும் கருவியாகும்.

இப்பத்திரிகையை நடாத்துதற்கு, அவ்வகுப்பில் சிலரைப் பதிப்பாசிரியர் கழகமாகக்கூட்டி, அவருள் ஒருவரைப் பத்திராதிபராகவும், வேறொருவரை உதவிப் பத்திராதிபராகவும் ஏற்படுத்த வேண்டும். கட்டுரைகள் முதலிய விடயங்கள் பதிப்புக் கழகத்தாரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அக் கழகத்தார் விடயங்களை ஏற்கவோ, தள்ளவோ உரிமையுடையவர்கள். ஏற்குமிடத்தும், கட்டுரைகளைத் திருத்துமிடத்தும் அவர்கள் தமிழாசிரியர் உதவியை நாடலாம். வேண்டுமிடத்து

ஆசிரியர் உதவிபுரியவும். இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை வகுப்புப் பத்திரிகைக் குறிப்புப் புத்தகத்தில், நன்கு அழகுறத் தகுதிவாய்ந்த மாணவனொருவனைக்கொண்டு, எழுதச் செய்யவும்.

ஒவ்வொரு மாணவனும் தன்தன் கட்டுரையைத் தானே அச்சுப்போல் எழுதித் தரச்செய்தால், ஒவ்வொரு மாணவனும் அழகாக எழுதப் பழகுவதற்கு வசதி ஏற்படும். அங்ஙனம் எழுதியபின் விடயங்களையெல்லாம் ஒன்று சேர்த்து முறைப் படுத்திக்கட்டிவிட வேண்டியதுதான். கட்டப்பட்டபின் பத்திரிகை புத்தக வடிவமாக அழகாகத் தோன்றும். பின் அப் பத்திரிகை, வகுப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் வாசிக்கக் கிடைக்குமாறு செய்யவேண்டும். எல்லாரும் ஒருமுறை பார்த்த பிறகு வகுப்பு நூல் நிலயத்திற் பத்திரப்படுத்தி வைக்கலாம். மாணவருடைய ஊக்கத்தைப் பொருத்து, மாதமொரு முறையோ, மூன்று மாதங்கட்கு ஒரு தடவையோ, வகுப்புப் பத்திரிகை வெளியீட்டில் பதிப்புக் கழகத்தார் கருத்தைச் செலுத்தலாம். ஆசிரியர் வேண்டுமுதவிபுரியவேண்டும்.

வகுப்புப் பத்திரிகையை அச்சிட்டுப் பிரசுரிக்கத்தக்க பொருள் வளம் நம்மிடம் இல்லை. எனினும் அச்சுப்போல் எழுதப்படுமானால், மாணவர் இம் முறையால் அடைதற்குரிய பயன்கள் பலவற்றையும் அடைந்தவரேயாவர்.

பத்திரிகையின் முன் அட்டையின் உட்புறத்தில், பத்திராசிரியர், கழக அங்கத்தினர்கள், பெயரை வரிசையாய் எழுதி வைக்கலாம். ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் கட்டுரையாளர் பெயரை எழுதிவைக்கவேண்டும். இது மாணவர் ஒவ்வொருவருக்கும் தத்தம் கட்டுரை பத்திரிகையில் இடம் பெற வேண்டும் என்ற ஆர்வத்தையுண்டாக்கும். அவ்வார்வம் நிறைவேறும் பொருட்டு அதிக முயற்சியெடுக்குமாறு அகத்தின்கண் தூண்டப் பெறுவர்.

இதுபோலவே பள்ளிக்கூட முழுவதற்கும், ஒரு கலாசாலைப் பத்திரிகை நடத்தலாம். வகுப்புப் பத்திரிகையிலிருந்து, எடுக்கப்பட்ட சிறந்த கட்டுரைகள் கலாசாலைப் பத்திரிகையில் இடம்பெறலாம். இதனைப் பணவசதியிருக்குமானால் அச்சிட்டே

வெளியிடலாம். ஆனால் அச்சிடத்தான் வேண்டுமென்ற நியதி
யொன்றை அமைத்துக் கொள்ளக்கூடாது. ஆரம்பப் பாடசாலை
களில் இதனால் ஏற்படும் செலவு அனாவசியம் என்றே சொல்ல
வேண்டும். பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதுவதை அதிகமாக
வீட்டிலே செய்வது நல்லது. ஆனால் ஆசிரியர் வகுப்பில் ஒரு
நேரத்தைக் கொடுத்து எழுதச் செய்து தனித் தனி கவனித்து
உதவி புரிவதால் விசேஷித்த பயன் உண்டாகும் என்று எப்போ
தாவது உணர்ந்தால் அவ்வாறும் செய்யலாம். ஆசிரியர் பயன்
கருதித் தக்கது செய்க.

பல இடைநிலைப் பள்ளிகளிலும், சில உயர்நிலை ஆரம்பப்
பாடசாலைகளிலும், கலாசாலைப் பத்திரிகை, பெரும்பாலும் ஆண்டுக்
கொரு முறை வெளியிடப்பட்டு வருகின்றன, என்பதை நன்கு
அறிவோம். ஆதலின் இக்கருத்து நமக்குப் புதிதன்று. ஆயினும்,
வெளியீட்டிற் பல குறைபாடுகளுள் உள. வெளியீட்டின்
நோக்கமே தவறு. கல்வித் துறையில் பத்திரிகையின் நோக்கம்,
விளையாட்டு முறையில் எழுத்தின்மீது மாணவர்க்கு ஆத்திரமும்,
இன்பமும் உண்டாக்குவது. அதற்குப் பெரும்பான்மை மாணவர்
கட்டுரைகட்கு இடமளிக்கவேண்டும். ஆனால் கலாசாலைப் பத்திரி
கைகள் விளம்பர வெளியீடுகளைபோல் தோன்றுகின்றன. கலா
சாலைபற்றிய பல அறிவிப்புகளும், ஆண்டறிக்கையும், கலாசாலை
வைபவ நிகழ்ச்சிகளும், கலாசாலை பெற்ற பலதுறை வெற்றி
களும், மாணவர்கள் எழுதிய சில கட்டுரைகளுமே பத்திரிகையில்
வெளியிடப்படுகின்றன. இருநூறு பள்ளிச்சிறுவர் பயிலும்
பள்ளியில் நான்கு மாணவர் எழுதிய கட்டுரை மட்டும் பத்திரி
கையில் இடம்பெறுமானால் பெரும்பான்மை மாணவர் ஏமாற்றம்
அடைவர் அன்றோ? தம் கட்டுரைக்கு இடம் பெறவியலாது
என்ற கருத்து மாணவர் மனதில் உண்டாகிவிடுமானால், பின் அவர்
மேலும் மேலும் எழுதாது நின்றுவிடுவர். ஆகலின் கலாசாலைப்
பத்திரிகையின் நோக்கம் நிறைவேறாது போய் விடுகின்றது.
ஆயின், எல்லா மாணவர் கட்டுரைக்கும் இடமளித்தல் கூடுமோ?
இயலாதே.

ஆகலின் மாணவரை ஊக்கமுண்டாக்க வகுப்புப் பத்திரிகை
இன்றியமையாது வேண்டப்படுமென்றாகும். வகுப்புப் பத்திரி
கையில் மாணவருடைய கட்டுரைகள் எல்லாம் தொகுக்கப்படுமாயின்

வெளியிடின் மிகப் பெரியதோர் புத்தகமாகிவிடுமல்லவா? அச்சிடு வதிற்குப் பெரிதும் பொருள் வேண்டப்படுமே; தரித்திர நாரா யணர்கள் நிறைந்த நாட்டில், பணத்திற்கு என்ன செய்வது? என்ற பல கேள்விகள் எழலாம். ஒவ்வொரு மாணவனும் தன் தன் கட்டுரையைத் தானே கையாலெழுதிக் கொடுக்கச் செய்யவேண்டும். அதுவே மாணவர்க்கு மிகுந்த பயனளிக்கவல்லது. பொருளின்மை பற்றிய கவலையும் நீங்கும். இம்முறை பெரும் நகரங்களில்மட்டு மன்றிச் சிற்றூர்களிலும், செல்வமுள்ளவிடத்தும் இல்லாவிடத்தும் வேற்றுமையின்றி பயன்படுத்தக்கூடியதாகும். இவ்விளையாட்டினை ஆழ்ந்து நோக்கின், இது 'விளையாட்டு' என்னும் பெயரால் கொடுக்கப்படுகின்ற கட்டுரைப் பயிற்சியே என்பது தெற்றெனப் புலப்படும்.

## விளையாட்டுகள்

வாய்மொழியிலும், வாசிப்பிலும், எழுத்திலும் மாணவரைத் திறமை பெறச்செய்யச் சில விளையாட்டுகளைக் கருவியாகக்கொள்ள லாம். இவை ஆழ்ந்து நோக்கின் பயிற்சிகளேயாகும். ஆயினும் அப்பயிற்சிகளைத் தனிப் பயிற்சி முறையிற் கொடுத்தால் அவை வெறுப்பையே கொடுக்கும். அதே பயிற்சிகள் விளையாட்டு ரூபமாகக் கொடுக்கப்படுகின்றன வாதலால், இன்பத்தையளிக்கின் றன. மாணவர் எத்துறையிற் பயிற்சி பெறவேண்டும் என்று கருதுகிறோமோ, அப்பயிற்சிகளையும் அடைந்தேவிடுகின்றனர். மாணவர் இன்பம் அடைவதோடு அறிவும் பெறுகின்றனர். நமது கருத்தும் நிறைவேறுகின்றது.

ஒருதாரணவாயிலாக இதை விளக்குவோம். சிறுவர் 'படம்' என்ற சொல்லைப் புதிதாகக் கற்று விட்டனர். இச்சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் மனதிற் பதிக்க வேண்டும். 'ப' என்ற எழுத்தைக் கண்டவுடன் இது 'ப' என்று, பிள்ளை சொல்ல வேண்டும். என்ன செய்வது? 'ப' 'ப' என்று எழுத்தைப் பார்த்துக் கொண்டே பல முறை சொல்லச் செய்யலாம். கரும் பலகையில் எழுதப்பட்ட 'ப' வை ஒருவன் முன்னே எழுத்தைக் காட்டிச் சொல்ல, மற்ற மாணவர்களெல்லாம் பின்னால் சொல்லலாம் அல்லது கரும்பலகையைப் பார்த்துக் கொண்டே "ப" 'ப' என்று

சொல்லி மணலில் எழுதிப் படிக்கலாம். இங்ஙனம் பல தடவை சொல்லிச் சொல்லிப் பயிற்சி செய்யலாம்.

இதுதான் **பயிற்சி முறை.** திண்ணைப் பள்ளிக்கூடங்களில் தொன்று தொட்டு அரிச்சுவடி கற்பிக்க உபயோகிக்கப்பட்டு வந்த முறை இதுதான். ஆனால் இது சிறுவர் இயல்புக்குப் பொருந்தாது.

"சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்து அமைத்துப்
"போவெனப் போகும்" இயல்பு வாய்ந்த,

ஐம்புலன்களையும் அடக்கிக் கருமமே கண்ணாக முயலும் திறமை பெற்ற, மாணவர்க்கே இது பொருந்தும். இதே பயிற்சியைச் சிறுவர்க்கு விளையாட்டு ரூபத்திற் கொடுக்கலாம். காண்க. —

ஒப்பனைச் சட்டம்

| | | |
|---|---|---|
| ப | ட | ம் |
| ப | ட | ம் |

இங்குக் காட்டப்பட்டுள்ளது ஓர் பயிற்சி விளையாட்டுக் கருவியின் படம். இக்கருவியைக் கொண்டு சிறுவர் விளையாட வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு விளையாட்டுக் கருவி கொடுக்கவேண்டும். இஷ்டப்போல் விளையாடவிட்டு விடவேண்டும். விரைவில் மாணவர் போட்டிபோட்டு விளையாட ஆரம்பித்து விடுவர்.

புதிதாகக்கற்ற எழுத்துக்களையோ, சொற்களையோ பலகால் கண்டு கண்டு தெரிந்தெடுத்துப் பயில்வதற்கு இவ்விளையாட்டு மிகுதியும் பயன்படத்தக்கது. இது விளையாட்டு நோக்குடன், மாணவர் செய்யும் பயிற்சி (Drill) ஆகும். பல எழுத்துக்களைப் பார்த்தாலும் அவற்றினின்று குறிப்பிட்ட ஒரு எழுத்தை எடுக்கும் திறமை இதனால் விருத்தியடைகின்றது. மனதை ஒரே

இலக்குக்கு நேராக ஒரு முகப்படுத்தக் கருவியாகிறது. புதிதாகக் கற்ற எழுத்தின் வடிவத்தை மனதிற் பதிக்கக் கருவியாகின்றது.

## ஒப்பனைச் சட்ட அமைப்பு

மரப்பலகையினாலாவது, அட்டையினாலாவது ஆகிய நீண்ட சட்டத்தின் மீது, நெடுக, எழுத்துக்கள் எழுதப்பட்டு, அவற்றின் நேர் கீழே காலி இடம் காட்டப்பட்டிருக்கவேண்டும். மாணவரிடம் அதே எழுத்துக்களைக் கொடுத்து அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து, அவ்வவ் வெழுத்துக்களின் கீழே வைக்கச்சொல்லவேண்டும். இவ்வாறு அச்சட்டம் முழுவதும் நிரப்பப்பட வேண்டும்.

கையில் எடுத்த எழுத்தையோ, சொல்லையோ ஒத்துப் பார்த்து, அதற்குரிய இடத்தில் வைத்துச் சட்டத்தை நிரப்பவும், சொல்லலாம். சட்டத்தின் முதலிலிருந்து வரிசையாக எழுத்துக்களை நிரப்பும்படியும் சொல்லலாம்.

வகுப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சட்டம் கொடுக்கக் கூடுமானால், இதன் மூலமாக ஒரு விளையாட்டுப் போட்டி நடத்தலாம். இரண்டு மூன்று சட்டங்கள் இருப்பின், வகுப்பை இரண்டு மூன்று குழுக்களாகப் பகுத்துக் கொண்டு மேற்கூறியவாறே போட்டி நடத்தலாம்.

இவ்விளையாட்டு, சிறுவர் இன்பமாகப் புதுச் சொற்களையும் எழுத்துக்களையும், கற்று மனதிற் பதித்துக் கொள்வதற்கு ஏற்றதோர் கருவியாகும்.

## வேறு சில விளையாட்டுகள்

**மின்னற் கொடி,**

எழுத்துக் கற்பிக்கும் காலத்தில் தனி எழுத்து மாத்திரம் கற்பிக்காமல், கற்பிக்கப்படவேண்டிய புது எழுத்தை ஒரு சொல்லில் அமைத்து அச்சொல்லுடன் எழுத்தையும் கற்பித்தலே சிறந்த முறை. ஒவ்வொரு புது எழுத்தையும் கற்பிக்கும்போது அதனைக் கற்பிக்குமாறு தெரிந்துகொள்ளப்படும் சொல்லின்கண் அவ்வோரெழுத்தேயன்றி ஏனையவெல்லாம் மாணவரால்

முன்னரே அறியப்பட்டவைகளாயிருத்தல் வேண்டும். எழுத்துக் கற்பிக்கும் முறையினை விரிவாக பின்னர்க்காண்க. இம் முறையினை ஆராய்ந்து கண்டறிந்து, பல்லார்க்கும் பயன்படுமாறு பரப்பிய பெருமை, சென்னைக் கல்வி யிலாகாவில் சிறப்புற்று விளங்கிய உயர் திருவாளர், S. G. டானியேல் அவர்களுக்கே உரியது. அப் பெரியார்க்குப் பொதுவாகத் தமிழுலகமும், சிறப்பாக ஆரம்ப ஆசிரிய வுலகமும் பெரிதும் கடப்பாடுடையன. இம்முறையைத்தழுவி எழுந்த புத்தகங்கள் வேறு சிலவுமுள. அட்சராப்பியாசம் செய்யும் மாணவருக்கு இவற்றையே பாடப் புத்தகமாகக் கொடுத்தல் நலம்.

புது எழுத்தை முறைப்படி கற்பித்தபின்னர், அதனை மனதில் நன்கு பதிக்குமாறு கையாடப்பெறும் முறைகளுள், தேர்ந்தெடுத்தலும் ஒன்று. புது எழுத்தோ, புதுச் சொல்லோ எழுதி வைக்கப்பட்ட அட்டைகளை, ஒரு கூட்டத்திலிருந்து தேர்ந்து எடுப்பதினால் அவர்கள் எழுத்தையும் சொல்லையும் பிரித்தறியும் முறையில் பயிற்சி பெறுகின்றனர். பல மாணவர்க்கும் இத்தேர்தல் பயிற்சி கொடுத்தபின்னர், எழுத்தட்டைகளைக் கருவியாகக்கொண்டு ஒரு விளையாட்டு விளையாடலாம். இதுவே மின்னற் கொடி விளையாட்டு.

**விளையாடு முறை.** ஆசிரியர் புது எழுத்தோ, சொல்லோ கற்பிக்கப்பட்டபின், அட்டை யொன்றைக் ( Flash Card ) கையிலெடுத்து மாணவர்க்குக் காட்டி உடனே மறைத்துவிடவும். பின் ஏதாவது ஒரு சிறுவனிடம் " காட்டப்பட்ட அட்டையில் எழுதப்பட்டிருந்தது யாது " எனக் கேட்க.

காட்டப்படும் எழுத்து அல்லது சொல், புதிதாகக் கற்றதாகவும் இருக்கலாம். முன்னமே கற்றதாகவும் இருக்கலாம். மாணவர் அறியாத எழுத்தையோ, எழுத்துக்களடங்கிய சொல்லையோ காட்டக் கூடாது. இவ்வாறு, சொல்வதிற் போதிய பயிற்சியளித்த பின்னர், இம் முறையைக் கருவியாகக்கொண்டு ஒரு போட்டி, விளையாடச் சொல்லலாம்.

வகுப்பை இரு பகுதியாகப் பகுத்து இரண்டு வரிசைகளாக எதிரெதிராக நிற்கும்படி செய்க. அவற்றிற்கு அ. இ. என்று பெயர் வைத்துக் கொள்வோம். மாணவர் ஒவ்வொருவரிடமும் ஒரு

மின்னற்கொடி (அட்டை) இருக்கவேண்டும். பகுதியிலுள்ள ஒரு மாணவன் ஒரெட்டு முன்வந்து நின்று அ. பகுதி மாணவர்க்கு நேராகத் தன் மின்னற் கொடியைக்காட்டி மறைத்து விடவேண்டும். பின்னர் அப் பகுதியிலுள்ள ஏதாவது ஒரு மாணவனைச் சுட்டிக் காட்டிச் சொல்லும்படி கேட்கவேண்டும். அவன் சொல்லிவிட்டால் அவனும் இவனும் அ பகுதி வரிசையில் சேர்ந்து கொள்ளவேண்டும். சொல்ல முடியாவிட்டால் இருவரும் இ பகுதி வரிசையில் சேர்ந்து கொள்ளவேண்டியது. பிறகு இவ்வாறே அ. பகுதியிலுள்ள ஒரு மாணவன் செய்யவேண்டும். இங்ஙனம் மாற்றி மாற்றி எல்லாரும் முறை பெற்ற பின்னர், எப் பகுதியில் பெரும்பான்மை மாணவர் இருக்கின்றனரோ அப் பகுதியே வெற்றிபெற்றதாகக் கருதப்படும். வெற்றிபெற்றோரைப் பாராட்டி எல்லா மாணவரும் கரகோஷம் செய்தல், ஊக்கத்தைக் கொடுக்கும்.

எழுத்துப் பொறிக்கப்பட்ட அட்டைகளும், சொல் அட்டைகளும், வாக்கிய அட்டைகளும் மின்னற் கொடிகளாக உபயோகிக்கப் படலாம். அவ்வவற்றிற்கு ஏற்றவாறு, நேரம்கொடுத்தபின் மறைக்க வேண்டும். மின்னற்கொடி பளிச்செனத் தோன்றி மறைவது போல், இவ்வட்டைகளைக் காட்டி மறைத்தலின் இவ்விளையாட்டிற்கு மின்னற் கொடி எனப் பெயர் சூட்டினர்.

இதனாற் பயன்—வாசிப்பில் விரைவுண்டாகிறது. மௌனமாக வாசித்தல், எழுத்துக் கூட்டாமல் சொல் முழுவதையும் மொத்தமாகப் பார்த்து வாசித்தல், கற்ற சொற்களைத் திரும்பத் திரும்ப வாசித்தல் முதலிய பயிற்சிகள் கிடைக்கின்றன.

**வாசி, யோசி, பேசு.** இது செக்குலக்கை விளையாட்டுப் போன்றது. உலக்கை சுழன்று வரும் பொழுது தாமதப் பலனற்றவன் மேல் விழுந்து அமுக்கி விடும். அமுக்கப் பட்டவன் உலக்கையாக வட்டத்தின் மத்திக்கு வருகிறான். அதுபோல வட்டத்தில் உள்ள மாணவன், தன்கற்பலகையில் எழுதிவைத்திருக்கும் எழுத்தை, மத்தியில் நிற்பவன் வரிசையாக வாசித்துக்கொண்டு வரவேண்டும். யாருடைய எழுத்தை வாசிக்க முடியாமல் விழிக்கிறானோ, அவன் மத்திக்கு வரவேண்டும். இவன், அவன் இடத்தில் உட்காரவேண்டும். அவ்விடத்திலிருந்து மீண்டும் விளையாட்டு

தொடரும். எழுதப்படும் விடயத்தின் கஷ்டத்திற்கேற்ப யோசிப்பதற்கு நேரம் கொடுக்கலாம்.

எழுத்திற்குப் பதிலாகச் சொல்லும், வாக்கியமும் எழுதலாம். சொற்களையும், வாக்கியங்களையும் பிழைபடாமல் வாசிக்க வேண்டும். எழுதுபவர்கள் பிழையின்றி எழுதவேண்டும். **எழுதுதல் வாசித்தல்** ஆகிய இவ்விரண்டிலும் இவ் விளையாட்டின் மூலமாக நல்ல பயிற்சி ஏற்படும்.

இதே விளையாட்டை இலக்கணப் பயிற்சிக்கும் கருவியாகக் கொள்ளலாம். மாணவர் கற்பலகையில் எழுதியிருக்கும் ஒரு சொல்லுக்கு, மத்தியில் நிற்பவன் எதிர்பதமும், உடன்பாட்டுக்கு எதிர்மறையும், தன்வினைக்குப் பிறவினையும், ஆண்பாலுக்குப் பெண்பாலும், செய்வினை வாக்கியத்திற்குச் செயப்பாட்டு வினைவாக்கியமும், வினாவிற்கு விடையும், விடைக்கு வினாவும், பகுபதத்திற்குப் பகுதி முதலியனவும், தரும்படி கேட்கலாம். இப் பயிற்சி அவ்வவ் வகுப்பு மாணவரது முன்னறிவைப் பொருத்ததாயிருத்தல் வேண்டும். தாங்கள் முன்னரே கற்றுள்ள பாடம், இலக்கணம் இவற்றை நன்கு மனதிற் பதிப்பித்தற்குக் கருவியாகக்கொள்ளப்படுவதே இவ் விளையாட்டு என்பதை ஆசிரியர் மறந்துவிடக்கூடாது. வட்டத்தில் இருக்கும் மாணவர் தாங்கள் எழுதும் ஒவ்வொரு விடயமும் குற்றமற்றதாகவும், தாங்களே பிழையற விடைபகரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். மத்தி மாணவன் விடைபகரக்கூடாவிட்டால், எழுதியவன் மத்திக்குப்போகுமுன் சரியான விடையைக் கூறிவிடவேண்டும். தான் கூறமுடியவில்லையானால் தன் இடத்திலேயே இருந்து கொள்ளவேண்டும். முதற்கண் மத்திக்கு வந்த மாணவனே ஒருமுறை வட்டம் சுற்றிச் சரியாக வாசித்தோ, விடை கூறியோ முடித்துவிட்டால், அவன் வெற்றியை எல்லாரும் கரகோஷத்தின் மூலமாகப் பாராட்டி, விருப்பமுடைய வேறொரு மாணவனை மத்திக்கு அனுப்பலாம். இவ் விளையாட்டில் மத்திக்கு வர ஆசைப்படும் மாணவர் பலர் இருப்பர். மத்திக்குவரும் மாணவர்க்கேயன்றோ வெற்றி! மத்தியில் நிற்குமுறை எல்லாருக்கும் கிடைக்கிறதா என்பதை கவனித்துக்கொள்ளவேண்டும். ஆசிரியர், அண்டிருந்து இடர்ப்பாடின்றி விளையாட்டு

நடைபெறுகின்றதோ என்பதைக் கவனிப்பதுடன், எழுத்து, வாசிப்பு, வினு, விடை, இவற்றில் காணப்படும் பிழைகளை மாண வரைக்கொண்டே திருத்தவும்; அவர்களால் முடியாவிடத்துத் தானே திருத்திக் கொடுக்கவும் வேண்டும்.

## கண்ணும்பொத்தி

எழுத்து அல்லது சொற்கள் அல்லது வாக்கியம் எழுதப் பட்ட அட்டைகளை ஆசிரியர் வகுப்பில் ஓரிடத்தில் மாணவர் கள் கண்ணைப் பொத்திக்கொண்டபிறகு குப்புற மறைத்து வைத்துவிட்டு, எதாவதொரு மாணவனைக் குறிப்பிட்ட ஒரு அட்டையை எடுக்கும்படி கேட்கவும். அவன் அதைக்கண்டு பிடித்து எடுத்துவிட்டால், அதை மாணவர்க்குக் காட்டிவைத்து விட்டு, வேறொரு மாணவனை வேறொரு சொல்லைக்கண்டு பிடிக் கக் கேட்க. அட்டைகள் குறையக் குறைய மாணவரை மீண்டும் கண்ணைப் பொத்தச் சொல்லி, வேறு சில அட்டை களைப் பல விடங்களிலும் போட்டுக் கொள்ளலாம். அட்டை கள் பலவாயிருப்பின் ஒவ்வொன்றாகப் புறட்டிப் பார்க்க வேண்டியதிருப்பதால் வீண் காலப் போக்கு ஏற்படும். ஆதலின் அட்டைகள் பத்திற்கு மேற்படாதிருத்தல் நலம்.

வாசித்துக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, கேள்விக்குவிடை கண்டுபிடிக்கவும், விடைக்குரிய கேள்விகளைக் கண்டுபிடிக் கவும், எதிர்ப்தம் கண்டுபிடிக்கவும், கேட்கலாம். இலக்கணப் பயிற்சிகளும் இவ்விளையாட்டில் புகுத்திக்கொள்ளலாம். பயன்— கற்ற சொற்கள், எழுத்துக்கள், பிற பலவற்றையும், மீண்டும் மீண்டும் வாசிக்கப் பயிற்சி கிடைக்கின்றது.

## அஞ்சற் செய்தி

மாணவரை ஓர்வட்டத்தில் வரிசையாகநிறுத்தி, முதல் மாண வனிடம் ஆசிரியர் காதுக்குள் இரகசியமாக ஒரு கட்டளையைக் கூறவேண்டும். அவன் அதே கட்டளையை இரண்டாம் பையனி டம் சொல்ல, அவன் அடுத்தவனிடம் சொல்ல, இவ்வாறே கடைசிப் பையனுக்குக் கட்டளை கிடைத்தவுடன் அவன் கட்டளைப்படி செய்யவேண்டும். அது கட்டளையாயிரா விடின் அதனை சப்தமாக வகுப்பின்முன் நின்று சொல்ல

வேண்டும். இறுதியில் அஞ்சல் மூலமாக சரியான செய்தி கிடைத்திருக்கிறதா என்று கண்டுபிடிக்கலாம். சில வேளைகளில் கொடுக்கப்பட்ட செய்தி முற்றிலும் விகாரப்பட்ட உருவத்திற் கடைசியில் வந்துசேரும். மிக வேடிக்கையாகவும் இருக்கும். வேறொரு முறையாகவும் இவ் விளையாட்டை நடத்தலாம்.

ஒரு வகுப்பை நாலைந்து குழுக்களாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு குழுவிலுமுள்ள மாணவர்களைத் தனித்தனி வரிசையில் இடம் விட்டு நிறுத்தி, ஆசிரியர், அவர்கள் முன் நின்று வரிசைகளில் முதலில் நிற்பவர்களை மாத்திரம் அழைத்து, தன் முன் நிறுத்திச் செய்தியை மும்முறை சொல்ல வேண்டும். எழுதி வைத்து வாசித்தலும் பொருந்தும். மும் முறையும் முதல் மாணவர் கேட்க வேண்டும் என்ற கட்டுப்பாடில்லை. செய்தி மனதிற்பட்டவுடன் சென்றுவிடலாம். பின் தன் குழுவின் இரண்டாம் மாணவனிடம் சொல்ல, அவன் அடுத்தவனிடம் சொல்லவேண்டும். சொல்ல, அங்ஙனமே செய்தியைக் கடத்திச் செல்லவேண்டும். கடைசியில் நின்ற மாணவன், செய்தி பெற்றதும், தாளில் எழுதி ஓடி வந்து ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும்.

ஆசிரியர் முந்தியதற்குத் தனி அம்சமும் (Marks) குறிப்புகட்குத் தனி அம்சமும் கொடுத்து, எக்குழு வெற்றி பெற்றதென்று வெளியிட வேண்டும்.

இவ்வாறு ஒரு முறை, விளையாட்டில், கொடுக்கப்பட்ட செய்தி.

“நிகழும் 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மீ 9-உ நீண்டகாலத் திட்ட அமைப்புக் கூட்டம் ஆரம்பமாகும். காங்கிரஸ் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டு விட்டது. லீக் மறுத்துவிட்டது”

அஞ்சற் போட்டியில் ஒருகுழுவினர் கொண்டுவந்த செய்தி:—

டிசம்பர் மீ 9-உ 9மணிக்குக் காலக்ஷேபம் ஆரம்பமாகிறது, காங்கிரஸ்காரர் ஒப்புக்கொண்டார்கள். முஸ்லீம் லீக் கட்சியார் ஒப்புக்கொள்ளவில்லை.

இச்செய்தியிற் செல்லும் பொருளும் எவ்வளவு விகாரப்பட்டு வந்திருக்கிறது பாருங்கள். சிக்கலானதும் பல குறிப்புகள் கொண்டதுமான செய்தியைக் கொடுத்து விட்டால், தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய வற்றால், செய்தி முற்றிலும் விகாரப்பட்டுவிடும்.

உண்மைச் செய்திகள், பல வாய்ப்பட்டு வதந்திகளாகி இறுதியில் முழுவதும் பொய்யாகிவிடுகின்றன என்பதற்கு இவ் விளையாட்டு ஒரு சான்று. ஆதலின் வதந்திகளை நம்பாதிருப்பதே நல்லது.

இவ்வாறு விகாரப்பட்டு வருமாயின், எங்கு, எவர் மூலமாகத் தோன்றல், திரிதல், கெடுதல்கள் ஏற்பட்டன என்று கண்டு பிடிக்கச் சிறிது முயன்று பார்க்கலாம். மாணவர் தாம் சொன்னதை ஞாபகப்படுத்தி, வெட்கப்படாமல் உண்மை கூறுவார்களானால் சிதைவு ஏற்பட்ட விதத்தைக் கண்டுபிடிப்பது சுலபம். வெட்கப் படாமல் உண்மை கூறிக் குற்றத்தைக் கூசாது அறிக்கையிடச் செய்யும் மனோபாவத்தை ஆசிரியர், மாணவரிடையே உண்டாக்கக் கூடுமானால் அஃதோர் சிறந்த நல்லொழுக்கப் பயிற்சியே யாகும். ஆனால் இது கஷ்டப்படுமிடத்து, கிளறாமல் அப்படியே விட்டு விடுவது நல்லது.

மாணவர் மனவிருத்திக்கும், வகுப்புக்கும் ஏற்றவாறு செய்திகளில் குறிப்புகளையும், சிக்கல்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ் விளையாட்டால் மாணவர் அடையும் பயன்கள் :— செய்தியின் பல குறிப்புகளையும், நன்கு ஞாபகத்தில் வைத்தல், அதனைத் தெளிவாகப் பிறர் மனதிற்பதியும்படி எடுத்துச் சொல்லுதல், பிறர் சொல்வதை நன்றாக உற்றுக்கேட்டுக் கேட்கும் குறிப்புகளையெல்லாம் கிரகித்துக் கொள்ளுதல், ஆகிய திறமைகள் இவ் விளையாட்டின் மூலமாகக் கிடைக்கின்றன.

## சில சொல்லமைப்பு விளையாட்டுகள்

**என் மடிக்குள் என்ன?** வகுப்பை வட்டமாக உட்காரவைக்க. ஒருவன் தன்னையடுத்துள்ள பையனோடு பின் வருமாறு சம்பாஷிக்க :—

1. அரி :- என் மடிக்குள் ஒரு பொருள் இருக்கிறது.
2. ஆநந்தன் — அது என்ன?
1. அ — 'ப'
2. ஆ — பழம், (ப என்ற எழுத்தோடு ஆரம்பிக்கும் மடிக்குள் அடங்கக்கூடிய ஏதாவது ஒரு பொருளின் பெயரைச் சொல்லவேண்டும்)

பின் ஆநந்தன் தனக்கு அடுத்து உட்கார்ந்திருக்கும் இசக்கியோடும், இ, அவனையடுத்த ஈசானத்தோடும், இவ்வாறே எல்லா மாணவரும் ஒருவர் பின் ஒருவராக சம்பாஷணை நிகழ்த்தவும்.

எழுத்துப் பயிற்சி செய்யும் சிறுவர், ஒலிக்கேற்ற எழுத்துக்களைக்கண்டு கொள்வதற்கு, இது நல்ல விளையாட்டுப் பயிற்சி.

இதே விளையாட்டை வேறொரு விதமாகவும், விளையாடலாம். ஒரு கூடைக்குள் சொல்லட்டைகளைப் போட்டுக் கொண்டு, அ, "ப எனக்கு வேண்டும்" என்று கேட்க, ஆ பழம் அல்லது பம்பரம் என்ற சொல்லை எடுத்துக்கொடுத்தல்.

**இணைப்பு விளையாட்டு.** பல அட்டைகளையும், அவற்றைக் குறிக்கும் பல சொல் அட்டைகளையும் கொடுத்து, பொருத்தமான இவ்விரண்டு அட்டைகளை இணைத்தல்.



பூ

## வாசிப்புப் பயிற்சி விளையாட்டுகள்

**பயாஸ் கோப்.** சொல்லட்டையைச் சிறிது நேரம் காட்டி மறைத்துப் பின் ஒரு மாணவனைச் சொல்லும்படி கேட்டல். இவ்வாறே ஒவ்வொன்றாகக் காட்டிப் பலருக்கும் வாசிக்கச் சந்தர்ப்பமளித்தல்.

**மின்னற் கொடி.** போல் இம் முறையில் போட்டியும் விளையாடலாம்.

## ஏணியில் ஏறுதல்

சக்கரம்

பம்பரம்

பட்டம்

படம்

ஒரு மாணவன் வரிசையாகச் சொற்களைக் கீழிருந்து மேல் வரைக்கும் தட்டுப்படாமல் வாசித்து விட்டால், வெற்றி பெற்றவனுவன்.

இதே முறையில், பழம் பதிந்தல் முதலிய பெயர்களோடு, வாசிப்புப் பயிற்சி கொடுக்கலாம். பழ வடிவமாக அட்டையில் வெட்டி அதில் சொற்களை எழுதி ஒரு கிளையில் தொங்கவிட்டு, ஒவ்வொரு சொல்லையும் வாசித்துக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லாச் சொற்களையும் வாசித்துவிட்டால், விளையாட்டில் வெற்றி பெற்றவனுவான்.

## எழுத்துக்கூட்டு விளையாட்டுகள்

**வரிசையில் நின்று வார்த்தை உண்டாக்கல்,** சில மாணவர்களைத் தனித்துநிறுத்தி ஒவ்வொரு மாணவன் கையிலும் ஒவ்வொரெழுத்தாக ஒரு சொல்லிலடங்கிய எழுத்துக்களைப் பிரித்துக் கொடுத்து விடவேண்டும். 'சொல் ஆக்குக' என்று ஆசிரியர் சொன்னவுடன், மாணவர் வரிசையில் நின்று தங்கள் எழுத்துக்களைக் காட்டவேண்டும். வரிசையாக வாசிக்கும்போது சொல் உண்டாக வேண்டும்

போட்டியாக, வகுப்பு மாணவர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பிரிவினரிடத்தும் ஒவ்வொரு சொல்லுக்குரிய எழுத்தட்டைகளைக் கொடுத்து ஒன்று போற் கட்டளையிட்டு, சொல்லமைக்கச் சொல்லலாம். முந்திச் செய்பவர்களைக் கண்டு, பாராட்டுமாறு மாணவர் கரகோஷம் செய்க.

**சொல்லாக்க விளையாட்டு.** மாணவர் வட்டமாக வரிசையில் உட்கார்ந்து ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரெழுத்தாகச் சொல்லிச் சொல் அமைக்கவேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஒரு எழுத்தைச் சொல்லும்போது தன் மனதில் ஒரு சொல்லை நினைத்துக் கொள்ளவேண்டும். எவனிடம் சொல் முடிகிறதோ அவன் தோற்றவனுவான். தோல்வியடையும்போது, அதற்கு அறிகுறியாக "தோ" எழுதிய ஒரு எழுத்தட்டையைக் கொடுக்க, சிறிது நேரம் விளையாடியபின் தோல்வியே அடையாதவர்கள் யார் என்று கண்டுபிடித்து, ஏனைய மாணவர்கள் கைதட்டிப் பாராட்டுமாறு செய்க.

சொல்லுண்டாக்கல். ஒரு சொல்லின் எழுத்துக்களை மாற்றிக் கரும் பலகையில் எழுதிவைத்துச் சொல்லைக் கண்டுபிடிக்கச் செய்தல்.

உதா:— ரந்திதம் — தந்திரம்

குறிப்பிட்ட சொல்லிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு பல சொற்களையுண்டாக்கல்

உதா:— மோகன சுந்தரம் — தரம், கரம், சுரம், கந்தரம், சுந்தரம், சுதந்தரம், கனம், தனம், மோகனம், தகனம், சுகனம் மோகம், சுகம், கந்தம், தந்தம்.

## சொற்கட்டு விளையாட்டு (Words-building)

சிறு எழுத்தட்டைகளை ஒரு அகன்ற பலகையில் கவிழ்த்திப் போட்டு, சுற்றிலும் மாணவர் உட்கார்ந்து விளையாட வேண்டும். பலகையில் மத்தியில் வட்டமாகக் காலியிடம் விடுக. வரிசையாக ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரெழுத்து எடுத்து மத்தியில் வைக்க. மத்தி வட்டத்தில் இருக்கும் எழுத்துக்களால் ஒரு சொல்லுண்டாக்கக் கூடுமானால், மாணவர் தன் முறையில் உடனே அவ்வெழுத்துக்களை எடுத்துச் சொல்லாக அமைத்துத் தன் முன் வைக்கவேண்டும். தப்பிதமாக அமைத்தவன் தண்டனையாகத் தன் சொல்லொன்றை இழந்துவிடவேண்டும். சிக்கல்கள் ஏற்படா வண்ணம் மாணவர்களே சில நியதிகளை அமைத்துக்கொள்ளலாம். ஒருவன் ஏழு சொற்கள் எடுத்துவிட்டால், அவனையே வெற்றி பெற்றவன் ஆக்கிவிட்டுத் திரும்பவும் புதிதாகத் தொடங்கி விளையாடலாம்.

## காலியிடத்தை நிரப்புதல்

உதாரணம்:— ப—ம்=படம், பழம், பதம், பரம்: மாணவர் தங்களுக்குத் தெரிந்த சொற்களை எழுதலாம்.

சங்க—. = சங்கம

சங்க—ம் = சக்கடம், சங்கமம்

## வாக்கியம் உண்டாக்குதற் பயிற்சி

காலியிடத்தை நிரப்புதல்

நீ —செய்கிறாய்?

நான் —பாடத்தைப்—

பல சொல்லட்டைகளைக் கொடுத்து வாக்கியமாக அமைத்தல்.

உதா :—

| என் | பெயர் | பானு |
|---|---|---|

காலியிடத்திற் படங்களை அமைத்து வைத்து, வாக்கியங்களையும், கதையையும் எழுதி அவற்றை வாசிக்கச் செய்தல், சிறுவர்க்குக் கொடுப்பதற்குரிய முதற் பயிற்சி. இப் பயிற்சியின் பின்னர் படத்திற்குப் பதிலாகக் கோடுபோடலாம்.

ஒரு வாக்கியத்தில், காலியில் அமைப்பதற்கு, அதன் இறுதியில் பிறைக் கோட்டினுள் பல சொற்களைக் கொடுத்து அவற்றுள் பொருத்தமானதை எடுத்து உபயோகிக்கச் சொல்லலாம்.

உதா :— கிளி அழகான —. (விலங்கு, பறவை, செடி)

**சொற்களை மாற்றிக் கொடுத்து,** வாக்கிய மாக்கச் செய்தல்.
உதா :— இல்லை இறைவன் இடமே இல்லாத.

**வகைப்படுத்தல்,** பெயர்ச் சொற்களைக் கொடுத்துப்பொருள், இடம், சினை, என்ன மூன்று வகையாகப் பகுத்து எழுதச்செய்தல், ஐந்தாம் வகுப்புமுதல், இலக்கணப் பயிற்சியாக இவ்விளையாட்டைக் கொடுக்கலாம்.

## பொருத்தமான சொற்களை இணைத்தல்

இரு பகுதிகளாகச் சொற்களைக் கொடுத்து, மரபு பற்றி இணைக்கச் செய்தல்.

| | |
|---|---|
| ஆடு | குஞ்சு |
| பசு | குட்டி |
| காக்கை | பிள்ளை |
| கீரி | கன்று |
| புலி | குருளை |
| நாய் | மறி |

எழுவாய்க்கேற்ற பயனிலைகளைச் சேர்த்தல்.

| | |
|---|---|
| நான் | விளையாடுகிறார்கள் |
| நீ | படிக்கிறேன் |
| அவன் | சமைக்கிறாள் |
| அவள் | போ |
| அவர்கள் | போகிறான் |

## கேள்வி விளையாட்டுகள்.

1 விடைகளைக் கொடுத்து அவற்றிற்கேற்ற வினாக்களை அமைக்கச் செய்தல்.

உதா :— விடை. ஆம் நான் குளித்து விட்டேன்.
வினா. நீ குளித்து விட்டாயா?

2 வினாக்களையும் விடைகளையும் தனித் தனி கொடுத்து இணைக்கச் செய்தல்.

3 ஒரு மாணவன் முதுகில் ஒரு சொல்லை எழுதிய மின்னட்டையை ஒட்டிவைத்து, அவன் பிற மாணவரிடம் கேள்விகேட்டு அந்தச் சொல்லைக் கண்டுபிடித்தல். அவன் கேட்கும் கேள்விக்குப் பிறர் 'ஆம்' அல்லது 'அல்ல' என்ற விடையே கொடுப்பர். அந்தகைய விடை வருமாறு பல வினாக்களை யமைத்து, விடையை ஆதாரமாகக்கொண்டு சொல்லைக் கண்டு பிடிக்க வேண்டும்.

இடை நிலைப்பள்ளி வகுப்புகளில். பயன்படக்கூடிய, இலக்கணம், கட்டுரை, செய்யுள் சம்பந்தமான சில விளையாட்டுப் பயிற்சிகள்

### இணைப்பு விளையாட்டு

| | |
|---|---|
| அரசன் | சுட்டு |
| ஆட்சி | வினா |
| அவன் | குறில் |
| குரங்கு | நெடில் |
| ஏவன் | குற்றியலுகரம். |

உதாரணத்திற்கேற்ற இலக்கணக் குறியீட்டைச் சேர்க்க

| | |
|---|---|
| துடி போலும் | கரிது களம்பழம் |
| பவளம் போற் | நுண்ணிடை |
| காக்கையிற் | செவ்வாய் |

உவமைக்கேற்ற பொருளைச் சேர்த்துக் காட்டுக.

செய்யுளை அடிபிறழாமற் சீர்பிரித்து எழுதுக

சாதி யிரண் டொழிய வேறில்லை
சாற்றுங்கால் நீதி வழுவா
நெறிமுறையின் மேதினியில் இட்டார் பெரியோர்
இடாதார் இழிகுலத்தார் பட்டாங்கில் உள்ளபடி.

இவ்வாறு பயிற்சியோடு கலந்து கொடுக்கக் கூடிய விளையாட்டுகள் பலவற்றை ஆசிரியரே கண்டுபிடிக்கலாம். உதாரணமாகச் சிற்சிலவே ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளன. சாரணர், குருளையர், விளையாட்டுகள் பல சிறுவர்க்கு ஏற்றவை; கல்வி புகட்டுவதில் பயன்படுத்தக்கூடியவை. அவற்றைக் கற்று மொழிப்பயிற்சிக்கு பயன்படக்கூடியவாறு திருத்தியமைத்துக் கொள்க.

**கிண்டர்காட்டன் முறை.** (Kindergarten method) இளங் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவிட்டது உபயோகிக்கப்படும், கிண்டர்காட்டன் முறை முற்றிலும் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டதே. இம்முறையில் விளையாட்டுக்களின் மூலமாகவே, உடலும் உள்ளமும், ஒழுக்கமும், வளர்ந்தோங்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. புலப்பயிற்சிக்கேற்ற பலவித விளையாட்டுக் கருவிகளை வைத்துக் குழந்தைகள் விளையாடி இன்பமடைகின்றனர். அதே சமயத்தில் நிறம், வடிவம், பரிமாணம் இவற்றின் வேறுபாடுகளைப்பற்றிய தெளிந்த அறிவையும் பெறுகின்றனர். இதற்குப் பயன்படுமாறு இம்முறையின் ஆக்கியோனாகிய, ப்ரோபெல், (Froebel) என்னும் ஜெர்மனி நாட்டுப் பேரறிஞர், குழந்தைகளுக்காகவே அமைத்து அளித்த விளையாட்டுக் கருவிகளை ப்ரோபெலின் பரிசில்கள் (Froebel's Gifts) எனப்படும். இதன் உபயோகத்தை, எழுத்துப் பயிற்சியிற் சற்று விரிவாகக் கூறுவோம். **கிண்டர் காட்டன்** என்ற சொல்லுக்குக் **குழந்தைகளின் தோட்டம்** என்பது பொருள். இத் தோட்டத்திற் செடிகள் குழந்தைகளே; இயற்கையே அன்னை; தோட்டக்காரர் ஆசிரியரே. செடிகளுடைய வளர்ச்சிக்கு ஏற்படும் இடையூறுகளைத் தக்க உபாயங்களால் விலக்கி, இயற்கையன்னையின் வளர்ப்புத் தன்மையை பயன்படச்செய்வதே இத் தோட்டக்காரரின் கடமை. மாண்டிசோரி அம்மையார் தனிக்கவனத்தோடு வற்புறுத்தும் புலப்பயிற்சியும், குழந்தைக் கல்விக்குப் பயன்படும் இயற்கை முறையாகும்.

### தான் கருதிச் செய்யும் கல்வி முறை
### The Project method,

கல்வி கற்பிக்குமுறை சிறுவரது இயல்புக்குப் பொருந்தியதாயிருத்தல் வேண்டும். விளையாட்டு விருப்புடைய சிறுவர்க்கு விளையாட்டு முறையில் கல்வி கற்பிக்க வேண்டும். அம்முறையைச் சுருக்கமாகவே இதுகாறும் கூறினோம்.

இனி, சிறுவரிடம் வேறு சில இயல்புகள் காணப்படுகின்றன. அவை, (1) சுறு சுறுப்பு. சிறுவர்கள் கைகால்களையடக்கி வாளாவிருத்தல் இயலாது. ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருப்பர். சதா இயக்கமே அவர்கட்கு விருப்பம். "சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கியிருக்கும்" இயல்பு உடையாரல்லர். தங்கள் மனதைக் கவரும் ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டேயிருப்பர்.

2. அவரவாது இயல்புக்குத் தக்கவாறு ஏதாவதொரு தொழிலில் சிறப்பான கருத்துக்கொண்டு செயலாற்றுவர்.

விளையாட்டு, இடையரு இயக்கம், கருத்துடன் தான் விரும்பும் தொழிலாற்றல், ஆகிய இத் தன்மைகளைப் பயன் படுத்திக் கல்வி கற்பிக்கக் கருவியாகும் சிறந்த முறை, **தான் கருதிச் செய்யும் கல்வி முறை.** (Project method) இதை **சுய நோக்க முயற்சிக் கல்விமுறை** என்றும், **செயல் திட்ட** முறை என்றும் அழைப்பர். இப் பெயர்களெல்லாம், அம்முறையின் அம்சங்களை வெளிப்படுத்தும் சொற்களாலாய தொடர்கள். ப்ராஜெக்ட் என்ற சொல்லுக்கு உபாயம் (plan) உத்தேசம், (Proposal) எடுத்துக் கொண்ட காரியம் (scheme) என்பன பொருள். ப்ராஜெக்ட் முறை என்று சொல்லும்போதும் இப் பொருள்களெல்லாம் அச் சொல்லின்கண் தோன்றுகின்றன. இக் கருத்துக்களை யெல்லாம் அமைத்து இதற்குத் தமிழில் பெயர் சூட்டும் போது, அப் பெயர் நீண்டதாகின்றது. யாம் படைத்துக் கொண்ட "தான் கருதிச் செய்யு முறை" என்ற பெயர், இம் முறையின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்துகின்றது. இம் முறைப்படி ஒரு மாணவன் தானே ஒன்றைக் **கருதி,** நன்கு ஆலோசித்து, ஒரு காரியத்தைச் செய்யுமாறு உத்தேசித்துக் கொண்டு, பின் அதைச் **செய்து** முடிக்கின்றான். தானே கருதிச் செய்கின்றானாதலின் "**தான் கருதிச்** செய்யுமுறை" எனப் பெயர் கொடுத்தோம். மாணவர் செய்யுமாறு எடுத்துக் கொண்ட காரியமும் அல்லது தொழிலும், 'ப்ராஜெக்ட்' என்றே அழைக்கப்படுகிறது.

வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் திறமையுடையவனாகக் குழந்தையை வளர்த்து விடுவதே கல்வியின் முக்கிய நோக்கமாகும். அத்தகைய கல்வி பிள்ளையின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையதாயிருத்தல் வேண்டும். அங்ஙனம் தொடர்புடையதாயிருக்கும்போதுதான் கல்வி பிள்ளைக்கு சுவையுடையதாயிருக்கும். இங்ஙனம் கல்வியை வாழ்க்கையோடுதொடர்புபடுத்திச் சுவையுண்டாக்குவதற்கு "ப்ராஜெக்ட்" முறை பெருதவியாகும். மாணவருடைய விருப்பங்களையும், அவசியத்தையும் ஆதாரமாகக் கொண்டு அவனே ஒரு தொழிலைத் தெரிந்து அதைத் திருத்தமாகச் செய்வதையே கருத்தாகக் கொண்டு, பல பாடங்களையும் அதனோடு தொடர்புபடுத்திக் கற்கும்படிசெய்வதே தான் கருதிச் செய்புமுறையின் நோக்கம்.

இதன் மூலமாக, மாணவர் பள்ளிப்படிப்புக்கும் அவர்களது அன்றாட வாழ்க்கைக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகிறது. "மாணவர், தாம் விரும்புவதும், தனக்கு உடனடியாகவும் பிற்கால வாழ்க்கையிலும் பயன்படத்தக்கதுமான ஏதாவது ஒரு தொழிலை, தாம் கற்கும் கல்விக்கு அடிப்படையாக அமைத்துக் கொள்கின்றனர். பின்வரும் வேலைகளைச் "செய்ய வேண்டிய காரியமாக" (Project) தெரிந்து கொள்ளலாம்:— காற்றாடி செய்தல், தோட்ட வேலை, கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், நூற்றல், நெசவு, கடை வியாபாரம், பள்ளிக்கூடத் தபாலாபீஸ் நடத்தல், முதலியன.

'ப்ராஜெக்ட்' மூலமாகக் கிடைக்கும் மொழிப்பயிற்சி. இத்தொழிலைச் செய்துகொண்டே, அதனைத் திருத்தமாகச் செய்வதற்குத் தனக்குவேண்டிய வேறுபல துறையறிவையும் பெறுகின்றனர். அவ்வறிவு தங்களுடைய கருத்து நிறைவேறுவதற்கு உறுதுணையாகிறதால், அதனை ஆக்கிரகத்துடன் கற்றுப் பெறுகின்றனர். தமிழ் மொழியிற் பல புத்தகங்களை வாசித்துத் தாங்கள் பெறவேண்டிய விஷய அறிவைப் பெறுகின்றனர். கடை விற்பனையில் வியாபார முறைபற்றிய பல நூல்களையும், விளம்பரங்களையும் வாசிக்கலாம்; இதனால் வாசிப்புப் பயிற்சி கிடைக்கிறது.

Project குறிப்புப் புத்தகத்தில், குறித்து வைக்கவேண்டியவற்றை எழுதிக் கொள்கின்றனர். இதனால் எழுத்துப் பயிற்சி கிடைக்கிறது. மேலும் தங்களுக்குத் தொழில் (Project) நடத்து

வதற்கு ஓர் இடம் வேண்டும். தலைமையாசிரியரிடம் ஒரு தனி யறை தருமாறு வேண்டுகோள் சமர்ப்பிக்க வேண்டியது ஏற்படும். அதற்காக எல்லா மாணவரையும் ஒரு வேண்டுகோள் மனு எழுதச் சொல்லலாம். அவற்றுட் சிறந்ததொன்றைத் தெரிந்தெடுத்து தலைமையாசிரியரிடம் கொடுக்கலாம். கடை வியாபாரம் செய்யும்போது வரவு செலவுக் கணக்கு எழுத வேண்டும். கடையில் உள்ள பொருள்களின் விலைப்பட்டியல் ஒன்று எழுதி வெளியே தொங்கவிடவேண்டும். மற்றும் மாணவர்க்கு அவசியமான அறிக்கைகள், வேண்டுகோள், வியாபார விளம்பரங்கள் முதலியன எழுதி வெளியிட வேண்டியது ஏற்படும். பெருங் கடையிலிருந்து தங்களுக்கு வேண்டிய பொருளை வருவிக்க, வேண்டுகோட் கடிதம் எழுத வேண்டும். இவற்றால் **எழுத்துப் பயிற்சி** கிடைக்கின்றது.

ஒரு தொழிலைத் தெரிந்து கொள்ளப் பல மாணவர் பல முறை கூடி ஒருவரோடொருவர் உரையாடவேண்டும். ஒவ்வொரு மாணவனும் தான் விரும்பும் தொழில் இது வென்றும், அதைத் தான் விரும்புவதற்குக் காரணங்கள் இன்னின்ன என்றும், அத் தொழிலால் ஏற்படும் விசேஷித்த பயன்கள் இவை யென்றும், தன் தன் கருத்தை வெளிப்படுத்தவேண்டும். இங்ஙனம் எல்லாரும் வெளிப்படுத்தின பின்னர் எல்லாரும் சேர்ந்து செய்தற்குரிய தொழிலைத் திட்டம் செய்ய வேண்டும். இதனால் **வாய் மொழிப் பயிற்சி** கிடைக்கின்றது.

## தான் கருதிச் செய்யுமுறையின் நான்கு படிகள்

1. தேர்தல் (Purposing) முதலாவது, வகுப்பு மாணவர் யாவரும் ஒன்றுகூடி ஆலோசித்து ஒரு தொழிலைத் தம் கல்விக்கு ஆதாரமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இது, கூடினவுடனே நிர்மானம் செய்துவிடக்கூடிய ஒரு காரியமன்று. பல்வேறு அபிப்பிராயங்கள் உண்டாகும். ஒவ்வொரு மாணவனும் தன் தன் அபிப்பிராயத்தை யாதொரு மறைவுமின்றிச்சொல்லவேண்டும். பல கருத்துக்களையும் பலமுறை கேட்டுச் சீர்தூக்கியறிந்து எண்ணி முடிவு செய்தற்கு சில நாட்கள் செல்லக்கூடும். மாணவரது இயல்பு வேறுபடுமாதலின் கருத்து வேறுபாடும் ஏற்படும். பொருள் வருவாயைக் கருதும் மாணவன் ஒன்றைக்கூறுவான்.

தொழிலின்பத்தையே கருதும் மாணவன் கருத்துக்கு அது பொருந்தாது. அத்தொழில் மூலமாகப் பலதுறையறிவும் பெற வேண்டுமென்ற அறிவு வேட்கையுடையான் கருதும் தொழில் வேறாகும். ஆசிரியர் அங்கிருந்து அவர் சம்பாஷணையை கவனித்து அவசியமான ஆலோசனைகள் கூறவேண்டும். ஆனால் ஆசிரியரே தொழிலைத் திட்டம் செய்துவிடக்கூடாது. அவ்வுரிமை மாணவர்க்கேயுண்டு. எல்லாமாணவர்கருத்தும்தொழில்பற்றி ஒற்றுமைப்படவில்லையானால், பெரும்பான்மை மாணவர்கருதும்தொழிலை வகுப்பு ஒப்புக்கொண்டு, பின்,செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

2. **தெளிதல்,** (Planning) ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்த பின் அதனைச் செய்ய ஆரம்பிக்குமுன், “எங்ஙனம் செய்வது? அதற்கு வேண்டிய முதற் கருவி துணைக் கருவிகள் யாவை? அவற்றை எங்ஙனம் ஆக்குவது?” என்று இவ்வாறு தாங்கள் எடுத்துக் கொண்ட காரியம் இனிது முடிதற் பொருட்டு வினையாற்றுதற்கு **வழி வகைகளை யாலோசித்துத் திட்டம் செய்தல்** வேண்டும். திட்டம் செய்யுமிடத்து தங்களுக்கு அதனைச் செய்தற்கு அறிவும் திறமையும் போதாததென்று உணர்வாராயின் ஆசிரியர் உதவிகொண்டு அவசியமான அறிவைப் பெற முயல்வர். காற்றாடி செய்யும் முதல் வகுப்பு மாணவர் அதற்குவேண்டிய கருவிகள், அவற்றின் அளவு, அதனை வாங்குமிடம், வேண்டும் பொருள், அப் பொருளைப் பெறும் முறை, இவைபற்றி ஆலோசிக்க வேண்டும். இப்படியில் **வாய் மொழிப் பயிற்சிக்கு** வசதியேற்படுகின்றது. கணிதத்தில் எண்ணல், நீட்டல், இந்திய நாணயம் சம்பந்தமாக அடிப்படையான முதலறிவு பெற மாணவர்க்கு ஆத்திரம் உண்டாகின்றது. அதனைத் திருப்தி செய்யுமுறையில் அவற்றைக் கற்பிக்க ஆசிரியர்க்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இங்ஙனம் குறிப்பிட்ட நோக்கத்தோடு மாணவர் கற்கும்போது, அக்கல்வி மிகவும் பயன்படுகின்றது.

ஒரு வினையைச் செய்யத் தொடங்குமுன், வழிவகைகளை எண்ணித் தெளிதல் வேண்டும்.

“எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம், என்பது இழுக்கு”
“பொருள் கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்” என்றார்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார்,

இத் நெறிநிற் படிமிசை உலக வாழ்க்கையின் வெற்றிக்கே ஆதாரமான சிறந்த கோட்பாடுகளைச் செய்து பயினுகின்றனர்.

**3. வினை செயல் (Executing)** பின் தொழிலில் ஈடுபட்டு முழுக் கருத்தையும் செலுத்திக் காரியத்தைச் செய்து படிக்கின்றனர். வேண்டுமறிவை ஆசிரியர் உதவி கொண்டும், நூல்களை வாசித்தும் பெறுகின்றனர்.

**4. வெற்றி நோக்கல் (Judging)** தொழிலைச் செய்து, முடிக்கப்பெற்ற பொருளின் வேலைப்பாடு முதலியவற்றை நோக்கி, தொழிலின் வெற்றியைக்கண்டு ஆநந்தமடைகின்றனர். பிறர் பொருளோடு தம் பொருளை ஒத்துப்பார்த்து, குண குற்றங்களைக் கண்டு கொள்கின்றனர். தங்குறைவைத் தாமே கண்டுகொள்ளுதல், மீண்டும் முயன்று, திருத்தமடையத் தூண்டுகோலாகும். சிறந்த வேலைப்பாட்டை யுணர்ந்து பாராட்டும் இயல்புண்டாக்கும்.

'தான் கருதிச் செய்யுமுறை' என்பது குறிப்பிட்ட ஒரு பாடத்தைக் கற்பித்தற்குக் கையாளப்படும் ஒரு தனி முறையன்று. பல பாடங்களையும் ஆவலுடன் பயில்வதற்கு மாணவரைத் தூண்டி விடும் ஓர் சூழ்ச்சி எனல் வேண்டும்.

தெரிந்து கொண்ட ஒரு 'ப்ராஜெக்டை' தனித்தனி மாணவர் தனி வேலையாகச் (individual project) செய்தலும் உண்டு. பலர் கூடிக் கூட்டுத் தொழிலாகச் (group project) செய்தலுமுண்டு. ஒரு வகுப்பு முழுவதும் ஒரே Projectஐத் தெரிந்து கொள்வது நல்லது. இரு வேறுபட்ட முடிவுகளை மாணவர் ஒப்புக் கொள்வார்களானுல், வகுப்பை இரு பிரிவாகப் பிரித்து, இரண்டு தொழில்கள் செய்யவும் அநுமதிக்கலாம்.

சில தொழில்களைச் செய்துமுடிக்க ஆண்டு முழுவதும் வேண்டியதிருக்கும். மற்றும் சிலதொழில்களுக்கு மூன்று மாதமும் வேறு சிலவற்றிற்கு ஒரு மாதமும் செல்லும். சில தொழில்களில் கற்றற்குரிய எல்லாப் பாடங்களிலும் அறிவுபெற இடமிருக்கும். சில தொழில்கள் அங்ஙனம் பல துறையறிவுக்கும் இடம் தராது. எல்லாப் பாடத்திற்கும் இடமிருக்குமானுல் நல்லது. இல்லாவிட்டால், மறு முறை Project தொடங்கும்போது, முன் இடம் பெறுப் பாடங்கள், இடம் பெறத் தக்கதோர் தொழிலைத் தெரிந்து கொள்ளவேண்டும். எல்லாப் பாடத்திற்கும் இடமிருக்க

வேண்டும் என்ற கருத்துப்பற்றி ஆசிரியர் ஒரு தொழிலைத் தெரிந்தெடுத்துக் கொடுக்கக்கூடாது. மாணவருடைய தேவையையும், விருப்பத்தையும், நோக்கத்தையும் பொருத்ததே இம்முறையின் வெற்றி. தொடங்கிய ஒரு தொழில் முடிவுபெற்றால், உடனே வேறொரு தொழிலை ஆலோசித்துத் தேர்ந்தெடுத்துச் செய்யத் தொடங்கலாம்.

சென்ற நூற்றாண்டிறுதியில் தொழில் முறையாலும், தனிக்கவனத்தாலும், ஏற்படும் பயன்களைப் பண்டித மாண்டிசோரி அம்மையார் எடுத்துக் கூறினார். இக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே, பண்டித டீவீ என்னும் பெரியார் கி. பி. 1896ல் சிக்காக்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லேபரேட்டரிக் கலாசாலையில் முதன் முதல், இப்புது முறையைப் பயிற்சி செய்யத் தொடங்கினர்.

இம் முறையின் மூலமாகப் பள்ளிப்படிப்பு பிள்ளையினது வாழ்க்கைக்கு பயன்படுகின்றது. வாழ்க்கை யனுபவத்திற்கும் பாடத்திற்கும் தொடர்பு உண்டாகின்றது. கல்வி இன்பமளிக்கின்றது. கல்வியில் மாணவர் கருத்தும் ஊக்கமும் செல்கின்றது.

## பலதுறை யறிவு

முதல் வகுப்பு — பட்டம் செய்தல்.

வாசிப்பு— காற்று, காற்றாடி, நீளம், அகலம், தாள், குச்சி கயிறு, பட்டம், விட்டம், வால், ரூபா, அணா, பை, பறக்கிறது. முதலிய சொற்களை வாசிக்கவும், சொன்முறைப்படி அச்சொற்களைத் தனித்தனி இனம் கண்டு கொள்ளவும், தகுதியடைதல்

எழுத்து—மேற்கண்ட சொற்களையும் எழுத்துக்களையும் மணலிலும், கற்பலகையிலும், எழுதக்கற்றல்

வாய்மொழி—தேர்தல், தெளிதல் ஆகிய படிகளில் சிறுவர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷித்தல்; படம், பட்டம், செய்யும்விதம் பறக்கவிடுதல், இவை பற்றி மாணவரை விளக்கமாகச் சொல்லச் செய்தல்; பட்டம் பறக்கவிட்டு விளையாடும்போது மாணவர் தம் இன்பவுணர்ச்சிகளைச் சொற்களால் வெளியிடல்.

**கைவேலை**—கட்டுதல், நாள்வெட்டுதல், பட்டம் செய்து முடித்தல்

**சித்திரம்**—"பட்டம்" படம் வரைதல்

**கணக்கு**—1 முதல் 10, வரை எண்கள் கற்றல், கூட்டல், சட்டங்களை எண்ணிப் பட்டத்திற்கு எத்தனை என்று கண்டுபிடித்தல், சமசதுரம், நீண்டசதுரம், வடிவங்களை வேறுபடுத்தியறிதல்.

**பூகோளம்** ஊரின் சுற்றுப்புறம், வெளியிடங்கள் உள்ள திசைகள், பட்டம் பறக்க விடுவதற்கு ஏற்ற இடம், ஏனைய நிலப் பகுதிகள், சாகுபடி நிலம், மண்ணின் நிறம், ஆறு, ஓடை, குளம் முதலிய நீர் நிலைகள், மூங்கில் வளருமிடம், அதற்குவேண்டிய நிலவசதி முதலியன.

**சரித்திரம்.** பட்டம், ஆதி வரலாறு.

**இயற்கை.** ஆகாயம், அதன் தன்மை. காற்று உண்டாகும் விதம், காற்றினால் **பயன்.**

இங்ஙனம் எவ்வெத் துறையில் அறிவு பெறக்கூடுமோ, அவ்வத்துறைகளில் பெறுவதற்கு ஆசிரியர் உதவிபுரியவேண்டும்.

**வார்தாத் திட்டம்,** (**Wardha Scheme,**) மகாத்மா காந்தியடிகள் வார்தாவில் ஆய்வு நிகழ்த்திச் சிறந்தது என்றுகண்டறிந்து ஆசியளித்த வார்தாக் கல்வி முறையும், தான் கருதிச் செய்யு முறையைப் பின்பற்றியதே. இத்திட்டத்தில் காந்தியடிகளார் கருத்து யாதெனின், கல்வியானது பக்குவ வாழ்க்கைக்குப்பயன் படுவதாயிருத்தல் வேண்டும். அதன் பொருட்டு அது, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், அளிக்கக்கூடிய ஒரு தொழிலை அடிப்படையாக்கொண்டு நடைபெறவேண்டும். ஒரு தொழிலைத் திருத்தமாகச் செய்வதற்கு அத் தொழில்பற்றிய பல்துறையறிவும் இன்றியமையாததாகும். ஆதலின் பலதுறையறிவையும் அத்தொழிலைச் சம்பந்தப்படுத்திப் போதிக்கும் போது, வாழ்க்கைத் தொழிலைத் திறம்படச்செய்வதற்கு வேண்டுமறிவு பெறுவதோடு, கல்விக் கேள்விகளிலும் அறிவு பெறுகின்றனர், என்பதே. இவ் வார்தாத் திட்டத்தின் பற்பல அம்சங்களையும் தன்னகத்துக் கொண்டே, சார்ஜெண்டு கமிட்டியார் ஆராய்ந்து வெளியிட்ட சார்ஜெண்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள

அடிப்படைக் கல்வியும் (Basic education) தற்போது நம் மாகாணத்தில் அதி சீக்கிரத்தில் நிலை நாட்டி விடவேண்டும் என்று, நம் கல்விமந்திரி உயர்திரு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்கள் முயன்றுவரும் தொழிலடிப்படைக் கல்வியும் (Basic system) விளங்குகின்றன.

## தனி முறை. (Individual Method.)

கல்வி சிறுவர்க்கு இரு முறையிற் புகட்டப்படுகின்றன. அவை, 1 வகுப்பு முறை (class or group method) 2. தனிமுறை, (Individual method) தற்காலத்தில் நம் மாகாணத்தில் எப் பள்ளிக்கூடங்களிலும் வகுப்பு முறைப்படியே கல்விப்பயிற்சி நடைபெற்றுவருகின்றது. ஒருவகுப்பில் 35முதல் 45 மாணவர்கள் வரை மொத்தமாகக் கூட்டி, ஓர் அறைக்குள் உட்காரவைத்து ஒவ்வொரு பாட நேரத்திலும், குறிப்பிட்ட ஒரு பாட ஆசிரியர் வந்து எல்லா மாணவர்க்கும் மொத்தமாகப் பாடஞ் சொல்லிவிட்டுப் போகின்றனர். இம் முறை மாணவர் எல்லாருக்கும் ஒன்றுபோல் பயன்படக் கூடியதன்று. ஏனெனில், எல்லா மாணவரும் ஒரே மாதிரி மனநிலை யுடையவர்கள் அல்லர். மாணவருடைய அறிவு, ஆற்றல், அநுபவம், விருப்பு வெறுப்புக்கள், முயற்சி, முதலியன தனித் தனி வேறுபடுகின்றன. முகச் சாயலிலும், உடற் கூற்றிலும் இரண்டு மனிதர் யாதொரு வேறுபாடுமின்றி முழுவதும் ஒத்திருக்கக் காண்பதில்லையே? பிண்டப் பொருளாகிய உடல் நிலையில் இத்துணை வேறுபாடிருப்ப, நுண் பொருளாகிய உள்ள நிலை வேறுபாடின்றி அமைதல் கூடுமோ? இங்ஙனம் வேறுபட்ட நிலையுடைய பலர்க்கும் கல்வி பயன் படவேண்டுமாயின், தனித்தனி கவனித்து ஏற்ற உதவி புரிதல் வேண்டும்.

இவ்வுண்மையை கி. பி. 1760ஆம் ஆண்டிலேயே 'ரூசோ என்னும் கலைவல்லார் கண்டறிந்து கூறியுள்ளார். சென்ற நூற்றாண்டின் இறுதியில் டாக்டர் மாண்டிசோரி அம்மையார் தனிக்கவனம் செலுத்திக் கல்வி புகட்டுவதை வற்புறுத்திக் கூறினர். இக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு 1915 முதல் மாண்டிசோரி அம்மையாருடன் பழகி வந்த மிஸ். பாக்ஹர்ஸ்ட் அம்மையார் ஒரு புது முறையைக் கையாண்டு

பயனை அறிந்து, பாராட்டிப் பரப்பிவந்தார். அதுவே டால்ட்டன் முறை (Dalton Plan) அல்லது பாடப்பாகுபாட்டுத்திட்டம் (Assignment system) எனப் பெயர்பெற்றது. இது முதன் முதல் 1920-ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள டால்ட்டன் நகரில் கல்விப் பயிற்சிக்குப் பயன்படுத்தப் பட்டதால், இது டால்ட்டன் முறை. எனப் பெயர்பெற்றது.

இம்முறைப்படி, ஓராண்டிற் கற்கவேண்டிய பாடங்களைப் பல பாகங்களாகப் பாகுபடுத்தி, ஒவ்வொன்றாக மாணவரிடம் கொடுத்துத் தாங்களே முயன்று கற்று முடிக்கச் செய்யவேண்டும். இந்தத் திட்டத்தில் வகுப்பு அறைகள் கிடையா. பாட அறைகளே உண்டு. ஒவ்வொரு மாணவரிடமும் ஒரு பாடப் பாகுபாட்டுச் சிட்டை கொடுக்கப்படும். ஆசிரியர் வகுப்புமாணவர்க்குப் பேரேடு ஒன்றை வைத்துக் கொள்வர். ஒவ்வொரு மாணவனும் முதற் சிட்டையைப் பெற்றுத் தான்தானே முயன்று முடிக்கப் பிரயாசப் படவேண்டும். விளங்காத விடத்து ஆசிரியரிடம் நேரில் வந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். பாகுபாட்டுச் சிட்டையில் மாணவன் விடயத்தை அறிந்து கொள்வதற்கு வேண்டிய அளவு உதவியாகக் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் உதவியைக் கொண்டும், பிரியமான விடத்துப் பிறமாணவர் உதவியைக் கொண்டும், வாசகசாலைப் புத்தகங்களின் உதவி கொண்டும், அவசியமாகுமிடத்து ஆசிரியர் உதவியைப் பெற்றும், மாணவன் தன் பாடத்தைப் படித்து முடிக்க வேண்டும். முதற் பாகுபாட்டை முடித்துவிட்டால், மறு பாகுபாட்டை ஆசிரியரிடம் பெற்று, யாதொரு தடையுமின்றித் தானே முன்னேறிச் செல்லலாம். புதுப் பாகுபாடு கொடுக்குமுன் ஆசிரியர், முறைப்படி பாடத்தை முடித்து விட்டானா என்று பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். திருப்திகரமாகச் செய்யவில்லையானால், குறைவுகளைச் சுட்டிக் காட்டித் திரும்பவும் செய்விக்கவேண்டும். பாகுபாட்டை ஒரு மாணவன் திருப்திகரமாகக் கற்று முடித்து விட்டால், பேரேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டும். வகுப்பில் பின்னடைந்திருப்பவர்களைத் தனித்தனி கவனித்து ஆசிரியர் முன்னேற்றப் பிரயாசப் படவேண்டும். தமிழில் இலக்கணப் பயிற்சி, கட்டுரை, வாசிப்பு, இவற்றிற்கு ஐந்தாம் வகுப்புக்கு மேல் இம் முறையைப் பயன் படுத்தலாம்.

**பாடப்பாகு பாட்டுச் சிட்டையில்** காட்டப்படவேண்டிய குறிப்புகள். [1] குறிப்பிட்ட காலத்திற் படிக்கவேண்டிய பகுதி. [2] கருத்தை யுணர்ந்துகொள்வதற்குத் துணையாகும் ஆராய்ச்சிக் கேள்விகள். [3] விளக்கக் குறிப்புகள், பொருள் விளக்கத்திற்கு உறுதுணையாகும் உரை; இலக்கணக் குறிப்பு முதலியன. [4] வாசித்தறிதற்குரிய பிற நூல்களும், இடமும் பாகமும். [5] பரிசோதனைக் கேள்விகள்.

பாகு **பாட்டுச்** சிட்டை தயாரிப்பதில் ஆசிரியர் மிகக் கவனமுடையவராயிருத்தல் வேண்டும். பாகம் அதிகமாவதை விடச் சுருக்கமாயிருப்பதே நலம்.

**குணங்கள்** மாணவன் தன் தன் தகுதிக்கேற்ப முன்னேறிச் செல்லலாம். மந்தகதியிற் செல்பவர்களும் பின்னே விடப்படமாட்டார்கள். தங்கள் தகுதிக் கேற்ப நன்று விளங்கிக் கற்றே செல்லுவர். மதி நுட்பமுடையோர் பிறருக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம்.

2. ஒவ்வொருவரும் உழைப்பில் ஈடுபட்டு, உற்சாகமடைகின்றனர்.

3. உண்மை உழைப்பு காணப்படுகின்றது. மாணவர், ஆசிரியர்முன் சித்திரப் பாவையி னத்தக வடங்கி யிருப்பவர்களல்லர்.

4. ஆசிரியர் மாணவர் தகுதியைத் தனித் தனி அறிந்து அவர்க்கு ஏற்ற உதவிபுரியக்கூடும். அவ்வுதவி மிக்க பயனுடைய உதவியாகும். வகுப்பு முறையில் இவ்வாறு குறைகளை உணர சாத்தியப்படாது.

5. காலம் நன்கு ஆதாயப்படுத்தப்படுகின்றது. வீண்காலப் போக்கில்லை. ஓய்வு நேரமும் பள்ளிக்கூட நேரமும் இணைக்கப்படுகிறது.

6. மாணவர் ஒவ்வொருவரும் தாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று கையில் கொடுக்கப்படும் அட்டை மூலமாக அறிந்து கொள்ளுகிறார்கள். அறிந்தபின் அதை முடிக்க முயலுவர். முடிவில்லாப் பாடப் புத்தகங்கள் படிப்பில் வெறுப்பை உண்டாக்கும்.

7. தற்சார்பில் விருத்தியடைகின்றனர், தானே யோசித்துச் செய்வதனால், தன்னம்பிக்கை உண்டாகின்றது.

## குறைபாடுகள்

1. ஆசிரியருக்கு வேலை அதிகம். பாகுபாட்டுச் சீட்டைகள் தயாரித்தல், பயிற்சி நோட்டுகளைத் திருத்திக் கொடுத்தல், தனித்தனி கவனித்தல், இது உண்மை. வயது 30க்கு மேற்படின் அதிகக்கஷ்டம்; ஆனால் அதற்கேற்ற பலனை மாணவரிடம் காண்கின்றோம்.

2. பயிற்சி நோட்டைப் பார்த்து எழுதக்கூடும். பார்த்தெழுதல் எம்முறையிலும் ஏற்படுவதே. ஆசிரியர் சற்று விழிப்புடனிருக்க வேண்டும். இடையிடையே பரீட்சைகள் வைத்துக் கொள்ள வேண்டும்.

3. கூட்டு வாழ்க்கையும் சம்பாஷணைப் பழக்கமும் அற்று விடுகிறது. இடையிடையே கூட்டுப் Project கொடுத்துப் பலர் ஒன்றுகூடிப் பயிலவும் பேசிப்பழகவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

4. பணச் செலவு ஏற்படும். சீட்டைகள் அச்சிடவும், வாசகசாலைகளை அடிக்கடி புதுப்பிக்கவும் பணம் செலவாகும். அதற்கு வழிவகைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். பல பாடசாலைகள் ஒன்று கூடிச் செய்யின் செலவைப் பகிர்ந்துகொள்ளலாம். வாசகசாலைப் புத்தகங்களைக் கூடியமட்டும் கவனமாய்ப் பத்திரப்படுத்த வேண்டும்.

தனிக் கவன முறையின் மிகுந்த பலனை உத்தேசித்து இத் தீமைகளை நீக்க முயலவேண்டும் அவற்றைச் சாக்காகச் சொல்லி விட்டுவிடக்கூடாது.

## பிழையற மொழிதல்

## Training in Correct speech

**வாய் மொழியின் இன்றியமையாமை.** கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் வாய் மொழித் திறமை யின்றியமையாது வேண்டப்படுவதாகும் ஒரு பெரு நன்மை. தன் கருத்தைத் தெளிவாகப் பிறர்க்கு வெளிப்படுத்த இயலாத ஒருவன் எங்ஙனம் செவ்வனே வாழ்க்கை நடத்துதல் இயலும்? இது பற்றியன்றே

தெய்வப் புலவரும்,

> நாநலம் என்னும் நலனுடைமை; அந்நலம்
> யாநலத்து உள்ளதூஉம் அன்று" — என்றார்.

எல்லாருக்கும் பெறற்குரிய நலன்கள் எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்தது சொல்வன்மை என்னும் நலம். 'வாயில்லாதவன் பிழைக்க முடியாது' "வாயுள்ளவனுக்குத்தான் காலம்" என்னும் தமிழ்நாட்டு வழக்காகிய முதுமொழிகள் உலக வாழ்க்கைக்கு, வாய்மொழி இன்றியமையாதது என்பதைக் குறிப்பதாகும்.

2. 'கல்விக்கழகு கசடற மொழிதல்.' கசடற மொழியாதான் கற்ற கல்வி அழகுடைத்தாகாது. ஆதலின் கல்விக்கே அழகைக் கொடுப்பது, வாய் மொழித் திறமையே. கற்றவனைக் கற்றவனாக உலகிற்குக் காட்டுவதும் வாய் மொழித் திறமையே.

> இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர், கற்றது
> உணர விரித்து உரையாதார், — என்னும்

குறள் இதற்குச் சான்றாகும்.

3. நாடு, மொழி, குலம் முதலிய முன்னேற்றங் கருதி அரும்பணியாற்றி வெற்றி பெற்ற பெரியார்கள் எல்லாரும் பயன்படுத்திய வலிமிகு கருவி சொல்வன்மையன்றோ? பேசத் தெரியாதவன் பெரும்பணி செய்தல் இயலாது. நாட்டிற்குப் பயன்படும் நன்மகனுக்குவதன்றோ கல்வி?

மக்களைத் திரள் திரளாகக் கூட்டிச் சொற்பொழிவாற்றி, உறங்கிய உள்ளத்தையாட்டிப் புத்துணர்ச்சியூட்டி நம் நாட்டிற்கு விடுதலையை யீட்டியது, சுதந்திர இந்தியாவின் தந்தை மகாத்மாகாந்தியடிகள், தலைவர் ஜவஹர்லால்நேரு, சக்கரவர்த்தி ராஜாஜீ முதலிய தேசத்தலைவர்களது சொல்வன்மையே எனினும் அஃதோர் மிகையாகாது.

> விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

என்பது பொய்யா மொழியன்றோ?

4. எழுத்து, வாசிப்பு, பேச்சு, ஆகிய மூவகை மொழி வன்மைக்கும் மூலமாயுள்ளது, வாய் மொழி வன்மையே

மனிதன்' என்று பேசும் ஒருவன், மனிதன் என்ற சொல்லை வாசிக்கும்போதும், பிழையாகவே வாசிக்கின்றான்; எழுதும்போதும் தான் உச்சரிப்பது போலவே பிழையாக எழுதுகிறான். ஆதலின் இத்தகைய பிழைகளை நீக்குதற்கு முதற்கண் வாய் மொழிப் பிழையை நீக்கவேண்டும்.

கருத்தை வெளிப்படுத்துமுறை இரண்டு; அவை, பேச்சுவன்மையைச் சார்ந்தேயிருக்கிறது. தன் கருத்தைத் தெளிவாகச் சொல்லி வெளியிட இயலாதவன், அதனை எங்ஙனம் எழுதல்கூடும் ஆதலின் மாணவர் நன்கு எழுத வேண்டுமானால், அது கட்டுரைப் பயிற்சியால்மட்டும் சாத்தியப்படாது. ஆகலின் மாணவர்க்கு பள்ளிப்படிப்பு ஆரம்பகாலமுதல், பள்ளி இறுதிவரை, வாய்மொழிப்பயிற்சி அளித்தே வரல் வேண்டும்.

**வாய் மொழிப் பயிற்சி** (Oral work) 5½ வயதில் சிறுவர் பள்ளிக்கு வருகின்றனர். அப்போது அவர்களுக்குச் சிறிது பேச முடியும். ஆனால் அவர்கள் பேச்சுத் திறமையின் நிலைமை என்ன? பிறரைக் கண்டால் கூச்சம்; உடனே நிலத்தை நோக்கி விடுவார்கள். ஆசிரியரைக் கண்டால் அச்சம். வாயைத் திறந்து பேச ஆரம்பித்தாலோ, **கொச்சை**. திக்கித் திணறிய பின் வெளி வருவது துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களுமேயன்றி, முழு வாக்கியங்கள் அன்று. நால்வர் நடுவில் நின்று ஒன்றை நவில்வதென்றால், கைகால் நடுக்கம். இக் குறைபாடுகளை நீக்கி மாணவர் தம் கருத்தைத் தெளிவாகவும், அழகாகவும், வன்மையுடனும், செந்தமிழில் மொழியும் திறமையை உண்டாக்க வேண்டியது ஆசிரியரது முதற் கடமை. ஆக்குமுறை யாது? "சித்திரமும் கைப்பழக்கம்; **செந்தமிழும் நாப்பழக்கம்**" பழகப் பழகப் பிழைகள் நீங்கும்; அழகாகப் பேசலாம். மாணவர் பேசிப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் அளித்து ஆசிரியர் உடனின்று உதவிபுரிய வேண்டும். சந்தர்ப்பமளித்தற்கு நாம் பயன்படுத்தக்கூடிய வழிகளாவன :—

சம்பாஷணைகள், விடுகதைகள், பாப்பா பாட்டு, அசைப் பாட்டு, இசைப் பாட்டு, படம் பார்த்துவிடயமறிதல், கதை கூறல் கதை நடித்தல், சிறுவர் சொற்பொழிவுக் கழகம், முதலியன. இவற்றைத் தனித்தனி விவரிப்போம்.

உரையாடல், (Conversation) மாணவர் தாங்கள் கருதுவதைத் தட்டுப்பாடின்றியும் தெளிவாகவும், திட்டமாகவும் இயற்கையாக யாதொரு விபரீத உணர்ச்சியின்றியும் கூறுமாறு பழக்குவிப்பதே நம் முதற்கவனமாயிருத்தல் வேண்டும். இதற்கு முதலாவது நாம் செய்யவேண்டியது, மாணவர் தங்களுக்குள்ளும், ஆசிரியரிடத்திலும், வகுப்பு மாணவர் முன்னிலையிலும், கூச்சம், குழைவு, அச்சம் முதலியன இல்லாமல் சாதாரணமாகப் பேசவிட வேண்டும். பெரும்பான்மை மாணவர்க்கு இக் கஷ்டம் தோன்றாது. சில சிறுவரிடமே கூச்சம் முதலிய குறைகளைக் காணக்கூடும். அவர்களைத் திருத்துவதற்கே ஆசிரியர் விசேஷித்த முறைகளைக் கையாடவேண்டும். இதற்காக ஆரம்ப நிலைக் கீழ் வகுப்புகளில் பேச்சுக்கென்று தனிப்பாட நேரம் அமைத்துக்கொடுத்து மாணவர் தங்கள் இஷ்டம்போல் ஒருவரோடொருவர், தாங்கள் விரும்புகின்ற விஷயங்களைப்பற்றிப் பேசவிடவும்; இது பாடம் நடத்துவதுபோலிருக்கக் கூடாது. ஆசிரியர் அங்கேயிருந்து கவனித்துக்கொண்டு மாத்திரமிருத்தல் வேண்டும். இடையே குறுக்கிட்டு மாணவர்க்கு சம்பாஷணை மீதுள்ள ஊக்கத்தைக் குலைத்துவிடக்கூடாது. இந்நிலையில் **பொருளின் தெளிவும், பேச்சின் இயற்கையுமே** முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவை. இலக்கணப் பிழையின்றி திருத்தமாகப் பேசவேண்டுமென்பதை வற்புறுத்தக்கூடாது. கொச்சையாகப் பேசினாலும் குற்றமில்லை. ஆசிரியர் பிழைகண்டு திருத்த ஆரம்பித்துவிட்டால், மாணவர் பேசிக்கொள்ளவே முடியாது. இடையறாது திருத்த முற்பட்டால் மாணவர்பேசுவதையே நிறுத்திவிடுவார். திருத்தமாகப் பேசுவதற்கு ஆசிரியர் தன் மாதிரியையே கருவியாக நம்பியிருக்க வேண்டும், ஆசிரியர் எப்பொழுதும் திருத்தமாகவே பேசவேண்டும். இடையிடையே முக்கிய பிழைகளை கவனித்து, **மொத்தமாக மாணவரைக்** கூட்டிச்சுட்டிக்காட்டி, அப்பிழைகளை நீக்குமுறைகளையும்போதித்துப் பின் அப்படிப் பயிற்சி செய்யும்படி சொல்லவேண்டும். பலர் முன்னிலையில் தனித்தொருமாணவனைத் திருத்தும்போது அவன் அதுதனக்கோர் அவமானமெனக்கருதி வாய்திறந்து பேச வெட்கப்படுவான். அதனால் அவன் பயிற்சியின் நன்மையை இழந்துவிடுவான். திருமதி உவெல்லாக் அம்மையார், "தற்காலப் பாலர் பள்ளி" என்ற நூலில் 'செய்தி கூறல்' என்பதற்கு ஒரு நேரம் பிரத்தியேகப்படுத்தி

மாணவர் தங்கள் வீட்டிலோ வெளியிலோ நடந்த சம்பவங்களைப் பற்றியும் தங்களுக்கு விருப்பத்தை உண்டாக்கும் விடயங்களைப் பற்றியும் சாதாரணமாகப் பேசவிடவேண்டும்". என்கிறர். தாங்கள் விரும்பும் விடயத்தைப்பற்றிப் பேச அனுமதிப்பதே இதன் நோக்கம். சிறுவர் விரும்பிப் பேச முற்படும் காரியங்களாவன :— தாங்கள் தின்னும் பண்டங்கள், தங்களிடமுள்ள விளையாட்டு சாமான்கள், தாங்கள் செய்த மாதிரிப் பொருள்கள், தங்கள் வீட்டிலுள்ள விசேஷித்த பொருள்கள் - தாய் தந்தையர், சகோதர சகோதரிகள், மற்றும் இனத்தார்கள் — நண்பர்கள் — கலியாணம் விருந்து முதலிய விசேஷ சம்பவங்கள் — தாங்கள் ஆசரித்து ஆநந்தித்த திருவிழாக்கள் — முதலியன. ஆதலின் I, II வகுப்புகளில் இவ் விஷயங்களைப்பற்றிச் சாதாரணமாகச் சிறுவர் பேச, உற்சாக மூட்டிவிடவேண்டும். உணர்ச்சியுடன் தெளிவுபடப் பேசுவதே முக்கியம். இலக்கணப் பிழையின்றிப் பேசப் பழக்குவிக்க வேண்டும் என்று ஆசிரியர் ஆத்திரப்பட வேண்டாம்.

மூன்றும் வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் அவ்வக் காலத்தில் நடைபெறும் விசேட சம்பவங்களைப் பற்றித் திருத்தமாகப் பேச வழிநடத்தவேண்டும். மேல் வகுப்பு மாணவர் மனதைக் கவரும் சம்பவங்களாவன:- உள்ளூரில் நடைபெறும் விசேஷத் திருவிழாக்கள், கலாசாலை ஆண்டு விழாக் கொண்டாட்டம் — உதைபந்து முதலிய விளையாட்டுப் போட்டிகள் (தங்கள் பள்ளிக்கூடம் பங்கெடுத்தது) பெரியார் ஒருவர் தம் பள்ளிக்குச் செய்த விஜயம்.

உரையாட்டுக்கு உகந்த பொருள்களை, ஆரம்பப்பாடசாலைப் பாடத்திட்டம் கூறுமாறு காண்க :—

**தாய் மொழி - முதல் வகுப்பு - வயது 5½ முதல் 6½ வரை.** ஆண்டின் முதல் ஒன்றிரண்டு மாதங்களில் ஆசிரியர் தம்மிடம் புதிதாக வந்துள்ள குழந்தைகளுடன் அளவளாவி, அவர்களோடு உணர்வொற்றுமை ஏற்படுத்திக் கொள்வதிலும், அவர்களுடன் உரையாடிக் கதை சொல்லி அவர்கள் கூச்சத்தைத் தெளிவிப்பதிலும் தம் கருத்தைப் பதிக்க வேண்டும். அவ் வாண்டின் எஞ்சிய

மாதங்களில் உரையாடலுக்கும், கதை சொல்லலுக்கும், ஒதுக்கப் பட்ட வேளைகளில் தெளிவாகவும், திருத்தமாகவும், இயற்கை யாகவும் பேசப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்தல் ஆசிரியரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாயிருக்க வேண்டும். பிள்ளைகள் பேசும் சொற்றொகையைப் பெருக்குங் கருத்தோடு சிற்சில வாக்கியங்களில் அவர்களைப் பேசப் பழக்குதல் இதற்குச் சாதன மாகும்.

கொச்சை மொழிகளையும், சிற்சிலவிடங்களில் மட்டும் வழங்கும் சொற்களையும் ஆளுதல், சொல்லின் ஈற்றொலியை இசையாது விடுதல், தெளிவின்றி யிசைத்தல், முதலிய உச்ச ரிப்புக் குறைபாடுகளுடன் பேசுதலுமாகிய பெரு வழக்கினை மாற்றுதல் மற்றொரு முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும்.

**உரையாடலுக்கும் வாய்ப் பேச்சுக்கும் உகந்த சில பொருள்கள்** வகுப்பில் சொல்லப்பட்ட கதைகள், அல்லது வகுப்பிலுள்ள ஏதாவதொரு குழந்தைக்கு முன்னமேயே தெரிந்துள்ள கதை கள், தாலாட்டுப் பாட்டுகளும், அபிநயப் பாட்டுகளும்.

**வீடு.** குடும்பம், வீட்டு வேலைகளும், விளையாட்டுக்களும்.

**பாடசாலை.** ஆசிரியர், உடன் மாணவர், படங்கள், விடய அட்டைகள் முதலியன.

**பழக்கங்கள்.** பாடசாலையிலும், தெருவிலும், வீட்டிலும், நடந்துகொள்ள வேண்டிய மரியாதை முறை, **சாதாரண மிருகங் களும் பறவைகளும்.**

**விடுமுறை நாட்கள்.** பண்டிகைகள், உற்சவாதிகள், தொழில்கள். **சுகாதார முறைகளும் உடற்பாதுகாப்புப் பயிற்சியும்.**

## கதைகள்

சிறுவர்க்குக் கதை கேட்பதும், சொல்வதும் மிக விருப்பம் அடிக்கடி ஆசிரியரைக் கதை சொல்லுமாறு மாணவர் விரும்பிக் கேட்பர். சிறிது பேசக் கற்றவுடனேயே கதை சொல்லு முயல்வதையுங் கண்டிருக்கிறோம். ஆரம்பத்தில் இரண் டொருவாக்கியங்கள் மட்டுமே சொல்லக்கூடும். நான்கு வயதுக் குழந்தை தன் கதை சொல்லும் ஆத்திரத்தைத்

தீர்த்துக் கொள்ளும்படியாகச் சொல்லிய கதை :— "ஒரு நரி அப்பமைப் போச்சாம். குழியைக் குழியைத் தோண்டிச்சாம்; குட்டியைக் குட்டியைப் போட்டுச்சாம்; பிறகு ஓடிப்போயிட்டுதாம்" இதைப்போன்றதோ வேறுபட்டதோ, அப்பிள்ளை கேட்டகதை? அறியோம். ஆயினும் அக்கதையில் ஒரு தொடக்கம், முடிவு, ஒரு சுருக்க வரலாறு அமைந்து கிடக்கின்றன. குழந்தை சொல்லும்போது, உணர்ச்சியுடனும், மகிழ்ச்சியுடனும், அபிநயத்துடனும் சொல்லி இன்பமடைகின்றது. இக் குழந்தையைத் தட்டிக் கொடுத்துக் கெட்டிக்காரன் என்று சொல்லி ஊக்கமுண்டாக்க வேண்டியதே ஆசிரியர் கடமை. குழந்தை சொல்லிப் பழகப் பழக விருத்தியைக் காணலாம். கேட்ட கதையைச் சொல்லும் போது ஒரு பகுதி மறந்துவிட்டால், சொந்தக் கதை கட்டிவிடுகின்றார்கள். இது அவர்களுடைய கற்பனைத் திறனையும் அதனைப் பிரயோகிக்கும் ஆவலையும் காட்டுகிறது. இவ்வாசைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் கதை கூறுதலைக் கருவியாகக் கொண்டு, வாய் மொழிப் பயிற்சியளிக்கலாம்.

**மாணவர் கதை கேட்பதால் உண்டாகும் நற்பயன்கள்.** 1. ஆசிரியரிடம் கூச்சம், அச்சம் முதலியனவின்றி **நெருங்கிப் பழகுகின்றனர்.** ஆசிரியரை நண்பர்களாகவே கருதும் மனப்பான்மையுண்டாக்குகின்றது. (2) கதை கேட்கும்போது மெய் மறந்து **இன்பத்தில் இருபடுகின்றனர்.** (3) **மனதை யடக்கி** ஆசிரியர் மாட்டுச் செலுத்தி அறுவலவும் விடாது பொருளைத் தொடர்ச்சியாகக் கொள்கின்றனர் (4) பள்ளிக்கு வருவதை விரும்புகின்றனர். (5) கதைப் புத்தகங்களை வாசிக்க ஆவல்உண்டாகும். (6) கேள்வி ஞானம் பெறுகின்றனர். "கற்றலிற் **கேட்டலே** நன்று" கேள்வித் திறமை கற்றார்க்கும் கல்லார்க்கும், எக்காலத்தும் வேண்டப்படுவதொன்றாகும். "**கற்றிலனாயினும் கேட்க;** அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை" என்பது தமிழ் மறை. (7) புத்துணர்ச்சியும் அடைவர். நீதிக் கதைகள் நிறைபயன் தருவன.

### மாணவர் கதை சொல்வதனால் அடையும் நிறைகள்

1. கேட்ட வரலாற்று நுட்பங்களையும், குறிப்புகளையும், மனதிற் கொண்டு, ஞாபகத்தில் வைக்கின்றனர். இதனால் நிலையான ஞாபக சக்தி (Retentive memory) விருத்தியடைகின்றது.

2. நிகழ்ச்சிகளை முறை பிறழாது கோவைப்படுத்திக் (Logical Sequence) தொடர்ச்சியாகக் கூறும் திறமை கிடைக்கின்றது.

3. கற்பனா சக்தி விருத்தியடைகின்றது.

4. பயன்படுத்தும் சொற்றொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வரும்.

5. தாய் மொழியில், முழு வாக்கியமாக, உணர்ச்சி ததும்பும் நடையில் திருத்தமாகப் பேசும் திறமை யுண்டாகும்.

6. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பேசுந் திறமையுண்டாகும். குரலும், செயலும், சொல்லு முறையும் நவரசங்களுக்கு ஏற்றவாறு வேறுபடுத்தப் பட்டாலன்றி கதை சுவையுடைத்தாகாது. அம் முறையில் மாணவர்க்குச் சிறந்ததோர் வாய் மொழிப் பயிற்சியாகும்.

**கதைகளைத் தெரிந்தெடுத்தல்.** மாணவர்களுக்குக் கூறும் கதைகளை ஆசிரியர் முன்னரே நன்கு யோசித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். கதைகள், கேட்கும் மாணவரது வயது, மனநிலை, வகுப்பு, அறிவு, அனுபவம், விருப்பம் முதலியவற்றிற்குப் பொருந்தியதாயிருத்தல் வேண்டும். பொருத்தமற்ற கதைகள் இன்பம் பயவா.

இளஞ்சிறார் தங்களைப் பற்றியும் தங்களைப்போன்ற வயதுடைய குழந்தைகளைப்பற்றியும் கேட்க ஆசைப்படுவார்கள். ஏனென்றால் உலகத்தில் பிரதானமான பொருள் தாங்களே என்பது அவர்கள் கருத்து. பிற பொருள்களைப் பற்றிய கவலையே அவர்களுக்குக் கிடையாது. குழந்தையின் கண்ணும் கருத்தும், தன்னிலும், தனது வாழ்க்கையிலும், தனது வாழ்க்கையோடு தொடர்புடைய பிற சுற்றுப்புறப் பொருள்களிலுமே. ஆதலின் முதலாம், இரண்டாம் வகுப்புகளில், குழந்தைகளைப் பற்றியும், குழந்தையின் வாழ்க்கையுடன் தொடர்புடைய நாய், பூனை, எலி, அணில், முயல், ஆடு, மாடு முதலிய விலங்குகளைப்பற்றியும் கிளி, கோழி, புறா, காக்கை முதலிய பறவைகளைப்பற்றியும், கதை சொல்லவேண்டும். தமிழ் நாட்டுச் சிறுவர், பிற நாட்டுச் சிறுவர் வாழ்க்கை வரலாறுகளைக் கதையாகக் கூறலாம். ஈசாபின் கதைகள், பஞ்சதந்திரக்

கதைகள் முதலியன மிகப் பொருத்தமானவை. மூன்றும் வகுப்பில் சிறுவர் பேராச்சரிய முண்டாக்குர் கதைகளைக் கேட்க விரும்புவர், அச்சமுண்டாக்கு மியல்புடைய கதைகளைத் தவிர்த்துக் கதை சொல்லல் நலம்.

**சிறுவர்க்குச் சொல்லப்படும் கதையில்,** அமைந்திருக்க வேண்டிய தன்மைகள் :—

1. சிறிய, எளிய, தெளிவான கதைகளாயிருத்தல் வேண்டும்.

2. சிறுவர் அநுபவத்திற்குட்பட்டதும், வாழ்க்கையோடு தொடர்புடையதுமாயிருத்தல் வேண்டும்.

3. நிறைந்த செயல்களும், நேரடியாக உள்ளத்திற் செல்லத்தக்க நிகழ்ச்சிகளுமுடையதாயிருத்தல் வேண்டும்.

4. உரையாடல் நிறைந்திருக்க வேண்டும். மிருகங்கள், பறவைகளாயினும் கதையில் உரையாடலாம்.

5. சொற்களும் சொற்றொடர்களும் மீண்டும் மீண்டும் பலகாற் பயின்று வரவேண்டும். பெயர்மறந்த ஈயின் கதை இத் தன்மையைச் சிறப்பாகக் கொண்டது. இத்தகைய கதைகளைச் சிறுவர் கேட்கவும். மீண்டும் மீண்டும் சொல்லவும் விரும்புவர்.

6. மனதிற்கு மகிழ்ச்சி உண்டாக்கும் கதையாயிருத்தல் வேண்டும். மெல்லிய பூ விதழையொத்த குழந்தையின் உள்ளத்தைச் சோகக் கதைப்பகுதிகள் புண்படுத்தும்; பயங்கரக் காட்சிகள் சிதைத்துவிடும்; பேய்க் கதைகள் என்றும் எடுபடாப் பயத்தை உள்ளத்தில்நாட்டிவிடும். இத்தகையகெடுதியொன்றும் நேரிடாவண்ணம் ஆசிரியர் பாதுகாக்கவேண்டும்.

**கதை சொல்லும் ஆசிரியர்.** 1. ஆசிரியர் கதையை மாணவர்க்கு வாய்மொழியாகச் சொல்லுதலே சாலச் சிறந்த முறையாகும். வேறு என்ன செய்வது? இது ஒரு பெருந் தத்துவமா? என்ற ஐயம் எழலாம். சிலர் சொற்பொழிவை எழுதி வாசித்து விடுகின்றனரே, அவ்வாறு கதையையும் எழுதி வாசித்து விட்டால், என்ன என்று நினைப்பவரும் உளர் அல்லது நெட்டுருப் பண்ணி மனப்பாடமாகச் சொல்லி விடலாமல்லவா? என்று கருதலாம். இவையெல்லாம் கதைசொல்ல இயலாதவர் கேள்வி.

கள். சிறுவர் இன்பமடையும்படி, அவர்கள் மனத்தைக் கவரத்தக்கவண்ணம் கதை சொல்லக்கூடியவரே சிறந்த ஆசிரியர். அத்திறமையில்லாதார் அதனையடையப் பெரிதும் வருந்தி, முயலவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். வருந்தினால் வாராத தொன்றில்லை. எழுதிப்படித்தல், நெட்டுருப் பண்ணல் தனிமையாக ஓரிடத்திற்சென்று, வகுப்பில் சொல்வதுபோல் பாவித்துக்கொண்டு, பன்முறை சொல்லிப் பழகுதல், முதலியவற்றைச் சாதகச் செயல்களாகக் கையாடிமுயல்க.

2. வகுப்புக்கு வருமுன் ஆசிரியர் கதையை மிக நுட்பமாய் உள்ளத்தில் அமைத்து வரவேண்டும். கதையின் பல்வேறு காட்சிகளைப் படமாக மனதில் அமைத்துக் கொள்ளவேண்டும். ஆயத்தமின்றி வந்து திண்டாடக் கூடாது.

3. கதைச் சம்பாஷணையில் திரும்பத் திரும்ப வரும் வாக்கியங்களை, மாற்றாமல் ஒன்றுபோலவே சொல்லவேண்டும். அத்தகைய வாக்கியங்களையும் சொற்றொடர்களையும் நெட்டுருப் பண்ணியே வருதல் நலம்.

4. தான் சொல்லும் கதையைத் தானே வியந்துச் சொல்லவேண்டும். தனக்கே சுவை தோன்றவில்லையாயின், அதனைச் சுவைபடச் சிறுவர்க்கு எடுத்தியம்பமுடியாது.

5. சொல்லும் கதையின் சுவையில் மன மொழிகளை யீடுபடுத்தி, கதை சொல்லும்போது தன்னையும் தன்முன்னிலையிலுள்ள சிறுவரையும்தவிர புறவுலகத்தை முழுவதும் மறந்துவிடவேண்டும்.

6. கதா நாயகனைப்பற்றியும் கதையின் சுற்றுப்புற அணியமைப்புகள் பற்றியும், தெளிந்த அறிவுடையவராயிருத்தல் வேண்டும். கதா நாயகனது குணவிசேடம், நாட்டின் நிலை, பழக்க வழக்கங்கள், சூழ் நிலை, இவற்றைப்பற்றிய அறிவு, கதையை நன்கு அறிய உதவியாகும்.

7. கதை சொல்வதை ஓர் பெருஞ்செயலாகக் கருதவேண்டும். கதை தானே, என்று இழிவாகக் கருதினால், அதனைச் சிறப்பாகச் சொல்ல வேண்டுமே என்ற ஆத்திரமும், அதற்கு வேண்டிய முயற்சியும் தோன்றாது.

8. கதாபாத்திரங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணரும் உணர்ச்சியைத் தான் உணரவேண்டும். அப்படியானால் தான் கதைகூறும்போது சொற்கள் உணர்ச்சியுடன் வெளிவரும்.

**கதை சொல்லும் விதம்.** சிறுவரோடு சமநிலையில் உட்கார்ந்து கதை சொல்லவேண்டும். வகுப்பு முழுவதும் தன் கண்பார்வைக்குள் அடங்கியிருக்கவேண்டும். இன்பமாக மாணவர்க்கு விளங்கத்தக்க எளிய, இனிய நடையில், இயற்கையாகச் சொல்லவேண்டும். உணர்ச்சிகள் உள்ளத்திற் சொல்லுமாறு, குரலைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வேறுபடுத்தி, விரையாது, வேண்டுமளவு நிறுத்திச் சொல்லவேண்டும். உற்சாகத்துடனும் கதைகூறல் மூலமாக மாணவர் உள்ளத்தில் பெருமாறுதல்களையுண்டாக்கிவிடலாம் என்ற உறுதியுடனும் கதை சொல்ல வேண்டும். சினிமாப் படம்போல் காட்சிகளைக் கோவைப் படுத்திக் காட்டவேண்டும். தக்கவாறு அபிநயத்தோடுகூறி உணர்ச்சியெழுப்பவேண்டும். நகைச்சுவை ததும்பும் பகுதிகளைச் சொல்லி, நன்கு சிரிக்க வைக்கவேண்டும். கதைகளைப் பல காட்சிகளாகப் படத்தில் காட்டிக் கதைசொல்வது சிறுவர் மனதிற் கதை பதிவதற்கு ஏதுவாகும்.

**கதை சொல்லுமிடத்து ஆசிரியர்** கொள்ளவேண்டிய நோக்கங்களாவன :— சிறுவர்க்கு இன்பப் பொழுதுபோக்களித்தல், முறைபிறழாது நிகழ்ச்சிகளைக் கூர்ந்துகேட்டு அவற்றைக் கோவைப் படுத்தி வெளியிடுதலில் பயிற்சியளித்தல், கற்பனைத்திறனை விருத்திசெய்தல், நல்லொழுக்க உணர்ச்சிகளைத் தூண்டுதல், உண்மையழகையும், உயரிய கருத்துக்களையும் கண்டுபாராட்டச் செய்தல், இலக்கியச் சுவையில் ஈடுபடுத்தல், முதலிய பல்வேறு நோக்கங்களை மனதிற்கொண்டு, கொண்ட நோக்கத்தை முன் வைத்துக் கதை சொல்லவேண்டும். அப்போது நோக்கம் நிறைவேறும்.

**மாணவர் கதை சொல்லுதல்.** ஆசிரியர் கதையைச் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்லியிருந்தால், மாணவர் நன்கு ரசித்துக் கொள்வர். கதைசொல்லவும் ஆத்திரப்படுவார்கள். அவர்களைக் கதைசொல்லப் பழக்கவேண்டும். இது சிறந்த வாய்மொழிப்பயிற்சி. ஆசிரியர் சொன்னதைத் தனக்கு முன்

மாதிரியாக வைத்து அதைப்போலவே மாணவர் சொல்ல முயல வேண்டும். ஆரம்பத்தில் கதைத் தொடர்ச்சியை ஞாபகமூட்டுங் கருவியாகக் கதைப்படங்களை உபயோகிக்கலாம். பின்படங்கள் இன்றியே சொல்லலாம். ஒவ்வொரு மாணவனுமே அதே கதையைச் சொல்லலாம். சிறிது சிறிதாகப் பல மாணவர் தொடர்ந்தும் சொல்லலாம்.

**கதை நடித்தல்.** நடிக்க வேண்டுமென்ற விருப்பம் நல்ல கதைகளைக் கேட்டவுடன் சிறுவர்க்கு உண்டாகும். அதனை உற்சாகப் படுத்திவிட வேண்டும். கதை நடிப்பின் பயன்களை முன்னமே கூறியுள்ளோம்.

**உள்ள உணர்ச்சியின் வெளிப்பாட்டுச் செயல்கள்.** கேட்ட கதைகளை நடிக்கவும், புதுக் கதைகளைப் படிக்கவும், கதையில் வந்த சுவையான சொற்றொடர்களைப் பலகாற் சொல்லவும், தாங்களே கதைகளைச் சொல்லவும், கதைகளை எழுதவும், நாடக முறையில் அமைத்து எழுதவும், கதையில் வரும் பொருள்களைப் போற் களிமண் முதலியவற்றால் செய்யவும், சிறுவர் ஆத்திரங்கொள்வர்; அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துக.

### மாணவரைக் கதை சொல்லப் பழக்கும் விதம்

1. ஆசிரியர் கதை சொல்லிப் பின் சொல்லச் செய்தல்.

2. படங்கள் காட்டிப் படமூலமாகக் கதை முழுவதையும் சொல்லிப் பின் சொல்லச் செய்தல்.

3. படத்தைப்பார்த்து தாங்களே கதை சொல்லல்.

4. ஒரு கதையைச் சிறிது நேரம் சொல்லிக் கொண்டே சென்று, பின் மாணவரைத் தத்தம் இஷ்டம்போல் கதையை முடிக்கச்செய்தல்.

5. ஆசிரியர் ஒரு வாக்கியம் சொல்லிக்கதையைத் தொடங்கி விட்டு, ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வாக்கியமாகக் கதையைத் தொடர்ந்து சொல்லச் செய்தல்.

6. முக்கிய சொற்களையும் சொற்றொடர்களையும் கொடுத்து இடையே கோடிட்டுக் கதையை நிரப்பிபூண்டாக்கச் செய்தல் — பயிலப் பயிலச் சொற்களைக் குறைத்துக் கொடுக்கலாம்; தொடர்ச்சியும் இடைக்கோடுமின்றிச் சொற்றொகுதிகளையும் கொடுக்கலாம்.

**அசைப் பாட்டுகள்.** குழந்தைகளுக்கு மனச் சந்தோஷத்தை உண்டாக்கக்கூடிய, தங்கள் அனுபவத்திற்குட்பட்ட, சாதாரணப் பொருட்களைப் பற்றியதும் சம்பவங்களைப் பற்றியதுமான அசைப்பாட்டுகளைச் சேகரித்து அவற்றைக் கற்றுக்கொடுத்து, மீண்டும் மீண்டும் அவற்றைச் சொல்லச் செய்தால், சொல்வதைத் திருத்தமாகவும், தெளிவாகவும் சப்தமாகவும் கூச்சமின்றித் திடமாகவும் சொல்லும் திறமையை மாணவர் பெறுவர்.

**இசைப் பாட்டு.** தோத்திரப் பாடல், கதை, அபிநயப் பாடல்கள் முதலியன. பாட்டுப் பாடுவதில் சிறுவர்கள் விருப்பமுடையவர்கள். பாட்டுப் பாடுவதும் மொழிப் பயிற்சியில் ஒரு முக்கிய கருவியாகும். **அபிநயப் பாட்டுகளையும்,** கதைப் பாட்டுகளையும் அபிநயங்களுடன் பாட வேண்டும். பாட்டுகள் எளிய ராகத்திலும், பொருள் விளங்கத்தக்க எளிய நடையிலும் அமைந்து இருத்தல் வேண்டும். மோனை, எதுகை முதலிய சொல்லழகு வாய்ந்திருத்தல் வேண்டும். மாணவர் பொருளை உணர்ந்து பாடவேண்டும்; அவசியமானவிடங்களில் அபிநயிக்கவேண்டும். அபிநயம் பொருளை வெளிப்படுத்தும் செய்கையாகும். செய்யுட்களையும் சுலபமான இராகத்திற் பாடக்கற்பிக்க வேண்டும்.

**படம்.** காட்சிப் படங்களையும், கதைப் படங்களையும் கருவியாகக் கொண்டு மொழிப் பயிற்சிகொடுக்கலாம். முதலில் கேள்வி கேட்டு உத்தரவு வருவிக்கலாம். பிறகு வர வர மாணவரே அப் படத்திலிருந்து தாங்கள் அறிந்து கொள்ளக்கூடிய காரியங்கள் எல்லாவற்றையும் சொல்லவேண்டும். மேல்வகுப்புகளில், 5க்குமேல் இது சுலபமாகும். கதைப் படமாயிருக்குமானால் வினாக்களின் மூலமாக முதலாவது கதையை உண்டாக்கச் செய்க. பின்னர் படத்தைப் பார்த்துத் தாங்களே கதையைச் சொல்லப் பயிற்றுக. பின் புதுப் படங்களைக் கொடுத்து கதை சொல்லப் பயிற்றுக.

**கீழ் வகுப்புகளில் சிறுவர்க்குக் காட்டப்படும் படம்,** தெளிவுள்ளதாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். பார்த்தவுடனே அப் பொருள் என்ன, என்ன செய்கிறது, என்று கண்டுபிடிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். 4ஆம் 5ஆம் வகுப்புகளில் பலபொருள்களும் பலவிதச் செய்கைகளும் அடங்கியதாயிருக்கலாம். அவர்களுக்கு

உற்சாகமூட்டக்கூடியதுமாகப் படமிருக்கவேண்டும். 5ஆம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள், தங்கள் அன்றாடக வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட படங்களையும் பார்க்க ஆசைப்படுவர். உதா. அந்நிய நாட்டார் பழக்கவழக்கங்கள் இயற்கைக்காட்சிகள், விலங்கு பறவை முதலியன. மேலும் கதை சம்பந்தமான படங்கள் அவர்களுடைய மனதைக் கவரும்.

**முன் ஆயத்தமின்றிக் கதை நடித்தல் (Improvization)** வாய்மொழி விருத்திக்கு இது ஒரு தகுந்த பயிற்சியாகும். ஆசிரியர் ஒரு கதையைச் சொல்லவோ, அதை வாசிக்கவோ வேண்டும். அதை மாணவர் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு உடனே வேறு ஆயத்தமின்றி நடிக்க ஆரம்பிக்க வேண்டும். கதை நடிப்புக்கு வேண்டிய ஒழுங்குகளை- அதாவது நடிகர்களை மாணவரே திட்டம்செய்து கொள்ள வேண்டும். முதலில் இது கஷ்டமாக மாணவர் உணர்வர். 4ம் 5ம் வகுப்பிலுங்கூட, தட்டுப்பாடில்லாத ஒரு நடிப்பை எதிர்பார்க்கமுடியாது. ஆசிரியர் அதிருப்திகொள்ளக் கூடாது. பழகப் பழக மிக நன்றாகச் செய்யக்கூடும். இடத்திற்குப்பொருத்தமாக நடிக்கவும், பேசவும், தக்க திறமையை மாணவர் நாளடைவிற் பெறுவர்.

இந் நடிப்புப் பயிற்சி முதலாம் வகுப்பிலிருந்தே கொடுக்கலாம். அவரவர் தகுதிக்கேற்றவாறு சிறு கதைகளைக் கொடுக்க வேண்டும். முறைப்படி இப் பயிற்சி கொடுத்துக்கொண்டேயிருந்தால் ஐந்தாம் வகுப்புக்கு வருமுன்னே, ஆயத்தமின்றி மிகத் திறமையுடன் நடிக்கக்கூடியவர்களும் சிறு நாடகங்கள் தயார் செய்யக்கூடியவர்களும் ஆகக்கூடும்.

ஒரு கூட்டத்தார் இவ்வாறு நடித்தபின், வேறொரு கூட்டத்தார், சிறிது விருத்தியுடன் அதனையே நடிக்க முன் வரலாம். கடைசியாக மிக நேர்த்தியாக நடித்த பிறகு, அக் கதையை நாடக ரூபமாக மாணவரை எழுதச் சொல்லலாம்.

இந் நடிப்பின் இடையே தட்டுப்பாடு ஏற்படலாம். பேசும் போதே நின்றுவிடலாம். திருத்திக்கொள்ளலாம் அதற்காக வருத்தப்படக்கூடாது. இடம் பொருள் அறிந்து பேசி, நடிக்கும் திறமையை மாணவர் அடைகிறதே முக்கியம். இப் பயிற்சியினால்

நடிப்பும் பேச்சும் இயற்கையாகவே நிகழ்கின்றது. செயற்கையன்று. தங்களுடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிடுகின்றனர். ஆசிரியருடைய எண்ணங்களை அல்ல, ஆசிரியர் விரும்புவதை அல்ல. அவ்வச் சந்தர்ப்பங்களில் பேசத் தக்கது யாதென்று பிள்ளை உணருகிறதோ அதையே பேசுகின்றது. இதனால் தற்சார்பும் தன் முயற்சியும் வளர்கின்றன.

**சொற் பொழிவு.** ஆற்றுதல் கீழ் வகுப்புகளில் கொடுக்கப்படும் சம்பாஷணைப் பழக்கம் முறைப்படி விருத்தியடைந்தால் 5ஆம் வகுப்புக்கு வருமுன்னர் மாணவர் தாங்கள்விரும்பும் பொருள்களைப்பற்றிச், சிற்றுரை நிகழ்த்தும் தகுதியைப்பெறுவர். அப்போது 5ம் வகுப்பிலிருந்து, சிறுவர் சொற் பொழிவுக் கழகம் அமைத்து, பலர் முன்னிலையில் பேசுப் பழக்கத்தை உண்டாக்கலாம். இம் முறை மிக்க பயனுடைத்து.

இது ஒரு சிறந்த விளையாட்டு முறை. இதை விளையாட்டுப் போக்கிலேயே நடத்த வேண்டும். ஆசிரியர் அனாவசியமாக அதிகாரம் வகிக்கக்கூடாது. கூட்டத்தை ஒழுங்குபடுத்தலும் நடத்தலும் ஆகிய சகல பொறுப்புகளையும் மாணவரே மேற்கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர் கேட்போருள் ஒருவராக அமர்ந்திருந்து, நடைமுறையை நன்கு கவனித்துத் திருத்தற்குரிய விடயங்களைக்குறித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். கூட்டத்தின் பின்னர் தான் கண்ட சொற் பிழை, பொருட் பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்த வேண்டும். அவ்வாறு செய்யுங்கால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவினைச் சுட்டிக் குறைகூறுது பொதுவாகச் சொல்லல்வேண்டும். சொற்பொழிவாற்றும் சிறுவர் தாங்கள் நியாயாசனத்தின் முன் நிற்பதுபோன்ற உணர்ச்சியை அடையும்படி செய்யக்கூடாது.

மாணவர்கள் பொதுவாக தாங்கள் விரும்பும் எவ்விடயத்தைப்பற்றியும் சிறிது நேரம் பேச ஆயத்தப் படுத்திக் கொண்டு வரும்படியாக முன்னரே அறிவித்து விடவேண்டும். பொருளைப்பற்றிக் கட்டுப்பாடு ஏற்படுத்தக்கூடாது. இத்தகைய

பொருளைப்பற்றிப் பேசவேண்டும் என்று கூறக்கூடாது. கூட்டத்திற்கு ஒரு மாணவனையே அக்கிராசனம் வகிக்கச்செய்ய வேண்டும். சொற்பொழிவின் பின்னர் மற்ற மாணவர் அப் பொருளைப்பற்றித் தங்களுக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தெளிவு படுத்துமுறையில் கேள்வி கேட்க, அனுமதிக்கவேண்டும். சொற்பொழிவைக் குறைகூறும் மனப்பான்மையின்றி, அதனைச் சிறப்பிக்கு முறையில் சொல்லத்தக்க குறிப்புகள் எவையாயினும் இருப்பின் அவற்றைச் சொல்லவிடவேண்டும். தர்க்கரீதியான பொருளாயிருக்குமானால் சிறிது தர்க்கம் புரியவும், மாணவரை அனுமதிக்கலாம். இத் தர்க்க நேரத்தில் பேசுவோர், மேடைக்கு வரவேண்டுமென்ற கட்டுப்பாடு இருத்தல்கூடாது. அவர்கள் இருக்குமிடத்தில் நின்று பேசலாம்.

சொற்பொழிவாற்றுவோர் தான் கருதும் பொருளை நன்கு விளக்குதற்பொருட்டு அவசியமான படங்களையோ தேசப்படங்களையோ, மாதிரிப் பொருள்களையோ காட்டிப் பேசுவதற்கு அவர்களை ஊக்க மூட்டிவிடவேண்டும். இடையே அவசியமானால் ஒரு புத்தகத்திலிருந்து சிறிது பாகத்தைத் தானாகவோ, பிற மாணவரைக் கொண்டோ வாசித்துக்காட்டலாம். தொடக்கத்தில் சிறுவர் சொற்பொழிவு மிகச் சுருங்கியதாகவே இருக்கும். ஆனால் வர வர அவரவர் தகுதிக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்பக் கூடியநேரம் பேசமுற்படுவர். ஆதலின் நேரக்கட்டுப்பாடு அமைத்தல்கூடாது. சொல் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது சிறுவர் சிரித்துப் பேசுவோனை சோர்வடையப்பண்ணாமல், இரக்கமும், பொறுமையுங்கூடிய மனப்பான்மையை உண்டாக்க முயலவேண்டும். ஆரம்பத்தில் இரண்டு மூன்று சொற்பொழிவுகள்கூட நடைபெற நேரமிருக்கும். நாட் செல்லச் செல்ல மாணவர் தர்க்கித்துப் பழகின பிறகு, ஒரு சொற்பொழிவுக்கும் நேரமிருக்காது. நேரம் செல்லுமானாலும், நிறுத்திவிடாமல் முடியும் வரைக்கும் விடவேண்டும்.

அதே முறையில், **புத்தக விமரிசனங்களும்**, நடைபெறச் செய்யலாம். ஒரு மாணவன் தான் விரும்பி வாசித்த ஒரு புத்தகத்தைப்பற்றிப் பிற மாணவர்முன் தான் அறிந்தவற்றையும் தன் அபிப்பிராயத்தையும் வெளியிடு முறையில் நிகழ்த்தும் சொற்

பொழிவே புத்தகவிமரிசனமாகும். ஒரு புத்தகத்தை மாணவர் எல்லாரும் வாசித்து அதைப்பற்றிக்கூற ஆயத்தத்துடன் வரும்படிகூறி இரண்டொருவரை விமரிசனம் செய்யச் சொல்லலாம்.

விமரிசனம் செய்வோன் தான் அந்தப் புத்தகத்தை விரும்புகிறதற்கோ அன்றி வெறுப்பதற்கோ காரணத்தைத் தெரிவிக்கவும்; அதன் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டலாம் அதற்குச் சான்றாக அப்புத்தகத்தில் சில பகுதிகளை வாசித்துக் காட்டலாம். இத்தகைய வேலையை 4ஆம் வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்பிலும் திருப்திகரமாக எதிர்பார்க்கலாம் ஆனல் அதற்கு முன் கீழ் வகுப்புகளிலேயே சுலபமான முறையில் இம்முறைப் பயிற்சியை ஆரம்பிக்கலாம். சிறுவர் சிறு கதைப் புத்தகங்களை வாசித்து, அக் கதைகளை வகுப்பில் சொல்லச் செய்யலாம். இது ஆரம்பப் பயிற்சியாகும்.

## பஞ்சாயத் தர்க்கம்

மேல் வகுப்பு மாணவர்க்கு மிகுதியும் பயன்படத்தக்கதொரு வாய்மொழிப் பயிற்சி முறை. இது தர்க்கம் செய்வதற்கென்று ஒரு கூட்டத்தாரைத் தனிப்பட ஏற்படுத்தி அவர்களை வகுப்பு மாணவர் முன் தர்க்கம் செய்யச்செய்தல். இத் தர்க்கக் கழகத்தார் அரைவட்ட வடிவத்தில் வகுப்பு முன் உட்கார்ந்து முன்னரே குறிக்கப்பட்ட ஒரு பொருளைப்பற்றித் தர்க்கப்புரிய வேண்டும். அவருள் ஒருவர் கழகத்திற்குத் தலைமை வகிக்கலாம். கழகத்தார் தத்தம் இஷ்டப்போல் ஒவ்வொருவராகக் கேள்வி கேட்கவோ, விடை தரவோ, விளக்கமாகப் பேசவோ செய்யலாம். நீண்ட சொற் பொழிவு கிடையாது. பல்வேறு விஷயங்களைப்பற்றிய ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பஞ்சாயத்தார் தர்க்கம் புரிந்து முடிந்த பிறகு, சபை மாணவர் அதுபோலவே பேசலாம், கேள்விகேட்கலாம்.

இலக்கியத் தர்க்கச் சொற்பொழிவுக் கழகத்தைவிட, (L.D.S.) இது பலவகையிலும் மிகச் சிறந்தது. தர்க்கக் கழகத்தில் மாணவர், சபைமுன் நின்று சபைக்கஞ்சாது, ஒரு பொருளைப்பற்றி விரிவாகவும் நியாய தோரணை முறைப்படியும், தெளிவாகவும், நன்கு யோசித்து, அதனை சபைக்கஞ்சாது எடுத்தியம்பி நீண்ட சொற்பொழிவாற்றுதற்குத் தக்க பயிற்சி பெறுகின்றனர்.

ஆனால் இம்முறையிற் சில குறைபாடுகள் உள. அவை:—

1. மாணவரிடையே மனம் வேறு சொல்வேறாகும் தன்மையை உருவாக்குகின்றது. ஒருவன், தான் பேசும்படி எடுத்துக் கொண்ட விடயத்தை நிலைநாட்டுதற்கு, தன் உள்ளக் கொள்கைக்கு மாறாகவும் பேச முற்படுவான்.

2. மறு பக்கத்தில் காணப்படும் குணங்களை அவன் பார்க்கமாட்டான். அதன் குற்றங்களே கண்ணுக்குப் புலப்படும்.

3. வாக்கு வன்மையே கருவியாகக் கொண்டு உண்மை நிலைமை யாராய்ச்சியின்றித் தான் நினைத்ததையே சாதிக்க முயல்வான். எக்கட்சியிலும் குணமும் குற்றமும் விரவியே யிருக்கும். குணம் நாடிக் குற்றமு நாடிக் கொள்ளாவிடில் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தலே" சாலச் சிறந்தது. உண்மையைக் கண்டறிதற்கு இஃது உதவியாகாதாகலின், தர்க்கச் சொற்பொழிவு, கல்வித் துறையில் கேடு பயப்பதே

ஆனால் கழகத் தர்க்க முறையிலோ தர்க்கச் சொற்பொழிவு முறையினால் பெறக்கூடிய நன்மைகள் யாவற்றையும் பெறுகிறோம். மாணவர் யாவரும் உண்மையைக் கண்டுகொள்ளும் ஒரே நோக்குடன் தத்தம் ஆராய்ச்சியினாலும் அனுபவத்தினாலும் ஏற்பட்ட அறிவை உபயோகிக்கின்றனர்.

## சிறுவர் பேச்சிற் காணப்படும் பிழைகள்

1. சொல் தெளிவுபடாமற் பேசுதல். மழலை போன்ற சொற்கள்.

2. உச்சரிப்புத் திருத்தமின்மை; ல,ள,ழ; ர,ற; ந,ன,ண; முதலிய எழுத்துக்களைச் சிலர் பிழையற உச்சரிக்கவே முடியாது. சிற்சில விடங்களில் உள்ளோர் அவற்றிற்கு ஒலி வேறுபாடு உண்டென்பதையே அறியார். அவர்கள் அதைப் பிழையெனக் கருதுவதுமில்லை. செந்தமிழ்த் தென்பாண்டி நாட்டில் இவ்விழுக்குக்களுள் ழகர மொழிந்த ஏனைய வெழுத்துக்களைப் பிழைபட ஒலிப்பார் மிகச்சிலர். தமிழன் தமிழுக்குச் சிறப்பெழுத்தாய ழகரத்தை அழகாக உச்சரிக்காவிடின், அவனுக்கு அதனினும் இழுக்கு வேறொன்றில்லை. ஆசிரியர் விடாப்பிடியாய் முயல்வார்களாக.

3. சொற்களைச் சிதைத்துப் பேசுதல்; இறுதியைவெட்டியும், இடை நிலைகளை விழுங்கியும், எழுத்துக்களைத் திரித்தும் கொச்சையாக்கிப் பேசுதல்.

4. படபடப்பாகவும் விரைவாகவும் பேசுதல்; சாவதானமாகப் பொருள் விளங்கச் சிலருக்குப் பேசமுடியாது. கொன்னல் முதலியன இதன்பாற் படும்.

5. அளவுக்குமிஞ்சி, மெதுவாகப் பேசுதல்; ஓரளவு பேச்சில் விரைவு வேண்டும்.

6. கூச்சம், அவையச்சம், மெய்ப்பிதிர்ப்பு முதலியன.

7. பொருள் தெளிவுபடாமற் பேசுதல், ஒரே குரலில், பேசுவதினாலும் நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தாமையாலும் பொருள் தெளிவு படாது

8. கொச்சைச் சொற்களும், இழிசனர் வழக்காயுள்ள கிராமியச் சொற்களும்.

9. சொற் பிழை வாக்கியப் பிழை முதலிய இலக்கணப் பிழைகள்.

10. **விகார ஒலிகள்.** மூக்கிக்கொண்டு பேசுதல், மூக்கினாற் பேசுதல், பெருங் குரலிலும், ஈன சுரத்திலும் பேசுதல்.

## பேச்சுப் பிழைகளைத் திருத்தும் முறை

குழந்தைகள் **கொச்சையாகப் பேசுவதற்குக் காரணம் அவர்களைச் சுற்றியுள்ளவர்களே.** வீட்டிலே தாய் தகப்பன்மாரும், நெருங்கிப் பழகும் பிறரும் பேசும் பேச்சைப் போலவே சிறுவர் பேசக்கூடும். அவர்களின் கொச்சை வழியில் செல்வதற்கு ஆசிரியரும் காரணராகக்கூடாது. பிள்ளைகளின் குணமும், நடையும், பேச்சும், சுற்றுப் புறத்திற்கேற்பத் தானாகவே மாறுதலடைகின்றன, என்னும் உண்மையை ஆசிரியர் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது. ஆதலின் ஆசிரியர் எப்போதும் திருத்தமாகவே பேசவேண்டும். இதையே மாதிரியாகக்கொண்டு மாணவர் தாமாகவே திருந்துவர்.

'தாயைப்போல் பிள்ளை' என்பது பேச்சிலும் உண்மையே. திருத்தமின்றித் திக்கிமுக்கிப் பேசும் பிள்ளைகள் தாயினிடத்திருந்தே இப் பழக்கத்தைப் பெறுகிறார்கள் என்று அமெரிக்க நாட்டு மொழி மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கேள்வி, பயிற்சிக் குறைவு பல பிழைகளுக்குக் காரணம். புத்திர பாக்கியப் பெருக்கம் இருக்கும் வீட்டில் உள்ள பிள்ளைகள் பிந்திப் பேசுகிறார்கள். திருத்தமாகப் பேசவும் இயலாதிருக்கிறார்கள். காரணம், பிள்ளை, தாயின் பேச்சை அடிக்கடி கேட்டுப் பின்பற்றவும், அடிக்கடி தான் பேசிப் பழகவும் வசதியின்மையே. கேள்வியும், பேச்சுப் பழக்கமுமே, பேச்சுத் திருந்த ஆதாரமாகும். ஆதலின் ஆசிரியர் நற்கேள்விக்கு, நன்றாய்ப் பேசவேண்டும். பயிற்சிக்கு மேற்காட்டிய முறைகளைக் கையாடிப் பேச வசதியளிக்க வேண்டும்.

தனித் தனி கவனம் செலுத்தித் திருத்தவேண்டும். திருத்துவது, ஏதோ பிரமாதமான குற்றத்தைக் கண்டுபிடித்துக் குற்றப் பத்திரிகை வாசிப்பதுபோல் இருக்கக்கூடாது. மாணவர் மனம் கன்றாதவாறு, அன்புடன் திருத்திக் கொடுக்கவேண்டும். கூச்சம் நிறைந்த பிள்ளைகளைத் திருத்த, எல்லாரையும் சேர்ந்து சொல்லச் செய்யவேண்டும்.

ஆசிரியர் ஆரம்பமுதலே கவனிக்காமல் விடுதல், ஒலிப் பிழைக்குக் காரணம் :— ல, ழ, ளகரங்களையும் றரகரங்களையும், ந, ன, ண, கரங்களையும், தெளிவாக உச்சரிக்கப் போதிய பயிற்சி தந்து ஆரம்பத்திலேயே திருத்தி விடவேண்டும். எழுத்துக்கள் பிறக்குமிடத்தைச் சுட்டிக்காட்டிப் படங்கள் மூலமாகவும் தன் வாய் நாக்கின் அமைப்பு மூலமாகவும், தானே நன்றாய் உச்சரித்துக் காட்டியும் திருத்த வேண்டும்

அதே எழுத்துக்கள் பலகால் வரும் வாக்கியங்களையும், அசைப் பாட்டுகளையும், திரும்பத் திரும்பச் சொல்லச்செய்க.

உதா. 1. வாழைப் பழம் அழுகிக் குழு குழுத்துக் கீழே விழுந்தது.

2. நல்லம்மாள் கல கல வென்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

3. மலையில் மழை பெய்தது; குளத்திற்கு வெள்ளம் வந்தது.

4. சங்கு சக்கர சாமி வந்து சிங்கு சிங்கு என ஆடிற்று.

5. வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது.

கேள்விக் குறைவினால் அங்கங்களின் தசைநார்கள் ஒற்றுமைப் பட்டு உழையாமை. தேகாப்பியாசத்தின் மூலமாகத் தசை நார்களுக்கு வலுவுண்டாக்குக. ஊன்றிக் கவனித்து ஒலியின் வேற்றுமைகளைக் கண்டறிவதற்கு விளையாட்டுப் பயிற்சியாகப், பல்வேறு மிருகங்கள், பறவைகள், மோட்டார் சங்கு முதலியவற்றின் சப்தங்களை உண்டாக்கவும், கண்டுபிடிக்கவும் செய்க.

**உடற் பலவீனமும்,** மூச்சுவிடத் திணறுதலும், பேசுவதற்குத் தடைகளாகும். சுவாசிப்புப் பயிற்சி தர வேண்டும். சிறுவர்களுக்குப், பஞ்சிறகை ஊதிப் பறக்க வைக்கல், நறுமணம் கமழும் பூவை மணத்தல் இவற்றின் மூலமாக மூச்சுவிடவும், மூச்சு இழுக்கவும் பயிற்சிதரலாம், பின் பயிற்சி முறைப்படி மூச்சு இழுத்தல், நிறுத்தல், விடுதல் முதலிய பயிற்சிகளைத்தரலாம்.

**உளறுதல், கனைத்தல், மூக்குப் பேச்சு,** போன்ற இயற்கைக்கு மாறுபட்ட ஒலிகளுக்குக் காரணம், **தொண்டை, நாவு, மூக்கு, முதலிய ஒலிக் கருவிகளில் ஊனம்.** அவற்றை உடனே மருத்துவரிடம்காட்டிப் பரிசோதித்து, நீக்கிக்கொள்ள வேண்டும். நுணுநுணுவென்ற பேச்சுக்கு மூக்கில் காணப்படும் குறைகளை நீக்கவேண்டும். சதையடைப்பிருந்தால் சத்திரம் செய்ய வேண்டும். சளி அடைக்காதபடி மூக்கைச் சிந்தவும், மூக்கினால் சுவாசிக்கவும் பழக்க வேண்டும்.

**திக்கித் திக்கிப் பேசுதல்.** பயமே பெரும்பாலும் காரணம். பயத்தினால் மூச்சுத் திணறும்போது திக்குவதைப் பார்க்கிறோம். மாணவன் பயப்படாதிருக்கும்படி ஆசிரியர் அன்பாக நடத்த வேண்டும். ஒரு வேளை இப் பயம் வீட்டிலே உண்டானதாயிருக்கலாம். பெற்றோரைக் கண்டுபேசி பயத்தை நீக்க முயல வேண்டும். பயமறியாக் குழந்தை என்று எண்ணக்கூடாது. அறியாமைப் பருவத்தில் ஏற்படும் பயத்தால் கொன்னல் உண்டாகும்.

## வாசிப்பு

கற்றார்க்கும் கல்லார்க்கும் வாழ்க்கை முழுவதும் பயன்படுவது வாய்மொழி. கற்போருக்குக் கற்கும் காலத்தும், கற்ற பின்னரும் அறிவு பெறுதற்கு இன்றியமையாக் கருவியாவது வாசிப்பு. சகல கலைகளையும் கற்பதற்குக் கருவியாக இருப்பது வாசிப்பறிவன்றோ? வாசிக்க இயலாதவன் நூல்களைக் கற்க முடியுமா? கல்வியறிவில் முன்னேற முடியுமா? ஆதலினன்றோ வாசிக்கத் தெரிந்தவனையே கற்றவன் என்று சொல்லுகிறோம். ஒருவன் கல்வி கற்றவனா என்று அறிய வேண்டுமாயின், "அவனுக்கு வாசிக்கத் தெரியுமா?" படிக்கத் தெரியுமா?" என்று கேட்கிறோம். ஆகவே வாசிப்பே கல்வி, எனினும் மிகையாகாது. ஆகலின் வாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்தபடியாக நாம் மாணவர்க்கு அளிக்கவேண்டியது வாசிப்புப் பயிற்சி. இது இருவகைப்படும். அவை, (1) சொற்கள் உண்டாவதற்கு முகற் காரணமாகிய, எழுத்தறிவையுண்டாக்கல்; (2) சொற்களையும், சொற்றொடர்களையும் வாசிக்கும் திறமையை யுண்டாக்கல். இவ்விரண்டையுமே வாசிப்புப்பயிற்சி என்போம். வாசிப்புப்பயிற்சியளித்தற்குப் பொருத்தமான வயது, ஐந்தாண்டின் முடிவேயாகும். அதுவே பள்ளிப்படிப்பின் ஆரம்ப வயது.

பள்ளிக்கு வந்தவுடனேயே 'படி' என்று சொல்லி கையில் ஏட்டைக் கொடுத்துவிடக்கூடாது. பிள்ளைகள் பள்ளியை வெறுப்பதற்குக் காரணம் ஆசிரியர் இவ்வாறு செய்வதே. எழுத்துக்களைப் படிக்க வேண்டும், வாசிக்கவேண்டும், என்னும் ஆவலை முதலாவது உண்டாக்க வேண்டும். பின்னர் வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். வாசிப்பில் ஆவலையுண்டாக்க சில யுக்திகள்:—

1. நான் கருக்கச் செய்யுமுறையைப் பயன்படுத்தி வாசிப்பில் ஆத்திரமுண்டாக்கலாம்.

2. கதைகளைச் சொல்லிக் கதை வாசிக்கவேண்டும் என்னும் ஆவலை உண்டாக்கலாம்.

3. பெரியபடங்களை வகுப்பில் தொங்கவிட்டு அவற்றின் அடியில் அவற்றின் விளக்கமாக இரண்டொரு சொற்களை அல்லது சொற்றொடர்களை எழுதிவைக்க அதனை அறிய வேண்டுமென்னும் ஆசை மாணவர்க்கு உண்டாகும்.

4. மாணவர்க்குத் தெரிவிக்கவேண்டிய விஷயங்களை அறிவிப்புகளாக அட்டைகளில் எழுதித் தொங்கவிடலாம்.

5. சுகாதாரப் பழமொழிகளையும், தலைப்பில் படத்துடன் பாப்பாப் பாட்டின் இரண்டொரு அடிகளையும் எழுதி வகுப்பறையில் தொங்கவிடுக. இவற்றையெல்லாம் பிற மாணவர் வாசிக்கும்பொழுது, வாசிப்பறியாக் குழந்தைகள், தங்களுக்கும் வாசிக்கத் தெரியுமானால், அத் திறமையினால் விசேஷித்த இன்பமடையக்கூடும் எனக் கருதி, வாசிக்கப் படிக்கவேண்டும் என்று ஆவல் கொள்வர். பின்னரே ஆசிரியர் கற்பிக்க ஆரம்பிக்க வேண்டும்.

**வாசிப்புக் கற்பிக்கு முறைகள்.** மாணவர் மனவியல்பறிந்து அவர்க்கு விருப்பத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கக்கூடிய முறையையே ஆசிரியர் கையாள வேண்டும். நன்முறையே குழந்தைகளுக்குப் படிப்பின்மீது ஆவலையும் இன்பத்தையும் உண்டாக்கும். வாசிப்புக் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பல்வேறு முறைகளாவன :— (1) எழுத்து முறை (Alphabetical method), (2) ஒலி முறை (Phonic method), (3) சொல் முறை (word method), (4) வாக்கிய முறை (Sentence method), (5) கதை முறை (Story method), (6) பார்த்துச் சொல்லு முறை (Look & Say method) இனி, இம் முறைகள் ஒவ்வொன்றனையும் தனித்தனி ஆராய்வோம்.

**எழுத்து முறை.** முதலில் நெடுங்கணக்கு முழுவதையும் வரிசைப்படி கற்றுவிட்டுப் பின் எழுத்துக்கூட்டிச் சொற்களையும் சொற்களைச் சேர்த்து வாக்கியங்களையும், பின் பாடங்கள், கதைகள் முதலியவற்றையும் வாசித்தலே எழுத்து முறை. தொன்று தொட்டு இன்றுவரை நம் நாட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் உபயோகப்பட்டுவரும் ஆனா, ஆவன்னா முறையே இது.

**ஒலி முறை.** இது எழுத்து முறை போன்றதே. எழுத்துக்களின் பெயரைக் கற்பதற்குப் பதிலாக அவ்வெழுத்துக்களால் குறிக்கப்படும் ஒலிகளையும் அதன் வரிவடிவினையும் கற்றுப் பின்னர், சொல், தொடர்கள் முதலியவற்றை முறையே கற்றல்.
உதா. எழுத்து முறை, பானா, டானா, இம்மன்னா = படம்
ஒலி முறை :- ப—ட—ம் = படம்.

## இம் முறையின் குண குணங்கள்

**குணம்.** இம் முறை காரண காரிய முறைப்படி அமைந்துள்ளது. ஏனென்றால் எழுத்துக்களால், சொற்களும், சொற்களால் தொடர்களும், உண்டாகின்றன.

2. மேலும், எழுத்து எளிது; சொல் அரிது. இம் முறை எளியதிலிருந்து அரியதற்குச் செல்வதனால் இது தத்துவ முறை, (logical method).

3. ஒவ்வொரு ஒலிக்கும் தமிழில் எழுத்து இருப்பதனால், எழுத்துக்களைக் கற்றபின், எதையும் எழுத்துக்கூட்டிப் பிழையின்றி வாசிக்கலாம்.

**குற்றம்.** ஆனால் குழந்தைகளின் மனோதத்துவ லக்ஷணங்களைக் கவனிக்கும்போது இம் முறை சிறிதும் பொருத்தமற்றது. இவ்விரு முறைகளும், வாசிப்பை அர்த்தமற்ற ஒருகிளிப்பிள்ளைப் பாடமாக்குகிறது. எழுத்தறிவைத் தெளிவுபடச் செய்வதே, இம் முறைகளின் முக்கிய நோக்கமேயன்றி, **பொருள்படும்** ஒன்றை விருப்பத்துடன் வாசிக்கக் கருவியாவதில்லை.

கல்வி, பிள்ளையின் வாழ்க்கையோடும் அனுபவத்தோடும் சம்பந்தப்பட்டதாயிருந்தல் வேண்டும் என்பது கல்வித் துறையில் முக்கிய தத்துவம்; பொதுக் கொள்கை. தெரிந்ததிலிருந்தே தெரியாதவற்றைக் கற்பிக்கவேண்டும். இம் முறைகளோ பிள்ளைகள் கேட்டும் அறிந்தும் இராத ஒலிகளையும் அவற்றின் வரிவடிவையும், கற்பிக்க ஆரம்பிக்கின்றன. எழுத்துக்களில் ஒரு அர்த்தமுமில்லை. பிள்ளைகளுக்கோ அர்த்தமுடைய வாக்கியங்களிலும், கதைகளிலும் பிரியம். அர்த்தமற்ற இக்குறிகளைக் கற்றுக்கொடுக்க ஆரம்பிப்பதால் பிள்ளைகளுக்கு முதலிலேயே வெறுப்பு. படிப்பிலேயே வெறுப்புக்கொள்ளவும் ஆரம்பித்து விடுகிறார்கள். இவ்வெழுத்துக்களை மனதில் ஞாபகப்படுத்திக் கொள்வதும் கஷ்டமாகின்றது. ஏனெனில் தான் அறிந்துள்ள ஒரு பொருளின் பெயர்போல், எழுத்து, தனக்கு ஒரு பொருளைத் தருகிறதில்லை. பொருளற்ற ஒன்று மனதில் இராது. மேலும் தமிழில் எழுத்துக்கள் 247. இவற்றை நன்கு கற்று முடிக்க இரண்டு ஆண்டுகள் ஆகும். ஆதலின் இம் முறைப்படி வாசிப்பு தாமதப்படும்.

## 3. சொல் முறை

சொற்களை முதற்கண் கற்றுப்பின் எழுத்துக்கு செல்வது, சொல் முறை.

மாணவர்க்குத் தெரிந்த ஒரு பொருளைக்காட்டி (உதா. பட்டம்) சம்பாஷித்துப்பின் "பட்டம்" என்று எழுதி அதை வாசிக்கக் கற்பிக்கவேண்டும். பின் தனித்தனி எழுத்துக்களின் ஒலியையும், வரிவடிவத்தையும் மனதிற் பதிக்கவேண்டும். இதற்கு ஒப்பனைச் சட்டம் முதலிய விளையாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தல் நலம். இம் முறையை அடிப்படையாகக்கொண்டு, எழுத்துக்களை எளிதாகக் கற்றற்குரிய முறையில் வரிசைப்படுத்தி, எழுதப்பட்டதே தானியேல் முதற் பாடப் புத்தகம். இம் முறையில் எழுதப்பட்ட புத்தகங்களே நம் தமிழ் நாட்டுப் பெரும்பான்மையான பாடசாலைகளில் உபயோகப்பட்டு வருகின்றன. இம் முறைப்படி எழுத்துக் கற்பித்தலைப் பின்னர்க் காட்டப்படும் பாடக் குறிப்பிற் காண்க.

**குணம்.** சொல், குழந்தை பெற்றுள்ள மொழியறிவில் அடங்கியது. அதற்குப் பொருள் உண்டு. ஒரு எழுத்தைவிட சொல் பொருள் தந்து, இன்பமூட்டுவதாகின்றது.

**குற்றம்.** ஆனால் பிள்ளைகள் சொற்களின் வரிசைகளை வாசிக்க வாசிக்க, சலிப்பே உண்டாகின்றது. அவர்களுக்கு வாசிப்பில் உற்சாகமும், மேலும் மேலும் வாசிக்க வேண்டுமென்ற ஆவலும் உண்டாவதில்லை. அந்த சொற்களைச்சுட்டி, வாக்கியமுண்டாக்கி வாசிக்கச் செய்தாலும், பிள்ளைகள் சொற்களைக் கண்டு பிடிப்பதில் கவனத்தைச் செலுத்துவார்களேயன்றி, அதன் பொருளை அறிந்து வாசிக்க முயல்வதில்லை. இவ்வாறு உண்டாக்கப்பட்ட வாக்கியங்களும், சலிப்பையே உண்டாக்கும். திரும்பத் திரும்பச் சொற்களை வாசிப்பதனால், வாசிப்பு குருட்டுப் பாடமாகிவிடும். எழுத்துப்பற்றி வாசிப்பதில்லை.

## 4. வாக்கிய முறை

வாக்கிய முறைப்படி வாக்கியங்களையே முதலில் வாசிக்கக் கற்பிக்கவேண்டும். இம் முறைப்படி முதலாவது ஆசிரியர் மாணவர் அனுபவத்திற்குட்பட்ட சாதாரணமான பொருள் ஒன்றைப் பற்றியாவது, படங்காட்டியாவது சம்பாஷித்து அப்பொருளைப்பற்றி வாக்கியங்களை வருவித்துக் கரும்பலகையில் அல்லது வாசிப்புச்

சட்டத்தில் (Reading chart) எழுதி வைத்து, மாணவர் அவ்வாக்கியங்களைத் தட்டுப்பாடின்றி சாதாரணமாக வாசிக்கும்படி பயிற்சி தரவேண்டும்.

உதாரணம்:—



கண்ணன் குழல் ஊதுகிறான்

| குழல் |
|---|

| கு | ழ | ல் |
|---|---|---|

பிறகு அதே சொற்களை மாற்றிவைத்து, அவ் வாக்கியங்களை வாசிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறே அநேக வாக்கியங்களை வாசிக்கவும், சாதாரணமான சொற்கள் பலவற்றையும் கண்டு அறிந்து கொள்ளவும் கூடிய தகுதி வரும் வரை பயிற்சி தந்து, பிறகு, எழுத்துக்களைக் கண்டுகொள்ள வழி நடத்தவேண்டியது. இதற்கும் ஒப்பனைச் சட்டங்கள் பயன்படும்.

குணம். கருத்தை அறிந்து வாசிப்பதே, சிறந்த வாசிப்பாகும். ஒரு பூரண கருத்தைத் தெரிவிப்பது வாக்கியமே யாகும். ஆதலின் வாக்கிய முறையே இயற்கை முறை என்பது சிலர் கொள்கை.

குற்றம். 1. இம் முறைப்படி எழுதப்பட்ட பாடப் புத்தகங்கள் இல்லை.

2. காலவட்டத்தில் நடைபெறும் பாடங்களில் ஒரு ஒழுங்கான முன்னேற்றமும் விடயத் தொடர்ச்சியும் காண்பது அரிது.

3. வாக்கியங்கள் தெரிந்து கொள்ளும் முறையிலும், சிறுவர்க்கு உற்சாகமின்மையும் மனவெறுப்பும் வாசிப்பின் மீது உண்டாகக்கூடும்.

4. சிந்தனையின் முழு வடிவம் வாக்கியமாயிருப்பதால், வாக்கியங்களை வாசிப்பதே, மாணவர்க்குத் தெளிந்த பொருளைத் தரும். கதையில் பொருட்டொடர்பு இருத்தலின் வாசிப்பில் இன்பம் குறையாது.

5. சிறுவரின் பார்வை பொருளையோ, வடிவங்களையோ உள் நுழைந்து ஒவ்வொன்றாக நுணுகிப் பார்க்காமல் மொத்தமாகப் பார்க்கிறது. அவ்வாறே சொற்களையும், தனி எழுத்துக்களை உற்று நோக்காமல், மொத்தமாகவே பார்க்கிறது. ஐந்து அல்லது ஆறு வயதுச்சிறுவர்க்குப் படம், மடம்; ரசம், சரம்; இவற்றின் வித்தியாசம் எளிதில் தெரிவதில்லை. கதையில் பலவித வேற்றுமை வடிவுள்ள சொற்கள் வருவதால், சொற்களை வேறுபடுத்தியறிவது சுலபமாகின்றது.

**குற்றம்.** (1) இது ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட முறையன்று. (2) மாணவர்க்கு ஒரு ஒழுங்குப்படி புதுச் சொற்களைக் கற்பிக்க முடியாது. (3) சிறுவர் படிப்பது எந்த வாசகம் புத்தகத்திற்கு ஒத்திராது. ஆதலால் மாணவர் ஒழுங்கான முறையில் வாசிப்புப் பயிற்சி பெறமுடியாது.

## 5. கதை முறை

**கதை முறை.** முதலிலேயே கதையை வாசிக்கக் கற்பிப்பது. சிறுவர்க்குக் கதை கேட்பதில் அதிக ஆசை உண்டு. இவ்வாசையை அடிப்படையாகக்கொண்டு கதை வாசிப்பதில் அவர்களது மனதைத் திருப்பிவிட்டு, அதனைத் திருத்தப்படுத்து முறையில், வாசிப்புக் கற்பிப்பதே இம் முறையின் நோக்கம். மாணவர்க்கு வாசிப்பில் ஆசையை மூட்டிவிட்டு, பின் வாசிப்புக் கற்பிப்பதே, ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இன்பத்தை உண்டாக்கும்.

கதை முறைப்படி செய்ய வேண்டியதாவது :— கதையைச் சொல்லி, அதைக் கரும்பலகையில் எழுதி, அதனையே வாசிக்கச் செய்து, பிறகு வாக்கியங்களைத் தனித்தனி வாசிக்கவும், அதன் பின்னர், சொற்றொடர்களையும், சொற்களையும், கண்டறியவும், பிறகு எழுத்துக்களையும் அவற்றின் ஒலிகளையும் தெரிந்து கொள்ளவும் வழிகாட்டுவதனால் முதலிலிருந்து கடைசி வரையில் சிறுவர்க்கு வாசிப்பில் மனப்பற்றுதலும் ஊக்கமும் குன்றாமலிருக்கும்.

குணம்: 1. இம் முறையின் மூலமாக, இறுவர்க்கு வாசிக்கக் கற்பிக்கு முன், வாசிப்பில் ஆசையை யுண்டாக்குகிறோம்.

2. வாசிக்கும் விடயம் பொருள் தருவதாயிருக்கின்றது.

3. வாசிக்கும் விடயம் அவர்கள் அநுபவத்திற்குட்பட்டதாயிருப்பதால், வாசிப்பில் அவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகமுண்டாகும்.

குற்றம்

1. படித்த கதைகள் தவிர வேறு வாசிக்க இம் முறைப்படி கற்ற மாணவர்க்குக்கூடாது என்பது ஒரு சாரர் கூற்று. இம் முறையை முற்று முடியப் பின்பற்றினுல் இக்குறை ஏற்படாது வாக்கிய வாசிப்பிலே நிறுத்திவிடாமல், சொற்களையும், எழுத்துக்களையும் கண்டுகொள்ள வழிநடத்தி, ஒலி முறைப்படி சுலபமான சொற்களை உண்டாக்கவும், வாசிக்கவும் பயிற்சி தரல் வேண்டும்.

2. இம் முறையில், எழுத்துக்கூட்டி எழுதுவதில் மாணவர் முன்னேற்றமடைய ஏதுவில்லை என்பது, ஆங்கில மொழியோர் சொல்லும் குறை. ஆங்கிலத்தில் இருக்கின்ற ஒலிபற்றிய ஒழுங்கீனங்கள் நம் மொழியில் இல்லையாதலால் இது ஒரு பெருங் குற்றமாகாது.

3. வாசிப்பு ஏறக்குறைய மனப் பாடம் ஆகின்றதேயன்றி எழுத்துப்பற்றி வாசிப்பது இல்லை என்பது சிலர் கூற்று. இது உண்மை; முதலில் ஏறக்குறைய வாசிப்பு குருட்டுப் பாடம் தான். ஆனல் ஒப்பனைச் சட்ட விளையாட்டு, வாக்கியம் அடுக்குதல் முதலிய விளையாட்டுகள் மூலமாக வாக்கியங்களையும், சொற்களையும், இறுதியில் எழுத்துக்களையும் தெரிந்து வாசிக்கக் கற்றுக் கொள்வர்.

4. தமிழ் மொழியின் எழுத்துக்கள் மிகப்பல. ஆதலின் எழுத்துக் கற்றல் கஷ்டத்தையும் கால தாமதத்தையும் உண்டாக்கும். 247 எழுத்துக்களின் வரிவடிவையும் தனித் தனி, குருட்டுத்தனமாகவே, யூகத்தைச் செலுத்தாது, மனதிற் பதிக்க வேண்டும். தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்க அவ்வளவு கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. நம் மொழியின் எழுத்துக்கள்

இளஞ்சிறுவரும் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடிய நன் முறையில் நம் முன்னோர்களால் தத்துவ ரீதியாக அமைக்கப்பட்டுள்ளன. 216 உயிர்மெய் யெழுத்துக்களும், உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாவதாகலின், அவற்றை நாம் தனித்தனி கற்பித்துக் காலத்தை வீணாக்கி, இடர்ப்பட வேண்டியதில்லை. ஏ ஒலிக்கு மெய்யின் புள்ளியை நீக்கிவிட்டு இடப்பக்கத்தில் ஓர் ஒற்றைக்கொம்பு (ெ)இட்டிருப்பதைக் கவனிக்கச்செய்தால், ஓரே பாட நேரத்தில் (Period) 12 உயிர்மெய் எழுத்துக்களை மாணவர் எளிதிற் கற்று விடுவார். இந் நுட்பத்தை திரு. டாலிபோல் அவர்களும், லாபாக் என்னும் மேனாட்டுப் பெரியாரும், தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 'லாபாக் சார்ட்டில்' இவ் வுயிரொலிகளின் வரிவடிவை எளிதிற் கண்டு கொள்ளும் பொருட்டு விலங்கு, கால், கொம்பு முதலியன அழகிய வேற்றுநிற மையினால் எழுதப்பட்டிருப்பதைக் காண்க. ஆதலின் சுவையான முறையில் எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு அனுகூலமாயிருக்கும் வாசிப்பு முறையே, தமிழ் மொழிக்கு ஏற்றது.

### கதை முறையில் வாசிப்புக் கற்பதில் வரும் படிகள்,

1. சிறுவர் கூச்சமும் பயமுமின்றிச் சாதாரணமாகப் பேசிப் பழகிக்கொள்ளும்படி அவர்களோடு ஆசிரியர் அன்பாக நடந்து கொள்ளுதல். சம்பாஷணை, விளையாடுதல் முதலியன.

2. **கதை கூறல்.** கதை முறையில் வாசிப்புக் கற்பிக்கும்படி தெரிந்து கொள்ளும் கதை:— (1) மாணவர் அனுபவத்திற்கும் மனநிலைக்கும் ஒத்ததும், (2) சுலபமும் தெளிவுமுடையதும், (3) உற்சாகம் தருவதும், (4) வந்த சொற்களே மீண்டும் மீண்டும் வருவதும், (5) சந்த இன்பமுடையதும், (6) சுருங்கியதுமாயிருத்தல் வேண்டும்.

உதா :— வாலிழந்த குரங்கின் கதை. "வால் போனது கத்தி வந்தது, டம் டர் டம்" முதலிய தொடர்கள் சிறுவர்க்கு உற்சாகத்தைக் கொடுக்கும்.

3. கதை விளங்கிற்றா என்று சோதித்தல்; அருஞ் சொற்களைப் படம், பொருள், செய்கை, காட்டித் தெளிவுபடுத்துக.

4. கதை யமைக்கும் வாக்கியங்களை மனதிற் பதித்தல், கதை நடித்தல்.

5. கதையின் ஒரு பகுதியை மாணவரிடமிருந்து வாக்கியம் வாக்கியமாக வருவித்துக் கரும்பலகையில் எழுதி வைத்தல்.

6. **ஆசிரியர் மாதிரி வாசிப்பு.** எழுதப்பட்ட பகுதியை ஆசிரியர், விரையாது, தெளிவாகக் கோலினல் வாக்கியம் வாக்கியமாகச் சுட்டிக்காட்டி, மூன்று அல்லது நான்கு தடவை, வாசித்துக்காட்டி மீண்டும் வரிசையாக வாக்கியங்களைக் கேள்வி கேட்டு வருவிக்க.

7. **மாணவர் வாசிப்புப் பயிற்சி.** மாணவர் ஒவ்வொருவராகக் கரும்பலகையில் வாக்கியத்தைக் காட்டி வாசிக்க. மறந்துவிட்டத்து ஆசிரியர் அல்லது தெரிந்த மாணவர் உதவி செய்க. சிறிது மௌன வாசிப்புக்கும் இடையிடையே இடம் தரலாம்.

8. இவ் வாசிப்பு ஏறக்குறைய மனப்பாடமே. இனி சொற்றொடர்களையும், தனிச் சொற்களையும், எழுத்தையும் தனித் தனி உற்றுநோக்கி அறிந்துகொள்ள வழிநடத்த வேண்டும்.

## 6. பார்த்துச் சொல்லும் முறை

தனித் தனி எழுத்துக்களைப் பார்த்து, எழுத்துக்கூட்டி வாசிக்காமல், **சொந்தமாகப் பார்த்து** வாசிக்கு முறையே பார்த்துச் சொல்லு முறை எனப்படும். சொல் முறை, வாக்கிய முறை, கதை முறை முதலியன, இம் முறையின்பாற்படும். அவற்றிற்குக் கூறப்பட்டுள்ள குண தோஷங்களை ஒன்றுபடத் தொகுத்துக்கூறி இம் முறையின் சிறப்பியல்களைக் காண்க.

**சிறந்த முறை.** பல்வேறு முறைகள் கூறப்பட்டுள்ளனவே, வாசிப்புக் கற்பிக்க யாம் கையாளத்தக்க சிறந்த முறை யாது? எனக் கேட்கலாம். கத்தியினல் வெட்டி வைத்தாற்போல், துண்டுபடுத்தி இதுதான் சிறந்த முறையெனக் கூறவியலாது. 'ஆசிரியரது முறையே சிறந்த முறை' எனக் கல்வித் துறையில் வழங்கிவரும் பழமொழியொன்றுளது. இது உண்மை. கையாளப்படும் பல முறைகளின் குணங்குற்றங்களை யறிந்த ஆசிரியர், குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கொண்டு, கலப்பு முறையொன்றை அமைத்துக்கொள்ளல்வேண்டும். அது ஆசிரியனது தனி முறை. அரசியலார் ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டத் திட்டத்தில், ஆலோசனையாக யாதொரு முறையும் குறிப்பிடவில்லை.

**முதல் வகுப்பு வாசிப்புப் பாடத் திட்டம்:—** "இப் பருவத்தில் வாசிப்பெல்லாம் பெரும்பாலும் வாய்விட்டுப் படிப்பதாகவே இருக்கும். அன்றியும் குழந்தைகள் முன்னமே அறிந்துள்ளவையும், தம் பேச்சில் ஆண்டு வருவனவுமான சொற்களை வரிவடிவிலும் தெரிந்துகொண்டு, வாய்விட்டு உரக்கப் படிக்க மட்டும் கற்பிக்க வேண்டும். முதல் வகுப்பின் முடிவில், சாதாரண சக்தியுள்ள பிள்ளைகளும், பொது வழக்காகும் சுமார் 300 சொற்களையும் அவற்றாலாகும் சிறு சிறு வாக்கியங்களையும், படங்கள் மின்னட்டை முதலியவற்றைப் பார்த்துத் தெரிந்துகொண்டு படிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்."

**இதில் 300 சொற்களும்** அவற்றாலாகிய வாக்கியங்களும் என்று குறித்திருப்பதால், சொன் முறையே சிறந்தமுறை என்பது திட்டம் வகுத்தலர்களது கருத்துப்போலும். கல்வித் துறையில் அநுபவ மிக்கபெரியார்களது கொள்கையும் அதுவே. அரசியலாரால் அங்கீகாரம் செய்யப்பட்ட பல பாடப்புத்தகங்களும், இம் முறையை ஆதாரமாகக்கொண்டு எழுந்தனவே. ஒலியமைப்புக்கேற்றவாறு ஒழுங்கான வரிவடிவமைந்துள்ள தமிழ் மொழியின் எழுத்துக்களை, எளிதாகக் கற்பதற்கு சொன்முறையை யடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் கலப்பு முறையே சிறந்தது. இம் முறைப்படி ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள பாடக் குறிப்பைப் பார்க்க. வாக்கிய முறை முதலியன, மும் முறை தலையைச்சுற்றி மூக்கைப் பிடிப்பதற்கு ஒப்பாகும். ஏனெனில் அம் முறைகள் பின்னர் தனிச் சொல்லுக்கும், இறுதியில் எழுத்துக்குமே சிறுவர் கவனத்தை யிழுத்துச் செல்கின்றன.

சொன் முறைப்படி எழுத்துக் கற்பிக்குமிடத்து அநுசரிக்க வேண்டிய கொள்கைகள். (1) மிக எளிதாக எழுதக்கூடியதும் நேர் கோடுகளால் ஆகியதுமாகிய எழுத்தை முதலில் எடுக்க வேண்டும். (2) புது எழுத்தை ஒரு சொல்லில் அமைத்து அச் சொல்லையும் அவ் வெழுத்தையும் கற்பிக்க வேண்டும். (3) ஒவ்வொரு புது எழுத்தும் முன் கற்ற எழுத்தோடு வரி வடிவில் பெரும்பான்மை ஒத்ததாயிருத்தல் வேண்டும். (4) கற்பிக்கப்படும் ஒவ்வொரு புதுச் சொல்லிலும், புதிதாகக் கற்க வேண்டிய எழுத்து தவிர ஏனைய எழுத்துக்களெல்லாம், முன்னமே கற்றனவாயிருத்தல்

வேண்டும். (5) சொல் முழுவதையும் வாசிக்க அறிந்த பின்னர், புது எழுத்தில் கவனத்தைச் செலுத்தி அதைச் சொல்லவும் எழுதவும் பயிற்றவேண்டும். (6) ஒரு பாட நேரத்தில் முதலாவது சொல்லையும் எழுத்தையும் வாசிக்கவும், பின்னரே எழுதவும் கற்பிக்க வேண்டும்,

இம் முறைக்குப் பயன்படுமாறு தமிழ் எழுத்துக்களைப் பின்வரு முறைப்படி வரிசைப்படுத்தலாம்.

ட வகை டப ம ழ ய

ர வகை ஈ ர ச க த ந ங ற

எ வகை எ ஏ ஞ வ ல ள ன ண

பிற வகை அ ஆ இ உ ஊ ஐ ஒ ஓ ஔ

## வாசிப்புப் பயிற்சிக்கு பயன்படக்கூடிய உபகரணங்கள்.

சிறுவர்க்குப் பெரும்பாலும் உபகரணங்களைக் கொண்டே வாசிப்புப் பயிற்சி யளித்தல்வேண்டும். கூடிய அளவு விளையாட்டு முறையில் அவ் வுபகரணங்களைப் பயன்படுத்திப் பயிற்சியளித்தல் வேண்டும். முதல் வகுப்பு வாசிப்புப் பாடத் திட்டத்தில், வாசிப்புப் பாடப் புத்தகத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. வாசிப்புப் பாடப்புத்தகம் முதல்வகுப்பு மாணவர் ஒவ்வொருவர் கையிலும் வகுப்பு ஆரம்பகாலமுதல் சட்டாயம் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. இரண்டாம் வகுப்பில் பாடப் புத்தகத்தைப் பார்த்து வாசிக்கவேண்டும். அதற்குப் பயிர்சியாக முதல் வகுப்பில் இறுதி மாதங்களில் வாசிப்புப் பாடப் புத்தகத்தை உபயோகிக்கலாம். ஆனல் ஆரம்பத்தில் படங்கள், மின்னட்டைகள், முதலியவற்றைப் பார்த்துத் தெரிந்துகொண்டு படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். முதல்வகுப்பில் பயன்படுத்தக் தக்க சில உபகரணங்களும், பயன்படுத்து முறையும் ஈண்டுக் கூறுவோம்.

1. எழுத்து அட்டைகள், (Flash cards) உயிர் 12, மெய் 18 உயிர்மெய் 216. உயிர் எழுத்துக்களையும் அகரமேறிய மெய்களையும் செந்நிறமையினல் எழுதல் நலம். சொல் முறையில் எழுத்துக்களைக் கற்பிக்கும்போது புது எழுத்துக்களை செந்நிறத்திலும் முன் கற்ற எழுத்துக்களைக் கறுப்பு நிறத்திலும் காட்டுவோமானல் புதுஎழுத்து

மனதில் நன்கு பதியும். அதைக் கருத்திற்கொண்டு, அம்முறையில் பயன்படுமாறு மின்னட்டைகள் எழுதுதல் நலம். பயன்:— காட்டி, மறைத்து வாசிக்கச் செய்தல், முதலியன,

2. சொல்லட்டைகள். புது எழுத்துக்களைக் கற்பிக்கப் பயன்படுத்தும் புதுச்சொற்களுக்கெல்லாம் மின்னட்டைகள் வேண்டும். இவ்வட்டைகளில் புது எழுத்தை மட்டும் சிவப்பு நிறத்தால் எழுதுக, பயன்:— மின்னற் கொடி, படங்களையும் சொற்களையும் இணைத்தல், சொற்களையடுக்கி வாக்கியம் உண்டாக்கல் முதலியன.

3 பட அட்டைகள். கற்பிக்கப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பட அட்டை வேண்டும். இப் படங்களை ஆசிரியரே வரைதல் நலம். ஒட்டுப் படங்களையும் வெட்டுப் படங்களையும் பயன்படுத்தவும் செய்யலாம். பன்னிற மெழுதிய கண்ணைக் கவரும் அழகிய படங்களை மாணவர்க்கு இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

4. படமும் அதற்கு நேரே சொல்லும் எழுதப்பட்ட சுவர்ப் படங்கள். ( Wall charts ) பயன்:— வாசிப்புப் பயிற்சி; சொல்லை மறைத்து மாணவரை எழுதச் சொல்லிப்பின் சரி பார்க்கச் செய்தல்.

5. தலைப்பில் படமும் அதனடியில் சொல்லும், அதன் கீழ் வாசிப்புப் பயிற்சிக்கான சொற்களும் வாக்கியங்களும் எழுதப்பட்ட வாசிப்புச் சட்டங்கள். ( Reading charts ) இவை சிறுவர்க்குப் புத்தகங்களுக்குப் பதிலாக வாசிப்புப் பயிற்சிக்கு பயன்படக்கூடியவை. அவ்வப் பாடசாலைகளில் ஆசிரியர் பின்பற்றி வரும். முதற் பாடப் புத்தகத்தைப் பார்த்து எழுதல் வேண்டும் பயன்:— வாசிப்புப் பயிற்சி

6. வாக்கியங்கள் வாசிக்குந் திறமைபெற்ற பிறகு வாசிப்புச் சட்டங்களில் மேற்பாதி படமும் கீழ்ப் பாதி வாக்கியங்களுமாக வரையலாம். இவற்றிற்குப் பதிலாக அதே விஷயத்தை 4 அல்லது 5 பக்கங்கள் கொண்ட சிறு சிறுபுத்தகங்களாக அமைத்துக்கொடுக்கலாம். சிறுவர்கள் ஒவ்வொரு புத்தகத்தையும் வாசித்து முடித்தவுடன், செயற்கரிய காரியத்தைச்செய்து முடித்துவிட்டது போற் பேரானந்தங் கொள்வர். பயன்:— வாசிப்பில் ஊக்கமுண்டாக்குதல்.

7. கட்டளை அட்டைகள் உதா :—

| உள்ளே வா | | இடத்திற்குப் போ |

| புத்தகத்தை எடு |

பயன்:— இவற்றைக் காட்டிச் செய்யச் சொல்வதால், மௌன வாசிப்புப் பயிற்சி கிடைக்கின்றது. வாசிப்பில் விரைவு உண்டாகும்.

8. **பாடசாலை அறிக்கைப் பலகை.** முக்கிய அறிவிப்புகளை எழுதி வைத்தல். **பயன்**:- வாசிப்பில் ஆத்திரம் உண்டாக்கல்.

9 **விளம்பரங்கள்.** பல்வகை விளம்பரங்களைச் சேர்த்து அடுக்கிக் கட்டிவைத்தல். (Notice album) **பயன்**:- கண்டதையெல்லாம் வாசிக்க வேண்டும் என்ற சிறுவர் ஆத்திரத்திற்குப் போக்கு உண்டாக்கு முறையில், வாசிப்புப் பயிற்சியளித்தல்.

10. **செய்திப் புத்தகம்.** சிறுவர்க்கு ஏற்ற செய்திகளையும் படங்களையும், வெட்டி எடுத்து ஒட்டி ஒரு புத்தகமாக அமைத்தல். பெரும்பான்மை படங்களும் அடியிற் சிற் சில வாக்கியங்களுமாக அமைத்தல் நலம். **பயன்**:- வாசிப்பில் உற்சாக மூட்டுதல்.

11. **சிறு எழுத்தட்டைகள்.** (Word-building set) **பயன்** :- சொல்லாக்க விளையாட்டு

12. குழந்தைகள் முன்னரே அறிந்துள்ளனவும், தம் பேச்சில் ஆண்டுவருவனவுமான **300 சொற்கள் அடங்கிய பட்டியல்**, பெரிய எழுத்துகளிற் பொறித்துச் சுவர்ப் படமாகத் தொங்கவிடுக. **பயன்**:- மாணவர்காணும் போதெல்லாம் வாசித்துப் பயிற்சி பெறுவர்.

13. **கதைப் படங்கள்.** ஒரு கதையை மூன்று அல்லது நான்கு காட்சிகளாகப் பகுத்துக்கொண்டு, ஒவ்வொரு காட்சியையும் விளக்கத் தனித் தனி படங்கள் வரைக. **பயன்**:- கதை சொல்லல்; வாய்மொழிப் பயிற்சி.

14. பூ, மரம், புள், விலங்கு முதலியன தனித்தனி அடங்கிய வெவ்வேறு **புத்தகங்கள்**. படங்களும் அவற்றிற்கு நேரெதிரில் சொற்களுமாகப் பக்கத்திற்கு நாலைந்து விதம் நான்கு அல்லது ஐந்து பக்கங்கள் கொண்ட புத்தகங்கள். இவற்றிற்கு விநோதமாக **மா** நூல், (anmial book) **பூ** நூல், (flower book) எனப் பெயர் கொடுக்கலாம். **பயன்**:— வாசிப்பு பயிற்சி.

15. **நெடுங்கணக்குச் சுவர்ப் படம்**. ( Labauk chart ) எப்போதும் வகுப்பில் தொங்கவிட்டு வைத்திருக்க வேண்டும். உயிரொலிகள், வெவ்வேறு நிறத்தில் அமைத்தல் வேண்டும். **பயன்** :— எழுத்துக்களை அடிக்கடி பார்த்து வரிவடிவத்தையும், அடிக்கடி வாசித்து ஒலி வடிவத்தையும் மனதிற் பதித்தல்.

16. **சில பாப்பா பாட்டுகள்**. தலைப்பிற் படமும், அடியில் பாட்டு அடிகளும் அமைத்து எழுதிச் சுவரில் தொங்க விடுக. **பயன்**:— வாசிப்புப் பயிற்சி, மனப் பாடம் செய்தல்.

17. ஒலி முறையில் வாசிப்புப் பயிற்சி யளிக்கும் **விளையாட்டுக் கருவிகள்**. உதா :- ஒரு வட்டத்தின் ஓரத்தில் ப, ம, த, வ என்னும் எழுத்துக்களைத் தனித் தனி எழுதி வைத்து, அதனோடு **டம்** என்ற எழுத்துக்களடங்கிய மின்னட்டையை தனித் தனி இணைத்துக் காட்டி படம், மடம், வடம் என எழுத்துக் கூட்டாமலே வாசிக்கப் பயிற்சி யளித்தல். இங்ஙனமே படம், பாடம்; மடம், மாடம்; விடு, வீடு; படு, பாடு; என்னும் சொற்களையும் விளையாட்டுக் கருவிபோல் ( Reading toys ) எதிரெதிராக அமையுமாறு செய்துகாட்டி, ஒலி முறையில் வாசிப்புப் பயிற்சியளிக்கலாம்.

18. சுகாதாரப் **பழமொழிகள், விடுகதை**களடங்கிய அட்டைகள். **பயன்** :- வாசிப்புப் பயிற்சி.

19. பல பொருளடங்கிய படங்களும், படத்தினடியில் எண்ணிட்டு, அப் படங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்ட சுவர்ப் படம். **பயன்**:- எண்ணைச் சுட்டி அப் பொருளைப் படத்தில் காட்டச் செய்க. இதனால் மௌன வாசிப்புப் பயிற்சி கிடைக்கின்றது.

20. செய்கைகளைக் காட்டும் தனிப் பட அட்டைகளும், அவற்றின் விளக்கமாக அமையும் தனி வாக்கியங்களடங்கிய மின்னட்டைகளும். **பயன்:-** படங்களையும் வாக்கியங்களையும் இணைத்தலால், மௌன வாசிப்புப் பயிற்சி பெறுதல்.

ஆசிரியர் நுண்ணிதாக எண்ணுவாராயின் இத்தகைய நூற்றுக்கணக்கான, உபகரணங்களையும், அவற்றைப் பயன்படுத்தும் உபாயங்களையும் தாமே கண்டுகொள்வர். இங்கு காட்டப் பட்டுள்ளன, ஒருசில உதாரணங்களே.

## வாசிப்புத் திறமை

சிறுவர் பள்ளியிற் சேர்ந்தபின் ஓராண்டுக்குள் தமிழ்மொழியின் எல்லா எழுத்துக்களையும் அநுபவத்திற்குட்பட்ட எல்லாச் சொற்களையும் வாசிக்கக் கற்றுவிடுவர். தமிழ் மொழியின் எழுத்துக்கள் ஒலி முறையில் ( Phonic script ) அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வோரெழுத்திற்கும் குறிப்பிட்ட ஓரொலியுண்டு. வட மொழித் தொடர்பால் நம்மிடையே உண்டான சில செயற்கையொலிகளைத் தவிர, தமிழர் பேச்சிற் காணப்படும் எல்லா இயற்கையொலிகளுக்கும் தனித் தனி எழுத்துக்கள் உள. ஆதலின் சிறுவர் தங்கள் கண்ணிற்படும் எந்தச் சொல்லையும் எழுத்துக்கூட்டி வாசிக்கக்கூடும். பிறர் ஏவாமலே விருப்பத்துடன் அங்ஙனம் சிறுவர் வாசிப்பதை நாம் பார்க்கலாம். ஆனால் அவர்கள் வாசிப்புத் திறமை பெற்றுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. வாசிக்கக்கூடிய தன்மைவேறு; வாசிப்புத் திறமை வேறு.

**திறமை பொருந்திய வாசிப்பு** என்பது யாது? இதற்கு விடை பகருமுன் வாசிப்பு இருவகைப்படும் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அவை:—

1. வாய்விட்டுப் படித்தல் அல்லது உரக்கப் படித்தல்.

2. மௌனமாகப் படித்தல். இவ்விரண்டும் படித்தற்றொழிலால் ஒற்றுமைப்பட்டுத் தோன்றினும், தன்மையால் வேறுபாடுடையன; தனித் தனி சிறப்புக்களும் பயன்களும் உடையன. திறமைகளும் தனித் தனி வேறுபடும். இவற்றுள் **சிறுவர்க்கு முதலாவது அளித்தற்குரிய பயிற்சி உரக்கப் படித்தலே.** உரக்கப் படிக்கக் கற்றபின்னரே மௌனப்படிப்புக்கு வழிகாட்ட வேண்டும், ஏனென்றால், (1) எழுத்து மனதில் பதிவதற்குக் கண் பார்வை

மட்டும் போதாது; கேள்வியும் வேண்டும். கண்ணாற் பார்ப்பதில் எழுத்தின் வரிவடிவமும், தானே வாய்விட்டு ஒலித்து, அதனைக் கேட்பதனால் ஒலி வடிவமும் மனதிற் பதியும். (2) ஆசிரியர் ஒலியின் பிழைகண்டு திருத்த சாத்தியப்படும். வாசிக்கும் போதும் சொற் பிழைகண்டு திருத்தக்கூடும். இதனால் மாணவர் பிழையற வாசிக்குந் திறமை பெற ஏதுவாகின்றது. (3) சொற்களையும் சொற்றொடர்களையும் உரக்கப் படிக்கும்போது அவை மனதினுட் சென்று பதிகின்றன. இலக்கண சூத்திர முதலியவற்றை நெட்டுருப்பண்ணுவதற்கு வாய்விட்டுப்படித்தலே பேருதவியாகின்றது. (4) மொழியின் நடையழகு, சொல்லழகு முதலியன, உரக்கப் படிக்கும் போதே வெளிப்படும். அதனால் இன்பமும் உண்டாகும். (5) பிறர்க்குப் பயன்படுமாறு வாசிக்குந் திறமை பெறுவது, உரக்கப் படித்துப்பயில்வதனாலேயே.

## வாய்விட்டுப் படிப்பதிற் பெறவேண்டிய திறமைகள்

1. **வேண்டியளவு சப்தமாக வாசித்தல்.** (Reading aloud) வகுப்பில் வாசிக்கும் பொழுது தன் வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் தெளிவாகக் கேட்கக்கூடிய அளவு சப்தமாக வாசிக்கப் பயிற்ற வேண்டும். ஓர் அவையின் முன் நின்று, அறிக்கைகளையோ, கட்டுரைகளையோ, புத்தகப் பகுதிகளையோ, வாசிக்கும்போது அச் சபையில் உள்ள யாவரும் கேட்கும்படி வாசிக்கவேண்டும்.

2. **பொருள் அறிந்து வாசித்தல்** (Reading with Comprehension) உரக்கப்படிப்பதுமட்டும் போதாது. தான் படிக்கும் பொருள் உடனுக்குடனே உள்ளத்துட் செல்லவேண்டும். இத் திறமை பெறுவதற்கு வாசிப்புப் பாடத்தில் (Reading Lesson) மாணவர் புதுப் பகுதியை வாசிக்குமுன், ஆயத்த சம்பாஷணை மூலமாகவும், அரும்பத விளக்கத்தின் மூலமாகவும் பொருளைத் தெளிவுபடுத்துக. வாசித்தபின் விடயத்திற் கேள்விகேட்க.

3. **தெளிவு.** (Clearness) சொல்லும், பொருளும், தெளிவுபட வாசிக்கவேண்டும். எழுத்துக்களைத் திருத்தமாக உச்சரிப்பதனால் சொல்லும், நிறுத்தற் குறியீடுகளைக் கவனித்து வேண்டு

மளவு திருத்தி, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசிப்பதனுல் பொருளும், தெளிவுபடும்.

4. **பிழையின்றி வாசித்தல்.** வாசிப்புப் பாடத்தில் பிழைகளை கவனித்துத் திருத்திக் கொடுத்து, யாதொரு பிழையுமின்றி வாசிக்க வற்புறுத்த வேண்டும். ஆசிரியர் கவனிக்கவில்லையானுல் மாணவர் கவலையீனமாகவே வாசித்துப் பழகிவிடுவர். பின் அவர்களைத் திருத்த முடியாது.

5. **விரைவு.** (Fluency) தட்டுப்பாடின்றி ஆற்றொழுக்குப் போல ஒரே நடையில் வாசிக்கவேண்டும். விரைந்து சில சொற்களை வாசித்து விட்டுப்பின் தட்டுத்தடுமாறிநிற்பது விரைவாகாது. ஒரே நடையில் விடாது தொடர்ந்து வாசிப்பதுதான் சாதுரிய விரைவு நடை என்னலாம். ஆரம்பத்தில் சிறுவர்க்கு இயலும் சாதாரண நடையில் பயிற்சி தருக. மிகுந்த பயிற்சியால் விரைவுண்டாகும்.

இத்தகைய திறமைகளை மாணவர் அடைய வாசிப்புப் பாடப் புத்தகத்தைக் கருவியாகக் கொண்டு போதிய பயிற்சியளிக்க.

## பாடப் புத்தகத்தை ஆழ்ந்து படித்தல்

முதல் வகுப்பில் சிறுவர் தமிழ் எழுத்துக்களையும் சொற்களையும், சிறு சொற்றொடர்களையும் அறிந்து கொள்கின்றனர். இனி மௌன வாசிப்புக்கு ஆயத்தப் பயிற்சியாக, **சப்தமாகத், திறமையுடன்** வாசிக்கப் பழக்கவேண்டியது அடுத்தபடியாக ஆசிரியர்செய்யவேண்டியது. வாசிப்பிற்பெறவேண்டிய திறமைகளை மாணவர் அடையவேண்டுமாயின் பாடப் புத்தகத்தை மேற்குறிப்பிட்ட நோக்கங்களுடன், ஆழ்ந்து படிக்கவேண்டும். ஆழ்ந்து படிக்குமிடத்து உரைநடைப் பாடமொன்றை நடத்து முறையைக் கவனிப்போம்.

வாசிப்புப்பாடம் கற்பிக்கும்பொழுது ஆசிரியர் மனதிற் கொள்ளவேண்டிய தத்துவங்களாவன:— (1) மாணவர் ஒரு உரைநடைப்பகுதியை சப்தமாக வாசிக்கு முன், தாங்களே ஒரு முறை மௌனமாக வாசித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். (2) ஒரு பகுதியிலுள்ள அருஞ்சொற்களையும், பொருள்களையும்

அறிந்த பின்னரே, மாணவர் அப் பகுதியை சப்தமாக வாசிக்க வேண்டும். பொருள் விளங்காத நிலையில் ஒன்றையும் வாசிக்கக் கூடாது. (3) தங்களுடைய அறிவாற்றலுக்கு மிஞ்சின மொழி நடையும், பொருளும் அடங்கிய பாடப் பகுதிகளை மாணவர்க்கு வாசிக்கக் கொடுக்கக் கூடாது. வகுப்பில் பெரும்பான்மை மாணவர், ஆசிரியருடைய உதவியின்றித் தாங்களாகவே சிரமமின்றி வாசித்துப் பொருளை யறிந்து கொள்ளக்கூடியதாகப் பாடங்கள் அமைந்திருக்க வேண்டும். இத்தகைய தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு வாசிப்புப் பாடம் கற்பிக்கு முறையை நாம் திட்டப் படுத்த வேண்டும்.

## வாசிப்புப் பாட நடைமுறைப் படிகள்

இரண்டாம் மூன்றும் வகுப்புகட்குக் கையாளத் தக்கன :—

1. **ஆயத்த சம்பாஷணை.** பாடத்தில் வரும் பொருளைப் பற்றிப் பொதுவாக சம்பாஷிக்க. பாடத்தின் விஷயத்தை மாணவனுடைய அனுபவத்தோடு தொடர்பு படுத்தி உரையாடுக. பாடத்தின் தலைப்பில் படம் இருக்குமானால், அப் படம்பற்றி உரையாடுக. உரையாட்டுடன் கலந்து பாடத்திற் காணப்படும் அரும் பதங்கள், சொற்றொடர்கள், முதலியவற்றைக் கரும்பலகையில் எழுதிவைத்து, அவற்றை விளக்கி, உச்சரிக்கப் பயிற்சியும் (Drill) அளிக்க. இப் பயிற்சி பின் புத்தகத்தைத் திடமாகப் பிழையின்றி வாசிப்பதற்கு உதவியாகும்.

2. **மாணவர் அமைதியாக வாசித்துப் பார்த்தல்.** பொருள், உச்சரிப்பு, முதலியவற்றில் மாணவர்க்கு ஐயமேற்படுமாயின் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

3. **ஆசிரியர் மாதிரி வாசிப்பு.** ஒன்று அல்லது இரண்டு தடவை மாணவர் புத்தகத்தைப் பார்த்துப் பின்பற்றி வரக்கூடிய விரைவில், பொருள் விளங்க, நிறுத்தி நிறுத்தி வாசிக்கவேண்டும். இதுவே மாணவர்க்கு மாதிரி.

4. **மாணவர் வாசிப்புப் பயிற்சி.** அதே பகுதியைப் பல மாணவர் ஒருவர் பின் ஒருவராக, சப்தமாக வாசிக்க வேண்டும். பிழைகளைத் திருத்துக.

5. **விடயத்திற் கேள்வி.** பொருளை அறிந்து வாசிக்கிறார்களா? என்று அறிந்துகொள்ளும்படி இரண்டொரு கேள்விகள். பாடம் கதையாயிருக்குமானால் கதையை ஒரு மாணவன் சொல்லும்படி கேட்கலாம்.

## நான்காம் ஐந்தாம் வகுப்புகட்கு

1. **ஆயத்த போத சம்பாஷணை.** படம் காட்டியும், சிறுவர் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியும் சம்பாஷிக்க. கற்கவேண்டிய பாடத்தில் இடைப் பாகமாக இருக்குமானால் முன் பாகத்தில் கேள்வி கேட்க. கதையாயிருக்குமானால், கேள்வி கேட்பதோடு ஒரு மாணவனைக் கதையை ஆரம்ப முதல் தொடர்ச்சியாகச் சொல்லவும் கேட்கலாம். சிறிது சிறிதாகப் பலரையும் கதை சொல்லும்படி கேட்கலாம்.

2. **மாணவர் மௌன வாசிப்பு.** அரும் பதங்களையும் சொற்றொடர்களையும், மாணவர் கண்டு பிடிக்கவும், பின் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிதற்பொருட்டு அவற்றைக் குறித்துக்கொள்ளவும் வேண்டும்.

3. **அரும்பத விளக்கம்.** அருஞ் சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்குக. ஆசிரியர் பொருளைச் சொல்லிவிடுதல் முறையாகாது. பொருள் காட்டியும், படங்காட்டியும், சம்பாஷித்தும், வாக்கியங்களில் அருஞ் சொல்லைப் பொருத்தமாக அமைத்துக் காட்டியும், மாதிரி வாக்கியத்தைப்போல் மாணவரை வேறு வாக்கியங்கள் அமைக்கச் சொல்லியும், பொருளை மாணவர் மனதிற் பதிக்கவேண்டும். பொருள் விளக்கத்திற்கு அவசியமான இலக்கண அறிவைக் காரண அனுமானப் பயிற்சி முறைப்படி (Deductive application) பிரயோகிக்கச் செய்க.

4. **மாதிரி வாசிப்பு.** ஆசிரியர் தன் மாதிரியாக வாசித்துக் காட்டுக.

5. **வாசிப்புப் பயிற்சி.** பல மாணவர் வாசித்துப் பயில, முறை தருக.

6. **விடயத்திற் கேள்வி.** கேள்வி மூலம் மாணவர் கிரகிக்கும் திறமையை யறிக.

## ஆறாம் ஏழாம் எட்டாம் வகுப்புகட்கு

நான்காம் ஐந்தாம் வகுப்புகட்குக் கையாளும் படிகளையே கொள்க. ஒரு மாறுதல் மட்டும் கவனிக்க; இரண்டாவது படியா யாகிய மாணவர் மௌன வாசிப்பின்போது மாணவர் அகராதியை

உபயோகித்து அரும் பதங்கட்குப் பொருள் கற்கப் பயிற்சி தருக. அவர்களால் அகராதியின் உதவிகொண்டு அறிந்து கொள்ளக்கூடாத அருஞ் சொற்களையும் சொற்றொடர்களையும் மூன்றாவது படியில் ஆசிரியர் எடுத்து விளக்குக. கழகத் தமிழ்க் கையகராதி போன்றவை சிறுவர்க்குப் பயன்படுவன.

**அறிக!** ஈண்டுக் காட்டப்பட்ட படிகள் பாடத்தின் ஒரு பகுதியைக் (Paragraph) கற்பித்தற்கே. இதே முறைப்படி இரண்டு மூன்று பகுதிகள் கற்பித்த பிறகு மொத்தமாகத் தொகுத்து வினவுதல் வேண்டும். இதனால் பாடமீதல் எத்துணை பயன்பட்டிருக்கிறது என்று அறியலாம். இத்துடன் பாடம் முடிவடைகின்றது.

ஆயத்த சம்பாஷணையும், அருப்பத விளக்கமும் மாணவர், **பொருளையறிந்து, தெளிவாகவும், திருத்தமாகவும்** வாசிக்க உதவி புரிகின்றது. ஆசிரியர் மாதிரி வாசிப்பு, மாணவர் சப்தமாகவும் திருத்தமாகவும், தெளிவாகவும் வாசிக்க வழிகாட்டுகின்றது. மாணவர் வாசிப்புப் பயிற்சி, **பிழையற,** நல்ல திறமையுடன், **விரைவாக வாசிக்க** ஏதுவாகின்றது. ஆசிரியர் கேள்வி, வாசிக்கும்போதே பொருளை **கிரகித்துக்**கொள்ள மாணவனைத் தூண்டுகிறது. இங்ஙனம் வாசிப்பில் அடையவேண்டிய திறமைகளையெல்லாம், வாசிப்புப் பாடப் பயிற்சியின் மூலமாக மாணவர் அடையக்கூடும்.

**ஆழ்ந்து படிக்குமிடத்துப் பாடப் பகுதியைச் சம்பந்தப்படுத்தி அளித்தற்குரிய பயிற்சிகள் சில:—** (1) கதை நடித்தல், (2) பாடத்தில் வரும் பொருள்களை வரைதல், களிமண்ணாலும் அட்டையாலும் மாதிரிப் பொருள் செய்தல். (3) கேள்விகளுக்கு விடை எழுதல். (4) சொந்தமாக விடயத்தைச் சுருக்கி எழுதல். (5) கற்றுக் கொண்ட பொருள்பற்றிய பழமொழிகளை வருவித்தல். (6) பழமொழியை ஆதாரமாகக் கொண்டு கதை உண்டாக்கல். (7) கோடிட்டதை நிரப்பி வாக்கியமுண்டாக்குதல். (8) ஒரு பகுதியின் நடுநாயகமான கருத்தைக் கூறுதல். (9) பகுதிக்குத் தலையங்கமிடல். (10) இயற் சொற்களைக் கொடுத்து, பாடத்தில் வரும் அதே பொருள் தரும் திரிசொற்களைக் கேட்டல் முதலியன.

## மௌன வாசிப்பு

வாழ்க்கையிற் பெரிதும் பயன்படுவது மௌன வாசிப்பே. கல்வி வாழ்க்கைக்கு பயன்படவேண்டுமாயின் மாணவர்களை மௌன வாசிப்பில் நன்கு பழக்கவேண்டும். வாய்விட்டுப் படித்தல் வாசிப்பின் முதற்படி; மௌனமாகப் படித்தல் இரண்டாவது படி; ஆதலின் எழுத்தறிவு, சொல்லறிவு பெற்ற பின்னர் உரக்கப் படித்தலோடு மௌன வாசிப்புக்கும் போதிய வசதியளித்துப் பயிற்சி தரவேண்டும்.

**மௌன வாசிப்பாவது**, யாதொரு சப்தமும், ஒலிக் கருவிகளின் உழைப்புமின்றி வாசித்தல்; உதடுகள் அசையாமல் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கக் கண்கள் பாந்துசென்று, விடயத்தைப் பார்க்க, மனம் பொருளைக் கிரகித்துக் கொண்டே செல்லுதலே. உதடுகள் அசையாதிருப்பினும் சொற்களை வாய்விட்டு உச்சரியாதிருப்பினும், முணுமுணுப்புடனும், இராக ஆலாபனையுடனும் வாசிப்பதும், உதடுகளைச் சிறிது அசைத்து, குசுகுசுப்புடன் வாசிப்பதும் மௌன வாசிப்பு ஆகாது; சப்தத்தைச் சிறிது மட்டுப்படுத்தி வாசிப்பதே யாகும். இத்தகைய 'வாசிப்பினால் மௌன வாசிப்பிற்குரிய நற்பயன்களையடைய முடியாது.

**மௌனப் படிப்பின் சிறப்புகள் :—** (1) [illegible] அன்றாட வாழ்க்கையில், நமக்குப் பெரிதும் பயன்படுவது மௌன வாசிப்பே (2) மௌன வாசிப்பின் மூலமாகவே [illegible] வாசிக்க முடியும். நா உதடுகளின் அசைவின் விரைவுக்கு, ஓர் எல்லையுண்டு. கண்ணும் மனமும் அவ்வெல்லையைத்தாண்டிச்செல்லும் ஆற்றலுடையன. பேச்சைவிட விரைவாக, வாசிக்கும் திறமையடையும்போது, மௌன வாசிப்பே பயன்படும். மாணவரை எப்பொழுதும் சப்தமாகவே வாசிக்கச் செய்வதால், அவர்கள் விரைவில் விருத்தியடையாதபடி தடுக்கிறோம். (3) ஒரு புத்தகத்திற் குறிப்பிட்டதொரு கருத்தை எளிதில் கண்டறிவதற்கு அமைதி வாசிப்பே பெரிதும் பயன்படும். புத்தகத்தை முழுதும் விடாது வாசித்துக் காலத்தை வீணாக்காதபடி, நன்கு பயன்படுத்த வழிகாட்டுவது அமைதி வாசிப்பே. கண்கள் பாய்ந்து சென்று அவசியமில்லாப் பொருளைத் தள்ளிவிட்டு, அவசியமான

றைக் கவனித்துக் கண்டுபிடித்துப் பொருளை உற்று நோக்குவதற்கு உறுதுணையாகின்றது. (4) குறிப்பிட்ட ஒரு சொல்லைக்கண்டு கொள்வதற்கு மௌன வாசிப்பே அவசியம். மௌனமாகப் படிக்கத் தெரியாதவன் அகராதியில் ஒரு சொல்லைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கஷ்டம்? (5) பொருளைக் கிரகிக்கும் சக்தி மௌன வாசிப்பில் அதிகம் உண்டு. ஏனென்றால் வாசிப்பவனுக்குப் பொருளறிதலேயன்றி வேறு கருத்து இல்லை. பிறர் கேட்டால் பிழை என்று சொல்லிவிடுவார்களோ, என்ற பயமும் பிழையின்றி உச்சரிக்க வேண்டுமே என்ற வேறுபட்ட கருத்துடன், உள்ளத்தை இரு வழிகளிற் செலுத்தலும், இல்லை. (6) பொருளின்பத்தை அறிந்து சுவைத்தற்கு உதவியாகின்றது. (7) பிறர்க்கு இடையூறின்றி வாசித்தல் சாத்தியமாகின்றது. பொது மக்கள் வாசகசாலைகளிலும், வகுப்பில் எல்லா மாணவர்களும் ஒன்றுபோற் படிக்க வேண்டிய நேரத்திலும், கலாசாலை மாணவர் இல்லங்களில் மொத்தமாக மாணவர் உட்கார்ந்து படிக்கும் நேரங்களிலும் யாவரும் மௌனமாக வாசிக்காவிடின் எங்ஙனம் படிக்க இயலும். (8) மௌனத்திலே மனவடக்கமும் சுய முயற்சியும் உண்டு. கருத்தை ஒன்றிற் செலுத்துவதற்கு மனவடக்கம் இன்றியமையாதது. (9) உடற் சோர்வும், மனக்களைப்புமின்றி நெடு நேரம் வாசித்துக் கொண்டிருக்கக்கூடும். கல்லூரி மாணவரும், நூலாராய்ச்சியில் ஈடுபடும் பெரியாரும், நூற்றுக்கணக்கான பக்கங்களைத் தொடர்ந்து படிக்க வேண்டுமிடத்து, உரக்கக் கத்திப் படிப்பார்களாயின், அவர்களது கதி யாதாகும்? (10) பலர் குழுமியுள்ள இடத்தில் பிறரறியாமல் ஒன்றை மறைத்துப் படிக்க வேண்டியது எப்படியாயின், மௌனமாகப் படிக்கும் திறமையற்றவர்கள் செய்யத்தக்கது யாது? அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படாது என்று சொல்லக்கூடுமோ?

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இன்றியமையாத் திறமையைப் பெறுவதற்குப் பயிற்சி யளித்தல் ஆசிரியரது கடமையன்றோ?

**மௌன வாசிப்பில் மாணவர் பெற வேண்டிய திறமைகள்.** சப்தமாக வாசிப்பதிற் பெறவேண்டிய திறமைகள் ஐந்து. மௌன வாசிப்பில் மூன்றே. அவை :— (1) பொருளறியும் திறமை (Compre-hension). (2) விரைவு (speed) (3) குரல் அடக்கம்

இத்திறமைகளை உண்டாக்க, தக்க உபாயங்களைக் கருதித் தகுந்த பயிற்சி யளித்தல் வேண்டும்.

**1. பொருளறிந்து வாசித்தல்.** மாணவர் மௌனமாக வாசிக்கும்போது, வாசிக்கும் பகுதியில் அடங்கியுள்ள பொருளைத் தெளிவாகக் கிரகித்துக்கொண்டே செல்லவேண்டும். அத்திறமையை அளித்தற்குரிய பயிற்சிகள்:— (க) மின்னற்கொடி விளையாட்டின் மூலமாக வாசிப்புப் பயிற்சி யளித்தல்; சொல்லட்டைகளையும், வாக்கிய அட்டைகளையும் உபயோகிக்க. வகுப்புக்குத் தக்க நீண்ட வாக்கியங்களைத் தருக. (உ) கட்டளை அட்டைகளைக் காட்டி மறைத்துச் சொல்லச் செய்தல். வகுப்புக்கு ஏற்றவாறு கட்டளையில் விடயக் குறிப்புகளை அமைத்துக் கொள்க. உதா:— (அ) இங்கே வா — வகுப்பு 2. (ஆ) கீழே கிடக்கும் பென்சிலை எடுத்து மேசை மேலே வை.— வகுப்பு 3. (2) பொருளை மாணவன் நன்கு கிரகித்துக்கொள்ள வேண்டுமாயின், அவன் வாசிக்கும் விஷயமும், மொழி நடையும் எளிதாயிருக்க வேண்டும். **மாணவனது ஆற்றலுக்கேற்ற உரை நடை நூல்களைக் கொடுத்து,** மிகுதியும் வாசிக்கப் பயிற்சியளித்தல் வேண்டும். (3) மாணவனது சொற்களஞ்சியத்தின் நிறைவைப் பொருத்தது, அவனது கிரகிக்கும் திறமை. ஆதலின் பாடப் புத்தகத்தை ஆழ்ந்து கற்குமிடத்து, ஒழுங்கான முறைப்படி சொற்றொகுதியைப் பெருக்குக. மௌன வாசிப்பின் போதும், அகராதியைப் பயன்படுத்திப் புதுச்சொற்களைக் கற்கத் தூண்டுக. சொற்றொகுதியைப் பெருக்க ஆரம்பப்பாடசாலைப் பாடத்திட்டம் காட்டும் ஒழுங்கு முறை:—

வகுப்பு 1. சிறுவர் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் 300
,, 2. புதுச் சொற்கள் 400
,, 3. ,, 500
,, 4. புதுச் சொற்களின் தொகையையும், புதியகராக்குகளையும் அறிமுகப்படுத்தல்
,, 5. இன்னும் சுமார் 800 சொற்கள்

மேல் வகுப்புகட்குத் தனித்தனி புதுச் சொற்களின் எண்கள் விதிக்கப்படாவிடினும், ஆண்டுதோறும் 500 சொற்கள் வீதம் சொற்றொகுதியைப் பெருக்குதல் நன்று. ஆழ்ந்த படிப்பிற்குரிய

பாடப் புத்தகங்கள், மௌன வாசிப்பிற்குரிய நூல்கள், செய்யுட் பாடம், பத்திரிகை முதலியவற்றின் மூலமாக இச் சொற்றொகுதிப் பெருக்கம், எளிதில் இயலும்.

இயற் சொல், திரிசொல் எனச் சொற்கள் இருவகைப்படும். கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் பொருள் விளங்கும் சொல் இயற்சொல். கற்றோர்க்கே பொருள் விளங்கும் சொல் திரிசொல். இயற் சொற்களுள் பெரும்பான்மையாகப் பேச்சு வழக்கில் பயன்படும் சொற்கள் பொது வழக்கு இயற்சொற்கள் எனவும் ஏனையவை சிறப்பு வழக்கு இயற்சொல் எனவும் படும். முதல் மூன்று வகுப்புப்பாடப் புத்தகங்கள் பொதுவழக்கு இயற்சொற்களாகவே அமைந்திருத்தல் நலம். நான்காம் ஐந்தாம் வகுப்புப் பாடப் புத்தகங்கள் சிறப்பு வழக்கு இயற் சொற்களாலும், சிறுபான்மை திரி சொற்களாலும் அமைதல் நலம். பின், மேல் வகுப்புகளில் முறையான ஒழுங்குப்படி பாடந்தோறும் திரி சொற்கள் பயின்று வரல்வேண்டும். பெரும்பான்மை திரிசொற்கள் உரைநடையில் அமையுமாயின், தெளிவாய்ப் பொருளை அறிதற்கு அவை தடையாக நிற்கும்.

மாணவரின் சொற்றொகுதியைப் பெருக்குதற்குப் பின்வரு முறைகளைக் கையாளுக :— (1) பொருள்கள் (objects) மாதிரிப் பொருள்கள் (Models) படங்கள் முதலியன காட்டிச் சொல்லையும் பொருளையும் மனதிற் பதிக்க. (2) பலவாறு சம்பாஷித்து, அச் சொற்களை மாணவரே உபயோகிக்கச் செய்க. (3) வினைச் சொற்களாயின், செய்து காட்டிச் சம்பாஷிக்க; மாணவரே, அவ்வினையைச்செய்யுமாறு கட்டளையிட்டு, வாக்கியத்தில் அமைத்துச் சொல்லச் செய்க. (3) ஒரு பொருட் பன்மொழிகளைக் கேட்டு, புதுச் சொல்லையும் உடன்கூட்டிக் கரும்பலகையில் எழுதிவைக்க. உதா :— அதிகம், மிகுதி, சால, உறு, தவ, நனி, கூர், கழி. (4) ஒருபொருட் பன்மொழிகளைக் கேட்டுப் புதுச் சொல்லை, ஆசிரியரே கூட்டிக்காட்டுக. உதா :— அகம், மனம், மனை, பாவம், பூமி, உள். (5) புதுச் சொல்லைப் பொருத்தமாக வாக்கியத்தில் அமைத்துக் காட்டி, சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் கண்டுகொள்ளச் செய்க. பின் அங்ஙனமே மாணவர் பல வாக்கியங்களை அமைத்துப் பயிலச் சந்தர்ப்பம்

அளிக்க. பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படினே, பொருள் தெளிவாக மனதிற்பதியும். ஆதலின் வாய்ப்பு அளிக்க. (6) ஆசிரியரே சொல்லுக்குப் பொருளுரைத்தல், சுவையான முறையாகாது. ஆதலின் இம்முறை சாதாரணமாகக் கையாயகத் தக்கதன்று. சிற்சில அரிய சந்தர்ப்பங்களிற் கூறலாம். எனினும் பொருளை மாணவர் தெளிவாக அறிந்துகொண்டாரா என்று அறிதற்பொருட்டு மாணவரை வாக்கியம் அமைக்கச் செய்க. 'நிகழ்ந்து-நடந்து' என்று பொருள் சொல்லிவிட்டு மாணவரை வாக்கியம் உண்டாக்கக்கேட்கும்போது, "நான் ஆற்றிற்கு நிகழ்ந்து சென்றேன் என்று கூறுவாராயின், சொல்லின் பொருளைத்தெளிவாக அறிந்துகொண்டதாகக் கருத முடியுமா? (7) ஒழுங்காக நாடோறும் மாணவர்தத்தம் தகுதிக்கேற்ப சில புதுச் சொற்களைக் கற்று அவற்றைப் பொருளுடன், அல்லது சொற்பிரயோக வாக்கியங்களுடன் ஒரு தனிப்பட்ட குறிப்பேட்டில் எழுதி வரச் செய்க. அவற்றை முதலிலிருந்து இறுதிவரை இடையிடையே திருப்பிப் பார்ப்பதனால், சொல்லறிவு, தெளிவும் திறமும் அடையும். (8) பாடப் புத்தகமேயன்றி பல பிற புத்தகங்களையும், பத்திரிகை முதலியவற்றையும் வாசிக்கவும், அகராதியை உபயோகிக்கவும் ஊக்கமுண்டாக்குக.

2. **விரைவாக வாசித்தல்.** விரைவின் குறைவிற்குப் பல காரணங்களுள. காரணங்களை நீக்கிப் பயிற்சியளிக்க. (1) வாசிக்கும் பாகத்தின் மொழிநடையும், பொருளும் மாணவர் திறமைக்கு மிஞ்சி அரியனவாயமைந்திருத்தல். பொருள் விளங்காவிடத்து மீண்டும் வாசித்து, ஆழ்ந்து யோசிக்கவேண்டுமன்றோ? அதனால் விரைவு தடைப்படும். ஆதலின் எளிய நடைப் புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் செய்க. கீழ் வகுப்புகளில் சிறு கதைப் புத்தகங்களை வாசிக்கக் கொடுத்தல் நலம். (2) **காட்சியின் நீட்சி** (eye-span) குறைபடுவதால் விரைவு குறையும். ஓர் இமைப் பளவில் மொத்தமாக நம் பார்வைக்குள் அகப்படும் சொற்றொகுதியே காட்சியின் நீட்சி. இந் நீட்சி அதிகரிக்குமாயின் விரைவும் அதிகப்படும். கண் பார்வை வாசிக்கும்போது ஒரே போக்கில் நில்லாது முன்னேறிச் செல்லுகின்றனவா? இல்லை. இடையிடையே நிற்பதையு சிற்சில சமயங்களில், பின்சென்று வாசித்துவிட்டபாகத்தையே

மீண்டும் வாசிக்கின்றதையும் உணர்கின்றோம். இதனால் காட்சியின் நீட்சி குறைபடும். நீட்சியை அதிகரிக்க எளிய சொல்லும் பொருளுமடங்கிய நூல்களைக் கொடுத்து வாசிப்புப் பயிற்சியளிக்க. (3) கருத்தையறியப் பயிற்சிகொடுப்பதால் விரைவுண்டாக்கலாம். ஒரு கருத்தின் வடிவம் (Thought unit) ஒரு வாக்கியத்திலும், சிற்சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களிலும் அடங்கிக் கிடக்கும். கருத்தையறியும் நோக்கத்தோடு வாசிக்கும் கண் பார்வை பாய்ந்து செல்லும்; காட்சி நீட்சியடையும்; அதனால் விரைவுண்டாகும். (4) வாசிப்பில் விரைவுண்டாக்குவதற்குத் தனிப் பயிற்சிகள் அளிக்க வேண்டும். காலம் வரையறுத்த வாசிப்புப் போட்டி (Reading race) ஓர் நல்ல முறை. 5 நிமிஷம் கொடுத்து எல்லா மாணவரையும் ஒன்றுபோல் ஒரு பாடத்தை ஆரம்ப முதல் வாசிக்கச் செய்க. பின் வரிகளை எண்ணி விரைவுக்கு ஏற்றவாறு மாணவர் பெயர்களை வரிசைப்படுத்துக (Rank). வாரத்திற்கொருமுறை இப் பயிற்சியளித்துக்கொண்டே வருக. விரைவில் விருத்தியைக் காணலாம். (5) குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன் (Motive) வாசிக்கப் பயிற்சி தருக. உதா:— ஒரு கதையைச் சொல்லிக்கொண்டே வந்து, ஆர்வமுண்டாக்கும் ஒரு கட்டத்திற்கு வந்தவுடன், "பின் என்ன நேர்ந்தது. வாசித்துக் கண்டுபிடிக்க" என்று கூறுக. ப்ராஜெக்டுக்கு வேண்டிய விஷய அறிவு பெறும் பொருட்டு வாசிப்பதால் பொருளை கிரகிக்கும் சக்தி விருத்தியடையும்.

மௌன வாசிப்புப் பயிற்சிக்காக மாணவர்க்கு அளித்தற்குரியவை:-

1. தனி வேலைப் பயிற்சித் தாள்களை மாணவர் கையிற் கொடுத்து செய்து முடிக்கச் சொல்க. உதா:— (1) துண்டுபடுத்தப்பட்ட வாக்கிய அட்டைகளை இணைத்தல் (2) கலைத்து வைக்கப்பட்ட சொற்களை வாக்கியமாக அமைத்தெழுதல் (3) கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் புத்தகத்தில் விடை கண்டுபிடித்து எழுதல். (4) கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு ஆம், அல்ல; என்று விடைபகர்தல். (5) சொற்களை இசைப்படி சேர்த்தல், முதலியன. இவற்றிற்கு விளக்கமான உதாரணங்கள் முன்னரே தரப்பட்டுள்ளன.

(2) சிறுகதைப் புத்தகங்கள், மாணவரது தனித்தனி மொழியறிவுக்கு ஏற்ற எளிய நடைப் பத்திரிகைகள் முதலியன, சிறுவர்க்

கேற்ற பல பத்திரிகைகள் வெளிவந்துள்ளமை பாராட்டற்குரியது. பல பத்திரிகைகளிருந்து சிறுவர்க்கேற்ற பகுதிகளை வெட்டியெடுத்துச் சேர்த்து வாசிக்கத் தருக.

3. **குரலை அடக்கி வாசித்தல்.** இத் திறமை பெறுமாறு பயிற்சியளிக்கும்போது, உதடுகளை ஒன்றோடொன்று பொருத்தி வைத்து, அதன்மேல் சுட்டு விரலைச் செங்குத்தாக வைத்துக்கொண்டு சிறிது நேரம் வாசிக்கச் செய்க. குரல்வளையின் மேல் விரல்களை வைத்துத் துடிப்பு ஏற்படுகின்றதா என்று கவனிக்கச்செய்க. துடிப்பு ஏற்படுமாயின் வாசிப்பு மௌன வாசிப்பு அன்று என்று அறியச் செய்க. வாசிப்புப் பாடம் நடத்தும்போது மௌன வாசிப்புக்குரிய இடத்தில் இவற்றை கவனித்துத் திருத்துக. மௌன வாசிப்புக்கும் உரத்த வாசிப்புக்குமுள்ள தகவுப் பொருத்தமும், மௌன வாசிப்புக்காகும் விடயங்களும், பாடத் திட்டத்திற் காண்க.

**வாசிப்புப் பழக்கம்.** பள்ளிக்கூடத்தில் மாணவர் வாசிக்கப் பயிலுகின்றனர். இவ்வாறு பயின்று பள்ளியிற் பெற்ற வாசிப்புத் திறமையைப் பின்னர் எக்காலும் வாழ்க்கையிற் பயன்படுத்த வேண்டும். அதற்காகவே வாசிப்புக் கற்பிக்கிறோம். 'பாடமேறினும் ஏடது கைவிடேல்,' 'ஓதுவ தொழியேல்' 'ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்' என்னும் நம் முன்னோரின் பொன்னுரைகளைப் போற்றி வாழவேண்டும். ஆனால் உலகிற் பலர் மிக முயன்று அரிதிற்பெற்ற எழுத்தறிவை, வாசியாமற் பாழாக்கி விடுகின்றனர். இதற்குக் காரணம் ஆசிரியர்கள் என்றே சொல்லவேண்டும். மாணவராயிருக்கும்போது ஆசிரியர், மாணவர்மாட்டு வாசிப்புத் திறமையை உண்டாக்குகின்றனரேயன்றி **வாசிக்கும்** பழக்கத்தை உண்டாக்குகிறதில்லை. வாசிக்கும் **பழக்கத்தையும்**, வாசிப்பின் மீது **ஆர்வத்தையும்** இளமையிலேயே உண்டாக்கவேண்டும். இதன் பொருட்டு, குறிப்பிட்ட நோக்கத்துடன் வாசிக்கப் பயிற்சியளித்தல் வேண்டும்.

வாசிப்பின் நோக்கங்களாவன :— (1) விடய அறிவு பெறுதல் (2) இன்பமனுபவித்தல், (3) உள்ளக் கிளர்ச்சி யடைதல், (4) மொழியறிவில் விருத்தியடைதல்.

1. **விடய அறிவு** பெறும்பொருட்டு வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்க ஒரு முக்கிய வழி, (1) ப்ராஜெக்ட் முறையைக் கையாடல். ஏதாவது ஒரு ப்ராஜெக்ட் செய்யும் பிள்ளைகள், அதன் சம்பந்தமாகத் தங்களுக்கு வேண்டிய அறிவைப் பெறுவதற்காக ஊக்கத்துடன் வாசிக்க முற்படுவார்கள். தமிழ் மொழிப் பயிற்சியில், தான் கருதிச் செய்யுமுறை இங்ஙனம் பேருதவியாகின்றது. (2) சிறுவர் கருத்தைக்கவரும் விநோதங்கள் (Hobbies) கைவேலை முதலியவற்றைப்பற்றியும் அறியஆவல் கொள்வர். அவற்றைப்பற்றி அறிவிக்கும் புத்தகங்களை நாம் சேகரித்துக்கொடுத்து, அவ் வாத்திரத்தை வளர்க்கவேண்டும். (3) சிறுவர், அன்றாடக வாழ்க்கையிற்பயன்படும் பொருள்கள், உதாரணமாக, மோட்டார், டாக்கீஸ், பந்து விளையாட்டு முதலியவற்றைப்பற்றி அறிய ஆசைப்படுவர். அதைத் திருப்திப்படுத்த வேண்டிய புத்தகங்களைக் கொடுத்தல் நலம். (4) **சுரகந்தர்க்கம்** முதலிய விளையாட்டு முறைகளை நாம்வகுப்பில் கையாடும்பொழுது தாங்கள் தெரிந்துகொண்ட பொருளைப் பற்றி வேண்டிய சிறப்பறிவு பெறும்பொருட்டு வாசிக்க ஆசைப்படுவர். இவ்வாறாக, விடய அறிவைப் பெறும்நோக்கத்தை மாணவர் மனதில் உண்டாக்கி, வேண்டிய புத்தகங்களைக் கொடுத்து, வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்க வேண்டும்.

2. **இன்பமடைதல்.** சிறுவர்க்கு இன்பமூட்டுவது சிறு கதைகள்; ஆதலின் கீழ் வகுப்புக்களில் சிறுவர்க்கேற்ற சிறிய, இன்பமூட்டும் கதைப் புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் செய்க. வகுப்பு உயர உயர நீண்ட கதைகளைக் கொடுக்கலாம். இன்ப வாசிப்புக்காகக் கொடுக்கப்படும் புத்தகங்கள், எளிதில் விளங்கக்கூடியதாயிருத்தல் வேண்டும். அரிதாயிருக்குமாகில் மாணவர் மலைவு கொள்வர். இன்பம் உண்டாகாது. ஆசிரியர் உதவியின்றித் தாங்களே வாசித்துப் பொருளறிந்து கொள்ள வேண்டும். பெரியோரைப்போல் மனதை ஒற்றுமைப்படுத்தித் தொடர்ந்து எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் திடமான நோக்கமும், சிறுவரிடம் கிடையாதாதலால், வாசிப்பை நிறுத்தி விடுவர். மிகுதியும் எளிதானவற்றையும் தரக்கூடாது.

ஒரு வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவனின் மனோவலிமையையும், அறிந்து, அவனவனுக்கேற்ற புத்தகங்களைக்

கொடுக்கவேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவன் தன்மையை
யும், வாசகசாலையில் உள்ள ஒவ்வொரு புத்தகத்தின் தன்மையை
யும் அறிந்திருத்தல் வேண்டும். இன்பத்தின் பொருட்டு வாசிக்
கப்படும் புத்தகங்களை, வகுப்பில் அன்றி வாசிப்புப் பயிற்சிக்
கென்றமைக்கப்பட்ட பாடநேரத்திலும் வீட்டில் ஓய்வு நேரத்
திலும் வாசிக்கலாம். வகுப்பில் வாசிக்கும்பொழுது ஆசிரியர்,
அவன் உண்மையாகவே இன்பத்தில் ஆழ்ந்துவிட, இடையிடை
யே வழிகாட்டி உதவி செய்ய வேண்டும். தனித்தனி சென்று
உதவிபுரிக. வாசிப்பில் இன்பம் தானாகவே உண்டாவதில்லை.
நாம் அவர்களைப் பழக்க வேண்டும்.

### இன்பத்தில் ஈடுபடுத்தச் சில உத்திகள்

(1) வாசிக்கக் கொடுத்திருக்கும் புத்தகத்தில் அடங்கிய
காட்சிகளுள் ஒன்றை அழகுபடத் தீட்டிக் காட்டி "அதனைப்
பற்றிய விவரத்தைப்புத்தகத்தில் காண்க" என்று,கூறி வாசிப்பில்
கவனத்தைச் செலுத்தி வைக்க. (2) ஒரு கதையை மிக இன்ப
மூட்டும் இடம்வரைக்கும் சொல்லி, பிற்பாகத்தையும், முடிவை
யும் புத்தகத்தில்காண்க, என்க. ஒரே புத்தகத்தின் பிரதி, மாணவர்
யாவர் கையிலுமிருக்குமானால், எல்லாருக்கும் ஒரே நேரத்தில்
ஆசிரியர் இன்ப வழிகாட்டவும், மாணவர் அதில் அடங்கியுள்ள
பொருளைப்பற்றி ஒருவரோடொருவர் தர்க்கித்துக் கொள்ளவும்
சவுகரியமேற்படும். (3) பத்திரிகைகள் வாசித்தல், இன்பம்
உண்டாக்குவதற்கும், விடய அறிவு பெறுவதற்கும், பொதுக்
கருவியாகும். நான்காம் வகுப்புமுதல் பத்திரிகை வாசிப்பதில்
மாணவரைப் பழக்கல் வேண்டும். பத்திரிகையிலும் துண்டுப்
பிரசுரங்களிலும் பெறக்கூடிய அறிவு விடயங்கள் எண்ணிறந்
தன. பத்திரிகை முழுவதையும் பயன்படுத்த அறியாதநிலைமை
யில், சிறுவர்க்கு வேண்டிய பகுதியை மட்டும் வெட்டித் தனிப்
படச் சேர்த்து, இவ்வாறு ஒரு பத்திரிகையுண்டாக்கிக் கொடுத்
தல்வேண்டும். செய்திப் பலகை உண்டாக்கலாம். சிறுவர் பத்திரி
கை அவசியம். இதனால்பெறும் அறிவைப்பயன்படுத்த மாணவர்
தம் தனிப் பத்திரிகையில் வசதியும் ஏற்படுகின்றது. மேல் வகுப்பு
மாணவர் இருவேறு பத்திரிகைகளை வாசித்து, வேற்றுமைகளை
உற்றுநோக்கி, உண்மையை நிர்ணயிக்கு முயற்சியிற்

கருத்தைச் செலுத்தப் பயிற்றுக. இடையிடையே விட்டுவிட்டு வாசித்து, வேண்டிய குறிப்பை மட்டும் அறிதல், கீழ் வகுப்புக்களில் பொருளடக்கக் குறிப்பையும், மேல் வகுப்புக்களில் அகராதியையும் உபயோகித்தல் முதலியவற்றிற் பயிற்சி தருக.

3. **உள்ளம் பக்குவமடைதற் பொருட்டு** நீதி நூல்கள், சன்மார்க்க நூல்கள், தத்தம் மத நூல்கள், விசேஷித்த பொருள் பற்றிய ஆன்றோர் சொற்பொழிவுகள், நாட்டுப்பற்று, மொழிப் பற்று, வீரம், தெய்வபக்தி, சேவை முதலியவற்றை யூட்டும் நூல்கள் முதலியவற்றை வாசிக்கப் பழக்குவிக்க. சிறுவர்க்கு நீதிகளைப் போதிக்கு இயற்றியிருக்கும், **சன்மார்க்கக் கதைகளைத்** தருக. தனி நீதி போதனைகள் சிறுவர்மனதிற் பற்றுவ. உண்மை, தியாகம், முயற்சி, தேச பக்தி முதலியவற்றை விளக்கும் நல்ல கதைகள், அவரது மனதைக் கவர்ந்து, அவ்வத் தன்மைகளை யுண்டாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. சிவாஜியைப் பெரிய வீரனாக்கியது, அவன் இளமையிற் கேள்விப்பட்ட, மகாபாரத வீரர்களைப் பற்றிய வரலாறுகளே. கதைகள் கூறும்போது கதாநாயகர்களின் நடக்கைக்கேற்ப சிறுவர்க்கு அவர் மீது வெறுப்போ, விருப்போ உண்டாவதை நாம் பார்க்கலாம். அவ்வுணர்ச்சி அவர் மனதில் நல்லுணர்ச்சியை யுண்டாக்கும் அறிகுறியே யாகும். நன்மையில் நாட்டமும், தீமையையகற்றும் விருப்பமும், அவர் மனதில் நிகழ்கின்றது, என்பதை அது காட்டுகிறது.

4. **மொழியறிவில் முன்னேற்றம்.** சிறந்த தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்பதனால் மொழி யறிவு விருத்தியடைகின்றது. அவ்வறிவு அரும்பெரும் நூல்களை வாசித்து இன்பமடையவும், தன்கருத்தை யாவரும் ஒப்பத் தெள்ளிதின் விளக்கிக் கூறவும் தக்கஆற்றல் தரும். இத்திறனை அடைய வேண்டுமென்ற நோக்கத்தை மாணவர் இளமையிலேயே கொள்ள வழி நடத்துக.

பாடப் புத்தகத்தைப் படிக்கும், நோக்கங்களுள் இதுவும் ஒன்றாகக்கொள்ளல் வேண்டும். நயங்களையும், சொல்லழகு, பொருளழகுகளையும் இடையிடையே எடுத்துக்காட்டவேண்டும் நல்ல நடையை வாசித்து இன்புறவும், தாமும் நல்லநடை எழுத வேண்டும் என்று விரும்பவும் வழி நடத்துக. நல் நடை எழுதும்

ஆற்றல் பெறுதற்கு, படிக்கும் நூல்களில் ஆங்காங்கே காணப்படும் நல்ல பகுதிகளை நெட்டுருப் பண்ணச் செய்தல் நலம். பாடப் புத்தகத்தில் உயரிய இலக்கிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் இடம்பெற வேண்டும். அது அவ்விலக்கியங்களைக் கற்க வேண்டுமென்ற ஆவலை மாணவரிடம் எழுப்பும். மொழியறிவு முன்னேற்றத்திற்கு எண்ணிறந்த நம் தமிழிலக்கியங்கள் ஏற்ற கருவியாகும்.

**வாசகசாலையும் புத்தகாலயமும்.** மேற்காட்டிய நோக்கங்கள் நிறைவேற ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு நல்ல வாசகசாலையும் புத்தகாலயமும் இருக்க வேண்டும். மாணவர் அதை பயன்படுத்தச் செய்யவேண்டும். புத்தகங்களை அழகுபெற அடுக்கிவைத்திருத்தல் மட்டும் போதாது. வாரத்திற்கு ஒரு முறை கொடுத்து வாங்க வேண்டும்.

**மாணவர்க்குப் பயன்படும் புத்தகங்களின் தன்மைகள்**

(1) கொடுக்கப்படும் வகுப்புமாணவர் திறமைக்கு ஏற்றதாயிருத்தல்வேண்டும். (2) எளிய நடையும், எளிதில் விளங்கக்கூடிய சிறிய வாக்கியங்களும் உடையதாயிருத்தல் வேண்டும். (3) கதை இலேசாய்ப் பின்பற்றக்கூடியதாயிருக்கவேண்டும். உயர்ந்த வகுப்புகளுக்குக் கதைகள், பல சிக்கல்களும் தொடர்புமுடையதாயிருக்கலாம். பலகிளைக் கதைகள் (பஞ்சதந்திரம்போல்) தொடர்ந்து வரலாம். நவீனங்கள் [Novels] போல் நெடுந்தூரம் கதைத் தொடர்பு முடிவுகாட்டாமலே செல்லலாம். (4) ஆசிரியர் கருத்து விளங்காதபடி செய்யும், மேற்கோள்களும், பிற வரலாறுகளும் மிகுதியாக இருத்தல்கூடாது. (5) எழுத்து, தெளிவாகவும், பார்வைக்கு சுலபமாகவும் இருக்கவேண்டும். (6) பொருளை விளக்குவதற்கு வேண்டிய நல்ல அழகிய படங்கள் ஆங்காங்கே அமைந்திருத்தல் வேண்டும். (7) நால்வகை வாசிப்பு நோக்கங்களுக்கும், வாய்ப்பு அளிக்கும் பலவகைப் புத்தகங்கள் வாசகசாலையில் இருக்கவேண்டும்.

## ஐந்தாம் அதிகாரம்—செய்யுட் பயிற்சி

தாய்மொழியில் பேசவும், வாசிக்கவும், எழுதவும், திறமை பெறப் பயிற்றுவித்தல் எவ்வளவு முக்கியமோ, அது போலவே இலக்கிய நூல்களை ஆர்வத்துடன் கற்கவும், அவ்விலக்கியச் சுவையில் ஈடுபட்டு இன்பமனுபவிக்கவும் அவர்களைப் பயிற்றுவித்தல் முக்கியம். தமிழ் மொழி இலக்கியவளம் நிறைந்தது. நம் நாட்டுப் புலவர்கள், பக்தர்கள் பாடிவைத்துள்ள கணக்கற்ற அழகிய நூல்களால் உண்டாகும் இன்பத்தை நம்மவர் அனுபவிக்க வேண்டியது இன்றியமையாததன்றோ? அவ்வாறு இன்பமடையும் திறமையை இளமையிலேயே பெறுமாறு பயிற்றுவித்தல், தமிழாசிரியர்தம் முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கொள்ளல் வேண்டும். ஆகையால் மாணவர் கல்விபயில ஆரம்பிக்கும் காலமுதலே இலக்கியப் பயிற்சியும் அவர்களுக்கு அளித்தல்வேண்டும். முதல் வகுப்பில், தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ள உயரிய இலக்கிய நூல்களையும் பெருங்காப்பியங்களையும் பயிலமுடியாது. ஆனால் அப்பயிற்சிக்குஅடிகோலுதல் இப்போதே ஆரம்பிக்கவேண்டிய செய்கையாகும்.

**சிறுவர்களுக்கு, அவர்தம் இயல்புக்கும் அறிவிற்கும் இயைந்த செய்யுட்களைக்** கற்பிக்கவேண்டும். அவையாவன:— அசைப் பாட்டு, தாலாட்டுப் பாட்டு, அபிநயப் பாட்டு, தெம்பாங்கு போன்ற எளிய நடைப் பாட்டு, விடுகதைகள் முதலியன சிறுவர்க்கு இன்பம் அளிப்பன. சிறுவர்களுக்கு இசையினும், அசையினும், சந்தத்தினும் மிகுந்த இன்பமுண்டு; அதை அவர்கள் தங்கள் ஆட்டத்தாலும் பாட்டாலும் எப்போதும் தெரிவிப்பதைக் காணலாம். ஏதாவது எப்போதும் உளறிக்கொண்டிருப்பார்கள். அந்த உளறலில் பொருள் இல்லையானாலும், சந்தமும், தாளமும் அமைந்திருப்பதைக் காணலாம். அவர்கள் ஆட்டமும் அபிநயமும் அச்சந்தத்திற்கிசைந்தே இருக்கும். இவ்வியற்கைச் சுவையை அஸ்திபாரமாகக் கொண்டு, சந்தவின்பத்தில் ஈடுபடச் செய்யவேண்டும். அதற்கு அசைப் பாட்டு முதலியன, தக்க கருவிகளாகும்.

இப்பிள்ளைப் பாட்டுகள், **எளிய நடையில்** அமைந்திருக்க வேண்டும். அதே சமயத்தில் **மோனை, எதுகை, இயைபு** முதலிய

**தொடையழகும், சந்தவின்பமும்** பொருந்தியிருக்க வேண்டும். **மோனை**யாவது, முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது,
உதா:— அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த.
**எதுகை**— இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.
உதா:— கன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய.
**இயைபு**— இறுதிக்கண் நின்ற எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது.
உதா:— **புயலே குழலே மயிலே இயலே.** எளிய நடையின் பொருட்டுச் செய்யுளின் அழகைக் குறைத்து விடக்கூடாது. மோனை எதுகையற்ற பாடல்கள், செய்யுட்கள் ஆகா. அவற்றைப் பயிற்றுவித்தலால் செய்யுளின் அழகில் ஆநந்தமடையும் தன்மையை மாணவர்க்கு உண்டாக்கவுமுடியாது. ஆகையால் சிறுவர் கற்கும் எத்தகைய பாடல்களும், முற்றிலும் அழகுவாய்ந்த செய்யுட்களாகவே இருத்தல் வேண்டும். **சிறுவர் அறிந்துகொள்ளக்கூடிய அழகிய கருத்துக்களை,** சொல்லழகு, பொருளழகு தோன்ற எடுத்துக் காட்டுவதாயிருக்க வேண்டும். சிறுவர்தம் **வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு**டையதாயிருத்தல் வேண்டும். இத்தொடர்பே செய்யுட்கள் மீது அவர்களுக்கு மிகுந்த ஆர்வத்தையும், இன்பத்தையும் உண்டாக்கும். அஃது இல்லையெனின் மாணவர், தமக்கும் செய்யுளுக்கும் எத்துணைச் சம்பந்தமுமில்லை யென்றும், அதனைக் கற்பது வீண் என்றும் நினைப்பர். இந் நினைவு வெறுப்பையே உண்டாக்கும். வெறுப்புடன் ஆசிரியருக்கு அஞ்சிக் கற்கும் கல்வி இன்பமூட்டாது. செய்யுளைக் கற்பிக்கும் நோக்கமோ, இன்பம் அநுபவிக்கச் செய்தல்.

பின்னர் வகுப்பு உயர உயரத் தமிழ்ப் பெரும் புலவர்கள் பாடிய, தன்மை நவிற்சி, நடைமுறை நவிற்சிப் பாட்டுகளையும் (Narrative poems) பின்னர் வருணனைப் பாட்டுகளையும் கற்பிக்கலாம். நீதி நூல்களையும், பெருங்காப்பியங்களையும் கற்பிக்கலாம். நீதி நூல்களைத் தமிழிற் போதிய தேர்ச்சி பெற்ற பின்னரே தருதல் வேண்டும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய சிறுவர் பயிலும் நூல்களிற் பல செய்யுட்கள் மாணவர் மன நிலைக்கும், மொழியறிவுக்கும் பொருந்தமற்றவை. அவர்தம் வாழ்க்கையோடு எத்துணையும் தொடர்பற்றனவாகக் காணப்படும். "அறம் செய விரும்பு" என்னும் ஆத்திசூடிச்

செய்யுள் இரண்டாம் வகுப்பிற் கற்பிக்கப்படுகின்றது. **அறம்** என்ற சொல்லின் பொருள் நுட்பமும், **செய** என்பதில் வரும் விகார இலக்கணமும், **வீடு** என்னும் சொல்லுள் அடங்கிக் கிடக்கும் உயரிய தத்துவங்களும் பரிமேலழகருரையைப் படித்தறியும் திறமை வாய்ந்தவர்களே அறிந்து இன்புறத் தக்கன. இச் செய்யுள் சிறுவர்க்கு எங்ஙனம் பொருந்தும்? தத்தம் மாணவர் மனநிலைக்கு ஏற்ப, ஆசிரியர் செய்யுளைத் தெரிந்தெடுத்துக் கற்பித்தல் வேண்டும். தெரிந்தெடுக்கும் உரிமை நமக்கில்லையே, வாசகப் புத்தக ஆசிரியர் தெரிந்தெடுத்து அச்சிட்டவற்றையன்றோ கற்பிக்க வேண்டியதிருக்கிறது எனக் குறை கூறலாம். ஆசிரியர் அவற்றுடன் தாம் தெரிந்தெடுத்த தகுதியான செய்யுட்களைக் கற்பிப்பதால் ஏற்படும் குற்றம் யாது?

## செய்யுளை மொத்தமாக வாசித்தல்

எவ்வகுப்பில் செய்யுளைக் கற்பித்தாலும், முதலாவது அச்செய்யுள் முழுவதையும் முதலில் ஆசிரியரும், பின் மாணவருமாக வாசிக்க வேண்டும். இவ் வாசிப்பு, பொருளை வெளிப்படுத்தும் வாசிப்பாயிருக்கவேண்டும். முதலில் செய்யுளை அடி பிறழாமலே பதச்சேதம் செய்தும் பின் அன்வயப்படுத்தியும் வாசித்துக் காட்டுக. இவ் வாசிப்பிலேயே பாதிக்குமேல் பொருள் விளங்கி விடவேண்டும். ஆசிரியர் தானே பொருளை உணர்ந்து, வாசித்தால்தான் பொருள் விளங்கும். அவசியமானால் இரண்டு மூன்று முறையும் வாசித்துக் காட்டலாம், அவசியமானால் இயற்கையான அபிநயங்களுடன் வாசிக்கவேண்டும். மொத்தமாக வாசிப்பதே செய்யுளின் பொருள் அழகை வெளிப்படுத்தும். பொருள் விளங்கின பிறகு ஓசையின்பத்தும், மோனை எதுகைகள் புலப்படும்படி அவற்றை அழுத்திக் காட்டியும் வாசிக்க. அவ்வாறே இராகத்துடனும் பாடிக்காட்டி மாணவரையும் பாடப் பயிற்றுக.

செய்யுளை இசையுடன் பாடுதல் அவசியம். ஏனெனில்:— (1) இசை இன்பமளிப்பது; இசையோடு கூடிய செய்யுளும் இன்பமளிக்கும். (2) இசையோடு பாடும்போது செய்யுளின் சொல்லழகும், சந்தவின்பமும் நன்கு புலப்படும். செய்யுட் பாடத்தில் மாணவர் பொருளழகை அறிந்து இன்புறுதல் மட்டும் போதாது,

சொல்லின்பத்தையும் நன்கு சுவைக்க வேண்டும். (3) இசையோடு கற்கும் பாடல் நன்கு மனதிற் கிடக்கும். (4) இசையின்றிப் பாட்டு ஒப்பிப்பதைவிட, இசையுடன் சொல்லுதல் எளிது. தட்டுப்பாடு தோன்றாமற் சொல்லலாம். (5) மற்ற செய்யுட்களைச் சான்றுகளாக எடுத்துக்காட்ட அவசியம் ஏற்படும் பொழுது சொற்பொழிவிடையே இசையுடன் சொல்லுவதே கேட்போர்க்கு இன்பமூட்டி உள்ளத்தையும் ஒருங்கே பிணிக்கும்.

செய்யுட்பாடத்தின் நோக்கங்களாவன :— (1) புலவனது உள்ளத்தின்கண் உதிக்கும் உணர்ச்சி யாதென்றும், அதனை அவன் எங்ஙனம் வெளிப்படுத்துகிறான் என்றும் மாணவர் அறிதல். (2) இயற்கையின்கண் புலவனது ஈடுபாட்டையும், அதனால் அவன் அடையும் இன்பத்தையும், மாணவர் அறிந்து பாராட்டவும், அவ்வாறே தாமும் ஈடுபட்டு இன்பமடையவும், வழிகாட்டல். (3) செய்யுளின் கருத்தைச் சிறுவர்கள் உள்ளத்தில் உணரத்தக்க சூழ்நிலையை உண்டாக்குதல். (4) புலவனது கருத்தின் அழகையும், அதனை அவன் வெளியிடுதற்கு உபயோகிக்கும் சொல்லின் அழகையும் சிறுவர் அறிந்து வியந்து பாராட்டச்செய்தல் (5) வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனும் இன்பவெள்ளத்துள் திளைக்கச்செய்தல் (6) புலவனது கற்பனா சக்தியைக் கண்டு பாராட்டி, அதனால் அத்தகையதோர் கற்பனைத் திறனை மாணவன் அடைய உதவி செய்தல். (7) செய்யுளின் மூலமாகப் புலவன் எழுப்பக் கருதுகின்ற உள்ளவுணர்ச்சிகளை மாணவர் மனதிற் கிளர்ந்து ஒளிரச் செய்தல். (8) பொருளை மனத்தால் அறியச் செய்தல் போதாது. உள்ளத்தில் உணரச் செய்தல் வேண்டும்.

ஆசிரியருட் சிலர் கருதுகின்றபடி செய்யுட்பாடத்தின் நோக்கம் அரும் பதங்களையும், அருஞ்சொற்றொடர்களையும், பொழிப்புரை, கருத்துரை இலக்கணக் குறிப்பு முதலியவற்றையும் கற்பிப்பது அன்று. இன்பமாகக் கதையைப் படிக்கச் செய்வதும் அன்று. சன்மார்க்க நீதிபோதனையளிப்பது மன்று. செய்யுளின் சொல்லழகைக் கவனித்து அதைப்போல் அழகாகச் சொல்லப் பயிற்றுவதும் அன்று. சொற்றொகுதியைப் பெருக்குவதும் அன்று. இவற்றுட் பல, செய்யுட்பயிற்சியால் ஏற்படுகின்ற பயன்கள். எனினும் அவை செய்யுளைக் கற்பிப்பதன் நோக்கங்கள், ஆகா.

**செய்யுள் கற்பிக்குமிடத்து ஆசிரியர் கவனிக்கவேண்டியவை:—** (1) ஒரு செய்யுள் முழுவதையும் மொத்தமாகவே மாணவர்க்குக் காட்டவேண்டும். ஒரு செய்யுளில் ஒரு கருத்து அடங்கியிருக்கும். அக் கருத்தையறிதற்குச் செய்யுள் முழுவதையும் ஒரே நோக்காகப்பார்க்கவேண்டும். (2) பல பாகங்களாகப் பகுத்துத் துண்டு துண்டாகப் பார்ப்போமானால் அக் கருத்தை நாம் உணர முடியாது. ஆதலின் பதம் பதமாக எடுத்து அர்த்தம் கற்பித்தலும், அவ்வாறே பதம் பதமாக இலக்கணங் கற்பித்தலும் பொழிப்புரை, கருத்துரை, முதலியவற்றைக் கற்பித்தலும் கூடாது. (3) மொத்தமாகப் பார்த்துச் செய்யுளின் கருத்தை ஒருவாறு அறிந்த பின்னர், முழுப் பொருளையும் தெளிவாக அறிந்து கொள்வதற்குக் கூடாதபடி, தடைப்படுத்தி நிற்கும் அரும் பதங்களை மட்டும் ஒவ்வொன்றாக எடுத்து முறைப்படி பொருளைத் தெளிவுபடுத்தல் வேண்டும். பொருள், தெளிவு படுதற்குவேண்டிய அளவு, இலக்கணம், அருஞ்சொற்றொடர்கள், வரலாறுகள், உவமான முதலிய அணிகள் இவற்றையும் அறிந்துகொள்ள வழி நடத்துக. இவையெல்லாம் புலவன் கருத்தை உணர்வதற்கு உதவியாகும். (4) அவசியத்திற்கு மிஞ்சி ஒன்றும் செய்யக்கூடாது. பொருள் விளக்கமும், இலக்கணங் கற்பித்தலும் இக் கட்டுப்பாட்டை மீறக்கூடாது. புலவரின் கருத்தையுணர்ந்து, செய்யுளின் அழகைக்கண்டு ஆநந்திக்கச் செய்வதும், அவ்வாநந்த அனுபவத்தால்,கற்பனா சக்தியும் புத்துணர்ச்சியும் தூண்டப்பட்டு உள்ளக் கிளர்ச்சி பெறச் செய்வதுமே, செய்யுள் கற்பிப்பதன் நோக்கம் என்பதை எப்பொழுதும் ஆசிரியர் மனதிற் கொள்ள வேண்டும். புதுச் சொற்களைக் கற்பதோ, அவற்றால் வாக்கு வன்மை பெறுவதோ, அல்லது இலக்கணம் கற்பதோ செய்யுட் பாடத்தின் நோக்கமல்ல.

## மனப்பாடப் பகுதி.

செய்யுட் பாடத்திற் சில சில முக்கிய பகுதிகளை மனப்பாடம் பண்ணுவதும் மிக அவசியம். பண்டைத் தமிழ்நாட்டுக் கல்விமுறையில், பாடம் போற்றல், நூல் பயிலியல்பின் முக்கிய அம்சமாகக் கருதப்பட்டுவந்தது. பாடம் போற்றலாவது மூல

பாடத்தை நெட்டுருப்பண்ணி, மறந்து விடாமற் பாதுகாத்துக் கொள்வது. பெரும்பாலும் பள்ளித் தொடக்க முதற்கொண்டே நூல்களை முழுவதுமாக நெட்டுருப் பண்ணும் பழக்கம் பண்டைத் தமிழ் மாணவர்களிடம் இருந்துவந்தது. நிகண்டு முதலிய அகராதி நூல்களை ஞாபகசக்தி மிகுதியாய் நிலைத்திருக்கும் இளமைப் பருவத்தில் மனப்பாடம் பண்ணுதல், பின்னர் நூல்களுக்கு உரை காண்பதற்கு உதவியாயிருக்கும் என்பது ஆன்றோர் கருத்து. மூதுரை, நாலடியார் முதலிய நீதி நூல்களைப் பெரும்பாலும் உரை கல்லாமலே மனப்பாடம் பண்ணுதல் பின்னால் உரையறியும் மனநிலையடையும்போது, மனப்பாடம் பண்ணும் சிரமமின்றி, பொருளையும் செய்யுளின் அழகையும் அறிந்துகொள்வதற்குக் கருவியாகும் என்பது அவர் கொள்கை.

இவை யாவும் தக்க நியாயங்களேயாகும். எனினும், பொருளறியாமல் மனப்பாடம் செய்தல் கஷ்டம்; ஆதலின் தக்கதன்று. கற்கும் நூல்களில் குறிப்பிட்ட சில செய்யுட்களையே மனப்பாடம் செய்வதால், அந்நூலின் சாரத்தை மாணவர் நிலையாக மனதிற் கொள்பவராகின்றனர். கற்ற நூலையும் பொருளையும் ஒருகால் மறக்கலாம். பிற்காலத்தில் மிகுதியும் பயன்படுவன, மனப்பாடம் செய்யப்பட்ட செய்யுட்களே. நூலின் அழகு உள்ளத்தில் நெடுநாள் நிலைத்திருப்பதும், வாழ்க்கையில் உயர்ந்த கருத்துக்கள் வேண்டுமிடத்து உறுதுணையாவதும், மனப்பாடச் செய்யுட்கள் மூலமாகவே.

இத்தகைய நன்மைகள் இருப்பினும் மாணவர் யாவரும் குறிப்பிட்ட சில செய்யுட்களையே, மனப்பாடம் செய்ய வேண்டும் என்று **கட்டாயப்படுத்தக்** கூடாது. ஏனென்றால், (1) கண்டிப்பு செய்யுட் பாடத்தின் மீதே வெறுப்பை உண்டாக்கும். (2) எல்லா மாணவரும் ஒரே விதமாக மனப்பாடம் செய்யும் திறமையுடையவரல்லர். (3) மாணவர் விருப்புடன் கற்கும் செய்யுட்களே மனதிற்பதிந்து, ஞாபகத்திற் கிடக்கும்; மேலும் பயன் தருவனவுமாகும். (4) மாணவரது விருப்பு வெறுப்புக்கள் தனித் தனி வேறுபடும்.

மாணவர் மனப் பாடமாகக் கற்றற்குரிய செய்யுட்கள் :— (1) தாங்களே விரும்பும் செய்யுட்களாயும், (2) சொல்லழகு பொருளழகு நிறைந்தனவாயும், (3) நுண்ணிய கருத்துக்கள் பல அடங்கியனவாயும், (4) கற்கும் நூல்களுக்கு எடுத்துக்காட்டாகத் தக்கவனவாயும், இருத்தல் வேண்டும். சிறுவர், செய்யுள் இன்பத்தில் மூழ்கச் செய்வது நம் கடமை. அவ்வாறு மூழ்குவராயின், செய்யுட்களைக் குறித்துப் பாராமற் படிக்க அவர்களை வற்புறுத்த வேண்டிய அவசியமேற்படாது. தாங்கள் சுவைத்து அருந்திய இன்பப் பகுதிகளை மனப்பாடம் செய்ய ஆசைப்படுவர்.

## உரைநடை

தமிழ், இயல் இசை நாடகம் என மூவகைப்படும். அவற்றுள் இயற்றமிழ், செய்யுள், உரைநடை என இருவகைப்படும். தமிழ் மொழியில் செய்யுள் நூல்களே சிறப்பாகக் கருதப்படுவன. தமிழில் உரைநடை சமீப காலத்தில் தோன்றியது என்பர் சிலாறியாதார். தமிழ் உரைநடை மிக மிகத் தொன்மை வாய்ந்தது. இறையனார் அகப்பொருளுரை ஓர் அழகிய உரைநடை நூல். இது சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிலப்பதிகாரம், பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை முதலியன, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள். இவற்றுள்ளும் உரைநடை காணப்படுகின்றது. தனி உரைநடை நூல்களில் பல, இருந்து இறந்துபட்டிருத்தல் கூடும். தமிழ் நாடு கடலுள் மூழ்கிய காலத்து எத்துணை நூல்கள் இறந்துபட்டன. களவியலுரையில் பெயர் கூறப்படுகின்ற பல நூல்கள் கிடைக்கவில்லையே. தமிழின் உரைநடைதொன்மை வாய்ந்ததெனினும், பெரும்பான்மையாக உரைநடை நூல்கள் தோன்றியது, கி. பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே. இதற்கு அடிகோலியவர் இத்தாலி நாட்டுக் கத்தோலிக்க மத குரு வீரமாமுனிவரே. பின்னர் திருத்தணிகை சரவணப் பெருமாளையர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் முதலிய உரைநடைப் புலவர்கள் தோன்றி உரைநடையிற் பல நூல்களை எழுதி வெளியிட்டனர். இக் காலத்தில் மாணவர்க்கும் பொது மக்கட்கும் பயன்படும் ஆயிரக்கணக்கான உரைநடை நூல்கள் வெளிவந்துள்ளன. வாழ்க்கையில் சாமானிய ஜனங்களுக்குப்பெரிதும் உபகாரப்படுவது உரைநடையாதலின், செய்யுளினும்

உரைநடையே சிறந்த பயனுடையது. வாழ்க்கைக்குப் பயன்படும் உரைநடையை விரும்பிப் படிப்பதற்கு இளமைப் பருவத்திலேயே பயிற்ற வேண்டும்" என்பர்.

**சிறுவர் கற்கும் வாசகப் புத்தகங்களில் அமைந்து கிடக்கவேண்டிய சிறந்த பண்புகள்:—** (1) முதலாம் இரண்டாம் வகுப்புப் பாடப் புத்தகங்களில் எழுத்துக்கள் பெரிதாகவும், தெளிவாகவும், அழுத்தமாகவும் இருக்க வேண்டும். நுண்ணிய எழுத்துக்களைக் கொடுத்துக் கண்ணைக் கெடுத்துவிடக்கூடாது. (2) வரிக்கு ஒரு வாக்கியமாக அச்சிடப்பட்டிருக்கவேண்டும். (3) வரிகளிடையே இடம் அதிகம் விடப்பட்டிருக்கவேண்டும். நெருக்கமாயிருந்தால் வாசிக்கும்போது அடிமாறும். அடிக்கடி அடிபிசகும் சிறுவர்களைத் திருத்துவதற்கு வாசிக்கும்போது அவ்வடியின் கீழ் ஓர் அடிக்கோலை வைத்து ஒவ்வொரு அடியாக வாசிக்க வாசிக்க நகர்த்திக்கொண்டே வரச்செய்யவேண்டும். (4) அழகிய தெளிவான கண்ணைக் கவரும் படங்கள் உடைத்தாயிருத்தல் வேண்டும். (5) அப்படங்களும் பக்கத்தின் தலைப்பிலும் பாடத்தின் முகப்பிலும் அமைந்திருத்தல் நலம். (6) பாடங்கள் சிறியதாயிருக்கவேண்டும். பெரிய பாடங்கள் சிறுவர்களுக்கு மனத் தடுமாற்றத்தை உண்டாக்கும். புத்தகங்களுமே சிறியதாயிருப்பது நல்லது. பெரிய உருவமுடைய ஒரு புத்தகத்தைப் படிக்கச் செய்வதற்குப் பதிலாக, சிறிய இரண்டு மூன்று புத்தகங்களைக் கொடுக்கலாம். அவை சிறுவர்க்கு ஊக்கத்தையே உண்டாக்கும். (7) **பொருள்** சிறுவரது அனுபவத்திற்கும் அறிவுக்கும் பொருந்தியதாயிருத்தல்வேண்டும். சிறுவர்க்குப் பொருத்தமான விஷயங்களைப் பாடத்திட்டத்திற் காண்க. (8) **நகைச் சுவை** பொருந்திய பகுதிகள் அமைந்திருக்கவேண்டும். சிறுவர் சுவையறிந்து சிரித்து இன்பமடைவதற்கு இடமிருக்கவேண்டும். அது வாசிப்பில் விருப்பத்தையும் இன்பத்தையும் உண்டாக்கும். தெனாலி ராமன் கதை, பரமார்த்த குரு கதை முதலியன, நகைச் சுவை பயப்பன. (9) **மொழி நடை** மனதைக் கவரக்கூடியதும் எளிய நடையாயிருத்தல் வேண்டும். (10) முறையாகச் சொற்றொகுதியைப் பெருக்கக்கூடியவாறு, **அருஞ் சொற்கள்** சில, பாடந்தோறும் பயின்று வரல் வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு அல்லது ஐந்து அரும்பதங்கள் வருதல் நலம். பல அருஞ்சொற்கள் வருமாயின், சிறுவர் அவற்றைக் கற்று மனதில் வைப்பது கஷ்டம்.

(11) முன் பாடத்தில் வந்த அருஞ் சொற்கள், பின் பல பாடங்களிற் பல சந்தர்ப்பங்களிற் பயின்று வரவேண்டும். மீண்டும் மீண்டும் வருதல் ஞாபகத்திற்கு உதவியாகும். (12) காரிய அனுமான முறையில் [inductive method] கற்ற இலக்கணப் பகுதிகளை மாணவர் பிரயோகித்துப் பார்க்க, ஆழ்ந்த படிப்புக்காக அமைக்கப்படும், பாடப் புத்தகம் ஆங்காங்கே சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். (13) புத்தகம் அழகாகவும், உறுதியாகவும் கட்டப்பட்டிருப்பதுடன் கண் கவரும் வனப்பு வாய்ந்ததாகவுமிருக்க வேண்டும். இளஞ்சிறுவர் எளிதில் புத்தகத்தைக் கிழித்துவிடுவார்களாதலின், சிறப்பாக கீழ் வகுப்புப் பாடப் புத்தகங்கள் உறுதியாகக் கட்டப்பட வேண்டும். (14) உயர்தர வகுப்புப் பாடப் புத்தகங்களில், இலக்கியச் சுவையில் மாணவரை ஈடுபடுத்தப் பயன்படும் பாடத் திரட்டுகள் அமைதல் நலம்.

வாசிப்புக்காகக் கொடுக்கத்தக்க விஷயங்கள், பின் வருவன :—

1 சாதாரணமான எளிய பொருள்பற்றிய கட்டுரை முதலியன.

2. சம்பாஷணை, சிறு நாடகங்கள்.

3. இலக்கியங்கள், புராண இதிகாசங்கள், கற்பனை யிலக்கியங்கள், வரலாற்று நூல்கள், வருணனை நூல்கள்.

4. இன்பப் பொழுதுபோக்கு வாசிப்பு -- பத்திரிகைகள், செய்தித் தாள்கள் முதலியன.

இவற்றைப் பாகுபடுத்திப் பாடத்திட்டம், கூறுமாறு காண்க :— ஆரும் வகுப்பு— கீழ்க் குறித்தவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தவை :—

1. (i) நூலின் பெருமையை ஓரளவும், படிப்போர் உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்பும் தன்மையை முக்கியமாகவும் கவனித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்பனை மலிந்த இலக்கியங்கள். (ii) உண்மையாய் நேர்ந்த அநுபவக் குறிப்புகள்; மக்கள் செய்து முடித்த அரிய காரியங்கள்; அவர்கள் வாழ்க்கைமுறை, உள்ள பொருள்கள், பல மக்கள் இவற்றை உள்ளபடியே எடுத்துரைக்கும் நூல்கள். (iii) இயற்கை நூல்கள் [பஞ்ச தந்திரத்திற் காணும் பிராணிக் கதைகள் முதலியவை].

2. (i) கதைப் பாடல்கள் [ உ-ம். தேசிங்கு ராஜன் கதை, அல்லி யரசாணிமாலை ]. (ii) இலகுவான இன்னிசைப் பாடல்கள். (iii) சிறு நாடகங்கள் அல்லது நாடக ரூபத்தில் அமைக்கப்பட்ட கதைகள் என்னும் இவற்றின் தொகுதிகள்.

மௌன வாசிப்பிற்கு உரியவை.—வீரம், துணிகரம், ஆச்சரியம் இவை பற்றிய கதைகள், கற்பனைக் கதை, கர்ண பரம்பரைக் கதை இவைகளடங்கிய நூல்கள்.

ஏழாம் வகுப்பு 1. ஆறும் வகுப்பிற்போலக் கற்பனை இலக்கியங்களிலிருந்து எடுக்கும் திரட்டுகள். (ii) வாழ்க்கை வரலாறு, யாத்திரை இயற்கை வளம் காண்பதற்குச் செய்யும் சஞ்சாரம், இயற்கை வரலாறு [ natural history ] இவற்றிலிருந்து எடுக்கும் திரட்டுகள்.

2. (i) கதைப் பாட்டும் இன்னிசைப் பாட்டும் [ lyrical verse ] கலந்த தொகை நூல் திரட்டுகள். (ii) உரைநடையிலுள்ள சிறு நாடகங்கள், பண்டைப் பெரு நாடகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற களங்கள். [ scenes ].

மௌன வாசிப்பு.—வீரக் கதைகள், துணிகரச் செய்கைகளும் அற்புதங்களும், கற்பனைக் கதைகளும் கர்ண பரம்பரைக் கதைகளும், நீண்ட கதைச் செய்யுள்கள்.

எட்டாம் வகுப்பு 1. அடியிற் கண்டவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவை :— (i) கற்பனை இலக்கியம். (ii) நாட்டு வரலாறு, வாழ்க்கை வரலாறு, யாத்திரை, அறிவியலாராய்ச்சியிற் கண்டுபிடிக்கும் புதுமைகள் [ scientific discoveries ]. (iii) கட்டுரைகளும், விஷய சுருக்கங்களும், இவற்றோடு சமாசாரப் பத்திரிகைகளினின்றும், மாதாந்தரப் பத்திரிகைகளின்றும், ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்த சிறிய கட்டுரைகளையும் பயன்படுத்தலாம்.

2. (i) கதைப் பாட்டும், இன்னிசைப் பாட்டும், (ii) முதல்தர [ அல்லது பண்டைய ] நாடகங்களும், சிறிய வசன நடை நாடகங்களும்.

வாசித்தல்—மௌன வாசிப்பு.—நவீனங்களும் சாகசக் கதைகளும் [ novels and romances ]; சிறு கதைகள்; வியாசங்கள்; ஆழ்ந்த கருத்துடையனவும், நகைச்சுவை பொருந்தியதுமான சுருக்க வருணனைகள்; பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்.

## ஆறும் அதிகாரம் — இலக்கணப் பயிற்சி

இலக்கணம், ஒரு மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல், என்பது பொதுவாக மாணவர் இலக்கண நூல்களிற் கூறப்படும், இலக்கணம். இது உண்மைதானா? இலக்கணம் கற்றவன் கட்டாயம் பிழையறப் பேசக்கூடுமோ? இலக்கணம் கற்றவர் தான் பிழையறப் பேசுகின்றனரோ? மற்றவர்கள் பிழையறப் பேசவில்லையா? என்றிவ்வாறு பல கேள்விகளை, அவ்விலக்கணம் எழுப்பிவிடுகின்றன.

மாணவர்க்கு இலக்கணத்தை ஒரு பாடமாகக் கற்பிப்பது பற்றி பல்வேறு அபிப்பிராயங்களுள. அவை:- (1) இலக்கணப் பாடம் அவசியமே யில்லை. கல்வியறிவற்றவர்களும் பிழையறப் பேசுகின்றனர் அல்லவா? படர்க்கை யாண்பால் எழுவாய்க்குப் பயனிலையாகப் படர்க்கை யாண்பால் வினை முற்றை அமைத்துப் பேசுகின்றார்கள் அல்லவா? சிறு குழந்தைகள் 'நான் வருகிறேன்' என்று இலக்கணப் பிழையின்றிப் பேசுகின்றார்களே. இங்ஙனம் இலக்கண அறிவின்றிப் பிழையறப் பேச இயலும்போது, என் அதை ஒரு பாடமாகக் கற்பித்துச் சிறுவர்களை வருத்தவேண்டும்? இது வீண், என்பர் ஒரு சிலர். (2) வேறு சிலர் 'இலக்கணத்தை ஒரு தனிப் பாடமாக்கி முறையாகக் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை, என்றாலும், பேச்சிலும், எழுத்திலும், பிழைகளை நீக்குவதற்கு வேண்டிய அளவு, இலக்கண தத்துவங்களைப் பயிற்சித்துக் கொண்டேவர வேண்டும். சொற்களின் பயன்களும் அவற்றின் தனித்தனிச் செயல்களும் அறியப்பட வேண்டியது அவசியமே, என்பர். (3) பயனையே பெரிதெனப் பாராட்டும் ஒரு சாரார், அன்றாடக வாழ்க்கையில் மாணவர்க்குப் பயன்படும் இலக்கணப் பகுதிகளை, வேண்டுமளவு கற்பிக்க வேண்டும், என்று கூறிப் பயன் கருதும் தற்கால வுலகில், பலர் தம் கொள்கையைப் பாராட்டச் செய்வர். ஆனால் அந்தப் பயனை நிர்ணயிப்பது யார்? பரீட்சையில் தேர்ச்சி பெறுவதையே எல்லா மாணவரும், சிறுபான்மை ஆசிரியரும், பெரும்பான்மைப் பெற்றோரும், பெரும் பயனாகக் கருதுகின்றனர். (4) மற்றொரு சாரார் "இலக்கணம், என்ற சொல்லுக்குத் **நன்மை, அழகு,** என்பன பொருள். இலக்கணம்

ஒரு மொழியின் இயல்பையும், அழகையும் புலப்படுத்துகின்றது. ஆதலின், ஒரு மொழியின் இயல்பை, இலக்கண வாயிலாக நுட்பமாக அறியாவிடின், அம் மொழியைத் தெளிவாக அறியவும், வன்மையுடனும் மனத்துணிவுடனும் பயன்படுத்தவும் முடியாது" என்பர். ஒவ்வொருவர் கூற்றிலும் ஓரளவு உண்மையுண்டு,

'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு'

ஆகலின் ஆசிரியர் ஆராய்ந்து பார்த்து, 'மாணவர்க்கு மொழிப் பயிற்சியில் பேருதவியாகும் கொள்கையை ஏற்றுக் கொள்க. முதல் நான்கு வகுப்புகளில் முறையான இலக்கணப் பயிற்சி (formal grammar teaching) அவசியமில்லை. இந் நிலையில் சிறுவர்கள் பிழையறப் பேசவும் எழுதவும் கருவியாவது, கேள்வியும், வாசிப்புமே. தன்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் பேசுவதைக் கேட்டும், தங்களுடைய தகுதிக்கேற்ற பல புத்தகங்களை வாசித்தும், மொழியைக் கற்கின்றார்கள். பின் அவ்வறிவையே ஆதாரமாகக்கொண்டு பேசவும் எழுதவும் ஆரம்பிக்கின்றார்கள். ஆதலின் போதுமான அளவு அவர்கள் பிறர் பேச்சைக் கேட்கவும், பல நூல்களை வாசிக்கவும் வசதியளிக்க வேண்டும். இலக்கணத்தை முறையாகவே கற்றாலும் பிழையறப் பேசும் திறமை பெற முடியாது. கேள்வி, வாசிப்பு மூலமாக அவர்கள் உள்ளத்தில் பதிந்திருக்கு மொழியறிவு, பிறர் பேச்சிலும், தம் பேச்சிலும் பிழை ஏற்படும்போது, 'இது பிழை' என்று சுட்டிக் காட்ட வேண்டும். ஆசிரியர் பிழை திருத்துமிடத்து, இலக்கண தத்துவங்களைப் பயிற்சிக்குக் கொண்டுவர வழிகாட்டலாம். இலக்கணக் குறியீடு, முதலியவற்றைக் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஐந்தாம் வகுப்பில் வாக்கிய அமைப்பு, எழுவாய், பயனிலை; பெயர், வினை, முதலிய எளிய இன்றியமையா இலக்கணப் பகுதிகளை முறையாகக் கற்பிக்கலாம்.

ஆறாம் வகுப்பிலிருந்து முறையாக இலக்கணம் கற்பிக்கலாம். இதற்குள் மாணவர் மொழியறிவில் ஓரளவு, நல்ல நிலையை அடைந்திருப்பர், பல நூற்றுக்கணக்கான சொற்களையும் சொற்றொடர்களையும், கேட்டும், வாசித்தும் தாங்களே பயன்படுத்தியுமிருப்பர். சொற்களின் வேறுபாடுகளையும், அவற்றுள் வேறுபட்ட

பிரயோகங்களையும், ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புகளையும் அறிந்து கொள்ளக்கூடிய திறமை அடைந்திருப்பர். ஆதலின், முறையான இலக்கணம் (formal grammar) கற்பித்தற்குரிய காலம் இதுவே.

**இலக்கணப் பயிற்சி அவசியம்.** ஏனென்றால், (1) சொற்களையும் சொற்றொடர்களையும் மாணவன் தன் கருத்தை வெளிப்படுத்தும், கருவியாக உபயோகிக்கின்றான். அவற்றை வன்மையுடனும், உறுதியுடனும் உபயோகிக்க, அவற்றின் தன்மைகளையும் உபயோகங்களையும் திட்டமாயறிதல் வேண்டும். (2) இலக்கணக் குறியீடுகளையும் (grammatical terminology) இலக்கணங்களையும் (Definitions) இலக்கண விதிகளையும் (grammar rules) கற்றல், பின்னர் தெளிந்த இனிய நடையில் தன் கருத்தை வெளிப்படுத்தும் மொழித் திறமையை அளிக்கும். (3) இலக்கியங்களைக் கற்கும் போது, சொற் பிரயோகத்தையும், பொருளையும் நுட்பமாக அறிவதற்கு, இலக்கண அறிவு அவசியம். (4) ஒரு மொழியைச் சிதைவு படாமற் பாதுகாப்பது இலக்கணமே. தொன்மை வாய்ந்த நம் தமிழ்மொழி, இன்றுவரை அழிவுபடாமற் நிகழ்வதற்குக் காரணம், பண்டைப் புலவர்களால் நுண்ணிதாக எண்ணி அமைக்கப்பட்ட இலக்கண வரம்புகளே. இவ்வரம்புகள் அமைக்கப்படாதிருப்பின் மொழி, வரம்புகடந்து சென்று, தோன்றல் திரிதல்களையேற்று, அழிவடைந்திருக்கும். ஆதலின், தமிழ் மொழி கற்போர் இலக்கண வரம்பு அறிதல்வேண்டும்.

**மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன்?** 'இலக்கணம் தலைக்கனம்' என்பது பல மாணவரது அனுபவம். இதற்குக் காரணங்கள் பல. (1) ஆசிரியர் சுவையான முறையை, இலக்கணங் கற்பிக்கப் பயன்படுத்துவதில்லை. ஒன்றும் விளங்காமலே விதிகளையும், உதாரணங்களையும் நெட்டுருப்பண்ணச் சொன்னால் மாணவர்க்கு வெறுப்புத்தானே உண்டாகும்? (2) மேலும் மேலும் விளங்காமலே புதுப்புது இலக்கணங்களைக் கற்றுக்கொண்டே சென்றால், இலக்கணம் கஷ்டமாகத்தானே இருக்கும். சிறிது கற்றாலும் நன்கு விளங்கக் கற்றே செல்லவேண்டும். ஆதலின் ஆசிரியர், சிறிது சிறிதாக, நன்கு விளங்கக் கற்பிக்க வேண்டும். பாடம் நன்றாக விளங்குமானால் வெறுப்படைய மாட்டார்கள்.

(3) ஆசிரியரது இலக்கண அறிவு உறுதியற்றதாயிருக்குமானால் அவர் உறுதியாகக் கற்பிக்க முடியாது. தனக்கே சந்தேகங்களுண்டாகுமானால் மாணவருடைய சந்தேகங்களை எப்படி நீக்க முடியும்? ஆதலின் ஆசிரியர் இலக்கணங்களை ஐயந்திரிபற நுட்பமாகக் கற்றறிதல் வேண்டும்; தெளிந்த அறிவுடையவராயிருத்தல் வேண்டும். மாணவனுக்குக் கற்பிக்கவேண்டிய பாடப் பகுதியை மாத்திரம் பார்த்துக்கொண்டு வகுப்புக்குச் செல்வது போதாது.

## இலக்கணங் கற்பிக்கு முறை

1. காரிய அனுமான முறை (Inductive method) இதனை ஆகமன முறை என்றும் அழைப்பர். காரணங்களிலிருந்து காரியத்தை அனுமானித்து அமைத்துக் கொள்வதே காரிய அனுமான முறை. உதாரணங்களும் இலக்கியங்களும் காரணம்; அவ்வுதாரணங்களைக் கருவியாகக்கொண்டு இலக்கணத்தையும் (Definition) இலக்கண விதியையும் அனுமானித்து அமைத்துக் கொள்ளலாம். இலக்கணமும் இலக்கண விதியும் காரியம்; உதாரணங்களை ஆதாரமாக வைத்து, அவற்றிலிருந்து இலக்கணத்தையும், இலக்கண விதியையும் அனுமானித்துக்கொள்ள மாணவரை வழிநடத்துவதே காரிய அனுமான முறை.

இம் முறையே, சிறுவர்க்கு முறையான இலக்கணம் (formal grammar) கற்பிப்பதற்குச் சிறந்த முறை. ஏனென்றால் (1) அறிந்த உதாரணத்திலிருந்து அறியாத விதிக்குச் செல்லுகின்றது. (from known, to unknown) (2) எளிய உதாரணத்திலிருந்து அரிய இலக்கணத்திற்கு வழி நடத்துகின்றது. (from simple to complex). (3) மாணவர் தாங்களாகவே யோசித்து அனுமானித்து இலக்கணத்தை அமைக்கின்றபடியால், சுய முயற்சி தூண்டப்படுகிறது. மாணவர்கள் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு மனதில் அமைக்கின்றவரல்லர். தாங்களாகவே முயன்று கண்டுபிடிக்கின்றனர். (4) தாங்களாகவே கண்டுபிடிப்பதனால், அது மனதில் ஆழ்ந்து பதிந்து விடுகின்றது. சிரமப்பட்டு விதியை நெட்டுருப்பண்ண அவசியமில்லை. (5) இதுவே இயற்கை முறை (natural method). ஆதியில் இலக்கியத்தினின்றே இலக்கணம் தோன்றிற்று. ஆதியிலக்கண நூலாகிய

**பேராசிரியம்** இதற்குச் சான்று பகர்வதைக் காண்க.

"இலக்கியம் இன்றேல் இலக்கணம் இன்றே;
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல,
இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்"

பெயரிடைநிலைக்கு இலக்கணங் கூறுமிடத்து, **நன்னூலில்**, "இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலில்" என்றார் ஆசிரியர், பவணந்தி முனிவர்.

ஆதலின் மாணவர், பாடப் புத்தகத்திலிருந்தும், அவர்களறிந்த சொற்களிலிருந்தும், **பல உதாரணங்களை** வருவித்து அவற்றைப் பரிசீலனைசெய்து அவற்றிலிருந்து மாணவர்களே விதியைக் கண்டுபிடிக்கச் செய்வதே, இயற்கை முறை.

2. **காரண அனுமான முறை** (Deductive method) இதனை நிகமனமுறை என்றும் கூறுவர். முதலாவது இலக்கணத்தைக் கற்றுப் பின் உதாரணங்களைக் கற்றல் காரண அனுமானமுறை. இதுவே தொன்றுதொட்டு இலக்கண ஆசிரியர்களால் வழங்கப் பட்டு வந்தமுறை. முதிர்ந்த அறிவுடையோருக்கே இம் முறை பொருந்தும். சிறுவர் கற்ற இலக்கணப் பகுதிகளைத் தம் பாடப் புத்தகத்தில், வசனத்திலும் செய்யுளிலும், காரண அனுமான முறையில் பயிற்சி செய்ய (Deductive application) சந்தர்ப்பம் அளிப்பது, முன்கற்ற இலக்கண அறிவு தெளிவுபடுதற்கு ஏதுவாகும்.

ஆதலின் காரிய அனுமான முறையில் இலக்கணத்தைக் கற்பித்துக் காரண அனுமான முறையில் இலக்கணப் பயிற்சி யளிக்க. இருமுறைகட்கும் பாடப் புத்தகத்தைப் பயன் படுத்துக. இதுவே பிரயோக இலக்கணம் (applied grammar) எனப்படும்.

**இலக்கணம் தொடங்குமிடம்.** எழுத்து, சொல், பொருள், என்பதே இலக்கணப் புலவர்கள் அமைத்த முறை. இது தர்க்க ரீதியான (Logical) முறை; ஆனால் மனோதத்துவ லக்ஷண (Psychological) முறையன்று.

முழுப் பொருள் தருவது வாக்கியம். வாக்கியமோ ஒரு கருத்தின் முழு வடிவமாகும். ஆதலின் வாக்கியம், சொல், எழுத்து, இம் முறையில் இலக்கணம் கற்பிக்கவேண்டும்.

இங்குக் காட்டப்பட்ட முறைகளில் இலக்கணப் பயிற்சி யளிக்கப்படுமாகில், உயர்நிலைப்பள்ளி வகுப்புகட்கு வரு முன்னர் இலக்கணக் கல்வியில் சுவை ஏற்பட்டுவிடும். அப்போது நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், முதலிய உயர்தர இலக்கண நூல்களைக் கற்க அடிகோலி வைக்கலாம்.

ஆறும் வகுப்புமுதலே டால்டன் முறைப்படி இலக்கணம் கற்க வழி நடத்தலாம். சிறிது சிறிதாக அடிப்படைபோட்டு, பலப்படுத்திக்கொண்டே சென்றால், இலக்கணக் கல்வி, இன்ப மும், ஊக்கமும் அளிக்கும்.

கற்பிக்க வேண்டிய அவ்வவ் வகுப்பிற்குரிய இலக்கணப் பகுதிகளைப் பாடத்திட்டம் கூறுமாறு:—

## ஐந்தாம் வகுப்பு

இலக்கணம்—பேச்சிலும் எழுத்திலும் மிகவும் பிழைகளை நீக்கும் திறமை பிள்ளைகட்கு வாய்க்கும்பொருட்டு, முன்பே கற்றுள்ள ஆரம்ப இலக்கணப் பகுதிகளை நினைப்பூட்டலும், இன்றியமையாத இன்னும் சில விதிகளைக் கற்பித்தலும்; நிறுத்தற் குறிகள்.

## ஆறும் வகுப்பு

இலக்கணமும் நிறுத்தல் அடையாளங்களும்—இந்திய மொழி களின் இலக்கணங்களில் எழுத்து, சொல், முதலியவற்றின் பயன் (function) எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு அவற்றின் அமைப்பும் (form) முக்கியம். ஆதலால், அமைப்பு பயன் ஆகிய இரண்டையும் கற்க வேண்டும்.

நிறுத்தவேண்டிய இடங்களெல்லாம் திட்டமாய் நிறுத்திப் பொரு ளுணர்ச்சி தோன்ற இனிதாய் உரத்து வாசிக்கும் பாடப்பகுதிகளை ஆதார மாக வைத்துக்கொண்டு, நிறுத்தற்குறிகளைக் கையாளும் பயிற்சிகள் தரவேண்டும். மாணவர்கள், தங்களுக்குத் தெளிவாக விளங்காத வாச கங்களில் நிறுத்தற்குறிகளை அமைக்க முடியாது. அவர்கள் படிப்பின் முடிவு வருஷத்தின் பிற்பகுதியில்தான், அவர்களுக்குச் சொல்லாற்றல் அறியும் உணர்ச்சி, வளர்ச்சி பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். எனவே, அதுவரையிற் கொடுக்கப்படும் பயிற்சிகளின் பெரும்பாகம், முற்றுப்புள்ளி, காற்புள்ளி இவற்றைப்பற்றியதாக இருக்கவேண்டும்.

அச்சிடப்பட்ட தாள்களைப் பரிசோதனைக்காகக் கொடுப்பதானால், அவற்றில் திருத்தற்குறி இடவேண்டிய இடங்களை யெல்லாம் செங்குத்துக் கோடுகளால் குறிக்க வேண்டும்.

இலக்கணம்.—சொல் வகைகளும் (Parts of speech) வடிவங்களும். தனிநிலை வாக்கியம்; எழுவாய் பயனிலைக்கிடையே யுள்ள அடிப்படையான வேறுபாடு, வாக்கியத்தின் பிற உறுப்புகள், இன்றியமையா முற்றுவினை, செயப்படுபொருள், வினையுரிச்சொல், பெயருரிச்சொல், முதலியன. தனி வாக்கியங்களில் சொற்கள் இயற்கை முறையில் அன்வயமாக அமைந்திருந்தாலும், அவ்வாறின்றிச் செய்யுள்நடையில் வருவதுபோல் வேற்று முறையில் இடமாறி அமைந்திருந்தாலும், வாக்கிய அமைப்பை அறிந்துகொள்ளும் திறமை மாணவர்க்கு வாய்க்கவேண்டும். வாக்கிய வகைகள்.

வாசக நிறுத்தம் குறியீடுகள்:—கருத்தைக் கருதியிடும் குறிகள்—முற்றுப்புள்ளியும் காற்புள்ளியும்.

சங்கேதக் குறிகள் :— வினாக் குறி—? வியப்புக் குறி—! மேற்கோட் குறி—“ ”

## ஏழாம் வகுப்பு

இலக்கணமும் நிறுத்தற் குறிகளும்.—கலவை வாக்கியம் (complex sentence).

அதன் உறுப்புகளைப் பிரித்தலும் சேர்த்தலும்.

சொல் வகைகள்.—பெயர்ச்சொல், வினைச்சொல் முதலியவற்றின் பாகுபாடுகள்.

வினைச் சொற்களும், அவற்றின் பாகுபாடுகளும்; வேற்றுமை உருபுகள்.

நிறுத்தற் குறிகள்.—அரைப் புள்ளியும் முக்காற் புள்ளியும்.

## எட்டாம் வகுப்பு

இலக்கணமும் நிறுத்தற் குறிகளும்.—ஆறும் ஏழாம் வகுப்புகளில் படித்த இலக்கணப் பகுதிகளை மீண்டும் படித்தல்.

புணர்ச்சி; செய்யுளிலும் வழக்கிலும் காணும் சாதாரண அணிகள். செய்யுளின் ஓசையளமதி (rhythm) பற்றிய உண்மைகளைக் கற்றல்.

இலக்கண வழுவின்றிப் பேசவும் எழுதவும் பழகுதல்.—இதற்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் பயன்படும் :—

(அ) வாக்கியங்களைப் பொருள்மாற்றாது குறிப்பிட்ட வடிவில் பெயர்த்தமைத்தல்.

(ஆ) வாக்கியக் கோவை யமைப்பை (sentence sequence) மாற்றி எழுதுதல்.

(இ) கீழ்க் குறித்தவாறும் மாற்றி எழுதுதல்:—

(1) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல்.

(2) வினா வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக்குதல்.

(3) எதிர் மறையை உடன்பாடாக்குதல்.

(4) நேர்முகப் பேச்சைப் படர்க்கைப் பேச்சாக்குதல்.

(5) அலங்கார வினாவை (rhetorical question)ச் சாதாரண வாக்கியமாக்குதல்.

(6) குணத்தைக் குணியாக்குதல்.

நிறுத்தற் குறிகள்:—ஆறும் ஏழாம் வகுப்புகளில் கற்றுக்கொண்ட குறிகளை ஆளுதலும், இன்னும் அதிகப் பயிற்சி பெறுதலும்.

கருத்துக் குறிகள் :— கோடு—

இடைப் பிறவரற் குறிகள்.— இரட்டைக் கோடு — —

அரை வட்டக் குறி.— ( ).

## தமிழிலக்கணக் குறியீடுகளும் ஆங்கில இலக்கணக் குறியீடுகளும்

ஆரம்பப் பாடசாலை உயர்தர வகுப்புகளிலும் இடைநிலைப் பள்ளி வகுப்புகளிலும், ஆங்கிலங் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணக் குறியீடுகளுடன், தமிழிலக்கணக் குறியீடுகளை ஒத்துக்காட்டுதல், நலம். இதனால் இரு மொழிகளின் இலக்கண அறிவும் ஒன்றுக்கொன்று உதவியாக நின்று தெளிவுபடும். கற்ற இலக்கணப் பகுதிகள் மனதில் உறுதியாகப் பதியும். தமிழ் மொழியின் சிறப்பியல்புகளும், இலக்கண வேறுபாடுகளும் புலப்படும்.

தமிழ் மொழியிலுள்ள சில இலக்கணச் சிறப்புகள், வடமொழி, ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இல்லை. "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத் தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், அஃறிணை உயர்திணை முதலிய சொற்பாகுபாடுகளும்—இன் னோன்ன பிறவும் வடமொழியில் (ஆங்கில முதலிய பிற

மொழிகளிலும்) பெறப்படா" என்று சிவஞான சுவாமிகள் தம் தொல்காப்பியப் பாயிரவிருத்தியில் எழுதியுள்ளார்கள். அவற்றை நீக்கி இரு மொழிகளிலும் பெறப்படும் இலக்கணக் குறியீடுகளை ஒத்துக் காட்டுக. சிலஉதாரணங்கள் கூறுவோம் :—

எழுத்துக்கள் (உயிர், மெய்) — Letters(Vowels, Consonants)
சொல், பதம், மொழி — word.
சொற்றொடர் -- Phrase.
தனிநிலை வாக்கியம் — Simple sentence.
தொடர்நிலை ,, — Compound ,,
கலவை ,, — Complex ,,
பெயர்ச் சொல் — Noun.
பால் — Gender.

எண் (ஒருமை பன்மை) — Numbers (Singular Plural),
இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) — Person (First Second & Third).

வேற்றுமை- Case (வே. 1 Nominative, வே. 2 Objective, வே. 6 Possessive, வே. 7 Accusative, வே. 8 Vocative.
காலம் (இறப்பு, நிகழ்வு, எதிர்வு) — Tense (Past, Present & Future).

வினைமுற்று — Finite verb.
செய்வினை — Verb in the active voice.
செயப்பாட்டுவினை — ,, Passive voice;
தன்வினை — verb to do; பிறவினை — Causative;
உடன்பாடு — Affirmative எதிர்மறை — Negative;
செயப்படுபொருள் குன்றாவினை — Transitive verb.
,, குன்றியவினை — Intransitive verb;
ஏவல் வினைமுற்று — Verb in the imperative Mood.
வியங்கோள் வினைமுற்று — Verb in the Subjunctive Mood.

இரு மொழியிலும் இலக்கணக் குறியீடுகள் முற்றும் ஒவ்வாவிடின், வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக. உதாரணமாகத் தமிழ் மொழியின் ஐந்து பால்களையும், ஆங்கில மொழியின் நான்கு Genderகளையும் ஒப்பிட்டுக் காட்டி வேறுபாடுகளை அறியச் செய்க. இங்ஙனம் வேறுபாடுகளையறியும் போது, அவ்வம்மொழியின் தனிமரபுகளும் சிறப்பியல்புகளும் புலப்படும்.

## ஏழாம் அதிகாரம் — எழுதுதற் பயிற்சி

வாய்மொழிப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி, எழுதுதற் பயிற்சி; இதுவே, பயிற்சியளிக்கவேண்டிய முறை. ஒரு மொழி தோன்றிய முறையும் இதுவே. முதலாவது மானிடர் பேசக் கற்றனர். பின் எழுதப் படித்தனர். ஆதலின் ஒரு எழுத்தை, சிறுவன் இன்ன எழுத்து என்று சொல்ல அறிந்த பின் அவ்வெழுத்தை எழுதக் கற்பிக்க. அங்ஙனமே ஒரு சொல்லையும் வாசிக்கக் கற்றபின், அதனை எழுதப் பயிற்றுக. ஆரம்பிக்கும் பொழுதே அ என்று சொல்லிக்கொண்டு அதை மணலில் எழுதிப் பழகச் செய்வது, நல்ல முறையல்ல. இப்படிச் செய்வதனால் எழுத்தின் வடிவமும், அதன் பெயரும், அவ்வடிவத்தை எழுதியுண்டாக்கு முறையும் ஆகிய இம் மூன்றும் சிறுவர் மனதில் ஆழ்ந்து பதியாது. ஒரு எழுத்தை எழுதி விடுவார்கள்; ஆனால் இன்ன எழுத்து என்று சொல்ல முடியாது.

**எழுதுதற்குத் தகுதி** அடைந்த பின்புதான், சிறுவர்க்கு எழுதப் பயிற்சி அளித்தல்வேண்டும். தகுதியாவது யாது? தசை நார்களைக் கட்டுப்படுத்திக் கையைத் தான் நினைத்த இடத்திற்குச் செலுத்தி, கையில் பிடித்திருக்கும் எழுதுகோலைத் திறமையாக அசைத்து, தான் நினைத்தபடி, கோடுகளை உண்டாக்கும் திறமையே எழுதக் கற்குமுன் அடையவேண்டிய தகுதி. சிறுவர் மூன்று வயதிலிருந்தே, பலவகை விளையாட்டுப் பொருள்களைக் கையில் கொண்டு விளையாடுவதால் ஓரளவு தசை நார்க் கட்டுப்பாடு பெற்றிருப்பர். எழுதப் பயில்வதற்கு அது போதாது. முறையாகச் சில பயிற்சிகளைக் கொடுத்துத் தசையும் மனமும் ஒற்றுமைப்பட்டு உழைக்கப் பழக்க வேண்டும்.

**அத்தகைய சில முற் பயிற்சிகள் :—** (1) பல வடிவமுள்ள மரக் கட்டைகளைக் கொடுத்து விளையாடச் செய்தல். சதுரக் கட்டைகளை அடுக்கி வீடு கட்டுதல், களிமண்ணால் பல வடிவங்களைச் செய்தல், தாள் மடித்துப் பல வடிவங்களை உண்டாக்கல் முதலியன. (2) இஷ்டம்போல் **படம் வரைந்து விளையாட விட்டு விடுதல்.** கலர்ப் பென்சில், முரட்டுத்தாள், சாக்துண்டு முதலியவற்றைக் கொடுத்துவிடவேண்டியது. பிறகு அவர்களைக் கிறுக்காதே என்று சொல்லாமல் இருந்தால் போதும். வேறு

ஒன்றும்செய்ய வேண்டாம். முதல் வகுப்பில் சிறுவர்க்கு எட்டக் கூடிய உயரத்தில் சுவர் முழுவதும் கரும்பலகையாகச் செய்து வைத்துவிடவேண்டும். (3) **வடிவங்களைக் கண்டறிவதற்கு நீட்டமான பயிற்சி**—ப்ரோபெலின் பரிசில்களை (Froebel's gifts) உபயோகிக்க. பல வகை வடிவங்களையுடைய, சிறிதும் பெரிதுமான பல கட்டைகள்; அவை உள்ளே சரியாகப் பொருந்தி விழக்கூடிய குழிகள் அமைந்த பலகை; இது தான் ப்ரோபெலின் பரிசில்கள். சிறுவர் இக் கட்டைகளைக் குழிக்குள் சரியாகப் பார்த்துப்போட்டு விடவேண்டும். இப்படிச் செய்யும்பொழுது, வடிவ வேறுபாடுகள் பரிமாண வேறுபாடுகள்பற்றிய அறிவும் தசைநார்க் கட்டுப்பாடும், சிறுவர்க்கு உண்டாகிறது. (4) **மாண்டிசோரி உபகரணங்களை** (Montessori apparatus) உபயோகித்து விளையாடுதல். அட்டையில் பலவகை வடிவங்களை வெட்டி எடுத்துவிட்டு,



அவ்வட்டையை ஒரு தாளின்மேல் வைத்து உள்ளே பென்சிலைவைத்துச் சுற்றிலும் இழுத்து வடிவங்களை உண்டாக்கல்; பின் அவ்வடிவத்தை நேர்கோடுகளிட்டு அடைத்தல் 

முதலியன, மாண்டிசோரி அம்மையார் சிறுவர்களித்துவந்த விளையாட்டுப் பயிற்சி. இதனால் வடிவ உணர்ச்சியும், தசை நார்க்கட்டுப்பாடும், எழுது கோலைக் கையாளும் திறமையும் உண்டாகும். (5) எழுத்துக்களில் உபயோகப்படுகின்ற பல வகைக் கோடுகளை எழுதிப் பழகச் செய்தல். ஒரு பலகையில் ட ┐ ப ∩ U ∩ ெ ை இம்மாதிரிப் பல கோடுகளை எழுதி வைத்து அவற்றைப் போல் மணலில் எழுதிப் பழகச் செய்க.

**எழுத்துக்களை எழுதிப்பழகப்** பின் பயிற்சியளிக்க. படிப்படியாகப்பயிற்சி தருக. (1) மணல் தாளில் வெட்டி எடுக்கப்பட்ட எழுத்தை ஓர் அட்டைமீது ஒட்டி, அதன் மேல் விரல் வைத்து எழுதிப் பயிலச் செய்க. [ Tracing ] (2) அவ்வெழுத்தை விரலை நீட்டி ஆகாயத்தில் எழுதிப் பழகுதல். (3) மணலில் விரல் வைத்து எழுதுதல். (4) மணலில், விரலால், குச்சிகொண்டு எழுதுதல்

(5) சாக்கினால் கரும்பலகையில் எழுதல். (7) பென்சிலால் தாளில் எழுதல். சுலபமான எழுத்துக்களை முதலில் ஆரம்பித்துப் பின் வர வரக் கடினமான எழுத்துக்களுக்குச் செல்க. **நாவீபோல் முறைப்படி** ஒவ்வொரு புது எழுத்தையும் சொல்லையும் வாசிக்கக் கற்றபின் அதனை எழுதிப் பழகவும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. இது இலேசான முறை.

**சொற்களையும் வாக்கியங்களையும் எழுதல்.** மேற்காட்டியவாறு பயிற்சியளிக்கப்படுமாயின் இரண்டாம் வகுப்பு மாணவர் தாங்கள் கண்டதையெல்லாம், பார்த்து எழுதவேண்டும், என்று ஆவல் கொள்வர். அவர்களுக்கு ஆசிரியர் எழுதுவதற்கு வசதியமைத்துக் கொடுத்து, பின் அவர்களைக் கவனித்து வரவேண்டும். இந்நிலையில் சிறுவர்க்குக் கொடுக்கத்தக்க எழுத்துப் பயிற்சிகள் :— (1) ஒரு நோட்டில் தலைப்பில் படங்களை ஒட்டிக் கீழே பெயர்களை, மின்னட்டை, வாசிப்புச் சட்டம் முதலியவற்றைப் பார்த்து எழுதுதல், (2) சிறு வாக்கியங்களை எழுதுதல், (3) இரண்டு மூன்று அடிகளையுடைய விடுகதைகளையும், பாப்பாப் பாட்டுகளையும் பார்த்து எழுதல். (4) காப்பி எழுதல். (5) புத்தகத்தைப்பார்த்து எழுதல் [Transcription]. (6) சொல்வதெழுதல் [Dictation].

**ஆரம்பத்தில் கோடுகளை வரம்பாக அமைத்து எழுதப் பழக்க வேண்டும்.** இரண்டாம் வகுப்பில் 4 கோடுகளையும், மூன்றாம் வகுப்பில் 3 கோடுகளையும், நான்காம் வகுப்பில் 2 கோடுகளையும், ஐந்தாம் வகுப்பில் ஒரு கோட்டையும் வரம்பாக அமைத்துக் கொள்தல் நலம். ஆறாம் வகுப்பு முதல் ஒரு கோட்டின் மேலும், கோடு இல்லாமலும் எழுதப் பயிற்சி தருக.

**எழுத்தின் தரமும் அழகும்.** [Proportion and beauty] எழுதும் எழுத்துக்கள் அழகாயிருக்கவேண்டும். முதற் கோணல் முற்றுங் கோணல். ஆரம்ப முதலே மாணவர் அழகாக எழுதுமாறு உற்சாகப்படுத்துக. எழுத்துக்கள் ஒரே தரமாயிருக்குமானால் அழகாகத் தோன்றும். ஒன்று சிறிதும் மற்றொன்று பெரிதுமாயிருக்கக்கூடாது. கோட்டைக் கவனித்து எழுதினால், எழுத்துக்கள் ஒரே தரமாயிருக்கும். ஆசிரியர் மாதிரியாக எழுதிக்காட்டி அதைப் பார்த்துப் பயிலச் செய்யவேண்டும். எழுத்துக்கள் நேராகவேனும் சிறிது வலப்பக்கம் சாய்ந்தேனும் இருந்தால் அழகாயிருக்கும்.

**தெளிவு.**—(Legibility) எழுத்துக்கள் தெளிவாயும் இருத்தல்வேண்டும். சுலபமாக வாசிக்கக் கூடியவாறு அமைய வேண்டும்' எழுத்துக்களில் வடிவம் திருத்தமாயிருக்கவேண்டும் கூட்டெழுத்துக்கள் தெளிவைக் கெடுத்துவிடும். எழுத்துக்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித் தனி அமைக்கப்பட்ட முத்துக்கள் போலிருக்கவேண்டும். சொல்லின் முடிவில் ஓரெழுத்து எழுதக்கூடிய அளவு இடம்விட்டு, அடுத்த சொல்லை எழுதவேண்டும். நிறுத்தற் குறிகளை வேண்டுமிடத்து உபயோகிக்கவேண்டும். தனிப் பிழைகளைக் குறிப்பிட்டு அவற்றைத் திருத்தத் தனிப் பயிற்சியளிக்கவேண்டும். எல்லா எழுத்துக்களையும் அழகாக எழுதும் ஒருவன், ஒரு எழுத்தைமட்டும் அவலக்ஷணமாக எழுதுவதனால், அவன் எழுத்து முழுவதும் அழகு கெட்டுவிடும். ஆதலின் அவ்வெழுத்தைத் தனிப்பயிற்சி கொடுத்துத் திருத்துக.

**விரைவு,** எழுதுவதில் மாணவர் பெறவேண்டிய மற்றொரு திறமை. ஆனால் விரைவுக்காகத் தெளிவையும், அழகையும் கெடுத்துவிடக்கூடாது. முதல் மூன்று வகுப்புக்களிலும் தெளிவும், அழகும் உண்டாக்கக் கவனம் செலுத்தல்வேண்டும். **நான்காம்** வகுப்பில் விரைவாகவும் எழுதப் பயிற்றவேண்டும். விரைவுண்டாக்க, ஒன்றுபோல் மாணவரை 5 நிமிஷம் எழுதச் சொல்லி, எழுத்துக்களை எண்ணி, திறமையைக் காட்ட முதலாவது, இரண்டாவது என்று மாணவர் பெயர்களை வரிசைப்படுத்தி வைக்க. வரிசைப்படுத்துமிடத்து தெளிவு அழகுகளையும் கவனித்துக்கொள்ளவேண்டும். முதல் தரமான எழுத்தை அட்டையில் ஒட்டி, மாணவன் பெயரை அடியில் எழுதி, வகுப்பில் தொங்கவிடுக. ஏனைய மாணவரும் முதலிடம் பெற ஊக்கத்துடன் உழைப்பர்.

**பார்த்தெழுதல்.**—(Transcription) விரைவு, தெளிவு, அழகு உண்டாவதற்கு மாணவர் எழுதி எழுதிப் பழகவேண்டும். பாடப் புத்தகத்தைப் பார்த்தெழுதல் எழுத்து திருந்துவதற்கு நல்ல பயிற்சி. பார்த்தெழுதுவதில் மௌன வாசிப்புப் பழக்கமும் ஏற்படுகின்றது. எழுத்துப் பிழையின்றி எழுதப் பழக்கம் ஏற்படுகிறது. முதலாம் வகுப்பில், மின்னட்டை முதலிய

வற்றையும், இரண்டாம் வகுப்புமுதல், பாடப் புத்தகத்தையும் பார்த்து எழுதச்செய்க. இரண்டாம் வகுப்புமுதல் ஐந்தாம் வகுப்புவரை முறையே 2 முதல் 5 வரிகள், தினந்தோறும் வீட்டில், அழகாக எழுதிக்கொண்டே வருவார்களானல் சீக்கிரம், விரைவு முதலியன உண்டாகும். ஆசிரியர் ஒழுங்காக கவனித்து உற்சாகப்படுத்தி வரவேண்டும். அழகும் தெளிவும் முக்கியமென வற்புறுத்துக.

**காப்பி எழுதல்.**—(Copy writing) மூன்ரும் வகுப்புமுதல் காப்பி எழுதற் பயிற்சி தருக. அச்சுக் காப்பிகளை அடிவரியிலிலிருந்து மாணவர்கள் எழுதி வருதல் நலம். மாதிரி அச்செழுத்தை நன்கு கவனித்து திருத்தமாக எழுதச் செய்க. திருந்திய வடிவம், சுத்தம், ஒரே தரம், இவற்றை வற்புறுத்துக. விரைவாக எழுதவே வேண்டாம். மூன்ரும் வகுப்பு மாணவர்க்கு, ஆசிரியரே காப்பிப் புத்தகங்களை யுண்டாக்கி, முதல் வரியில் மாதிரி எழுத்தை, ஆசிரியரே மாணவன் முன்னிலையில் எழுதிக்கொடுத்தல் நலம். எழுத்துக்களைத் தொடங்கி எழுது முறை, கையசைவு, முதலியவற்றை மாணவர் நேரில் பார்த்து, நன்கு கவனிக்கவும், அதைப்போற் செய்து பழகவும், தூண்டும். ஐந்தாம் வகுப்பு முதல் மை கொண்டெழுதப் பயிற்சி தருக. கையசைவுகள் உறுதிபடுமுன் மையினல் எழுதச் சொன்னல், எழுத்தும் திருந்தாது; புத்தகமும் பாழாய்ப்போம். ஆரம்பமுதல் அழகாகவே எழுதச் செய்யவேண்டும்.

**எழுத்தைத் திருத்துவதற்கு,** ஆசிரியர் மனதிற்கொள்ள வேண்டிய சில முக்கிய குறிப்புகள் :— (1) மாணவர் எப்பொழுதும் திருத்தமாகவே எழுதுகிருர்களா, என்று கவனித்து வரவேண்டும். காப்பி எழுதும் போதும், பார்த்து எழுதும் போதுமட்டும் கவனித்தால் போதாது. சிறு துண்டுத்தாளில் பிள்ளைகள் கிறுக்கி எழுதி விளையாடுவதைத் தடுக்கவேண்டும். கிறுக்கல் என்பதே இருக்கக்கூடாது. (2) தமிழாசிரியர்மட்டுமன்று, **எல்லாப் பாட ஆசிரியரும்** அவரவர் பாடத்தில், எழுத்து வேலையை நன்கு கவனித்து வரவேண்டும். (3) மாணவர்கள் தாங்கள் அடிக்கடி காணும் எழுத்துக்களைப் போலவே எழுதும் திறமை பெறுகின்ருர்கள். இது அனுபவம்.

ஆதலின் கரும்பலகையில், ஆசிரியர், மாணவர் காண எழுதி வைக்கும் எழுத்துக்கள், அழகாயிருக்க வேண்டும் (4) **எழுதுகோலைக் கையாளும் சிறந்த முறை,** — முதலிலிருந்தே கைக்கொள்ளச் செய்யவேண்டும். நடு விரலின்மேல் எழுதுகோலை வைத்து, பெருவிரல்சுட்டு விரல்களால், இலேசாகப்பிடித்தல் நலம். நுனியில் பிடிக்கக்கூடாது. (5) **உட்காரு முறையையும்** கவனிக்க. தரையில் உட்கார்ந்து எழுதும் பிள்ளைகளுக்கு முன்னே சிறு சாய்வு மேஜைகள் அமைத்துக் கொடுக்க. டெஸ்க் உபயோகப்படுமிடங்களில் சிறுவர்களது உயரத்திற்கேற்றவாறு அவை அமையவேண்டும். டெஸ்க்கின்மேல் வைத்து எழுதும்போது படுத்துக் கொள்ளக் கூடாது. ஆசனத்தின் மத்தியில் நேரே உட்கார்ந்து, சிறிது முன் சாய்ந்து எழுதவேண்டும். உட்காரும் நிலை சௌகரியமாயிருக்க வேண்டும். முழங்கை சாய்வு மேஜையின் ஓரத்தில் இருக்கும்படி கையை வைத்துக்கொள்ள வேண்டும்.

## எழுதற் பயிற்சி பற்றிய பாடத்திட்டம் :—

முதலாம் வகுப்பு. குழந்தைகள் தாங்கள் படித்த சொற்களையும் சிறு வாக்கியங்களையும், கரும்பலகை, படம், மின்னட்டை, பிற உபகரணங்கள் இவற்றில் எழுதியிருப்பதைப் பார்த்து அதைப்போல் தாமும் எழுதத் தாராளமாய்ப் பழகுதல்.

இரண்டாம் வகுப்பு. எழுதுகோலைச் சரியான முறையிற் பிடிக்கவும், தெளிவாயும் விரைவாயும் எழுதவும் கற்பதை வற்புறுத்தல். படித்த பாடங்களிற் கேட்கும் வினாக்களுக்கு ஒவ்வொரு வாக்கியத்தில் விடை எழுதும் திறமையை வளர்த்தல்.

மூன்றாம் வகுப்பு. கையெழுத்தின் தெளிவைக் கெடுக்காமலே விரைவாய் எழுதப் பழகுதல். எழுத்துவேலையில் விரைவும் தெளிவும் தான் முக்கியமாகத் தேவை என்று நாடத் தலைப்படுதல்.

வாசக பாடப் புத்தகத்திலிருந்தும், பாடதிட்டத்திலுள்ள பிறபாடங்களிலிருந்தும் கேட்கும் கேள்விகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதப் பயிலுதல்.

நான்காம் வகுப்பு. கட்டுரை எழுதும் பயிற்சிக்கு முதற்படியாக, சமூக வாழ்க்கையைப் பற்றிய கடிதங்களும் சொந்தக் கடிதங்களும் எழுதுதல், ஆண்டின் பிற்பகுதியில் சொந்த அனுபவங்களைப் பற்றிச் சுருக்கமாய்க் கட்டுரை எழுத இயலுமளவு முயலுதல்.

## எட்டாம் அதிகாரம் — கட்டுரைப் பயிற்சி

திருத்தமாகவும், அழகாகவும், சுத்தமாகவும், விரைவாகவும் எழுதப் பயிற்றுவதற்கு எழுத்தின் வடிவம் முதலியவற்றையே முக்கியமாகக் கருதிப் பயிற்சியளிக்கிறோம். இனி எழுத்துப்பிழை சொற்பிழையின்றி எழுதவும், கருத்தைத் தெளிவாகவும், வன்மையுடனும், இலக்கணப் பிழையின்றியும், வெளியிடப் பயிற்சியளித்தல் வேண்டும். இதற்குக் கட்டுரைப் பயிற்சியே கருவியாகும்.

**கட்டுரையாவது** உள்ளக் கருத்தை முறையாகக் கோவைப்படுத்தி, ஒன்றாகத் திரட்டிக் கட்டியுரைப்பது. கட்டுரை என்னும் சொல்லுக்கு **உறுதி மொழி** என்ற பொருளும் உண்டு. சொற்சோர்வுபடாது, பிழையின்றி, உறுதியாகக் கருத்தை வெளிப்படுத்துவதும் கட்டுரையே. இது **வாய்மொழிக் கட்டுரை** (Oral composition) எழுத்துக் கட்டுரை (written composition) என இரு வகைப்படும். வாய்மொழிக் கட்டுரையானது, பொருள் கால அளவுக்கேற்பச் சிற்றுரை (speech) எனவும் பேருரை (Lecture) எனவும், அழைக்கப்படும். பொதுவாகக் கட்டுரை எனப்படுவது, எழுத்துக் கட்டுரையே.

**கருத்தை வெளிப்படுத்தலின் அவசியம்** — உலக வாழ்க்கையில் பேச்சுத் திறமை இன்றியமையாதது. நம் கருத்தை சம்பாஷணை தர்க்கம், சொற்பொழிவுகள் மூலமாக வெளியிடவேண்டிய சந்தர்ப்பங்கள், வாழ்க்கையில் ஏற்படுகின்றன. பிழையற, வன்மையுறப் பேசுவதற்கு வாய்மொழிப் பயிற்சி வேண்டும். அங்ஙனமே, எழுத்தின் மூலமாகவும் கருத்தை வெளியிடுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. கடிதம் எழுதுதல், வேலைக்கு விண்ணப்பம் எழுதுதல், கற்றும் கேட்டும் அறிந்த கருத்துக்களைக் கட்டுரையாக எழுதிப் பத்திரப்படுத்தல், பத்திரிகைகளிற் கட்டுரை மூலமாகத் தன் கருத்தை வெளியிடுதல், நூல்கள் இயற்றல் முதலியன, வாழ்க்கையில் மானிடர் தம் கருத்தை வெளியிடுதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள். இச் சந்தர்ப்பங்களில் முறையாகத் தன் கருத்தை வெளியிடுவதற்குத் தக்க பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆதலின் மாணவர்க்குக் கல்வித் தொடக்கமுதல் இறுதிவரை, கட்டுரைப் பயிற்சியளித்தல் வேண்டும்.

**எழுத்துக் கட்டுரைப் பயிற்சி வாய்மொழிக் கட்டுரைப்பயிற்சியின் பின்னர் நிகழ்தல் வேண்டும்.**—முதல் வகுப்பில் வாய்மொழிப் பயிற்சியில் படிப்பை ஆரம்பித்துப்பின் வாசிப்பு, எழுத்து முதலிய பயிற்சிகளைத் தருகின்றோம். அதுபோலவே, ஒவ்வொரு வகுப்பிலும், எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப்பற்றி வாய்மொழியாகப் பயிற்சி யளித்த பின்னரே, கட்டுரை எழுதப் பயிற்சி யளித்தல் வேண்டும். வாய்மொழி கட்டுரைக்கு ஆயத்தப் பயிற்சியாகும். இங்ஙனம் செய்வதனால் உண்டாகும் நன்மைகளாவன :— (1) கட்டுரையில் தான் சொல்வதற்கு வேண்டிய விஷயம், முதலாவது நடைபெறும் வாய்மொழிப் பயிற்சியில், மாணவனுக்குக் கிடைக்கின்றது. பல மாணவர்களுடைய கட்டுரை சுவையற்றதாகிறதற்குக் காரணம் பொருளில்லாமையே. (2) அப் பொருளைத் தெளிவாக வெளியிடுவதற்கு வேண்டிய சொற்களும், அவற்றைப் பிழையற உபயோகிக்கும் திறமையும், பயிற்சியில் கிடைக்கின்றது. (3) இச் சொல்லறிவு பிழையில்லாமல் எழுதுவதற்குப் பேருதவியாகின்றது. பயிற்சியாற் பிழைகள் குறைபடுமாதலின், ஆசிரியர் கட்டுரை திருத்தும் கஷ்டமான வேலை சிறிது எளிதாக்கப்படுகின்றது. (4) மாணவரிடம் சாதாரணமாகக் காணப்படுகின்ற, எழுத்துப் பிழைகளைச் சுட்டிக்காட்டி, தனிப் பயிற்சி யளித்து, அவற்றைத்திருத்தி விடக்கூடும்.

**படிப்படியாகப் பல்வேறு வகைக் கட்டுரை எழுதப் பயிற்சி யளிக்க.**—கீழ் வகுப்புகளில், எழுத்துப் பிழையின்றி எழுதவும் சிறு வாக்கியங்களைப் பிழையற அமைத்து எழுதவும் தன் கருத்தைச் சுருக்கமாக, எளிய முறையில் எழுதி வெளியிடவும் பயிற்சி யளிக்க. சொற்றொடராக்கம் முதலியன இதற்குப் பயன்படுவன. முதல் வகுப்பிலிருந்து படிப்படியாக அளித்தற்குரிய பயிற்சிகளாவன :—

**முதலாம் வகுப்பு.**— மா நூல், மர நூல் போன்ற சொற் புத்தகங்களை உண்டாக்கல். (பக். 96 பார்க்க) படங்களை ஒட்டி அவற்றின்கீழ் மாணவர்களே பெயர்களை எழுதவேண்டும். செய்கையைக் காட்டும் படங்களை யொட்டி, வினைச் சொற்களைக் கீழே எழுதச் செய்க. இது பார்த்தெழுதற் பயிற்சியே.

**இரண்டாம் மூன்றும் வகுப்பு.**—(1) தலைப்பில் படம் ஒட்டிக் கீழே அதன் விளக்கமாக இரண்டொரு வாக்கியங்களை எழுதல். (2) புத்தகத்தைப் பார்த்தெழுதல். (3) படித்த பாடத்திற் கேள்விக்கு சிறு வாக்கியமாக விடை யெழுதல். (4) **சொல்வ தெழுதல்.**—சொல்வ தெழுதுமுன் மாணவர் அப் பாகத்தை ஒரு முறை மௌனமாக வாசிக்கவேண்டும். பின் எழுத்துப் பிழை யுண்டாகக்கூடிய தனிச் சொற்களையும் சொற்றொடர்களையும் எடுத்துக் கரும்பலகையில் எழுதிவைத்துக் கவனிக்கச்செய்க. பின் சொல்லி எழுதச்செய்து, பிழை திருத்திக்கொடுத்து, மாணவர்களே அப் பிழைகளைத் திருத்தி எழுதச்செய்க. ஆசிரியர் இப் பயிற்சிக்காகப் புத்தகத்தை வாசிக்கும்போது, மாணவர் மனதில் வைத்துக்கொள்ளக்கூடிய அளவு சொற்களைச் சேர்த்து ஒரே தடவை, வாசிக்கவேண்டும். திருப்பத் திரும்பச் சொல்வது மாணவர்களிடத்தில் கவலையீன மனப்பான்மையை உண்டாக்கும். (5) கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைப் பொறுக்கி யெடுத்துவைத்து வாக்கியம் உண்டாக்கல். பொறுக்குதற்குச் சொற்களைப் பிறைக் கோட்டினுள் தருக.

**நான்காம் ஐந்தாம் வகுப்புகள்.**—(1) பாடத்தில் கேள்விகளுக்கு விடை எழுதல். (2) படத்தைப் பார்த்துக் கேள்விகளுக்கு விடை தருதல். படத்தை விளக்கச் சில சிறுவாக்கியங்கள் எழுதல். (3) சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதல். (4) எழுவாய்க்கேற்ற பயனிலைகள் முதலியன அமைத்தெழுதல். (5) விடைகளுக்கேற்ற கேள்விகளை யுண்டாக்கல். (6) 'இரண்டு மோட்டார்கள் ஒன்றோடொன்று மோதின' எங்கே? எப்போது? எப்படி? சிறு வாக்கியங்களாக விடை தருதல். இது நிகழ்ச்சி கூறுதற் பயிற்சி. நவிற்சிக் [ Narrative free composition ] கட்டுரைக்கு இது முதற் படியாகும். (7) பட்டம் செய்தல், பறக்க விடுதல், இவை பற்றி வர்ணித்து எழுதல். (8) யாராவது ஒருவரை, தான் கூறும் வருணிப்பிலிருந்து அடையாளம் கண்டுகொள்ளுமாறு வருணித்துரைத்தல். (9) "அப்பாவைப் போல் நான் ஆனால், இன்னின்ன செய்வேன்", என்பதுபோல் கற்பனையாக எழுதுதல். (10) தனது ஒரு நாள் வாழ்க்கை வரலாற்றைக் கூறல்.

**சம்பாஷணையும் சம்வாதமும்** [Conversation & dialogue] (1) மாணவர் அறிந்த கதைகளைச் சம்பாஷணை முறையில் அமைத்து எழுதல் (2) கற்பனைச் சம்பாஷணை :— கழுதையும் குதிரையும், தேக்கு மரமும் நாணற் புல்லும், ஒன்றோடொன்று சம்வாதம் செய்கின்ற மாதிரி. (3) மேல் வகுப்புகளில் கற்பனைக் கதைகளை நாடகமாக எழுதுதல், சுகாதார நாடகம் [health play] சமூக சீர்திருத்த நாடகம், சன்மார்க்க நாடகம் முதலியன எழுதுதல். கடிப்புப பயிற்சி முறையாக நடைபெறுமாயின், இப் பயிற்சி கஷ்டமாகத் தோன்றாது.

**ஆறும் வகுப்புமுதல்.**—மாணவன் தன் கருத்தைத் தன்னிஷ்டம் போல் வெளியிடுமாறு கட்டுரைப் பயிற்சியளிக்கலாம். தன்னிஷ்டக் கட்டுரை [free composition] பலவகைப்படும். அவை :—

1. **நவிற்சிக் கட்டுரை.**—[Narrat ve] நவிலுதல், அல்லது நவிற்சி — சொல்லுதல், பெரியார் வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, விழா, திருமணம்முதலியவிசேஷ நிகழ்ச்சிகளை, முறைபடநவிலுதல்.

2. **கற்பனைக் கட்டுரை.**— [Imaginative] கற்பனைக் கதைகள், கற்பனை அனுபவங்கள், சிந்துபாத்தின் கப்பல் யாத்திரைகள், கலிவரின் பிரயாணங்கள்போன்ற, கற்பனைப் பிரயாணங்கள், ஜாண்பனியனின் மோக்ஷ பிரயாணம்போன்ற கற்பனைக் கனவுகள், முதலியன.

3. **வருணனைக் கட்டுரை.**—[Descriptive] மலை, கடல், நாடு, நகர், பருவம், சந்திர சூரிய உதயங்கள், அழகிய இயற்கைக் காட்சிகள், பொருட்காட்சிசாலை, கலாசாலை ஆண்டுவிழாவின் போது பொதுமண்டப அலங்காரம், விழாக் காலத்து நகர வீதி, தீபாவளி வாணவேடிக்கை, கார்த்திகைத் தீப அலங்காரம், முதலிய, வருணனை, வருணிப்பிலிருந்து இன்ன பொருள் என்று அறிந்து கொள்ளத்தக்கதாக ஒரு பொருளை வருணித்துரைத்தல் முதலியன.

4. **தர்க்க ரீதியான கட்டுரை.**— [Argumentative] ஹிந்தி பொது மொழியா? பேசும்படக்காட்சி பார்ப்பது நல்லதா? போரினால் நன்மையுண்டா? பெண் கல்வி அவசியமா? இருபாலாரும் ஒரு கலையிற் கற்றல் இனிதோ? புலாலுண்ணல் நீதியாகுமா? இத்தகைய கேள்விகளுக்கு விடையாக அவரவர் கருத்துக்களை வாதப் பிரதிவாதங்களுடன் எடுத்துரைத்தல்.

5. சிந்தனைக் கட்டுரை.—[Reflective] அன்புடைமை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, முயற்சி, உண்மை, முதலிய கருத்துப் பொருள் [abstract] பற்றி எழுதுதல்;

6. விளக்கக் கட்டுரை.—[Expository] புத்தக விமரிசனம், குறிப்பிட்ட ஒரு கருத்தை அனுபவக் குறிப்புகளுடனும் தக்க மேற்கோள்களுடனும் விளக்கியுரைத்தல், பாடப் புத்தகத்தில் வாசித்த ஒரு பகுதியை விளக்கி எழுதுதல் [ Paraphrasing ] அரிய வாசகங்களுக்குப் பொழிப்பு எழுதுதல், பொருள் விளக்கம் கூறுதல் முதலியன.

7. கடிதங்கள்.—தலைமையாசிரியருக்கு விடுமுறை விண்ணப்பம், இனத்தவர், நண்பர்களுக்கு எழுதும் சொந்தக் கடிதம், வேலைக்காக விண்ணப்பம், தொழிற்பற்றிய அல்லது வாணிபச் சார்பான கடிதங்கள் முதலியன. கடிதம் எழுதற் பயிற்சி நான்காம் வகுப்பு முதல், மாணவர் தகுதிக்கேற்ப அளித்து வரல் வேண்டும்.

கடிதத்தின் முறையும் நடையும் பொருளுக்கேற்ப வேறுபட வேண்டும். கட்டுரைப் பயிற்சியாக மட்டுமன்று, பெற்றோர் முதலியோருக்கு அனுப்பி வைக்கும்படியாகக் கடிதம் எழுதச் செய்க. சொந்தக் கடிதங்களின் நடை இயற்கையாயிருத்தல் வேண்டும். வாணிபச் சார்பான கடிதங்கள், அழைப்பிதழ், முதலியன அவற்றிற்கேற்பட்ட முறைப்படி அமைதல் வேண்டும். அம் முறை தவறாதிருக்க வேண்டுமாதலின் அவற்றை மாணவர் மனப்பாடம் செய்தல் நலம். விளம்பரங்களைக் கொடுத்து, தங்களுக்குத் தேவையான பொருளை அனுப்பும்படியாக வியாபாரிகளுக்குக் கடிதம் எழுதச் செய்க.

கடிதத்தின் அங்கங்கள் :— (1) எழுதுவோரின் விலாசமும் எழுதும் தேதியும், (2) முன்னிலைப்படுத்தும் மொழித் தொடர், (3) செய்தி, (4) முடிக்கும் மரியாதையும் கையொப்பமும், (5) கடிதம் போய்ச் சேரவேண்டிய விலாசம்.

முன்னிலைப் படுத்துமொழித் தொடரும், முடிவு மரியாதையும் விலாசத்தாருக்கு ஏற்ப வேறுபடும். இவற்றை விளக்கிக் கற்பித்துப் பயிற்சி தருக.

(8) ஆக்கத்திறமையை வெளியிடுதல்.—[Creative expression] மாணவர் தம் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும், தம் கருத்துக்களையும், தாம் விரும்பும் வண்ணமே சுயமாக வெளியிட வேண்டுமென்று தாமாகவே விருப்பங் கொள்வர். ஆசிரியர் அவற்றைப் பாராட்டி ஊக்கமளிக்கவேண்டும். விசேஷித்த திறமைகள் இளமையிலேயே அமைந்து கிடக்கின்றன. அவற்றைச் சிறுவர்களது விருப்பத்திற் காணலாம். அத் திறமைகளை வெளிப்படுத்தற்குத் தக்க வசதியும், பயிற்சியும் அளிப்போமானல் அவர்கள் விருத்தியடைந்து பிற்காலத்தில் பிரபல எழுத்தாளர்களாகவோ நாடகாசிரியர்களாகவோ, புலவர்களாகவோ திகழக்கூடும்.

பின்வரும் ஆக்கத் திறமைகள் மாணவரிடம் காணப்படலாம்:— கதை எழுதல், செய்யுள் இயற்றல், கட்டுரை எழுதல், கற்பனையாகக் கதைகளும், அநுபவங்களும் எழுதல் முதலியன. இத்துறையில் மாணவர்களுக்கு ஊக்கமுண்டாக்க ஆசிரியர் செய்யவேண்டுவன:— மாணவர் தம் கருத்தையும் நினைவுகளையும் யாதொரு அச்சமுமின்றி எடுத்தியம்பவிடவேண்டும். நேரம், காலம் மொழிநடை முதலிய எவ்விதக் கட்டுப்பாடும் இருத்தல் கூடாது. பூரண சுயாதீனம் கொடுக்கப்படவேண்டும். விஷயம் உள்ளத்திலிருந்து இயற்கையாக வெளிப்படவேண்டும். எழுதப்படும், கட்டுரை முதலியவற்றை மாணவனுக்கு இஷ்டமானுல் வகுப்பில் வாசித்துக் காட்டலாம்; கட்டாயப்படுத்தக்கூடாது. தனக்கு இஷ்டமானல் ஆசிரியரிடம் திருத்தும்படியாகக் கொடுக்கலாம். ஆசிரியர், குணங்களைப் பாராட்டிக் குற்றங்களை அநுதாபத்துடன் சுட்டிக்காட்டி, ஊக்கப்படுத்த வேண்டும். பிற மாணவர் கேலிபண்ணி ஊக்கத்தைக் கெடுத்துவிடாதபடி பார்க்கவேண்டும். மாணவன் உள்ளத்தில் ஆக்க உணர்ச்சி உண்டாகவேண்டுமாயின், உள்ளத்தில் பண்பாடு ஏற்படவேண்டும். பண்பாட்டிற்கு அடிப்படையாயுள்ளது, அவதானமும், ஆழ்ந்த சிந்தனையும், அகன்ற நூலாராய்ச்சியுமே. இவற்றிற்கு ஆசிரியர் வசதியமைத்துக் கொடுக்கவேண்டும். ஏராளமான புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் செய்க. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? ஒன்றுமில்லாத உள்ளத்தில் ஆக்க வுணர்ச்சி எங்ஙனம் உதயமாகும்?

ஆசிரியரும் தனித்தனி மாணவர் இயல்பை யறிந்து, தூண்டிவிட வேண்டும்.

கட்டுரை எழுதுவதில் மாணவர் கவனிக்க வேண்டுவன :—

**வாக்கிய அமைப்பு.**—எழுவாய் பயனிலைகளைப் பொருத்தமாய் அமைத்தல் வேண்டும். நீண்ட வாக்கியமாக எழுதும் போது வாக்கிய அமைதி சிதையுமானால், அதனைத் தவிர்க்க. ஒவ்வொரு வாக்கியமும் முன் வாக்கியத்தோடு பொருள் தொடர்புபட்டே வரவேண்டும்.

**பகுதி அமைப்பு.**— கட்டுரை, **முகவுரை, பொருள் விளக்கம், முடிவுரை** என மூன்று அங்கங்களாக அமையவேண்டும். பொருள் விளக்கத்தைப் பொருளின் விரிவுக்கேற்பப் பல பகுதிகளாகப் பகுத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் ஒரே கருத்து விளக்கப்படவேண்டும். முன்பின் பகுதிகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டுக் கோவையாகச் செல்ல வேண்டும். கட்டுரை முழுவதும், மலர்க்கோவைபோல அழகுறத் தோன்றவேண்டும். முதலில் நடைபெறும் வாய்மொழிப் பயிற்சியின்போது விவரிக்கப்படவேண்டிய குறிப்புகளுடன், பகுதியமைப்புச் சட்டகத்தை ஆராய்ந்து அமைக்கவேண்டும்.

மாணவரிடம் சாதாரணமாகக் காணப்படும் **எழுத்துப் பிழைகளை** ஆசிரியர் கவனித்து, திருத்தித் தனிப் பயிற்சி கொடுக்க வேண்டும். பொருள் தெளிவுபட **நிறுத்தற் குறியீடுகளைப்** பயன் படுத்த வேண்டும். **எழுத்து,** தெளிவும் திருந்திய வடிவமும், அழகும், உள்ளதாயிருத்தல் வேண்டும்.

தமிழ் மொழிக்கேற்ற **மரபுச் சொற்களையும்,** சொற்றொடர்களையும் உபயோகிக்கப் பழக்க வேண்டும்.

"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

**மரபாவது,** ஒரு பொருளை, யாதொரு சொல்லால், யாதொரு வழியால் அறிவுடையோர்களாகிய நம் முன்னோர்கள் சொன்னார்களோ, அப்பொருளை அச் சொல்லால் அவ் வழியாற் சொல்லுதல்.

உதா:— காக்கைக் குஞ்சு, குதிரைக் குட்டி, மான் கன்று, பெண் பிள்ளை, ஆட்டுப் புழுக்கை, எருமைச் சாணம், யானை யிலண்டம். இவ்வாறின்றிப் பெண் குட்டி, மான் குட்டி, ஆட்டுச் சாணம், எனக்கூறின் மரபு வழுவாம். தமிழ் மரபு அறிந்து சொற்களையும் சொற்றொடர்களையும், உபயோகிக்க வேண்டும். அங்ஙனம் செய்யாவிடின் அது 'வழூஉச் சொற் புணர்த்தல்' என்னும் நூற் குற்றத்தின் பாற்படும். நடையும் சுவையற்றதாகிவிடும். ஆங்கிலம் கற்றோர் சிலர், "நான் பேதிக்கு மருந்து எடுத்தேன்" என்கின்றனர். இது தமிழ் மரபன்று. 'பாம்பு இரை எடுக்கின்றது,' என்பது தமிழ் மரபு. தொல்காப்பிய மரபியலில் மரபுச் சொற்கள் பல விளக்கப்பட்டுள்ளன. மாணவரிடம் காணப்படும் சாதாரண மரபுவழுக்களைக் கண்டுபிடித்துத் திருத்திப் பயிற்சியளிக்க.

## கட்டுரைப் பாடத்திட்டம்:—

ஐந்தாம் வகுப்பு.— சமூகச் சார்பாகவும் வாணிபச் சார்பாகவும் நீண்ட கடிதங்கள் எழுதுதல்— ஆண்டின் பிற்பாதியில் முறையான கட்டுரை எழுதத் தொடங்குதல், அதாவது சாதாரண விஷயங்களைப் பற்றி முதலில் ஒழுங்கான திட்டம் வகுத்துக்கொண்டு, பின்பு சிறிய கட்டுரைகள் எழுதுதல்.— வாக்கியத் தொடர்.

## ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை.

இம் மேல் வகுப்புகளில், கட்டுரைப் பயிற்சி வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் நிகழவேண்டும்— எழுதப்படும் கட்டுரைகள் பெரும்பாலும் சில வாக்கியங்களே கொண்ட சிறு பயிற்சிகளாக இருக்க வேண்டும். இவை கீழ்க்கண்ட பயன்களைத்தரும் தனிப்பயிற்சிகளையும் தம்மிடத்தே கொண்டிருக்கவேண்டும்:—(i) ஆளும் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்.— (ii) கருத்தை முன்னுக்குப் பின் முரண்படாது வெளியிடும் திறமை பெறுதல். (ஒரே வாக்கியத்தொடரில் அடங்கும் கட்டுரையுட்பட எல்லாக் கட்டுரைகளும் திட்டமான முதல், நடு, முடிவு உடையனவாயிருக்கவேண்டும்).— (iii) சொல்வன்மை (வாக்குத் தாட்டி) பெறுதல். முறைப்படி எழுதப்படும் நீண்ட கட்டுரைகள் ஓராண்டிற்கு இத்தனையென்று வரையறுக்கப்படவேண்டும். (பன்னிரண்டு போதும்). விவரப் பெருந்தலைப்புகளும் உள் தலைப்புகளும் கூடிய கட்டுரைத் திட்டம்செய்த பின்னரே, இக் கட்டுரைகளை எழுதவேண்டும்.

ஆறாம் வகுப்பு. வாய்மொழியிலும், எழுத்திலும் இவ் வகுப்புக்குப் பொருத்தமான விஷயங்கள்:— (i) தனிப் படங்கள், தொடர் படங்கள், பிளான்கள், வரிவடிவங்கள் (diagrams) இவற்றின் பொருளை உணர்ந்து விளக்குதல். — (ii) ஒரு கதையை, அல்லது நாட்டு வரலாறு, ஆட்சிமுறை நூல், இலக்கியம் இவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தக்கதொரு விஷயத்தை, நாடக வடிவில் அமைத்தல். — (iii) படர்க்கை முறைப் பேச்சைச் சம்பாஷணை வடிவில் எழுதுதல். — (iv) கடித மெழுதுதல் (சந்தர்ப்பத்தையும் கடிதம் பெறுவோனையும் குறிப்பிட்டு எழுதுதல்).

ஏழாம் வகுப்பு. வாய்மொழியிலும், எழுத்திலும் நடைபெற வேண்டும். அடியிற்கண்ட புது விஷயங்கள், அதற்குரிய பொருட் பட்டியிற் சேர்ந்திருக்க வேண்டும்:—

1. ஒரே கதை அல்லது நிகழ்ச்சியைச் சந்தர்ப்ப வேறுபாட்டிற் கேற்ப வெவ்வேறு விதமாய்ச் சொல்வது. (உ-ம்.) ஒரு மோட்டார் விபத்தை, (i) மோட்டாரோட்டி சொல்வது போலவும், (ii) போலீஸ் காரன் நீதித் தலத்தில் தெரிவிப்பது போலவும், (iii) மோட்டா ரோட்டியும் அவன் நண்பனும் உரையாடுவது போலவும், (iv) அந் நிகழ்ச்சியைக் கண்ணுற்றவொருவன் தன் நண்பனுக்குக் கடித மூலம் அதனைத் தெரிவிப்பது போலவும் பெயர்த்தமைத்தல்.

2. படித்த அல்லது கேட்ட கதையைத் திருப்பிச் சொல்லுதல், அல்லது கொடுத்த கதைக் குறிப்புகளைக்கொண்டு (சில சமயங்களில்) முழுக் கதையைச் சொல்வது.

3. யாதாமொன்று இயங்கு முறையை, அல்லது தயாரிக்கப்படு முறையை, வரிவடிக் (diagram) துணைகொண்டு விவரித்தல். (உ-ம். நெய் எடுத்தல்).

4. விஷயக் குறிப்பெடுத்தல்.

எட்டாம் வகுப்பு. வாய்மொழியிலும் எழுத்திலும் நிகழ்வது. அடியிற்கண்ட புது விஷயங்களும் அப் பாடத்துக்குரிய பொருளாயிருக்க வேண்டும்:— (1) வகுப்பில் நடந்த வேலைகளைப்பற்றி எழுதுதல்; செய்த சோதனையாராய்ச்சிகள்; மேற்கொண்ட சுயநோக்க முறை வேலைத் திட்டங்கள் (projects); மாணவ யாத்திரைகள் முதலியவற்றைப்பற்றி விளக்கப் படங்களுடன் எழுதுதல்.— (2) அரிய வாசகங்கட்குப் பொழிப் புரைத்தலும், பொருள் விளக்கம் கூறுதலும். — (3) சுருக்க வடிவில் தரப்பட்ட விஷயத்தைப் பெருக்கி எழுதும் பயிற்சிகள். — (4) சுருக்க மெழுதுதல். — (5) அரைகுறையாய்ச் சொன்ன கதையைப் பூர்த்தி

செய்வது. (6) சமாசாரப் பத்திரிகைகள், வார மாதப் பத்திரிகைகள், நூல் நிலையப் புத்தகங்கள் முதலியவற்றைப் படித்து, ஒரு குறித்த விஷயத்தைப்பற்றிக் கட்டுரை எழுதுதல். — (7) வகுப்பு அல்லது பள்ளிக் கூடப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்தல்.

**கட்டுரையைத் திருத்துதல்.**—முன் ஆயத்த வாய்மொழிப்பயிற்சிக் குறைவினாலும், மாணவர் கவலையீனத்தினாலுமே எழுத்துக் கட்டுரையிற் பிழைகள் ஏற்படுகின்றன. பிழைகள் ஏற்படாவண்ணம் ஆசிரியர் தக்கது செய்தல்வேண்டும். பின்னும் பிழைகள் விழுமாயின் அவற்றைத் திருத்திக்கொடுத்து, மாணவரை மீண்டும் திருத்தச் செய்யவேண்டும். வாரத்திற்கு ஒரு கட்டுரைப் பயிற்சி கொடுத்துத் திருத்தாமல் விட்டுவிடுவதைவிட, மாதத்திற்கு ஒரு பயிற்சி கொடுத்துத் திருத்திக் கொடுப்பதே நலம். தன்னால் திருத்திக் கொடுக்கக்கூடிய அளவு கட்டுரைப் பயிற்சிகளைக் குறைத்துக் கொடுப்பது குற்றமில்லை

பிழை திருத்துவதற்கு அனுகூலமாக, பயிற்சி நோட்டில் வலப் பக்கத்தில் கட்டுரையை எழுதி இடப் பக்கத்தைக் காலியாக விடுதல்வேண்டும். ஆசிரியர் குறிப்பிட்ட பிழைகளை மாணவர் இடப் பக்கத்தில், அப் பிழைக்கு நேரே திருத்தி எழுதி வைக்க வேண்டும். எழுத்துப் பிழை, சொற் பிழைகள் இருப்பின், முழு வாக்கியத்தையும் எழுதி வைக்கவேண்டும். பிழை திருத்தம் அழகாயும், சுத்தமாகவும் செய்யப்படவேண்டும்.

ஆசிரியர் பிழை திருத்தும்போது சிறுவர் பிழை திருத்த வேண்டும் என்ற முழு அனுதாபத்துடன் திருத்தவேண்டும். குற்றப்படுத்தியும் ஏசியும் மாணவர் மனம் கன்றுமாறு செய்யக் கூடாது. மாணவர் முன்னிலையில், அவரவர் பயிற்சிப் புத்தகங்களைத் திருத்துதல் நலம். இதனால் மாணவர் அறிவு நிலையறிந்து அவர்களுக்கு உதவிசெய்தல் கூடும். மாணவரும் தம் பிழைகளைநன்கு உணர்ந்துகொள்வர். மாணவர் திருத்தியபின்னர் மீண்டும் அவற்றைத் தனித்தனி சரிபார்த்தல் வேண்டும். பிழைகளை ஆசிரியரே திருத்தி எழுதி வைத்துவிடக்கூடாது. பிழை திருத்தக் குறிகளை உபயோகித்து, மாணவரே தம் பிழைகளைக் கண்டுகொள்ள வழி காட்டவேண்டும். தாங்களே யோசித்துத் தம் பிழைகளைக் கண்டு பிடித்துத் திருத்தினால், அது நன்கு மனதிற்பதியும். பயிற்சியில்

பிழைகள் அளவிறந்து காணப்படுமாயின், பயிற்சி முழுவதையும் திருத்தி மீண்டும் ஒரு முறை எழுதச்செய்க. சாதாரணப் பிழைகளைப் பொறுக்கி எடுத்துத் தனிப் பயிற்சியளிக்க. அடிக்கடி உண்டாகும் எழுத்துப் பிழைகளைக் கவனித்துக் கண்டுபிடித்து, ஒவ்வொன்றாகப் பன்முறை எழுதற் பயிற்சி தருக. பன்முறை எழுதுவது பிழை திருந்துவதற்கு ஏற்றதோர் பயிற்சி. ஆனால் மாணவர் அதைத் தண்டனையாகவும் பாரமாகவும் கருதும்படி செய்யக்கூடாது. ஒரு கட்டுரையில் அவசியமானால் ஒரே ஒரு சொல்லைமட்டும், இவ்வாறு எழுதிப் பயிலச் செய்க.

**பிழை திருத்தக் குறியீடுகளை**, ஆசிரியர் தாமே சிருஷ்டித்துக் கொள்ளலாம். மாணவர் அவற்றின் பொருளை அறிதல்வேண்டும். அவை, யாவரும் அறிந்து கொள்ளக்கூடிய பொதுக் குறிகளாயிருப்பின் நலம். யாம் மிகுந்த பயனுடையதாகக் கண்டு, பல்லாண்டுகளாகப் பயன்படுத்தி வரும், சிற்சில குறியீடுகளை உதாரணமாகத் தருகின்றோம் :—

| குறியீடு | | பொருள் |
|---|---|---|
| ⌒ | — | சேர்த்து எழுதுக. |
| ‖ | — | இடம் விடுக. |
| ∧ | — | விடப்பட்டதை நிரப்புக. |
| ○ | — | விட்டு விடுக. |
| \| | — | எழுத்துப் பிழை. |
| × | — | றகரம், ழகரம், இனமாறுபாடு. |
| ———— | — | சொற் பிழை. |
| ∘ | — | முற்றுப் புள்ளியிடுக. |
| ~~~~~~ | — | பொருள் விளங்கவில்லை. |
| [ | — | புதுப் பகுதியாகக் காட்டுக. |
| ———— 5 | — | ஐந்து முறை எழுதுக. |

பிழை — க⌒ட ∧ல் ஒருவர்‖உண்டு∘ (ஒருவர்‖உண்டு underlined, 5)

திருத்தம் — கடவுள் ஒருவர் உளர்.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!!

---

முறைநூல் முற்றிற்று.

— * —

## பின்னொட்டு

## T. S. L. C. பரீட்சை வினாக்கள்

### SECONDARY GRADE—June 1947

[N. B.) Answer any 4 Questions]

1. ஒரு வசன பாகத்தை உமது மாணவர்கள் படித்து அனுபவிப்பதை (appreciate) விட அதே விஷயத்தைக்கொண்ட ஒரு செய்யுள் பாகத்தை அவர்கள் இன்னும் நன்ருக அநுபவிக்க நீர் என்ன செய்வீர் என்று விளக்கிக் காட்டுக. 12½

2. முதல் I, II, வகுப்புகளுக்கு பாஷை போதிக்க எவ்வித உபகரணங்களை (equipment) நீர் சேகரம் செய்வீர்? 12½

3. வாய் மொழிப் பயிற்சியின் (oral work) நோக்கங்கள் யாவை? பாலர்கள் திருத்தமாகப் பேசப்பயிற்சி செய்ய எவ்வித முறைகள் சிறந்தவை என்று விளக்குக. 12½

4. மாணவர்களது எழுத்து வேலை (written work)யை அமைக்க மொழி கற்பிக்கும் ஒரு ஆசிரியர் கொள்ளவேண்டிய முறைகள் (principles) யாவை? II-ம் பாரத்திற்கு உபயோகிக்கக்கூடிய எழுத்து வேலை வகைகளில் ஐந்து எழுதுக. 12½

5. மௌனவாசிப்பின் பலன்களை எழுதுக. மௌன வாசிப்பை விருத்தி செய்ய நீர் எவ்வித முறைகளைக் கையாளுவீர் என்று விவரிக்க. 12½

மொத்தம் ... 50

## SECONDARY GRADE —March 1947.

1. மொழிக் கல்வியின் (Language teaching) மற்ற அம்சங்களுடன் சம்பந்தப்படுத்திப் (correlate) போதிப்பதுதான் இலக்கணம் போதிப்பதற்கு மிகவும் சிறந்த முறையாகும்—இதை விளக்கிக் காட்டுக. 12½

2. கட்டுரை வரைதல் பயிற்சி (Composition exercise)-க்கு முன் ஆயத்தமான முக்கிய வழிகள் (steps) யாவை? III-ம் பாரமாணவர்கள் "தென்னை மரம்" என்னும் கட்டுரை தயார்செய்ய எவ்வித உதவிசெய்வீர் என்று விளக்குக. 12½

3. கீழ் வகுப்புகளில் spelling அபிவிருத்திசெய்யச் சில முறைகளை எழுதுக. 12½

4. வகுப்பு நூல் நிலையங்களின் (Class libraries) பிரயோசனங்களை விவரிக்க. இவ்வித நிலையங்களை எவ்வாறு அமைப்பீர்? இவ்வித நிலையங்களில் எவ்வகையான புத்தகங்களை நீர் சேகரித்து வைப்பீர்? 12½

மொத்தம் . 50

## SECONDARY GRADE —March 1948.

1. கதை சொல்லல் (story telling) அல்லது செய்யுள் ஒப்புவித்தல் (recitation) என்பது வாய்மொழிப் பயிற்சியில் என்ன இடத்தைப் பெற்றிருக்கிறது என விளக்கி, இரண்டாம் வகுப்புக்கு (Class II) இவற்றுள் ஒரு பாடத்தை எப்படி நடத்துவீர் எனக் கூறுக.

2. மூன்றாம் வகுப்புக் கேற்ற (Class III) வாய்க்குட் படிப்புக்கு (silent study) உதவக்கூடிய தனிப் பயிற்சித் தாள்களை (individual work sheets) எவ்வாறு ஆயத்தம் செய்யலாம்? 16

3. மூன்றாம் அமைப்பு (Form III) அல்லது எட்டாம் வகுப்பு (Standard VIII) மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கேற்ற (memorisation) செய்யுட்களைத் தேர்ந்தெடுப்பதில் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளைக் கூறுக. 18

<u>அல்லது</u>

கற்பனைக் கட்டுரையை (imaginative composition) எந்த வகுப்பில் நுழைக்கலாம் என்பதைக் காரணங்களுடன் கூறி, அவ்வகைக் கட்டுரையை அவ்வகுப்புக்கு நடத்துவதற்கான ஒரு பாடக் குறிப்பால் (notes of lesson) விளக்குக.

மொத்தம் . . 50

## ELEMENTARY GRADE—1947.

1. மௌன வாசிப்புப் [silent reading] பழக்கத்தை உமது மாணவர்களுக்கு பயிற்சி செய்ய எவ்வித முறைகளைக் கையாளுவீர்? 14
2. உமது மாணவர்களுடைய எழுத்து வேலையில் [written work] காணப்படும் பிழைகளைத் திருத்த என்ன செய்வீர்? 14
3. பாலர் பேச்சில் காணப்படும் சாதாரணமான குறைபாடுகள் யாவை? அவைகளைத் திருத்தும் முறைகள் யாவை? 12

அல்லது.

ஒரு செய்யுள் பாடத்தின் நோக்கங்கள் யாவை? ஒரு வசன பாடத்தின் நோக்கங்களுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசங்கள் 12

—

மொத்தம் ... 40

—

## ELEMENTARY GRADE—1948

1. முதல் வகுப்பு மாணவர்களுக்கு [Class I] எழுத்துக்களை எழுதக் கற்பிக்கத் தொடங்கும் முன், என்ன முற்பயிற்சியை [preliminary training] அளிக்கலாம்? 10
2. ஐந்தாம் வகுப்புக்கு [Class V] ஏற்ற ஒரு செய்யுளை எப்படிக் கற்பித்து அதன் சுவையை மாணவர் உணரும்படி [appreciate the poem] செய்வீர் என்பதை ஒரு பாடக்குறிப்பின் துணைகொண்டு [notes of lesson] விளக்குக. 14
3. மூன்றாம் வகுப்புக்கு [Class III] ஏற்ற படிப்புத் தாள்களை [reading charts] எங்ஙனம் ஆயத்தம் செய்யலாம்? 16

அல்லது

ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் [Class V] சொற்களஞ்சியத்தை [Vocabulary] பெருக்குவதற்கான (enlarge) வழிகளில் ஏவையேனும் நான்கினைக் குறித்து, அவற்றுள் ஒன்றை, எடுத்துக்காட்டுகள் (illustrations) தந்து விளக்குக.

—

மொத்தம் ... 50

—

56672

Printed at the Bible Student's Pakkiam Press, South Bazaar, Palamcottah.

*For Copies Apply to :—*

Vidvan, P. S. Samuel,

No. 9. Guru Street,

Palamcottah.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1949
MADRAS

*Copies Can also be had from :—*

1. Diocesan Book Depot, Palamcottah.
2. Sri. C. Jaganathan, M. A., Tirunelveli Jn.
3. ,, M. Dakshinamoorthy Konar, Pudumandapam, Madura.
4. G. S. Balu & Co, Kovilpatti
5. V. S. Krishnan & Co, Tirunelveli Jn.

*Books, by the Same author :—*

1. T S. L. C. Questions & Answers - Tamil Methods.
2. Basic Education (in Tamil).

SCANNED

**Please expect!**

B. S. P. PRESS, PALAMCOTTAH.